ஓம்

கணபதி துணை.

# மணிவாசகன்

துப்பறியும் ஒரு தமிழ்க் கதை

(சித்திரப் படங்களுடன்)

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

மேலைச்சிவபுரி,

திரு-சொ. பனையப்ப செட்டியார்

இயற்றியது.

[இரண்டாம் பதிப்பு.]

சென்னை

பி. ஆர். இராம அய்யர் அண்ட் கம்பெனியில்

அச்சிடப்பெற்றது.

1928

[பதிவு செய்யப்பட்டது] [விலை ரூபா ஒன்றேகால்.

1926 முதற் பதிப்பு .. 1000

1928 இரண்டாம் பதிப்பு 1000

250389

# முன்னுரை

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை அனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்"

அந்தமில் புகழ்சேர் செந்தமிழ் மொழியில், அரும்பெறல் மணிபோன்ற பல நூல்கள் செய்யுள் வடிவமாக இலங்குகின்றன; எனினும், அவற்றிலுள்ள சிறந்த கருத்துக்கள் கற்றோர்க்கே யன்றி மற்றோர்க்குப் பயன் படுவதில்லை. ஆதலின், சின்னாட்களாக அக்கருத்துக்களை யமைத்துப் புதுவது புனைந்து பல உரைவடிவ நூல்கள் வெளிவரலாயின. "தமிழும், தமிழ் நாடும், தமிழ்மக்களும் உயர்வு பெறற்குப் பல உரைவடிவ நூல்கள் வெளிவரல் வேண்டும்" என்பது அறிஞர் துணிபு. அன்றியும், நகைச் சுவைதரும் நாடகங்கள், கதைகள் வாயிலாகச் சமூகத்திலுள்ள குறைகளை யெடுத்துக் காட்டுவது சீர்திருத்தத்திற்கு இன்றியமையாததோர் வழியாகும். ஆதலின், '**மணிவாசகன்**' என்ற இக்கதையில் ஏற்புழியெல்லாம் தேசபக்தி, நாட்டின் முன்னேற்றம், தமிழ்நூல்களி னுயர்வு என்பனபற்றிச் சிற்சில வரைந்துள்ளேன். அவற்றை ஊன்றிப் படிப்போர் உணர்தல் கூடும். கூறுவான் தகுதிக்கேற்ப நடை சிறிது மாற்றப்பட்டிருக்கிறது. இதனைப் படிக்கும் நண்பர்கள், இதில் வரூஉம் நன்மைகளை மாத்திரம் மேற்கொள்ளுவார்களாயின், அதுவே யெனக்குச் செய்யுங் கைம்மாறாகும். ஒன்றிற்கும் பற்றாத சிறியேனை இம்முயற்சியிற் புகுத்தி நடத்தி நிறைவேற்றி யருளிய இறைவனது திருவருளை யென்ஞான்றும் சிந்தித்து வந்திக்கின்றேன்.

குரோதன ஆண்டு,
தைத் திங்கள்,
13ஆம் நாள்

இங்ஙனம்,
**சோ. பழனியப்ப செட்டியார்**
மேலைச்சிவபுரி.

# இந் நூலாசிரியரால் எழுதப் பெற்ற வேறு நவீனங்கள்.

---

**காந்திமதி** :—இரண்டு சித்திரப் படங்களுடன் கூடிய சிங்காரமான துப்பறியுங் கதை.

**விலை ரூபா. 2—0—0**

**ஷண்முகநாதன்** அல்லது **தனவைசிய மைனர்** :—முழுவதும் ஹாஸ்ய ரஸம். ஆழ்ந்த உலகானுபவங்கள் தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

**விலை ரூபா. 1—4—0**

**சந்திரசேகரன்** :—மூன்று சித்திரப்படங்களுடன் கூடியது. தேச பக்தியைத் தெள்ளிதி னூட்டுவது. இனிய தமிழ்க் கதை.

**விலை ரூபா. 1—0—0**

**அமிர்தம்** :—சிறந்த கதை. இதுவரை வெளிவராத பல புதிய விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் தவறாமல் படிக்க வேண்டிய நூல்.

**விலை ரூபா. 0—8—0**

**சன்மார்க்க சபை,**

மேலைச்சிவபுரி. (மணப்பாறை வழி. S. I. R.)

## The Opinion of "Hindu" (Madras)

"This novel quite modern in its contents; there is a pleasant admixture of detective and romantic interests in the story. The hero, *Manivachakan* is an advocate of "*Khaddar*" and his character and speech have a fine side to them. The comic element is not wanting and the novel makes pleasant and entertaining reading. The book is well printed and is illustrated with suitable half-tone pictures. One peculiarity that stands out is the author's transparent desire to inculcate moral maxims and to cultivate a taste for the Tamil classics by frequent quotations from Tamil poems and by an apt use of the proverbs and maxims wich abound in Tamil" (7-3-28)

---

(" ஹிந்து," சென்னை.)

இந் நவீனம் முற்றிலும் புதியனவாகிய விஷயங்களைக் கொண்டதாக விருக்கின்றது. கதையில் துப்பறியுந் திறனும், கற்பனை நயமும் விரவி யிலங்குவது இன்பத்தை அளிக்கின்றது. இக் கதா நாயகனாகிய "மணிவாசகன்" கதரில் ஆர்வமுடையவனாக அமைந்திருப்பதற் கேற்றவாறு அவன் சொற்களும் அமைந்திருக்கின்றமை அழகாக விருக்கின்றது. நகைச்சுவை யளிக்கும் பாகங்கள் நன்றாக அமைந்துள்ளமை இந் நூலை வாசிப்பதற்கு மகிழ்ச்சியை யூட்டுகின்றது. நன்றாக அச்சிடப் பெற்றும் அழகான படங்கள் சேர்க்கப் பெற்று மிருக்கின்றது. அறிவுரைகளை வலியுறுத்துவதிலும், தக்க இடங்களில் தமிழ்ப்பாக்களையும் முதுமொழிகளையும் எடுத்தாள்வதிலும் ஆசிரியரின் தெளிந்த ஆர்வம், இந் நூலி லுள்ள சிறந்த அணிகலன்களி லொன்றாக விளங்குகின்றது.

ஓம்

# இந்நூலைப் பற்றிய கருத்து

உலகத்தில் மக்கள் எய்தும் நன்மை தீமைகட்கும் உயர்வு தாழ்வுகட்கும் அவ்வவர் அறிவே காரணமாகும். "அறிவுடையார் எல்லாம் உடையாரன்றே." இறைவனால் நமக்களிக்கப்பட்ட இயற்கை யறிவைக் கல்வி கேள்விகளாற் பெருக்கி, நன்னெறிக்கட் செலுத்துவோர் நல்லன பலவும் எய்துகின்றனர்; அல்லாதார் நன்மையி னொழிவதோடு தீமையு முறுகின்றனர். அங்ஙனம் மக்கள் அறிவைப் பண் படுத்தி நன்னெறிக்கட் செலுத்துதற்கே, அறிவான் முதிர்ந்த ஆன்றோர் நூல்களை இயற்றுவாராயினர். அங்ஙனமே நமது தெய்வத் தமிழ்மொழியின் கண்ணும் பெருமைசான்ற நம் முன்னோர்கள், நம் அறிவு பண்படுதற் கேற்பப் பற்பல நூல் களை இயற்றி வைத்துள்ளார்கள். அந்நூல்களுட் கூறப்படும் ஒவ்வொரு விடயங்களும் அவர்கள் நமக்குத் தேடி வைத்துச் சென்ற அரும் பெறல் மணிகளாம். அறிவு நிரம்புதற்கு வேண்டும் பற்பல நூல்களையும் உடையதாய்க் கன்னெஞ்ச மும் கரைவிக்கும் இனிமை சான்று, இலக்கண வமைதி நிரம்பப்பெற்று, உலகின் ஏனைய பகுதிகள் நன்னிலை யெய்தா முன்னரே, மிக உயரிய நிலையில் இருந்த நம் செந்தமிழ் மொழி, இடைக்காலத்துப் பற்பல காரணங்களால் தன்னிலை குன்றி யிருந்ததேனும், இக்காலம் மீண்டும் தன்னிலை யெய்தத் தொடங்கிவிட்டதென்றே கூறலாம்.

காலத்திற்கேற்ப உலகிடை அவ்வப்போது மாறுதல் கள் நிகழ்கின்றன. இருபதாண்டுகட்கு முன்னிருந்த மக்கள் மனநிலைக்கு, இப்போது நிலை பெரிதும் வேறுபாடுற்றிருப் பது யாவரும் உணர்வர். பண்டைக் காலத்து மக்கள் இயல்

பிற்கேற்ப அறம், பொருள், இன்பங்களை விளக்கி, அகம், புறம் என்னும் பகுதியவாய்ப் பெரும்பான்மையையும் அகவற் பாக்களிலும் சிறுபான்மை கலிப்பா, வெண்பாக்களிலும் நூல்கள் எழுந்தன; இடைக்காலத்து விருத்தப்பாக்களா லாகிய புராணங்களும், தோத்திர நூல்களும் மிக் கெழுந் தன. இக்காலத்தோ வெனின், 'நாவல்கள்' மலிந் தோங்கு கின்றன. நூல் முறை நோக்கி இக்கால உலகை "நாவல் உலகம்" என்றல் தவறாகாது. அவ்வக் காலத்து மக்கள் மன வியல்புக்கேற்ற முறையில் நூல்கள் இயற்றப்படுதல் முறையாகும். இக்காலத்து, மக்கள் பெரிதும் நாவல் படிப் பதில் ஊக்கங் காட்டுகின்றன ராதலின், அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த முயலும் அறிஞர்கள் தம் கருத்துக்களை நாவல் வாயிலாக வெளியிட முன்வந்துள்ளார்கள்.

இம் "மணிவாசகன்" என்னும் நூலும் அம்முறையில் இயற்றப்பெற்ற தொன்றும். நாவல்கள் பெரும்பான்மையும் துப்பறிதல் பற்றி யெழுவனவும், காதல்பற்றி யெழுவனவும் என இருதிறப் படுவனவாகும். அவை, மங்கல நிகழ்ச்சியான் முடிவனவாகவும், அமங்கல நிகழ்ச்சியான் முடிவனவாகவு முள்ளன. இந்நூல் துப்பறிதல்பற்றி யெழுந்து, மங்கல நிகழ்ச்சியான் முடிந்துள்ளது. நாவல்கள் இக்காலத்து மிகப் பலவாகத் தோன்றியுள்ளன வெனினும், இலக்கணப் பிழை யற்ற நடையோடு படிப்பவரை நல்வழியில் திருப்புவனவாய் அறிஞர்களால் எழுதப்பட்டன ஒரு சிலவென்றே கூறலாம். அவற்றுள் இஃதொன்றாய்த் திகழ்வது பற்றி மகிழ்வெய்து கின்றோம். இக்காலத்துக் கேற்ப மக்கள் உள்ளத்துத் தேச உணர்ச்சியும், தாய்மொழி யுணர்ச்சியும் அரும்பிப் பூக்குமாறு எழுதப் பெற்றுள்ள இந்நூலகத்துப் பற்பல அரிய விடயங் கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. ஒன்று, ஆறு, பதின்மூன் றும் அதிகாரங்களிலும், நூலின் இறுதியிலும் தேச நலன் பற்றிய விடயங்களும், இடையிடையே தமிழ்ப் பயிற்சியின் அவசியமும், வீரத்தின் மேம்பாடும் படிப்போருளத்து நன்கு

பதியுமாறு எழுதப்பட்டுள்ளன. மூன்றாம் அதிகாரத்து இல்லற மென்னும் நல்லறத்தின் மாண்பும், காதலின் செவ்வியும் கவின்பெறக் கூறப்பெற்றுள்ளன. ஐந்தாம் அதிகாரத்து, காமாக்ஷியின் தீயொடுக்கத்திற்குச் சிந்தாமணியுடன்படாது அரிதின் விலகிய செயல்,

"அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல"

என்னும் திருக்குறளை நினைவுறுத்துகின்றது. ஏழாம் அதிகாரத்தில், தன்னை யுடையானையும், அவன் சுற்றத்தையும், ஒருங்கே கெடுக்கும் இயல்பிற்றாய அழுக்காற்றின் கொடுமை திறம்படக் கூறப்படுகின்றது. எனைத் தீக்குணங்கட்கெல்லாம் இஃதடியாய தென்பது விளக்கிய வன்றே, "அழுக்காறவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்" என இதனை முதற்கண் வைத்தார்? இதன் தீமை எவ்வளவு கூறினும் அடங்காத தொன்றன்றோ? பதினோராம் அதிகாரத்துத் தருமலிங்கம் பிள்ளையின் செய்தியால், உலோபத்தின் தீமையும், "ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும், கூன்கையர் அல்லாதவர்க்கு" என்னும் செய்யுளின் பொருளும் வெளிப்படையாகின்றன. நூலின் இறுதியில் உண்மையின் மேன்மையும், கடவுட் பக்தியும், மக்கள் தற்போதும் எப்போதும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும், விரித்து விளக்கப்படுகின்றன. வடமொழி நாடகங்களுள் வரும் பிராகிருதம் போன்ற இழிசனவழக்கும், தருமலிங்கம் பிள்ளையின் செய்திகளும் நகைச்சுவை விளைவித்து நிற்கின்றன. உரைநடையில் ஆங்காங்கு திருக்குறள் முதலிய சிறந்த நூல்களின் நன்மணம் வீசிக்கொண்டிருக்கின்றது. இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூல், தமிழ் மக்கட்குப் பெரிதும் பயன்படுமாறு அறிஞர்களால், தமிழணங்கிற் கணியப்பெற்ற புதுவது புனைந்த நன் கலன்கள் பலவற்றுள்ளும் இதுவும் ஒன்றாகத் திகழ்வதாகும்.

இங்ஙனம் புதிய சீரிய முறையில் இந்நூலை யியற்றிய திருவாளர், சோ. பனையப்ப செட்டியார், இம்மேலைச்சிவ புரிச் சன்மார்க்க சபையில் கல்வி பயின்றவர்; செந்தமிழ்ப் பயிற்சி சிறந்தவர்; செய்யுளியற்றும் வன்மையும், உரைநடை யெழுதும் திறமும் நன்கு வாய்க்கப் பெற்றவர். இவர் இது போன்ற இன்னும் பற்பல உரைநடை நூல்களையும், செய்யுள் நூல்களையும் இயற்றித் தமிழ்நாட்டிற்கு நலம் புரிந்து வரத் திருவருள் புரியுமாறு இறைவனை வழுத்துகின்றோம்.

இங்ஙனம்,

மேலைச்சிவபுரி,
25—4—26.

ஆ. பூவராகம் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர்,
சன்மார்க்க சபை.

# ஆலங்காடு தமிழ் வித்துவான்

## திருவாளர், வை. செல்லையச் செட்டியாரவர்கள்

### கூறியவை.

செந்தமிழி னியல்வனப்பைச் செம்மையுறுஞ்சொற்றொடராற்
சிறப்புற் றோங்கு
முந்தைவளங் குன்றாத முறைமையினுய்ந் தணியுறவே
முதிய நூலின்
வந்தவழி நூலிதுதா மெனமனிதர்க் கறிவளிக்கு
மாண்பி னோடும்
பந்தமுறுங் காதலின்செவ் வியும்வீரத் துயர்வுநலம்
பரவக் காட்டி, (1)

ஒல்லாத அழுக்காற்று னுறுங்கேடும், உலோபத்தா
லுண்டாந் தீதும்,
நல்லாற்றி லுண்மையினு னுறுகுறுமேன் மையும்விளக்கி
நயந்தா ராய்வோர்
எல்லார்க்கும் பயன்படுமா றியன்மணிவா சகனெனும்பேர்
இலங்கச் சூட்டி
வல்லாரும் புகழுவரைந் தனனவன்யா ரெனின்மகிழ்ந்து
வகுப்பன் மாதோ (2)

மாதவமார் தருமேலைச் சிவபுரிச்சன் மார்க்கசபை
மருவி நாளும்
ஏதமிலாச் செந்தமிழ்நூல் இயலுணர்ந்தோன் ; புலவர்களுக்
கினியன் ; இன்பக்
கீதமுளான் ; சொற்பொழிவு கேட்பவர்கட் கினிமையுறக்
கிளத்தும் வண்மைக்
காதலுளான் ; கல்வியறி வொழுக்கமுளான் ; பனையப்பக்
கவிவல் லோனே. (3)



மணிவாசகன், "சாரதா! என் நிற்கவேண்டும்? உட்கார்ந்து கொள்ளுவோம்" என்றான். (பக்கம் 29)

ஓம்:

கணபதி துணை.

# மணிவாசகன்.

"முந்திமா விலங்கலேன் றெடுத்தவன்முடிக டோணெரி
[தரவே
உந்திமா மலரடி யொருவிரலுகிர்நுதி யாலடர்த்தார்;
கந்த மார்தரு பொழில் மந்திகள் பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறை கமழ் திருநெல்வேலியுறை செல்வர்தாமே"
—திருஞானசம்பந்தர்.

## முதலாவது அதிகாரம்.

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்?"
(பாரதியார்.)

### இரண்டு நண்பர்கள் உரையாடல்.

நமது கதை, திருநெல்வேலியின் ஒருபாகமாகிய சிந்து பூந்துறையில் தொடங்குகிறது. அவ்வூரின் பெரிய வீதியில் ஒரு மாடி வீட்டின் பின்புறமுள்ள விசாலமான பூந்தோட்டத்தின் நடுவண் சதுரமான கல்லின் மீது ஒரு வாலிபன் அமர்ந்திருக்கிறான். மாலை நான்கு மணி யிருக்கலாம். மன்றல் கலந்த தென்

றற் காற்று மென்மையாய் வீசிற்று. பறவைகள், தத் தங் கூடுகளை நோக்கிச் சென்றன. பலவிதமான மலர் களிலிருந்து மணம் யாண்டும் பரந்து கமழ்ந்தது. அவ் வாலிபனுக்கு வயது பதினெட் டிருக்கலாம். கெம்பீர மான தோற்றமும், நடுத்தரமான அழகும் உடைய வனாக இலங்கினான். அவனுடைய முகம், அறிவின் கூர்மையைத் தெற்றென விளக்கிக் காட்டியது. சில நிமிடம் சித்திரம்போல் அசை வற்றிருந்தான். பிறகு, "ஆன்ம உணர்ச்சி யடைந்து, கடவுளைக் காண்டற்கு விரும்பி, ஒரு பொருளினும் பற்றில்லாதவராய், கானில் உறையும் துறவிகள் வாழ்க்கையே கவலை யற்றது; உண்மையில் இன்பம் துய்ப்பவர்கள் அவர்க ளென்றே கூறுதல் வேண்டும். இல்லற வாழ்க்கையில் இன்பம் உள தெனச் சொல்லுகிறார்கள்; ஆனால், இடம், பொருள் முதலிய யாவும் நிறையப் பெற்ற வர்கள் இன்பம் நுகர்தல் கூடும்; என்னைப் போலத் தாய், தந்தையரை இழந்து, என்றும் வருத்தத்தில் ஆழ்ந்து கிடக்கின்றவன், எப்படி இன்பம் நுகர்தல் கூடும்? "தாயோ டறுசுவை போம்; தந்தையொடு கல்வி போம்" எனப் பெரியார் கூறியது, என்மட்டிற் பலித்து விட்டது. பி. ஏ. வரையில் படித்து விடலா மென்றே கருதினேன்; என்னுடைய சிறிய தந்தை, அதற் கிடங் கொடுக்க வில்லை. என்படிப்பு, பிரதம பரீக்ஷையோடு (Matriculation) முடிந்து விட்டது. அது நிற்க, மற்ற எந்த வகையில், நான் நலம் நுகர் கின்றேன்? ஒன்று மில்லை. எனக்குத் தோன்றாத் துணையாய் உள்ளவர் கடவுள் ஒருவரே. ஒருவன், தரித்திரனாக இருந்தாலும் பக்தி யுடையவனாக இருப் பானாகில், அவனை விட உயர்ந்தவர்கள் ஒருவருமில

ரெனக் கூறலாம். ஒவ்வொரு நிமிடமும், நாம் கடவுளிடத்திற் பெற்றுக் கொள்கின்ற உதவிகட்குக் கணக்குண்டா? நாம் உண்பது அவருடைய உணவு; நாம் உடுப்பது அவருடைய ஆடை; நாம் நுகர்வது அவருடைய நலம்; இவற்றை யெல்லாம் நுகர்கின்ற உடலும், ஐம்பொறிகளும், அவர் நமக் களித்த கொடைப் பொருள்கள்; அவருடைய அருள் இல்லை யாகில், ஒரு நிமிட மேனும் நாம் உயிரோ டிருக்க இயலுமோ? அவர் நம்மை அசைக்காமல், நாம் அசைதல் கூடுமா? அவர் நடப்பிக்கா விட்டால், நாம் நடத்தல் கூடுமா? பூமியைப் பார்த்தாலும், வானைப்பார்த்தாலும், மற்றும் எங்கே பார்த்தாலும் அவருடைய பொருள்களாகவே தோன்றுகின்றன. அவருடைய உதவிப் பொருள்களே, உலகம் முழுவதும் சூழ்ந்திருக்கின்றன. கடலிலே பிறந்து, கடலிலே வளர்ந்து, அதிலே வாழுகின்ற மீன்களைப் போல, நாம் கடவுளுடைய அருட் கடலிலே தோன்றி, வளர்ந்து வாழ்கின்றோம். ஆகவே, மனத் திருந்த கருத் தறிந்து முடிக்கும் வள்ள லாகிய அவர், நம்மை ஒரு பொழுதுங் கை விடார்'' என்று வாய் விட்டுக் கூறினான். அவனுடைய மனம், எதையோ நினைந்து வருந்திக் கொண்டிருந்தது.

அப்பொழுது, அவனை நோக்கி மற்றொரு மனிதர் வந்து கொண்டிருந்தார்; அருகில் வந்ததும், "என்ன! மணிவாசகம் பிள்ளை! ஆள் வருவதுகூடத் தெரியாமல், எந்த இராஜ்யத்தைப் பிடிப்பதற்கு எண்ணுகிறீர்கள்?" என்று வேடிக்கையாகக் கேட்டார். மணிவாசகன், திடுக்கிட்டவனாய், "வடிவேலு பிள்ளையா! வாருங்கள்! வாருங்கள்!! நீங்கள் வருவீர்களென்று நான் எதிர் பார்க்கவில்லை; ஒன்றைப் பற்றிச்

சிந்தித்துக் கொண்டிருந்தேன்; அதனால் தங்கள் வரவைக் கவனிக்கவில்லை; மன்னிப்பீர்களாக" என்றான்.

வடிவேலு பிள்ளை:—ஆமாம்—கவனிப்பீர்களா? காங்கிரஸிற் சேர்ந்து விட்டீர்களாம்; பெரிய தேசத் தொண்டர்; இனிமேல் என் போன்ற அற்பர்களுடைய நட்பு எதற்காக? மெதுவாக விட்டு விலக வேண்டியதே.

மணிவாசகன்:—சே! ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? நான் காங்கிரஸிற் சேர்ந்ததாக யார் தங்கட்குத் தெரிவித்தது?

வடிவேலு பிள்ளை:— உம்முடைய சிறிய தந்தையாரே நேற்றுக் கூறினார். அஃதுண்மை தானா?

மணிவாசகன்:—ஆம்—உணுக் கொண்டு ஊர் சுற்றுவதைக் காட்டிலும், காங்கிரஸிற் சேர்ந்து, உலகத்திற்கு ஏதாவது நன்மை உண்டாகும் வழியில் இறங்கி வேலை செய்வது மேன்மை யாகும் என்பது என் எண்ணம்.

வடிவேலு பிள்ளை:—எனக்கு இந்தச் சங்கதிகளெல்லாம் பிடிக்கிற தில்லை; இருக்கட்டும். காந்தி அடிகள் என்ன சொல்லுகிறார்?

மணிவாசகன்:—அஹிம்சா தருமத்தை ஒவ்வொருவரும் கைக் கொள்ள வேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

வடிவேலு பிள்ளை:—அதைக் கொண்டால், சுயராஜ்யம் வந்து விடுமா?

மணிவாசகன் :—அப்படி யல்ல. அஹிம்சா தருமத்தை மேற் கொள்ளுவதுடன், சுதந்திரத்தை விரும்புதல்வேண்டும். "ஒவ்வொருமனிதனுக்கும் சுதந்திரம், பிறப் புரிமையாக இருக்கிறது" (Liberty is the birth-right of every man) என்று காலஞ் சென்ற திலகர் பெருமான் கூறுவதுண்டு.

வடிவேலு பிள்ளை :—சுயராஜ்ய மென்றால், ஆங்கிலேயரை இந்நாட்டிலிருந்து துரத்தி விடுவது தானே? காந்தி யடிகளும் அப்படித்தானே முயலுகிறார்கள்?

மணிவாசகன் :—அதுதான் தவறு. சுயராஜ்ய மென்பதற்குப் பொருள் : 'ஆங்கிலேயரைத் துரத்தி விடுதல், என்பதல்ல. நாம் சுதந்திரத்தை அடைய வேண்டும்; அதற்காகவே அவர் முயன்று வருகிறார். சுதந்திரம் பெற்றாலொழிய, ஏழைகளின் துன்பமும், வறுமையும் நீங்கா. நாம் சுதந்திரம் அடைவதால், ஆங்கிலேயருக்கு ஒரு துன்பமும் இல்லை.

வடிவேலு பிள்ளை :— 'கதர்' என்கிறார்களே அதன் பொருளென்ன?

மணிவாசகன் :—நமது நாட்டில் விளைந்த பஞ்சினைக் கொண்டு, நூற்ற நூலால் கைத்தறியில் நெய்த ஆடையையே 'கதர்' என்று வழங்குகிறார்கள். நாம் உடுத்துகின்ற துணியும், நூலும் நம்முடைய வீடுகளில் உண்டாக்கிக் கொள்வோ மானால், நமது நாட்டின் செல்வம், பிற நாட்டிற்குச் செல்லாது. ஏழைகளும், மற்றவர்களும் வறுமை நீங்

கித் தொழின் முறை பரவிப் பெருகி, நலம் உண்டாகும்.

வடிவேலு பிள்ளை :—சுயராஜ்ய மடைய வேண்டு மானால், கதர் இன்றி யமையாதது தானே?

மணிவாசகன் :— ஆம்— நமது நாட்டிலுள்ள அள வற்ற தொழிலாளிகட்குத் தொழில் உண்டா னால்தான், காந்தியடிகள் கூறும் சுயராஜ்யம் வந்த மாதிரி யாகும். சுயராஜ்யம் பெறமல் நமது இந்தியா தேசம், ஒரு தேசமாக வாழ முடியாது; சுயராஜ்யம் நாட்டிற்கு உயிர் போன்றது.

வடிவேலு பிள்ளை :—கதர் ஆடை அணிவதால், எத் தனை கோடி ரூபாய்கள் எஞ்சும்?

மணிவாசகன் :—அந்நிய நாட்டுப் பொருள்களில் மயங்காமல், கதர் ஆடை அணிவதால், அறுபது கோடி ரூபாய்கள் எஞ்ச லாகும். அதனால், ஏழை கள் வாழ்தல் கூடும். அந்நிய நாட்டுப் பொருள் களைச் சிறிது சிறிதாக நீக்க முயல வேண்டும். அது நமது கடமையே. இந்தியாவி லுள்ள ஆறு களில், ஓடுகிற தண்ணீருக்குப் பதிலாகச் சீமையி லிருந்து, தண்ணீர் தருவித்து, ஆறுகளில் ஓடச் செய்தால், அதை நீக்க முயல்வது எப்படி நமது கடமையோ, அது போலவே, அந்நிய நாட்டுப் பொருள்களை நீக்குவது நமது கடமையே. குடி யானவர்கள், பாதி நேரத்தைச் சோம்பேறித் தனமாகக் கழிக்கிறார்கள். குடியானவர்கள் நலத்துடன் வாழவேண்டுமானால், அந்நியத் துணி களை நீக்குதல் அவசிய மாகும். மலிவாயும் பார் வைக்குப் பள பளப்பாயும் இருக்கிற அந்நிய

நாட்டுத் துணிகளைக் குடியானவர்கள் வாங்கா திருக்கும்படி செய்வதோடு, ஓய்வு நேரங்களில் பஞ்சடிக்கவும் பட்டை போடவும் செய்தல் வேண்டும். இதுகாலை, நம்மை ஆண்டு வரும் ஆங் கிலேயர், ஜாதி மதங்களில் தலை யிடுவதில்லை. இவற்றில் ஏற்படுந் துன்பங்க ளெல்லாம் நாமாக ஏற்படுத்திக் கொள்வனவே. ஹிந்து ஜனசமூகம், அவசிய மில்லாத கட்டுப்பாடுகளை ஒழித் திருக்கி றதா? ஒரு சிறிதும் இல்லை. நமது அடிமைப் புத்திக்கும், நடத்தைக்கும், நம்முடைய கட்டுப் பாடுகள் எவ்வளவு காரணம் என்பது புலப்படும். அகத்திலே அடிமைகளாய், அம்பலத்திலே சுதந் திர வீரர்களாய் வாழ்தல் எப்படி? இதனால் நமது அடிமை நிலைக்கு, நாமே பொறுப்பாளி கள் என்பது புலப்படும். இப்பொழுது வறுமை யுற்று, அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் கோடிக் கணக்கான மக்கள் விடுதலை யடைந்து, வெளிச் சம் பெற்று வீரர்களாக விளங்கும் நன்னாளை எதிர் பார்த்தல் வேண்டும்.

வடிவேலு பிள்ளை:—அப்பா! இஃதென்ன? கோடை காலத்து இடி இடித்தது போலப் பேச்சா கக் கொட்டுகிறாயே! இனி என்ன? பெரிய தேசத் தொண்டனாகி விட்டாய்! இவ்வூரில் உள் ளவர்கள், இனி உன் கழுத்தைப் பூமாலைகளால் நிறைத்து விடுவார்கள். உன்னுடைய புண்ணி யத்தால், நான் ஒரு பூக்கடைகூட வைத்து விடு வேன். எனக்கும் மதிப்புத்தான்; பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் அல்லவா?

மணிவாசகன்:—நீங்கள் கேலி செய்கிறீர்கள். என்னு

டைய நிலைமை தெரிந்தால் கேலி செய்ய மாட்டார்கள்.

வடிவேலு பிள்ளை :—உன்னுடைய நிலைமை என்ன? மலை விழுந்தாலும் பிறழாத உன்னுடைய மனம், கலங்க வேண்டிய தென்ன? எனக்கு விளங்க வில்லை. சற்று விபரமாகச் சொல்.

மணிவாசகன் :—உங்களிடம் கூறுமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? என்னுடைய சிறிய தந்தையின் ஆதரவில் நான் இருந்து வருவது தாங்கள் அறிந்ததே. அவர் சிறிது காலமாக என்னை வெறுப்பாக நடத்துகிறார்; என்னுடைய தந்தை, எவ்வளவு செல்வம் தேடி வைத்திருந்தாலும், சிறிய தந்தையின் உத்தரவின்றி, ஒரு பைசாவேனும் பெறமுடியாது. இந் நிலையில் நான் இருப்பதைக் காட்டிலும், இறந்து விடுதல் மேன்மை யெனத் தோன்றுகிறது. இதுவே என் துன்பத்திற்குக் காரணம்.

வடிவேலு பிள்ளை :—"வருந்தற்க; நினது துயரை அறிந்த என் மனமும் வருந்துகின்றது. இன்னும் சிறிது நாளில் உனக்கு மணம் முடித்து விடுவார். அப்படிச் செய்யாம லிருப்பாராகில் உலகம் பழிக்கும். பிறகு, எல்லாம் உனக்கு உரிமை யாகி விடும். ஒரு காலத்திற் கஷ்டம் அனுபவிப்பவர்கள், மற்றொரு காலத்தில் நன்மை யடைவது உலகியற்கை. எல்லாம் தெரிந்த உனக்கு, நான் மிகுதியாகச் சொல்ல வேண்டிய தில்லை. கடவுளை நம்பிக் கொண்டிரு. யாவும் நன்மையாகவே முடியும்" என்று தேறுதலான மொழிகளைக்

கூறினர். பொழுதமருஞ் சமயமாகிவிட்ட படி யால், இருவரும் பிரிந்து சென்றூர்கள்.

மணிவாசகன், சிந்து பூந்துறையி லிருந்த பன்னீர்ச் செல்வம் பிள்ளையின் புத்திரன், பன்னீர்ச்செல்வம் பிள்ளையை, அவ்வூரி லுள்ளவர்கள் கொடை வள்ளல் என்று கூறுகிருர்கள். அவர், இவனைப் பெற்ற சில வருடங்களிலேயே தம்முடைய அருமை மனைவியை இழந்தார். சுமார் மூன்று வருடங்கட்கு முன், அவரும் விண்ணுலகெய்தினர். அவருக்குச் 'சிவராம பிள்ளை' என்ற ஒரு தம்பி யுண்டு. சிவராம பிள்ளையே, பன்னீர்ச் செல்வம்பிள்ளைக்குத் பிறகு, மணிவாசகனுக்குக் கார்டியனுக (Guardian) நியமிக்கப்பட்டார். சிவராமபிள்ளை நன்ருகப் படித்தவராயினும் கொடுமை புரிவதில் இவருக்கு நிகராக யாரும் இருக்கமாட்டார்கள். தந்தையினுடைய திதியை (சிரார்த்தம்) நழுவவிட்டாலும், பிறருக்குத் தீங்குசெய்வதை விட ஒருப்படார். பிறருக்குத் தீங்கு செய்ய இயலாத நாள், 'பிறவா நாளே' என்று கருதுவார். இவரின் பண்பு, போகப்போக விளங்கு மாதலின், இங்கு மிகுதியாகக் கூறுதல் வேண்டாம். மணிவாசகன், ஆங்கிலத்திற் சிறிது அறிவும், தமிழில் நல்ல அறிவும் உடையவன். கள்ளங் கபடு அறியாதவன். உணவை மறந்தாலும் திரு வாசகத்தை மறப்பதில்லை.

இக்காலத்தில், ஆங்கிலம் பயின்ற சிலர், தமிழையும், அதன் கண் உள்ள உயரிய நூல்களையும் இகழ்கின்றனர். இச்செயலே, வீர மக்களின் முன், தமிழ் நாடு தலை கவிழ்தற்குக் காரண மாயிற்று. நமது தமிழ் நாடு, சுதந்திரம் இழந்தபின், தமிழ் மொழிப் பற்றை

யுந் துறந்தது. சிலர், 'எனக்குத் தமிழிற் பேசத் தெரியாது' என்று கூறுவதே கௌரவமெனக் கருதுகின்றனர். முன்னொரு காலத்தில், மொழிப்பற்று நமது நாட்டில் பெருகி இருந்தது. விடுதலை பெற்ற மக்களாய் இயற்கை இன்பம் நுகர்ந்த நாளில், நமது தமிழ்நாடு, மொழிப்பற்றில் பிறநாட்டாருக்கு இளைத்திருக்க வில்லை. தமிழ் நாட்டில் வாழ்ந்தோர், தமிழையே உயிராகக் கருதினர். நமது அருந் தமிழ்நாடு, பூவேந்தருக்குச் செய்யும் சிறப்பைக்காட்டினும், அதிகமாகப் பாவேந்தருக்கு ஆற்றியது. வேந்தராயினர், புலவரால் தாம் பாடப்பெறுவதையே அழியா இன்பமென உணர்ந்திருந்தார். கற்றமாந்தரைக் கண்ணெனக் கொண்டவரும் உண்டு. புலவர்கள் கண்ட நூல்களை அரசர்கள் அளவற்ற பொன் கொடுத்து வாங்கினர். முற்காலத்திருந்தோர், கவியின்பத்தை விழைந்தார். அதனை இயற்றிய புலவர்களைப் போற்றிப் புகழ்ந்தார். ஆங்கிலேயர், சிறந்த கவியாகிய ஷேக்ஸ்பியரைப் (Shakespeare) பரவுகின்றார். இதுகாலைத் தமிழ்நாட்டில், கம்பனையும், இளங் கோவடிகளையும், சேக்கிழார் பெருமானையும், திருவள்ளுவரையும் போற்றுவார் யார்? ஆங்காங்கு ஒரு சிலரே. நாட்டின் உயிர்நிலை, மொழிப் பற்றே யாகும். நமது தமிழ்நாடு, மற்ற நாடுகளைப்போல முன்னணியில் நிற்க வேண்டுமானால்—நாகரீகத்தில் தலை சிறந்து திகழ வேண்டுமானால்—நம் மக்களிடையே, தனி மொழியாகிய தமிழ் மொழிப்பற்று ஓங்கி வளர வேண்டும்.

# இரண்டாவது அதிகாரம்

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என் கொலோ!
மன்னுயிர்க் கின்னா செயல்"—குறள்.

இரவிற் கண்ட கள்ளச் செயல்கள்—சிறிய தந்தையின் குணம்—கோவிந்தனின் உறுதி—படுகொலை.

மணிவாசகன், வீட்டிற்குச் சென்று உணவு கொண்டு, தன்னுடைய தனியறைக்குச்சென்று படுத்துக் கொண்டான். பலவிதமான மனக் கலவரங்களால் தூக்கம் பிடிக்கவில்லை. இரவு பத்துமணி யிருக்கலாம். திருவாசகத்தைப் படிப்போம் என்று எழுந்து அதைத்தேடினான். அது காணப்படவில்லை. மேன் மாடியிலிருக்குமென்று கருதி, ஆங்குச் சென்று எடுத்துக்கொண்டு, தன்னுடைய அறையை நோக்கி நடந்தான். அப்பொழுது சிவராம பிள்ளையின் அறையில் யாரோ பேசுங் குரல் கேட்டது. 'அவர்கள் யார்' என்று கவனித்துக் கேட்டான். சிவராம பிள்ளையும், அவருடைய மனைவியாகிய காமாக்ஷியும் என்று உணர்ந்தான். 'இந்நேரத்திற் பேச வேண்டிய இரகசியம் என்ன?' என்று உற்றுக் கேட்டான். கீழ் வருமாறு பேச்சு நடந்தது:—

சிவராம பிள்ளை:—அவனைத் தொலைக்காத வரையில் நம் பாடு ஆபத்தே. நம்முடைய தலைக்கு நாமே கல் வைத்துக்கொண்ட மாதிரியாகும். எவ்வளவு விரைவில் அவனை யொழிக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் முடித்து விடுதல் சிறந்தது.

காமாக்ஷி:—சே! முன்னாலேயே ஒரு கொலை செய்திருக்கிறீர்கள்; அதெப்படி விடியுமோ தெரியவில்லை. இப்பொழுது மற்றொன்று செய்தல் அடாததாகும்.

சிவராம பிள்ளை:—நீ சுத்த முழு மூடம்; என்னுடைய தமையனை, நான் விஷம் வைத்துக் கொன்றேனென்பதை யார் நம்புவார்கள்? அவர், மார்படைப்பால் இறந்து விட்டாரென்றே இன்று வரை உலகம் நம்பிக் கொண்டிருக்கிறது. அது பெரிய இரகசியம். ஒருக்காலும் வெளி வரப் போவதில்லை.

காமாக்ஷி:—ஐயோ! ஒருக்கால் வெளிவந்தால்—

சிவராம பிள்ளை:—எப்படி வெளி வரும்? அவரை நான் விஷம் வைத்துக் கொன்ற சங்கதி, உனக்கும், எனக்கும், வேலைக்காரனாகிய கோவிந்தனுக்குமே தெரியும். நாம் இருவரும் வெளியிட மாட்டோம். கோவிந்தன் மிக நம்பிக்கையானவன். இன்றுவரை வெளியிடாதவன், இனிமேலா வெளியிடப் போகிறான்.

காமாக்ஷி:—ஆனால், மணிவாசகன் இதை யறிவானா?

சிவராம பிள்ளை:—அவனுக்குச் சுத்தமாய்த் தெரியாது. உலகத்தி லுள்ளவர்களைப் போலவே, அவனும் ஏமாந்து போயிருக்கிறான்.

காமாக்ஷி:—இருக்கட்டும்—இப்பொழுது அவனைக் கொல்லவேண்டிய அவசியம் என்ன?

சிவராம பிள்ளை:—அவசியம் இல்லாமலா? அவனுடைய தந்தை இறந்தபோது சொக்கமாக மூன்று லக்ஷங்கள் இருந்தன. அவை யாவும்

என்னுடைய சொந்தச் செலவிலேயே கழிந்து விட்டன. என்னை, அவனுக்குக் கார்டியனாக வைத்ததே நமக்குச் சகட யோக மாயிற்று. அவனுக்குக் கார்டியனாக—இந்த யோக்கியனாகிய என்னை அமைத்தவர்களின் மூடத்தனத்திற்கு நாம் என்ன செய்யலாம்? இனி, எஞ்சியிருப்பது வசந்த மாளிகை ஒன்றே. அதை விற்றால நான்கு லக்ஷங்கள் கிடைக்கக் கூடும். ஆனால அவனிருக்கிற வரையில் நாம் அதை அசைக்க முடியாது. அவன் ஒழிந்தால் பிறகு நம்மைச் சேர வேண்டியதுதானே? வசந்த மாளிகை யொன்றிருப்பதாக மணிவாசகன் இன்னமும் அறியான்.

காமாக்ஷி :—உங்களைக் கார்டியனாக அமைத்தவர்கள், ரொக்கமாகிய மூன்று லக்ஷங்கட்கும் கணக்குக்கேட்டால் என்ன செய்வீர்கள்?

சிவராம பிள்ளை :—நான் அவ்வளவு மூடனல்ல. சரியான வகையில் கணக்குகள் தயார் செய்தே இருக்கிறேன். என்னுடைய தமையன் இருக்கிற பொழுது, அவனிடம் ஒரு கடிதங் கொடுத்தாரல்லவா?

காமாக்ஷி : ஆம். ஆம்; எனக்கு நன்றாக நினைவிருக்கிறது; அதற் கென்ன?

சிவராம பிள்ளை:—அது வெறுங் கடிதமல்ல. ஒரு புதையல் இருக்கும் இடம் அதிற் குறிக்கப் பட்டிருக்கிறது. அக்கடிதத்தை, மணிவாசகன் அறியாமல் நான் எடுத்துக் கொண்டேன். கடவுள் உதவியால், அந்த வழி மாத்திரம் நன்றாகத்

என்ற திருக்குறள் நினைவிற்கு வந்தது. 'இனி, அங்கு நிற்பது தவறு' என்று கருதியவனாய்த் தன்னுடைய அறையை நோக்கி நடந்தான். கால்கள் தள்ளாடின. மனக் குழப்பத்தால் உடல் பலங் குன்றி விட்டது. விசை வைத்த இயந்திரத்தைப் போலத் தன்னுடைய செயலின்றி ஊர்ந்து சென்றான். அறையினுட் சென்று, கதவைத் தாழிட்டு, மெத்தையின் மீது புரண்டான். தன் தந்தையின் கொடிய மரணத்தை நினைந்து கண்ணீ ருகுத்தான். பிறகு, தன் தந்தை, மரணத் தறுவாயில், ஒரு கடிதத்தைக் கொடுத்து, "இதில் இரகசியம் அடங்கி யிருக்கிறது; சரியான காலத்திற் பிரித்துப் பார்த்து, அதன் பயனை யடைவாயாக" என்று கூறினமை நினைவிற்கு வந்தது. உடனே எழுந்து, பெட்டியைத் திறந்து, கடிதம் வைத்த இடத்தில் தேடினான்; எப்படி இருக்கும்? காணப்படவில்லை. அக்கடித விஷயத்தில் தான் கவனக் குறைவா யிருந்ததற்காக வருந்தித் தலையில் அடித்துக் கொண்டான். சிறிய தகப்பன் மூன்று லக்ஷ ரூபாய்களையும் அழித்து, அருமைக் கடிதத்தையுந் திருடிக் கொண்டு, தன்னையுங் கொல்லும் பொருட்டுச் சூழ்ச்சி செய்வதை எண்ண உயிர் பதைத்தது. அனலிடைப்பட்ட மெழுகு போல் உருகினான். வசந்த மாளிகை எங்கிருக்கிறதென அறிய வேண்டுமென்ற உணர்வும் தோன்றியது. உடல், துயரத்தால் துடித்துக் கட்டுக் கடங்காமல் விண்ணிற் பறப்பது போன்றிருந்தது. "சண்டாளா! என் அருமைத் தந்தையை விண்ணிற் குடியேற்றினாய்! இப்பொழுது, என்னையும் அவ்வழி செலுத்தக் கருதுகிறாய்! இனி, உன்வலையிற் பிடிபட மாட்டேன்; உன்னைத் தண்டிப்பதற்கு

முயற்சிப்பேன்" என்று கூறியவனாய் ஆவி சோர்ந்து சாய்ந்தான். அவ்வினாடியே மனத் தளர்ச்சியாலும், களைப்பாலும் கும்பகர்ணப் படலம் வாசித்தான்.

மறுநாட் புலர்ந்ததும், தான் கேட்டவைகளை, வடிவேலு பிள்ளையிடங் கூறினான். அன்று முதல் 'வடிவேலு பிள்ளை, மணிவாசகனுடனேயே இருப்பது' என்று தீர்மானஞ் செய்து கொண்டார்.

சிவராம பிள்ளை, வேலைக்காரனாகிய கோவிந்தனை மேன் மாடிக்கு வரும் வண்ணம் சொல்லிவிட்டு, ஆங்குச் சென்று, அவன் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். கோவிந்தன், மனக்கலவரத்தோடு சென்றான். அவனைக் கண்டதும், சிவராம பிள்ளை, "என் தமயன் இறந்த சங்கதியை நீ அறிந்தேயிருக்கிறாய்; இதுகாறும் வெளியிடவில்லை; இனிமேலும் வெளியிட மாட்டாயென்றே நம்புகிறேன்" என்றார். கோவிந்தன், திடீரென்று இம்மொழியைக் கேட்டதும் திடுக்கிட்டான். பிறகு, "ஆம்-என் உயிர் போனாலும் நான் வெளியிடப் போவதில்லை. அப்படிச் செய்தால், தங்கள் நன்றியை மறந்தவனாக மாட்டேனா?" என்றான்.

சிவராம பிள்ளை :—அதில் எனக்கு நம்பிக்கைதான்; ஆனால், இப்பொழுது ஒரு பெரிய சங்கதி முடியவேண்டியதிருக்கிறது; அதற்கு உன்னுடைய உதவியுந் தேவை. நீ ஒப்புக் கொள்வாயோ என்னவோ அதுதான் சந்தேகம். எப்படியாயினும் ஒப்புக் கொள்வதாக உறுதி கூறு.

கோவிந்தன்:—ஒன்றையும் அறிந்து கொள்ளாமல் வாக்குறுதி செய்வது மூடத்தனமாகும். வெளியிட்டுச் சொல்லுங்கள்.

சிவராம பிள்ளை:—வசந்தமாளிகையை விற்றுவிட வேண்டும்; அதற்கு மணிவாசகன் இடையூறாக இருக்கிறான்; அவனை யொழித்து விட்டால், நம்முடைய விருப்பம் போல் எல்லாக் காரியங் களும் நடத்தலா மல்லவா?

கோவிந்தன்:—அதற்காகக் கொல்வதா? தாங்கள் அவனை அழைத்துச் சங்கதியைச் சொன்னால், சம்மதித்து விடுகிறான்—

சிவராம பிள்ளை:—அது முடியாத காரியம்.

கோவிந்தன்:—அவனுடைய தந்தை இறந்தது, இன்று வரை வெளிவர வில்லை; வெளி வந்தால், என்ன ஆகுமோ அறியேன்; இந்நிலையில் இரண்டாவது கொலையா? மணிவாசகன், சிறந்த குண முடை யவன்; தங்கள் கட்டளையை மறுப்பவனல்ல. தசரதன் மனைவியாகிய கைகேயி, ஸ்ரீராமபிரானை நோக்கி:

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே யாளநீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழிவெங் கானநண்ணிப் புண்ணியத் துறைகள்ஆடி
ஏழிரண் டாண்டில்வாவென் றியம்பினன் அரசன்"......

என்று கூறியபோது, எப்படி ஸ்ரீ ராமபிரான், நாடு துறந்து, உலகமெல்லாந் தன்னடிக்கீழ் அடங்கத் தனிமுடி கவித்து ஆளும் பதவியையும் விட்டுக் கானிற் குச் சென்றாரோ, அதுபோலத் தாங்கள், "நான் வசந்த மாளிகையை விற்கவேண்டும்; நீ அதற்கு இடையூ றாக இருக்கிறாய்; ஆதலால், எங்கேனும் ஓடிப் பிழைத் துக் கொள்; இன்றேல், கொன்றுவிடுவேன்" என்று அவனிடங் கூறினால், அப்படியே செய்வான். இச்

சுலபமான வழியைவிட்டு, மலை கல்லி எலி பிடிப்பது போல் காரியந் தொடங்கி யிருக்கிறீர்கள்.

சிவராம பிள்ளை:—அவை யெல்லாம் குருட்டு எண்ணங்கள். அவனை நாம், அப்படித்தான் சொல்லலாமா? சொன்னாலும் அவன் சம்மதிப்பானா? நான் கண்டு பிடித்ததுதான் சரியான வழி, உன்னுடைய உதவி வேண்டும்; விரைவிற் பதிற்கூறு.

கோவிந்தன்:—சொல்லக் கூடாது; ஆனால், கொல்லலாம் போலும்! ஐயா! ஆழம் பார்த்தே நீரில் இறங்கவேண்டும். 'எண்ணித் துணிக கருமம்' என்று திருவள்ளுவர்கூடச் சொல்லி யிருக்கிறாராம். நேற்றுப் பூக்கடைத் தெருவில், ஒருவர் பிரசங்கத்திற் கூறினார். யோஜித்துச்செய்யுங்கள்.

சிவராம பிள்ளை:—யோஜனை யென்ன? எல்லாம் யோஜித்தாய் விட்டன.

கோவிந்தன்:—உங்களுக்கு 'கொலை' என்றால் வாழைக்காய், கத்தரிக்காய் போ லிருக்கிறது. முன்னேயே, ஒரு கொலைப்பாவம் தங்களைச் சுற்றிக் கொண் டிருக்கிறது. இப்பொழுது ஒரு கொலை செய்தால் தங்கள் கதி எப்படி ஆகுமோ?

சிவராம பிள்ளை:—டே! அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசாதே. உதவி செய்வாயா? மாட்டாயா? சொல்லிவிடு!

கோவிந்தன்:—கோபப்பட வேண்டாம். பன்னீர்ச் செல்வம் பிள்ளையின் ஞாபகப் பொருளாய் அவனொருவன்தான் இருக்கிறான். அவனைக் கொல்வது, என்னவோ எனக்குப்பிடிக்கவில்லை. அன்றியும், மணிவாசகன் வேறொருவனல்ல. தங்கள்

தமையன் பிள்ளையே. 'தான் ஆடாவிட்டாலும், சதை ஆடும்' என்பார்கள். உங்கட்கோ சிறிதும் இரக்கம் இல்லை.

சிவராம பிள்ளை:—உன்னுடையவழக்கத்தைவிடமாட்டாய். என்னவோ தர்ம சாஸ்திரமெல்லாம் பேசுகிறாய். அவன் ஒழிந்தாலன்றி, எனக்கு நற்காலம் உண்டாகாது. ஒருவர் சுகமடையும் பொருட்டு, ஒருவர் துன்பப்பட்டே ஆகவேண்டிய திருக்கிறது. உன்னை அக்காரியம் செய்யும்படி நான் தூண்டவில்லை. நான் இவ்வீட்டிலேயே காரியத்தை முடித்து விடுகிறேன்; நீ மாத்திரம் இவ்விரண்டு சங்கதிகளையும், என்பொருட்டு வெளியிடக் கூடாது.

கோவிந்தன்:—ஐயோ! வேண்டாம். முதற்கொலை போதும்! தாங்கள் இரண்டாவதாக இதைச் செய்வீர்களானால், என் மனந் தாங்காது. உடனே எல்லாவற்றையும்வெளியிட்டுவிடுவேன்.

சிவராமபிள்ளை:—டே! உன்னுடைய உயிரும் என் கையில் இருக்கிறது. மூன்றாவதாக உன்னையும் அவர்கள் பின்னே அனுப்பிவிட எனக்கு வல்லமை உண்டு. வீணாகக் கெட்டுப்போகாதே.

கோவிந்தன்:—நானா கெடுகிறேன்? ஒருக்காலுமில்லை. உங்கட்கே கேடுகாலம் நெருங்கிவிட்டது. திரும்பத் திரும்ப என்னைக் கேட்டாலும், மேற்கூறியதையே கூறுவேன். முடிவாகச் சொல்லுகிறேன்; அதற்கு நான் இணங்கவே மாட்டேன்.

சிவராம பிள்ளை:—ஆனால், உறுதிதானே?

கோவிந்தன்:—ஆம் ஐயமென்ன?

சிவராம பிள்ளை:—"சரி! இனிமேல் நடப்பதைப் பார்" என்று கோபமாகச் சொல்லி விட்டுச் சென்றார்.

இரவு பன்னிரண்டு மணி இருக்கலாம். எவனும் அஞ்சும்படியான காரிருள். மழைசிறிது தூரிக்கொண்டிருந்தது. அவ்வமயம், உயரமான ஒரு கருப்பு உருவம், மணிவாசகனுடைய அறையை நோக்கிச் சென்றது. அவ்வீட்டின் உட்சென்று பார்ப்போமாயின், இடது புறம் இருக்கும் அறை, காமாக்ஷிக்குரியது. அதற்கு எதிரேயுள்ளது, சிவராம பிள்ளையினுடையது. அதற்கு அடுத்த அறை, குளிக்கும் இடம். அதற்கு எதிரேயுள்ளது, மணிவாசகனுடையது. அவ்வறைக்கு இரண்டாவது, கோவிந்தன் படுத்துக்கொள்ளும் இடம். இவைகளை நண்பர்கள், நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வுருவம், மணிவாசகனது அறைக்கு நேரே வந்ததும், நாற்புறமும் பார்த்தது. உடனே மெதுவாக நடந்து, மணிவாசகனுடைய அறையினுட் சென்று, ஏதோ ஒரு பொருளைத் தேடி எடுத்துக் கொண்டது. பிறகு, அடிமேல் அடிவைத்து, மெதுவாக நடந்து, ஒரு திரைமறைவில் சட்டென்று மறைந்து, சுமார் ஐந்து நிமிடம் பதுங்கியிருந்து, தன் தலையை மட்டும் வெளியே நீட்டிச் சுற்றும் முற்றும் பார்த்தது. அதேசமயம், வெளிப்பக்கத்திலிருந்து கோவிந்தன், தன்னுடைய அறைக்குச் செல்வதைப் பார்த்தது. கோவிந்தன், ஒரு திறவுகோலால் தன்னுடைய அறையைத் திறந்துகொண்டு உள்ளே

சென்று, மறுபடியும் கதவைப் பூட்டிவிட்டு "உஸ் அப்பா!" என்று படுத்தான்.

அதே வினாடியில், மணிவாசகனுடைய அறையி லிருந்து வெளிப்பட்டு, ஒளிந்து நின்று இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவ்வுருவம், 'விர்' என்று கோவிந்தனுடைய அறையின் முன் சென்று, தன் கையிலுள்ள திறவுகோல் ஒன்றினால் மெதுவாகத் திறந்து, உள் நுழைந்தது. ஐந்தாறு நிமிடங்கள் கழிந்ததும் "ஆ! கொலை! கொலை!!" என்று அலறும் சப்தங் கேட்டது.

மனிதன் செய்யுந் தீமைகட்கு அளவில்லை. 'இறைவன் எங்கும் இருக்கிறான்' என்று உணர்ந்தவர் பிறரை வஞ்சிக்க எண்ணார். இறைவன், நம் உணர்வி லிருந்து, நாம் செய்யும் ஒவ்வொரு செயலையுங் காண் கிறான். இது மறுக்க முடியாத உண்மையாகும். இறைவன், நம்மனதில் உறைந்து நமது நினைவுகளைக் கணக்கிடுகின்றான். உலகின் எந்தப் பாகத்திலும் இறை ஒளி வீசுகின்றது. ஒவ்வோரணுவிலும், இறை உயிர் விரவித் ததும்புகின்றது. யாண்டும் பரந்துள்ள இறை உயிர், நம்மை நடத்துகின்றது. யாரைத் துன்புறுத்தி னாலும், வஞ்சித்தாலும், அது கடவுளுக்கே இயற்றிய தாகும். உலகம் இறைவன் கோயில்; மக்கள் உடல் தெய்வத் திருக்கோயில்; இறையொளி பரவாத இடம் யாது! யாண்டும் தெய்வத் தன்மை பொங்கித் ததும்புகின்றது. ஆகவே, இவ்வுணர்ச்சி யற்றோரே, தீமைபுரிய முற்படுவர். கடவுளின் தண்ணருளை நாடு வோன் யார்க்கும் தீங்குபுரிதல் கூடாது.

---

## மூன்றாவது அதிகாரம்

"ஆரமும் ஆரச்சேறும் அரும்பனி நீரும்பூவும்
ஈரவெண் மதிநிலாவும் இதம்பெறு தென்றல் காலும்
ஒருயிர் இரண்டுமெய்யாய் உருகுவார் உருகும் வண்ணம்
மாரனை மகுடஞ்சூட்ட வந்தது வசந்தகாலம்"
—வில்லிபுத்தூரார்.

### மணவினைப் பேச்சு—காதலர் உறவாடல்

"முடிவாகத் தங்களுடைய விருப்பந்தான் என்ன? நமது மகள் சாரதாம்பாளை, யாருக்கு மணஞ்செய்ய நினைத் திருக்கிறீர்கள்?" என்று தனது கணவனாகிய சொக்கலிங்கம் பிள்ளையை நோக்கித் தாயாரம்மாள் வினவினாள்.

சோக்கலிங்கம் பிள்ளை:—பெண்ணே! என்னுடைய விருப்பத்தைக் கேட்க ஆவலுற்றபடியால், இதோ சொல்லுகிறேன் கேள்; காலஞ்சென்ற பன்னீர்ச் செல்வம் பிள்ளையின் புத்திரன் மணி வாசகன் இருக்கிறா னல்லவா? அவன் மிகவும் சிறந்த நடத்தை யுடையவன்; அவனுக்கே நமது மகளை மணம்முடித்து, என் கண்குளிரப் பார்க்க வேண்டும்.

தாயாரம்மாள்:—என்ன சொன்னீர்கள்? எந்தக் காரி யத்தைக் கேட்டாலும், தங்களுடைய வழக்கம் இப்படித்தான் சொல்லுகிறது. மணிவாசகன் தாய்தந்தை யற்றவன். அவனுக்கா பெண்ணைக் கொடுப்பது? சற்று எண்ணிச் சொல்லுங்கள். என்னுடைய தமையன் மகன் நடராஜன் தாழ்ந்த

வனு? அதைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராயமென்ன? அவனுக்கு நிகராக இந்த ஊரில் யாருங் கிடையாதென்றே நான் உறுதியாகக் கூறுகிறேன். அப்படியிருக்க அவனை விலக்கி விட்டு, மணிவாசகனுக்குக் கொடுப்பேனென்றது வியக்கத் தக்கதே.

சோக்கலிங்கம் பிள்ளை:—பெண்ணே! உன்னுடைய பேதமைக் குணத்தால், மணிவாசகனை இழிவாகவும், நடராஜனை மேன்மையாகவும் பேசி விட்டாய். மணிவாசகன், தாய்தந்தை யற்றவனென்பது உண்மைதான். அவன், குடும்பத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் தற்போது இருக்கும் பொருளே போதுமானது. அன்றியும், தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல பாண்டித்யம் பெற்றிருக்கிறான். பேச்சை வளர்ப்பானேன்? மணிவாசகனுக்குத்தான் நமது பெண்ணை மணஞ் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் குழந்தையினுடைய விருப்பத்தையும் தெரிந்து கொள்ளுவோம்.

தாயாரம்மாள்:—ஏன் பிடிவாதமாகப் பேசுகிறீர்கள்? நடராஜன் எந்த விஷயத்தில் தாழ்ந்தவனாகிவிட்டான்?

சோக்கலிங்கம் பிள்ளை:—அவனைப்பற்றி யுனக்குத் தெரியாது. நடராஜனைவிடக் குடிப்பதிலும், திருடுவதிலும் பேர்பெற்றவர்கள் யாருமிருக்க மாட்டார்கள்.

தாயாரம்மாள்:—ஏதோ சிறுபிள்ளைத்தனமாகச் செய்திருக்கலாம்? மணஞ் செய்துவிட்டால் எல்லாம் திருந்திவிடுதல் இயற்கைதானே?

'சோக்கலிங்கம் பிள்ளை:—பாம்பிற்குப் பால் வார்த்தாலும், அதன் குணம் மாறுவதில்லை. நடராஜன் திருந்துதல் ஆகாயத் தாமரைதான்.

தாயாரம்மாள்:—"பிறகு தங்கள் விருப்பம்போல் செய்யுங்கள்" என்று எழுந்து பின்கட்டை நோக்கிச் சென்றாள்.

சொக்கலிங்கம் பிள்ளை, திருநெல்வேலிக் கீழ்ரத வீதியில் வசித்துவந்தார். இவருக்கு ஏராளமான செல்வம் உண்டு. இவருடையமகள் சாரதாம்பாள், நிறைந்த வனப்பு வாய்ந்தவள். சொக்கலிங்கம் பிள்ளையின் குணம், அவ்வளவு புகழத்தக்க தன்று. ஏராளமான செல்வமிருந்தும் இதுகாறும் ஒரு தருமமுஞ் செய்தறியார். இனிமேல் செய்யவேண்டுமென்ற கருத்து உண்டு. சேற்றில் செந்தாமரை முளைத்தது போல், சாரதாம்பாள், இவருடையமகளாகத் தோன்றியது வியக்கத் தக்கதே.

குன்றின்கணிருந்து மெல்லென அசைந்து வந்த இளவாடைக்காற்று, கொன்றைமணத்தோடு வீசிற்று. மாலை ஏழு மணி இருக்கலாம். நீல நிறவானம் மறுவற்றுத் துலங்குகிறது. மரகதத் தட்டிலே வைரக் கற்களைப் பதித்ததுபோல விண் மீன்கள் தோன்றின. அவற்றின் நடுவண் அழகிய முழு மதியம் தண்ணொளி பரப்பித் திகழ்கின்றது.

"தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமும் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீணிலா."

தாமிர பர்ணி நதியின் மாண்பு மிகப் பொலிவாய் விளங்கிற்று. கண்ணுக்கினிய விருந்தாய் விளங்கி, அதன் இடையே, 'சல சல' என்றோடும் தண்ணீ ரானது, சந்திரனது வெள்ளியகிரணங்களால், உருக்கி ஓடவிட்ட வெள்ளிக்குழம்போ என்ற ஐயத்தை உண் டாக்கிற்று. அகன்ற வெண்மணல் மருங்கு, இரண்டு பக்கங்களிலும் நெருங்கிய சந்திரவொளியாற் கண்ணிற் குத் தோற்றும் சோலைகள், மகிழ்ச்சி யளிப்பனவாய் இலங்கின. சிறிது தூரத்தில்தோன்றும் திருச்செந்தூர்ப் புகைவண்டிப் பாலம், (Bridge) அகன்ற கணவாய் களோடு, பத்தி பத்தியாய் இருபுறமும் ஒழுங்குபெற நிரல்படுத்தி, ஏற்றப்பட்டிருந்தவிளக்குகளுடன் களிப் பைத் தந்தது. எங்கும் ஒலியின்றி யிருந்தது. சுமார் ஒரு மைல் தூரம்வரை விரிந்தும், கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்தும் கிடந்த ஆற்றுமணல் வெளியில், மனிதர் நடமாட்டம் அப்பொழுது காணப்பட வில்லை.

கரையின்மேல் ஓங்கி வளர்ந்துள்ள கமுகு, தென்னை, மூங்கில் முதலிய மரங்கள் அசைவற்றிருந் தன. ஆனால், மணலின்மீது, ஆற்றின் இருமருங்கும் செழித்து வளர்ந்தோங்கிய பசும் புற்கள்மட்டும், மெல் லென வீசியகாற்றால், நிமிர்ந்தும், வளைந்தும் ஒசிந்தன. உலமே தன்செய லொன்று மின்றி ஆழ்ந்த நித்தி ரையில் இருப்பதுபோலத் தோன்றியது. ஓரங்களிலி ருந்த தாழைச் செடிகளிலிருந்து மலர் மணம், 'குமு குமு' என்று பரந்தது. இத்தகைய ஒப்பற்ற காலமே, இயற்கையின் அழகைக் (Natural-Beauty) கண்டு, அதன் வழியாகக் கடவுளின் மாண்பைவியந்து, போற் றிப் பரவுதற்குஏற்றதாம். சிறிது தூரத்திலிருந்த ஒரு

மணல் மேட்டின்மீது ஒரு வாலிபன் உட்கார்ந்திருக்கிறான். அவனுடைய மாசற்ற முகமும், ஒளியுடன் கூடிய கண்களும், எழில் நிறைந்த மற்ற உறுப்புக்களும், அவனுடைய அறிவின் மேன்மையையும், மாண்பையும் விளக்கின. அவன் யார்? நமது மணிவாசகனே. அவன், தன்னைச் சுற்றிலும் இருந்த கண்ணுக்கினிய இயற்கை அழகிலும், காலநலத்திலும் ஈடுபட்டுத் தன்னையும் மறந்தவனாய்க் கடவுளைத் துதிக்கலானான்:—

''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தெண் ணீரே!
உகந்ததண் ணீர்இடைமலர்ந்த சுகந்தமண மலரே!
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே! சுகத்திலுறும் பயனே!
ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே! அலங்கலணிந் தருளே''

இவ்வண்ணம் சில நிமிடம், நெஞ்சுருகத் தனது தீங்குரலிற் பாடினான். பிறகு, 'சரி! இந்நேரம் வந்துகொண்டே யிருப்பாள்' என்று கூறிவிட்டு, நாற்புறமும் நோக்கினான். அப்பொழுது அவனிருந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் ஓர் உருவம் இவனைநோக்கி வந்தது. உடனே அவனுடைய முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது; புன்னகை பூத்தது; அவன் உடல் களிப்பின் மிகுதியால் நிலையின்றித் தவித்தது. மறு நிமிடம் ஒருவரோ டொருவர் ஆவலோடு தழுவினர். அதிகப்பட்ட மகிழ்ச்சியால், ஒருவரும்பேச இயலவில்லை. இருவர் கண்களும் உறவாடின. அப்போது இருவர்க்கும் ஒரு வகைப் புது இன்பம் தோன்றியது.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல"

என்பது உண்மையல்லவா? அவ்வுருவம், சுமார் பதினைந்து வயதுள்ள ஒப்பற்ற எழில் அணங்காயிருந்தது. அப்பெண்மணி, உச்சிமுதல், உள்ளங்கால் வரையில், வைரங்களாலும், கதர்ப்புடவைகளாலும் புதைக்கப்பட்டிருந்தாள். அவளுடைய மார்பு, விம்மி விம்மி எழும்புந்தோறும், இடைவல்லிக் கொடியெனத் துவண்டது. பெண்களின் கவர்ச்சிக்குவிலக்கான கிழப் பருவமுடையவர்களும் கண்டு விழைபத்தக்க, அற்புத அழகுபெற்ற அம்மாதின் முகம், அவள் மிக அறிவுடையவளென்பதையும், முகத்தழகோடு அகத்தழகும் பெற்றவள் என்பதையும் தெள்ளிதிற் காட்டியதன்றி அவளைக் கண்டோர் மனம், அவ்விநாடியே இளகி அப்படியே அவள்பால் ஈடுபடத் தக்கதாய்ப் பொலிந்தது. அழகாய் வளைந்து தேருருளைபோல எடுத்துக் கட்டப்பட்டிருந்த அவளது கூந்தற் பின்னலில், மல்லிகை மலர்கள் மிதமாகக் காணப்பட்டன. அந்த மலர்களின் ஒன்றுபட்ட மணம் திமிர்ந்து, அவளது மேனி அப்பொழுதலர்ந்த அழகிய கமலப் பூவோ என்று ஐயுறும்படி செய்தன. அம்மங்கையைக் காண்போர்,

"கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்றன் பெருவாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ! சிவனருளோ! அறியேம் என்றதிசயிப்பார்"

அப்பெண், நாணத்தால் பேசாமல் கீழ்நோக்கிய வண்ணம் நின்றாள். மணிவாசகனும், ஆவலோடு அவள்

முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான். "யார் முத லிற் பேசத் தொடங்குவது ?" என்ற பாவி யோஜனை இடையிற் புகுந்து விட்டது. பிறகு, மணிவாசகனே முதலிற் பேசவிரும்பி, "சாரதா! ஏன் நிற்க வேண்டும்? உட்கார்ந்து கொள்ளுவோம்" என்றான்.

இருவரும் மணலின் மீது அமர்ந்தனர். அவள் வாயிலிருந்து ஏதாயினும் பதில் வருமென்று, முகத்தை உற்று நோக்கினான்.

சாரதாம்பாள் :—"நீங்கள், என்னை இப்பொழுது வரும்படி கூறியதாக என் தாதி தெரிவித்தாள். உடனே ஓடிவந்தேன்"

என்று கூறிவிட்டு, அவன் முகத்தைக் கவனித் தாள். மணிவாசகனுடைய முகத்தில் திடீரென ஒரு மாறுதல் உண்டாயிற்று. இருண்ட மேகங்களாற் சூழப்பட்ட நிலவைப்போல ஒளி குறைந்தது. மறு நிமிடம் தன்னுடைய மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு, "காதலி!...... உன்னிடம்"...... என்று மேற்கூற மாட்டாதவனாய் நிறுத்தினான். அவன் கண் களினின்று பனித்துளி போல நீர் உதிர்ந்தது. மறுபடி யும் பேசத் தொடங்கி, "இனியும் நான், அத்துய சொற்கொண்டு உன்னை விளித்தல் பொருந்தாது. அந்தோ! உனக்கு நான் ஒருக்காலும் மனக்களிப்பை உண்டாக்க இயலாத பாதகனாய் விட்டேன்; நன்றி யற்ற நான், உனக்கு எனது மொழிகளால், மிகுந்த துன்பத்தையும், ஏமாற்றத்தையும் விளைவிக்கக் கூடுமே யன்றி, களிப்பையும், நம்பிக்கையையும் உண்டாக்க முடியாதவனாகி விட்டேன்" என்றான்.

அதைக் கேட்ட அப்பெண்மணி, தலையில் பேரிடி விழுந்தவளைப் போல நிலை குலைந்து, சோர் வெய்தி, "காதல! நீங்கள் கூறுவது என்ன?......நான் கனாத் தான் காண்கிறேன் போலும்! எனது உயிர்நிலை எனக் கருதி யிருக்கும் உங்களுடைய வாயிலிருந்து இத் தகைய மொழிகள் வருமென்று நான் எதிர் பார்க்க வில்லை" என்றாள்.

இரண்டு நிமிடம்வரையில் இருவரும் ஒன்றுகூடப் பேசாமல், பூலோகமோ கைலாசமோ என்றிருந்தார் கள்.

சாரதாம்பாள் :—"ஆர்வல! நீங்கள் கூறுவதை உள்ள மறிந்துதான் சொல்லுகிறீர்களா? இன்றேல்... .........அந்தோ! ஏன் அவ்வாறு மொழிகின்றீர் கள்? நான் எண்ணிய எண்ணம் எத்தகைத்து! காதலனும், காதலியும் மனம் ஒன்றுபட்டுக் களிப் பதைக் காட்டிலும், வேருக ஒரு இன்பம் இருக் கிறதென யார் இயம்புதல் கூடும்? ஏதோ தங் கள் மனதில் துன்பம் தோன்றியுளது போலும்!" என்றாள்.

மணிவாசகன் :—"ஆம்—நீ தீர்மானித்தது உண் மையே. நான்கூறிய யாவும் தவறன்று. நான் உன்னைக் காதலித்தேன்.........அதை மறுக்க முடியாது. ஆனல்"......என்று விம்மினன்.

சாரதாம்பாள் :—நீங்கள் கூறுவதை என் செவிகள் நம்பவில்லை. இக்கொடிய மொழிகள் என்னைத் துன்புறுத்துகின்றன.

மணிவாசகன் :—"அந்தோ! நீ, உண்மை யறியாமல் பேசுகிருய்; நான், இப்பொழு திருக்கிற நிலையில்

—மறைப்பானேன்? எப்பொழுதுமே உன்னை மணஞ்செய்து கொள்ள முடியாது என்பதை விட அதிகமாய் நான் என்ன கூற முடியும்? என்னையே முற்றும் நம்பியிருந்த உனக்கு மிகத் துன்பஞ் செய்தவனாகி விட்டேன். அது, என் மனதைக் கனல் நுழைந்தாற் போல வருத்துகின்றது. ஆகவே, என்னை—இப்பாதகனை—அறவே மறந்துவிட்டு, வேறொருவனை மணந்து, சுகமாய் வாழ்; நான் ஒரு வஞ்சகன் இருந்தேன் என்பதை, அப்புது இன்பத்தில் சுத்தமாய் மறந்துவிடு" என்றான்.

இதைச் செவியுற்ற அம்மங்கை, மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போலத் தவித்தாள். தன் ஆர்வலன்—தனது வாழ்நாள்கட்கூன்றுகோல் போன்று இன்பம் உதவும் அவ்வாலிபன்—'தனக்கே அவன் கணவன்' என்று மனப் பெட்டியிற் பதிவு செய்து வைத்திருந்த இளைஞன், அவ்வாறு கூறவே இடியேறுண்ட நாகம்போல் துடித்தாள்.

பிறகு, அவனை நோக்கி, "என்னமோ நீங்கள் கூறுவதை நம்பேன்; விபரத்தைச் சொல்லுங்கள்" என்றாள்.

மணிவாசகன்:—என்னுடைய நிலைமை அறிந்தால், எனது குற்றமற்ற தன்மை புலப்படும். நான் யாதுஞ்செய்ய இயலாதவனாக இருக்கிறேன்; கூறிய யாவும் உண்மையே. என்னுடைய தன்மையை அறிந்த நீ, நான் கபடமற்றவனென்பதை நெஞ்சிற் பதிய வைத்துக்கொள். நான், உண்மையைக் கூறத் தயங்க வேண்டியதில்லை.

எனக்கோ தாய், தந்தையரில்லை ; கதியற்றவன் ; இத்தகைய என்னை, நீ மணந்து என்ன சுகம் நுகரப் போகிறாய் ?

சாரதாம்பாள் :—காதல ! தாங்கள் கஷ்டமுற்றாலும், சுக முற்றாலும் அவைகளில் எனக்கும் பங்கு உண்டு ; இருவரும் சேர்ந்தே நுகருவோம்.

மணிவாசகன் :—“ என்னுடைய செல்வம் முழுவதும் சிவராமபிள்ளையின் அதிகாரத்தில் இருக்கின்றன. அன்றியும், என்னை இவ்வுலகத்தி லிருந்து, மேலுலகத்திற்கு அனுப்பிவிட ஏற்பா டாகின்றது. நேற்றிரவு நான் கேட்டவைகள், அந்தோ ! எவ்வளவு கொடியவை ! நான் இறந்து போவது நிச்சயம்” என்று எல்லாவற்றையும் விபரமாகக் கூறினன்.

சாரதாம்பாள் :—தங்களைக் கொல்ல முயற்சித்தால், இனி மிகக் கவனமாக இருந்து கொள்ள வேண்டும்.

மணிவாசகன் :—அது மாத்திரமல்ல ; பாதகன் ! என் தந்தையையும் விஷம் வைத்துக் கொன்றிருக்கிறான்.

சாரதாம்பாள் :—ஆனல், இவைகளை யெல்லாம் அதிகாரிகட்குத் தெரிவித்து விடவேண்டும் ; சண் மூடித்தனமாக இருக்கப்படாது.

மணிவாசகன் :—சே ! அதுமுறை யல்ல ; இன்னும் எத்தனை கொடுமைகள் செய் திருக்கிறானே? எல்லாவற்றையும் அறிந்து கொண்டே, தகுந்த வழியில் முயற்சிக்க வேண்டும். அன்றியும், எனக்கு

உயிர் போன்றிருந்த ஒரு கடிதத்தையும் திருடிக் கொண்டான்.

சாரதாம்பாள்:—அஃதென்ன கடிதம்?

மணிவாசகன்:— என் தந்தையால், எனக்கு அளிக்கப் பெற்றது. அக்கடிதம் மறுபடியும் கிடைத்தால், பெரிய புதையல் அகப்படும். எனினும், அக்கடிதத்திலுள்ள விஷயத்தை, அவன் அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையவனல்ல.

சாரதாம்பாள் :—இக் காரணங்களைக் கொண்டுதான் சிறிதுநேரத்திற்கு முன் வருந்திக் கூறினீர்களோ?

மணிவாசகன்:—ஆம்—இவைகளால் என்மனம் புண் பட்டு விட்டது.

சாரதாம்பாள் :—"காதல! தாங்கள் என்னை எப்படிக் கருதினும் சரி! தாங்கள் பணக்காரராயினும், ஏழையாயினும், தங்களையன்றி, நான் வேறொருவரை மணம் புரியேன். நீங்கள் உறுதியாக நம்பலாம். என்னுடைய தாயார், நடராஜனுக்கே கொடுக்கவேண்டுமென்கிறார்கள். என் தந்தை அதற்கொப்பாமல், தங்கட்கே கொடுக்கவேண்டுமென்கிறார்கள். மணந்தால், தங்களை மணந்தின்புறுவது; இன்றேல், மற்றொருவரை மணஞ் செய்துகொள்வதற்குமுன், என் உயிரை மாய்த்துக்கொள்ளுவேன்; இதுவே எனது உறுதியான தீர்மானம்" என்றாள்.

மறுகியிடம். மணிவாசகன், அவளை ஆவலோடு இறுகத் தழுவிக்கொண்டான்.

இருவரும் அவ்விளுடியில் நுகர்ந்த இன்பத்திற்கு உவமையாக எதையுங் கூறமுடியாது. பிறகு, இருவரும் பிரிந்து சென்றூர்கள். காதலன், காதலிக்காவும், காதலி காதலனுக்காகவும் வாழ்கின்றனர். 'அன்பு' எனும் பாடத்தைத் தொடங்குங் கல்விச்சாலை இல்லறமேயாகும். இல்லறத்திற்கு, அழகும் இன்பமுந் தரும் அன்பு, நாளடைவில் விரிந்து விரிந்து பெருகுகின்றது. மனைவி சிறந்தவளாக இல்லாதிருப்பின் கொண்டானுக்கு எந்த மாண்பும் இலதாம். வாழ்க்கைத் துணைவியைக் கண்ணுங் கருத்துமாயிருந்து நாடிப்பெற வேண்டும். புண்ணியஞ் செய்தவருக்கே தக்க வாழ்க்கைத் துணைவி அமையுமென்பர். மனிதன் உளத்தை ஈர்ப்பது 'பெண்' என்ற அழகியவடிவமே. 'உண்மைக் காதல்' ஆகிய ஒன்றினுல்வரும் இன்பமே, உவப்பானது. காதலரின் கண்கள் உறவாடுகின்ற கருத்து, கருத்தோடு ஒருமித்து உறவாடுகின்றது. காதலன் உள்ளம், தன்னலந்துறந்து காதலியின் முக மலர்ச்சியையே குறிக்கொண்டு படர்கின்றது. காதலியின் மாசற்ற உள்ளமும், காதலனுடைய கடைக் கண் நோக்கும் சுற்றிச்சுற்றி வட்டமிடுகின்றன. நெஞ்சினுக்கு அமுதாகும் காதலின்பமே பேரின்பமெனக் காதலர் கருதுகின்றனர். காதலன் பிரிந்தால், காதலி உளத்தில் ஈரம் சற்றுமிலாது காய்ந்து, உலையில் ஊது துருத்திபோல் நெட்டுயிர்த்து, உள்வெதும்பிக் கலங்கித் தனிமையை நினைந்து கலங்குகின்றாள். காதலன் நிலையும் அத்தகைத்தே. காதலனுங் காதலியும் இரண்டுடலுக்கு ஓர் உயிராய்க் கருத்தொருமித்து வாழ்வது இவ்வுலக வாழ்வேயெனினும் பேரின்ப வாழ்வன்றோ? மனிதனுடைய ஐம்பொறிகட்கும் இன்பம்

அளிக்கின்ற தன்மை, பெண்ணாகிய மலரிடத்தேயே பொலிகின்றது. இதனாலன்றோ,

> "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள"

என்று தெய்வப் புலவர் கூறுவாராயினார். ஒன்று பட்ட மனத்தையுடையவர்களே மணத்திற்கு உரியவ ராவர். தாய் தந்தையர் இவ்வுணர்ச்சியின்றி மனம் வேறுபட்ட இருவரை மணமக்களாக்குவது அறியா மையே. வாழ்க்கையில் இன்பம் நுகர்வோர் மணமக்க ளன்றோ? தாய், தந்தையர் கடன் கழிந்ததென்று பேசாதிருப்பர். அங்ஙனஞ் செய்யப்படுவது மண வாழ்க்கையே யாயினும் பிண வாழ்க்கை யன்றோ? பெற்றோர் இதிற்பெரிதுங் கவனஞ் செலுத்துதல் வேண்டும். காதலின்பமே மக்களைத் தூய்மைப்படுத் துவது. கேவலம் மையலால் வரும் இன்பம் இன்ப மாகுமா? இல்லறமே சாலச் சிறந்ததெனப் பெரியார் கூறுவர். ஒருவன், தன்னுடைய இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவானாயின், புறத்தாற்றில் (துறவு) போய்ப் பெறும் பயன் யாது? இல்வாழ்க் கையிலேயே நின்று, அதற்குரிய இயல்போடு கூடி வாழ்கின்றவன், புலன்களை வேறற்கு முயல்வா ரெல் லாருள்ளும் மிக்கவனாவான். இல்லறமாகாத அறம் நல்லற மாகாது. இல்லறத்திலேயே உறைந்து பெறற் கரிய இன்பம் அடைந்தோர் பலர் உண்டு. நெஞ்சு ஒன் றாய காதலரின் தூய இல்லற வாழ்க்கையே இன்ப ஊற்றாகும்.

## நான்காவது அதிகாரம்

“முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.”—குறள்.

**போலீசாரின் ஆராய்ச்சி—கோழிதிருடினவனும் கூடத் தேடுதல்—துப்பறியும் இரங்கநாதன்.**

இரண்டாவது அதிகாரத்தின் இறுதியிற் கூறியபடி “ஆ! கொலை! கொலை!!” என்ற சப்தங் கேட்டதும் மறுநிமிடம் ‘டுமீல் டுமீல்’ என்று வெடிச் சப்தங் கேட்டது. வீட்டிலுள்ள யாவரும் தடுமாறி எழுந்தனர். மணிவாசகன் அதைக்கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து, துப்பாக்கியை எடுப்பதற்காகத் தலையணையின் கீழ்த்தடவினன். அஃது அங்கில்லை. பின்னுங் கலவரப்பட்டவனாய் வடிவேலு பிள்ளையை எழுப்பினன். அவர், எழுந்து ஒன்றும் விளங்காமல் “என்ன! என்ன!” என்று நடுங்கிக் கொண்டே கேட்டார். மணிவாசகன், நடந்தவைகளை இரண்டொரு வார்த்தைகளிற் கூறினன். பிறகு இருவரும் வெடிச் சப்தங் கேட்ட திக்கை நோக்கி ஓடினர்கள். வீட்டிலுள்ள மற்றயாவரும் எதிரே வந்தார்கள். இதன் பிறகு, சிவராம பிள்ளையும் வந்து கலந்துகொண்டார். ஒவ்வொரு அறையாகத் தேடினர்கள். ஒன்றும் புலப்படவில்லை. முடிவாகக் கோவிந்தனுடைய அறையேபாக்கி. இவ்வளவு தடபுடலில் அவன் எழுந்து வராதது யாவருக்கும் ஐயத்தையே உண்டாக்கிற்று. மணிவாசகன், கதவைத் தட்டிக் கூப்பிட்டான். பதில் இல்லை. ஒருகால் தூங்குகிறானே என்று பின்னும்

பலமாகத் தட்டினான். வடிவேலுபிள்ளை, "அவனுக்குக் காது செவிடோ?" என்று கேட்டார். மணிவாசகன், "இல்லை; அவனுக்குக் காது நன்றாய்க் கேட்கும்" என்றான். பிறகு யாவரும் ஒன்றாகக் கூடிப் பலங்கொண்ட மட்டும் கதவை நெக்கித் தள்ளினார்கள். கதவு, தாழ் உடைந்து 'படீர்' என்று திறந்து கொண்டது. உள்ளே இருள் சூழ்ந்திருந்தது. மணிவாசகன் ஓடிப்போய் ஒரு விளக்கை ஏற்றிக் கொண்டு வந்தான். யாவருடைய கண்களும் அறையைக் கூர்ந்து நோக்கின. கோவிந்தன் நிலையை என்னென்று கூறுவது! இரத்த வெள்ளத்திற் புரண்டுகொண்டிருந்தான். மார்பு ஈட்டியாற் குத்தப் பட்டிருந்தது. ஆனால், கொலையாளியைக் காண வில்லை. எப்படித் தப்பித்துச் சென்றானென்பது மர்ம மாகவே இருந்தது. மணிவாசகன், அவனுடைய நிலையைக் கண்டதும், அப்படியே மரம் போல நின்றான். அவனை யறியாமல் துக்கம் மார்பை அடைத்தது. கண்களினின்று நீர்த் துளிகள் உதிர்ந்தன. கோவிந்தனுடைய உதடுகள் மாத்திரம் அப்பொழுது அசைந்தன. கண்கள் மேலுங் கீழும் நோக்கிப் பிறழ்ந்தன. தனது வலக்கையை அசைத்தான். அதைக்கண்ட வடிவேலு பிள்ளை, மணிவாசகனை நோக்கி, "அவன் ஏதோ கூற விரும்புகிறான்; அதைக் கேள்" என்றார். மணிவாசகன் அப்படியே முழங் காற்படி யிட்டுக் கோவிந்தனுடைய முகத்தை உற்று நோக்கினான். கோவிந்தனுடைய உடல், பலங் குன்றி யிருந்தது. வாய் குழறிற்று. கோவிந்தன், தன்னுடைய கையால் அவனுடைய முகத்தைப் பரிவோடு தடவி விட்டு, "தம்...பி! உன் தந்தையை ......கொன்றார்......அறிவேன்...... இப்பொழுது...

கொண்...என்...னை...மன்னிக்கவும்"...என்று கூறியது தும் அவன் கண்கள் அப்படியே நிலைத்து விட்டன. உடனே யாவரும் ஆலோசனைசெய்து போலீசாருக்குத் தகவல்கொடுத்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார் வந்து, எல்லாவற்றையும் பார்வையிட்டு அறிக்கை (Report) தயார் செய்து கொண்டு, அவ்வறையில் இரண்டு சேவகர்களைக் காவல் வைத்துவிட்டுச் சென்றார். அங்கு நடந்த கொலை, ஊர் முழுவதும் காட்டுத்தீ போலப் பறந்துவிட்டது.

மறுநாட் பொழுது புலர்ந்ததும், இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார் வந்தார். சில நாட்களாகத் திருநெல்வேலியில் நடைபெற்று வந்த அபூர்வத் திருட்டுக்களையும், கள்ள நோட்டுகள் செய்யுமிடத்தையும் கண்டு பிடிப்பதற்காகச் சென்னையிலிருந்து வந்திருக்கும் துப்பறியும் இரங்கநாதனையும், அழைக்க வேண்டுமென்று வடிவேலு பிள்ளை யோசனை கூறினார். அப்படியே அவரையும் வரும்படி ஆள்மூலம் தகவல் சொல்லி யனுப்பினார்கள்.

துப்பறிவதில் பேர்பெற்ற இரங்கநாதன், டாக்டர் நஞ்சுண்ட ராவையும் அழைத்துக்கொண்டு வந்தார். கொலை நடந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். அவ்வறை, பன்னிரண்டடி அகலமும், எட்டடி நீளமும் இருந்தது. வதுபுறத்துச் சுவரில் அதாவது தோட்டத்தின் பக்கம் ஒரு சாளரம் (Window) மாத்திரம் இருக்கிறது. அதில், பலமான இரும்புக் கம்பிகள் இணைக்கப்பெற்றிருந்தன. கொலையாளி சாளரத்தின் வழியாகத் தப்பித்துச் செல்லமுடியாது. ஆனால், மணிவாசகன் முதலியோர் கதவை யுடைத்து

உள்ளே வந்தபோது, கொலையாளி அங்கில்லை. ஒளிந்துகொண்டிருந்தாலும் இவர்கள் கண்ணிற்படாமல் வெளிச்செல்ல முடியாது. அவ்வறையின் கீழ் மற்ற அறைகளைப்போல் கல்பாவி யிராமல் பலகை தைக்கப்பட்டிருந்தது. அதன்மீது ஒரு பாய் விரிக்கப்பெற்றிருந்தது. அந்தப் பாய், அறை முழுவதும் மறைத்துக் கட்டிலின் கீழும் இருந்தது. அதன் மேல் இரத்தக் கறைகள் இருந்தன. அதுவன்றி அறை யெங்கணும் துளித் துளியாகச் சிந்தி இருந்தன. அது கொலையாளி சென்ற இடமெல்லாம் தொடர்ந்திருந்தது. சுவரில் துப்பாக்கிக் குண்டுகள் படிந்திருந்தன. ஒன்று இரத்தத்தோடு கலந்து பாய்ந்திருந்தது. மற்றொன்று வெறுமையாகவே பாய்ந்திருந்தது.

இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார், ஒவ்வொன்றாகச் சோதித்தார். அவ்வறையின் இடது புறத்திலிருந்த அலமாரியின் கீழ் ஒரு பொருளைக் கண்டதும் திடுக்கிட்டு, "ஓ! இதோ! கொலையாளி உபயோகித்த துப்பாக்கி" என்று கூவினார். யாவரும் திடுக்கிட்டு நோக்கினார்கள். மணிவாசகன், ஐயோ! இஃதென்னுடையது. இங்கே எப்படி வந்தது?" என்று வீறிட்டுக் கத்தினான். டாக்டர் நஞ்சுண்டராவ், சவத்தைச் சோதிக்கத் தொடங்கினார்.

இரங்கநாதன், ஒவ்வொரு இடத்தையும் கூர்ந்து நோக்கினார். சாளரக் கம்பிகளை அசைத்துப் பார்த்தார். அவைகளில் ஒன்றும் அசையவில்லை. பிறகு அலமாரியின் பின்புறத்தை நோக்கினார். அவர் கண்ணிற்கு ஒரு சிறிய பொருள் புலப்பட்டது. வியப்

போடு அதை யெடுத்து ஒருவரு மறியாமல் தன் பையில் வைத்துக்கொண்டார். தளம் முழுவதையும் கூர்ந்து கவனித்துவிட்டுச் சுவரில் வெடிக்குண்டு பட்டிருக்கும் இடத்தை உன்னிப்பாய்ப் பார்த்துத் தன் னுடைய புத்தகத்தில் ஏதோ குறித்துக்கொண்டார். அவ்வமயம் இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார், "நண்ப ரவர்களே! எல்லாம் சோதித்து முடிந்து விட்டனவா? விசாரணையைத் தொடங்கலாமா?" என்று கேட்டார். இரங்கநாதன், "ஆம் என்னமோ இது மர்மமாகவே இருக்கிறது. கண்டு பிடிக்காமல் விடுவதில்லை" என்றார்.

யாவரும் வந்து நடுக்கூடத்தில் (Hall) அமர்ந் தார்கள். இரங்கநாதனுடைய கண்கள் மாத்திரம் அங்கிருந்த ஒவ்வொரு பொருளையும் சிவராம பிள்ளை யின் முகத்தையும் கூர்ந்து கவனித்தன. இன்ஸ்பெக் டர் இராமசாமி முதலியார், சிவராம பிள்ளையின் முகத்தை நோக்கி, "நேற்றிரவு துப்பாக்கியின் வெடிச் சப்தத்தைக் கேட்டு யார் முதலில் எழுந்து வந்தது?" என்று கேட்டார்.

சிவராம பிள்ளை:—மணிவாசகனும், வடிவேலு பிள்ளை யுமே அறிந்தவர்கள்; அவர்கட்குப் பின்னையே நான் வந்தேன்.

இன்ஸ்பக்டர் :—(மணிவாசகனைப் பார்த்து) இரவு நடந்தவைகளைத் தயைசெய்து விபரமாகச் சொல் லுங்கள்.

மணிவாசகன்:—நேற்றிரவு பத்துமணி யிருக்கலாம். நானும், எனது நண்பர் வடிவேலு பிள்ளையும் சாப்பாட்டிற்குப் பிறகு என்னுடைய அறையி

லேயே படுத்துக்கொண்டோம். நடு இரவில் துப்பாக்கி வெடிச் சப்தங் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து வடிவேலு பிள்ளையுடன் ஓடினேன்; கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, கோவிந்தன் இரயணிந்திருந்த உடையோடு கீழே விழுந்து கிடந்தான். அவனுடைய உடல் முழுவதும் இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. நாங்கள் அறையைச் சோதனை செய்து பார்த்தோம்; கொலையாளி அகப்படவில்லை. கொலையாளி அங்கில்லையென்றும், அவன் முன்னமேயே தப்பித்துக்கொண்டு போய் விட்டானென்றும் எப்படி உறுதிப்படுத்துவது? கட்டிலின் கீழ்ப் பார்த்தோம்; கதவின் பின்னால் பார்த்தோம்; அந்த அறையில் அவன் ஒளிந்து கொள்ள வேறொரு வழியுமில்லை; ஆனால், ஒரு மனிதன் வந்திருந்தான் என்பதுமட்டும் புலப்படுகிறது. ஒரு கைக்குட்டை இருந்தது. அதிலும் இரத்தக் கறை பட்டிருந்தது. அதில், பெயரைக் குறிக்கும் எழுத்துக்கள் ஒன்றுமில்லை. அம்மனிதன் எப்படி அறைக்கு வந்தான்? எவ்விதம் மறுபடியும் வெளியிற் சென்றான்? அது தான் வியப்பாக இருக்கிறது. கதவு உட்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. அவ்வழியாக உள்ளே நுழையமுடியாது. இப்போது கதவை வேகமாகத் திறந்தால், அது பின் பக்கமுள்ள சுவரில் முட்டிக்கொள்ளுகின்றது; அதன் இடையில் ஒரு மனிதன் ஒளிந்துகொள்ள முடியாது; நாங்கள் நான்கைந்து பேர் வெளியில் நின்றுகொண்டிருக்கிறோம். சாளரமோ உட்பக்கம் தாழ்போடப்

பெற்றிருக்கிறது. அன்றியும், அதில் கம்பிகள் பொருத்தியிருப்பதால், அதன் வழியாகத் தப்பித்துச்செல்ல முடியாது; வரவும் முடியாது. இதுயார் அறிவிற்கும் புலப்படவில்லை. என் வரையில், இது பேயின் வேலையென்றே கருதுகிறேன். இன்று நீங்கள் சோதித்தபோது என்னுடைய துப்பாக்கியை, அவ்விடத்திலிருந்து எடுத்ததும், எனக்குப் பாதி உயிர் போய்விட்டது. உடனே நடந்த விபரங்கள் சற்று நினைவிற்கு வரச் சற்று தைரியம் உண்டாயிற்று. அங்கு அகப்பட்டது என்னுடைய துப்பாக்கி; அதை, நான் படுக்கும் அறையில் தலையணையின் கீழ் வைத்திருந்தேன்; வந்தவன் எப்படியோ என் அறையைத் திறந்து, அங்கிருந்த துப்பாக்கியை எடுத்து வந்து, கோவிந்தனைச் சுட்டுக்கொன்றிருக்கிறான். தோட்டாக்களை எண்ணிப் பார்த்தேன்; இரண்டு தோட்டாக்கள் சுட்டிருக்கின்றன. இவ்வளவே நான் அறிந்தவை.

இன்ஸ்பெக்டர்:—அறையின் கதவை யுடைத்து உள் நுழைந்தபோது இருளாகத்தானே இருந்தது?

மணிவாசகன்:—ஆம்.

இன்ஸ்பெக்டர்:—அப்பொழுது உள்ளே இருந்த கொலையாளி உங்களை யறியாமல் வெளியிற் சென்றிருந்தால்?—

மணிவாசகன்:—அது முடியவே முடியாது. வாயிலில் ஐந்தாறு பேர் நின்றுகொண்டிருந்தோம்; எங்களை யெல்லாம் ஏமாற்றிவிட்டுப் போவதற்கு, நாங்கள் அவ்வளவு குருடர்களல்ல.

இன்ஸ்பெக்டர் :—அல்லது பூமியின் கீழ் ஏதேனும் கள்ள வழிகள் இருக்கவேண்டும்.

மணிவாசகன் :—ஒன்றும் அகப்படவில்லை. நாங்கள் நன்றாகச் சோதித்துவிட்டோம்.

இவைகளை யெல்லாம் கேட்ட இன்ஸ்பெக்டர், "இப்போது எவ்வளவு தெரிந்திருக்கிறதோ, அதற்கு மேல் வெளிவாராவிட்டால், கோவிந்தனைக் கொன்றவன் யார்? இக்கொலை எப்படி நடந்தது? என்ற சங்கதி எப்போதுமே வெளிவராது; ஒரு இரகசிய வழியும் கிடைக்கப போவதில்லை; போகப் போக மர்மமாகவே காணப்படுகிறது; இதிலும் வியப்பான சங்கதி யாரும் கண்டும் கேட்டும் இருக்கமாட்டார்கள்" என்று சொல்லிவிட்டு, துப்பறியும் இரங்கநாதனைப் பார்த்து, "நண்பரவர்களே! கொலைசெய்தவன் எப்படி அந்த அறையிலிருந்து போய்விட்டான்?" இதைப்பற்றித் தங்கட் கேதேனும் புலப்படுகிறதா?" என்று கேட்டார்.

இரங்கநாதன் :—ஒன்றுமே யில்லை; ஆனால் அந்தத் துப்பாக்கியைப்பற்றி மட்டும் முன்பே இரண்டொரு எண்ணங்கள் தோன்றி யிருக்கின்றன. உதாரணமாக, அத்துப்பாக்கி கொலையாளியால் உபயோகிக்கப்பட்டதன்று.

இன்ஸ்பெக்டர் :—ஓ! கடவுளே! பின் யாரால்?

இரங்கநாதன் :—கோவிந்தனாலேயே.

இன்ஸ்பெக்டர் :—எனக்கு ஒன்றும் புலப்படவில்லை; முதலிலிருந்து எனக்கு வியப்பாகவே இருக்கிறது. மணிவாசகம் பிள்ளை கூறுவதுபோல்

இஃதொரு பேயின் செய்கையாகவே யிருக்க வேண்டும்.

இரங்கநாதன் :—பேயின் செயலுமல்ல; பூதத்தின் செயலுமல்ல. சரியான நல்ல கூர்மையான அறிவுடைய ஒரு மனிதனாற் செய்யப்பட்டதே.

இன்ஸ்பெக்டர் :—ஆனால், எப்படி வெளிச் சென்றான்?

இரங்கநாதன் :—அதில்தான் சங்கதி அடங்கியிருக்கிறது; கதவு பூட்டப்பட்டுதானே இருந்தது?

இன்ஸ்பெக்டர் :—ஆம் அதில் எள் அளவும் பிசகில்லை.

இரங்கநாதன் :—நண்பரே! உட்பக்கம் பூட்டப்பட்டிருந்தது, கோவிந்தன் பயத்தால் தற்காப்பிற்காக வேண்டுமென்றே செய்து கொண்டது; அவன், யாருக்காகவோ பயங்கொண்டிருந்தானென்று நான் நம்புகிறேன். முடிவில் அவன் எதிர்பார்த்தது நடந்திருக்கலாம். சண்டை நிகழ்ந்தது; அவன் சாமர்த்தியமாகக் கொலையாளியைச் சுட்டிருக்கிறான்.

இன்ஸ்பெக்டர் :—எல்லாம் புதுமையின் மேல் புதுமையே. இது சுலபத்தில் வெளிவராதென்றே கருதுகின்றேன்.

இரங்கநாதன் :—கொலையாளி முன் வாசல் வழியாகவே சென்றிருக்க வேண்டும்.

இன்ஸ்பெக்டர் :—எதனாற் கூறுகிறீர்கள்?

இரங்கநாதன் :—இது மிக எளிய காரியமே; சாளரத்திலோ கம்பிகள் இணைக்கப் பெற்றிருக்கின்றன; அதன் வழியாகச் செல்ல முடியாது; பின் எப்படிச் சென்றான்?

இன்ஸ்பெக்டர் :—ஆகையால், கொலையாளி வாசல் வழியாகச் சென்றுவிட்டானென்பதே தங்கள் தீர்மானம்.

இரங்கநாதன் :—அப்படியே நான் முழுதும் நம்புகிறேன்.

இன்ஸ்பெக்டர் :—ஆனால், அவன் சென்றது, மணிவாசகன் முதலியோர் வந்ததின் பிறகா? முன்னா?

இரங்கநாதன் :—இஃதொரு கேள்வியா? முன்னாலேயே சென்றானென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. சரி! உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

இன்ஸ்பெக்டர் :—மணிவாசகனுடைய துப்பாக்கி அங்கு கிடந்ததால், அவனையே குற்றவாளியென்று கருதவேண்டியதிருக்கிறது.

இரங்கநாதன் :—சே! சே! இது பெரிய முட்டாள்தனம்; துப்பாக்கி அங்குக் கிடந்ததால், அவனைக் குற்றவாளி என்று கூறிவிடுவதா? இப்படியே போலீசார் பல சங்கதிகளில் ஏமாந்து போகிறார்கள்.

இன்ஸ்பெக்டர் :—அப்படியானால்—அந்தோ! ஒன்றும் விளங்கவில்லை; தங்கள் எண்ணந்தானென்ன?

இரங்கநாதன் :—நான் மணிவாசகனைக் குற்றவாளியல்லவென்றே நிச்சயிக்கிறேன்.

இன்ஸ்பெக்டர் :—எதனால்?

இரங்கநாதன் :—இப்பொழுது தீர்மானமாய்க் கூற முடியாது. மன்னிப்பீர்களாக. சில நாட்களுக்குள் யாவும் வெளி வந்துவிடும்.

அவ்வமயம், டாக்டர் நஞ்சுண்டராவ், பிரேதத்தைப் பரிசோதித்து விட்டு, அவர்களுடன் வந்து அமர்ந்தார். இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார், அவரைப் பார்த்து, "நன்றாகச் சோதித்தீர்களா? ஏதேனும் புலப்படுகிறதா?" என்று கேட்டார்.

நஞ்சுண்டராவ் :—ஆம். ஈட்டிக் குத்தினாலேயே அவனுயிர் போயிருக்கிறது.

இன்ஸ்பெக்டர்:—அந்தத் துப்பாக்கிக் குண்டுகள்?...

நஞ்சுண்டராவ் :—கோவிந்தன் இறப்பதற்கு ஈட்டிக் குத்தே போதுமானது; துப்பாக்கிக் குண்டுகள் தேவை யில்லை. அன்றியும், அக் குண்டுகள் அவன்மேற் படவே யில்லை.

இன்ஸ்பெக்டர் :—ஈட்டியாற் குத்தப்பட்டு எவ்வளவு நேரத்திற்குப் பிறகு அவன் இறந்திருக்கக்கூடும்?

நஞ்சுண்டராவ் :—சுமார் இருபது நிமிடங்களில் உயிர் பிரிந்திருக்கலாம். ஈட்டி அவனுடைய மார்பில் ஆழமாகப் பதிந்திருக்கிறது.

இன்ஸ்பெக்டர் :—ஈட்டியில் விஷம் பூசப்பட்டிருந்தாலோ—

நஞ்சுண்டராவ் :—"சே! கிடையாது. விஷத்திற் குரிய அறிகுறிகள் யாதும் புலப்படவில்லை" என்றார்.

பிறகு இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார், இரங்கநாதனைப் பார்த்து, "தாங்கள் ஏதேனும் விசாரிக்க வேண்டுமானால் அப்படியே செய்யலாம்" என்றார்.

இரங்கநாதன், சிவராம பிள்ளையை நோக்கி, "ஐயா! நான் கேட்கும் சில கேள்விகட்குக் கோபமின்றிப் பதில் கூற முடியுமா?" என்று கேட்டார்.

சிவராம பிள்ளை :—நன்றாய்க் கேளுங்கள் ! எனக்குத் தெரிந்ததைச் சொல்ல யாதுந் தடையில்லை.

இரங்கநாதன் :—தங்கள் வீட்டில் யாவரும் எத்தனை மணிக்குப் படுக்கைக்குப் போவது வழக்கம் ?

சிவராம பிள்ளை :—பத்து மணிக் குள்ளாகவே.

இரங்கநாதன் :—நேற்றிரவு—

சிவராம பிள்ளை :—சுமார் ஒன்பதரை மணி யிருக்கலாம்.

இரங்கநாதன் :—வேலைக்காரர்கள் எத்தனை மணிக்குப் படுக்கைக்குச் செல்லுவார்கள் ?

சிவராம பிள்ளை :—சற்று முன்பின்னாக இருக்கலாம்.

இரங்கநாதன் :—கோவிந்தனுடைய குணங்கள் எப்படிப்பட்டவை ?

சிவராம பிள்ளை :—மிகச் சாந்தமுடையவன்; பணிந்து செல்வதில் அவனுக்கு நிகராக யாரும் இருக்க மாட்டார்கள். மிக நம்பிக்கையானவன்.

இரங்கநாதன் :—தங்கட்குத் தெரிந்த வரையில், அவனுக்கு யாரேனும் பகைவர்கள் உண்டா ?

சிவராம பிள்ளை :—கிடையவே கிடையாது. அவனோடு பகைப்பவன் சுத்த மூடனாகவே இருக்க வேண்டும்.

இரங்கநாதன் :—சமீபத்தில் ஏற்பட்டிருந்தால் ?—

சிவராம பிள்ளை:—அதை, நான் தீர்மானமாகச் சொல்ல முடியாது.

இரங்கநாதன் :—வெடிக்குண்டு கேட்டதும் யார் முதலாக வந்தது ?

சிவராம பிள்ளை:—மணிவாசகனும், அவனுடைய நண்பர் வடிவேலு பிள்ளையும்.

இரங்கநாதன் :—தாங்கள் வெடிக் குண்டு கேட்டதும் விழித்துக் கொண்டீர்களா ?

சிவராம பிள்ளை :—ஆம்.

இரங்கநாதன் :—அவர்கள் வெளிவந்ததற்குப் பிறகு தாங்கள் வந்தீர்களா ? அல்லது, அவர்கட்கு முன்னாலேயே ?

சிவராம பிள்ளை :—அவர்கள் வந்த பத்து நிமிடத்திற்குப் பிறகே.

இரங்கநாதன் :—ஏன் அவ்வளவு தாமதம் ?

சிவராம பிள்ளை :—உடைகளைத் திருத்திக்கொண்டு வருவதற்குத் தாமதமாயிற்று.

இரங்கநாதன் :—நல்ல காரியம் ! உடை திருத்துவதற்குச் சரியான நேரம். திருவிழாவிற்குப் போவதாகக் கருதினீர்களோ ?

சிவராம பிள்ளை:—முதலாவது உடைகளைத் திருத்துவதற்குத் தாழ்த்தது ; இரண்டாவது பயம்.

இரங்கநாதன் :—நீங்கள் கோவிந்தனுடைய அறைக்குச் சென்றபோது, அதில் விளக்கெரிந்ததா ?

சிவராம பிள்ளை :—விளக் கேற்றி யிருக்கவில்லை ; இருளாகவே இருந்தது. மணிவாசகனே, பிறகு விளக்குக் கொண்டு வந்தான்.

இரங்கநாதன் :—கோவிந்தன் இறக்குந் தறுவாயில் என்ன கூறினன் ?

சிவராம பிள்ளை :—மணிவாசகனிடம், "தம்—பி! உன் தந்தையை......கொன்றூர்......அறிவேன்......

இப்பொழுது.....கொன்.....என்...னை........ மன்னிக்கவும்''.....என்று கூறினான்.

இரங்கநாதன்:—வீட்டிற்குத் தலைவராகிய நாங்கள் இருக்கும்பொழுது, தங்களிடம் கூறாமல், சிறுவனாகிய அவனிடம் கூவவேண்டியதேன்?

சிவராம பிள்ளை:—“அஃது எனக்குத் தெரியாது; அவன் என்ன உத்தேசத்தின்பேரில் கூறினானோ!'' என்றதும்

அவருடைய முகத்தில் தோன்றிய மாறுதலை இரங்கநாதன் கூர்ந்து கவனித்தார்.

இரங்கநாதன்:—சரி! நேற்று, அல்லது சில நாட்களுக்கு முன் வீட்டில் யாருடனும் சண்டையிட்டுக்கொண்டானா?

சிவராம பிள்ளை:—இல்லை.

இரங்கநாதன்:—நன்றாக எண்ணிச் சொல்லுங்கள். அவசரமொன்றுமில்லை; இப்படியெல்லாங் கேட்பது உங்களுடைய நன்மைக்கே.

இக் கேள்வி, சிவராம பிள்ளையின் மனதைக் கலக்கிவிட்டதால், அவர் முகம் சவம்போல வெளுத்துவிட்டது. பிறகு சமாளித்துக்கொண்டு “நிச்சயமாய்க் கிடையாது; எங்களை யறியாமல் யாருடனும் சண்டையிட வில்லை'' என்றார்.

இரங்கநாதன்:—இன்னும் சில கேள்விகளே. ஒவ்வொரு அறைக்கும் எத்தனை திறவு கோல்கள்?

சிவராம பிள்ளை:—இரண்டு.

இரங்கநாதன்:—இரண்டையும் உபயோகப்படுத்துகிறதுண்டோ?

சிவராம பிள்ளை:—இல்லை; ஒன்றையே உபயோகிக்கிறோம்; மற்றொன்று சாவிக் கொத்துகளுடன் என்னுடைய அறையில் பத்திரமாக இருக்கின்றன.

இரங்கநாதன்:-ஒவ்வொரு அறைக்கும் எண் உண்டா?

சிவராம பிள்ளை:—ஆம்.

இரங்கநாதன்:—கோவிந்தனுடைய அறையின் எண் எத்தனை?

சிவராம பிள்ளை:—எட்டு.

இரங்கநாதன்:—சரி; இரண்டு சாவிகள் இருக்கிற சங்கதி, இவ்வீட்டில் வேறு யாருக்காவது தெரியுமா?

சிவராம பிள்ளை:—எனக்கு மாத்திரமே தெரியும்; வேறொருவரும் அறியார்.

இரங்கநாதன்:—இனி ஒன்றுங் கேட்க வேண்டியதில்லை. தயைசெய்து அத் திறவுகோல்களைக் காட்ட முடியுமா?

சிவராம பிள்ளை:—"ஆகா! நன்றாய்ப் பார்க்கலாம்"

என்று அவருடைய அறைக்குச் சென்று, ஒரு மூலையில்வைத்திருந்த சதுரமான பெட்டியைத்திறந்து அதில் இருந்த ஒரு கொத்தை, "இதுதான்" என்று கூறி இரங்கநாதன் கையிற் கொடுத்தார். அத் திறவுகோல்கள் முழுவதும் தூசி படிந்திருந்தன. எட்டாவது எண் உள்ள திறவுகோலும், ஆறாவது எண் உள்ள திறவுகோலும் தூசி துடைக்கப்பட்டுச் சமீபத்தில் ஏதோ அவசரத்திற்காக உபயோகப்படுத்தியதுபோலிருந்தன. அதைக் கண்ணுற்ற இரங்கநாதனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. "பேஷ்" என்று தனக்

குத்தானே சொல்லிக்கொண்டு திரும்பி நோக்கினன்; ஒருவரும் தன்னைப் பார்க்கவில்லையென்று உணர்ந்து, அவ்விரண்டு திறவுகோல்களின் எண்களையும், புத்தகத்திற் குறித்துக்கொண்டார். பிறகு, ஒன்று மறியாதவரைப்போல், மறுபடியும் திறவுகோல்களை, முன் இருந்த இடத்தில் வைக்கும்படி சிவராம பிள்ளையிடம் அளித்துவிட்டார்.

பிறகு, இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார், இரண்டாவது வேலைக்காரனாகிய வெள்ளைச்சாமியை அழைத்தார். அவன் மிகப் பயந்தவன்: நடுங்கிக்கொண்டு ஒரு மூலையில் நின்றான். இன்ஸ்பெக்டர், அவனைப் பார்த்து, "டே! எத்தனை மணிக்கு, நீ வேலைக்கு வருகிற வழக்கம்?" என்று கேட்டார்.

வெள்ளைச்சாமி:—ஒம்பது மணிக்கு வருவேனுங்க.

இன்ஸ்பெக்டர்:—நேற்று எத்தனை மணிக்கு வந்தாய்?

வெள்ளைச்சாமி:—நேத்து எட்டு மணிக்கே பொறப்பிட்டுப் பாதயிலே வந்துக்கினு இருந்தேன்; எரண்டு பேரு கள்ளுக்குடிச்சுப்பிட்டுச் சண்டை போட்டுக்கினுங்க: அவுங்களிலே ஒருத்தன் எனக்குத் தெரிஞ்சவன். வெலக்கி உடலாமிண்ணு கிட்டப் போனேன்; பாவிப் பய எனக்கு ஒரு அறை உட்டான்: அப்பா! எப்பிடி அறை! சும்மா கிண்ணிண்ணு இருந்திச்சு. இன்னங்கூட கன்னம் வலிக்கிது; நல்லது செயப்போனு, இந்தக் காலத்துலே கெடுதிதான் வ(

இன்ஸ்பெக்டர்:—சரி! சரி!! பாட்டி கதை படிக்காமல், எத்தனை மணிக்கு வந்தாய்? அதை மாத்திரம் சொல்லு.

வெள்ளைச்சாமி.—அப்பறம்...அவனைத் திருப்பி அடிச்சுடலாண்ணு நெனச்சேன்: கொஞ்ச நாளைக்கி மின்னே, ஒரு சாமியாரு, பொரசங்கம்பண்ணுற போது, "ஒருவன் தன்னை அடிச்சாலும் திருப்பி அடிக்கப்பிடாது" எண்ணரு. அது நெனவுக்கு வந்ததும் சும்மா வந்துவிட்டேன். இங்கே வாரபோது கொஞ்சம் நேரம் ஆச்சு.. கஞ்சி குடிக்கிற நேரம் இருக்கும்.

இன்ஸ்பெக்டர்:—நீ யிங்கே வருகிறபொழுது கோவிந்தன் என்ன செய்துகொண்டிருந்தான்?

வெள்ளைச்சாமி:—நான் இங்கே வந்து, கொஞ்ச நேரத்துக்குப் பொறகு மாடிக்கிப் போனேன்; அங்கே, அவனும் எசமானும் என்னமோ எறஞ்சு பேசிக்கிட்டிருந்தாங்க; திரும்பி ஓடியாந்துட்டேன்.

இன்ஸ்பெக்டர்:—என்ன பேசிக்கொண்டிருந்தார்கள்?

வெள்ளைச்சாமி:—அதே நான் கவனிக்கலீங்க.

இன்ஸ்பெக்டர்:—அப்போது எத்தனை மணி யிருக்கும்?

வெள்ளைச்சாமி:—அந்த இயவு—மணி காட்டுகிற பொட்டி வாங்கணுமிண்ணுதான் நெனச்சேன்; எஞ்சம்பளம் சாப்பாட்டுக்கே பத்தலே; நீங்க தான் சொல்லுங்க எப்பிடி வாங்குகிறது? வெலையும் ரொம்பவாம்.

இன்ஸ்பெக்டர்:—அட சனியனே! உத்தேசமாகச் சொல்.

வெள்ளைச்சாமி:—"அப்பத்தான், மொகப்பிலே இருக்கிறது, டாண் டாண்ணு பெருவாரி மணி—பன்னண்டு மணி அடிச்சுச்சு" என்றான்.

இன்ஸ்பெக்டர், "சரி! போ" என்று சொல்லி விட்டு, இரங்கநாதனைப் பார்த்து, "நண்பரே! போகப் போக வெளிவராத மர்மமாகவே இருக்கிறது" என்று சிரித்துக்கொண்டு கூறினார். இரங்கநாதன், "இல்லை, இல்லை. அனேகமாய் வெளியாகிவிட்டன" என்று மெதுவாகக் கூறிவிட்டு, மணிவாசகனைத் தன்னுடன் வரும்படி கையைக் காட்டினார். பிறகு, யாவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அமர்ந்தார்கள். இரங்கநாதன், மணிவாசகனை நோக்கி, "தம்பி! நீ மாத்திரம் சிறிது உதவி செய்தால், இதை மிகச் சுலபத்திற் கண்டு பிடித்துவிடுவேன்" என்றார்.

மணிவாசகன்:—நான் என்ன உதவி செய்யவேண்டும்?

இரங்கநாதன்.—சிவராம பிள்ளையின் செயல் எனக்குப் பிடிக்கவில்லை; தயை செய்து அவரைப் பற்றி சில விபரங்கள் மாத்திரம் சொல்லவேண்டும்.

மணிவாசகன்:—அஃதென்னமோ இயலாததே.

இரங்கநாதன்:—"நான் உனக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. வைத்தியனிடத்திலும், வக்கீலிடத்திலும், தப்பறிவோனிடத்திலும், உண்மையைக் கூறுவிட்டால் காரியம் நடைபெறுது. வெளியிட்டுச் சொல்லுதல் மிக உதவியாகும்" என்றார்.

மணிவாசகன், இதற்குமேல் மறைப்பது முறையல்லவென்று கருதி, அன்று இரவில் சிவராம பிள்ளையும், அவருடைய மனைவியும் பேசிக்கொண்டவைகளை ஒன்றுவிடாமல் விபரமாகக் கூறினன்.

இரங்கநாதன்:—சரி ! உன்னுடைய அறையின் எண் எத்தனை ?

மணிவாசகன்:—ஆமு.

இரங்கநாதன்:—(மகிழ்ச்சியுடன்) "இப்போது எல்லாம் தெற்றெனை விளங்கிற்று" என்றார்.

பிறகு மணிவாசகன் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான். இரங்கநாதன், "தம்பி! உன்னுடைய உயிரும் ஆபத்திலேயே இருக்கிறது; மிகக் கவனமாக இருந்துகொள்ள வேண்டும்" என்றார். மணிவாசகன், "நான் வேறிடத்திற்குச் சென்றுவிட்டாலென்ன?" என்று கேட்டான்: இரங்கநாதன், "சே! அது சந்தேகத்திற்கிடமாகும்; நீ அவ்விடத்திலேயே இருக்கவேண்டும்" என்றார். மணிவாசகன், விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

கோவிந்தனுடைய சவம், அவனுடைய சுற்றத்தார்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

---

## ஐந்தாவது அதிகாரம்

---

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வேண்டு விடல்"—குறள்.

காமாக்ஷியின் காமச் செயல்—சிந்தாமணியின் நந்தாப் பண்பு. இரங்கநாதனின் உதவி.

சிந்தாமணி அழகான வாலிபன்; நற்குணங்களிற் சிறந்தவன். அவனுடைய பிறப்பு வளர்ப்பு முதலியவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அதிகஞ் சொல்வானேன்? அவனுக்கே தெரியாது. ஒரு பெரிய மனிதருடைய உதவியால், சிவராமபிள்ளையின் மக்களாகிய கற்பகத்திற்கும், அன்னபூரணிக்கும்

ஆசிரியனாக அமைக்கப்பட்டான். சிந்தாமணி, வழக்கம்போல் பாடஞ் சொல்லுவதற்கு வந்தான். படிக்கும் அறையில் கற்பகம் மாத்திரம் உட்கார்ந்திருந்தாள். சிந்தாமணி, பாடஞ் சொல்லும் பொருட்டு, "அன்னபூரணி எங்கே?" என்று கேட்டான்.

கற்பகம்:—அவள் இரண்டாங் கட்டிற்குச் சென்றாள்.

சிந்தாமணி:—பழய பாடம் படித்தீர்களா ?

கற்பகம்:—அவள் படித்தாளோ என்னவோ எனக்குத் தெரியாது; நான் படித்தேன்.

சிந்தாமணி:—சரி! உயிர் எழுத்து எத்தனை? மெய்யெழுத்து எத்தனை?

இக்கேள்விக்குக் கற்பகம் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள்; பிறகு ஆகாயத்தையும், சிந்தாமணியின் முகத்தையும் பார்த்து, 'ஏதாவது சொல்லித் தொலைக்க வேண்டுமே' என்று "உயிரெழுத்து எழுபது; மெய்யெழுத்து இரு நூறு" என்றாள்.

சிந்தாமணி:—"நீ சொல்வது சரியல்ல; அன்னபூரணியைக் கூப்பிடு" என்றான்.

கற்பகம் அவ்வாறே சென்று அன்னபூரணியை நோக்கி, "உயிரெழுத்து எத்தனை? மெய் யெழுத்து எத்தனை?" என்று மெதுவாகக் கேட்டாள்.

அன்னபூரணி :—உயிரெழுத்துப் பன்னிரண்டு ; மெய்யெழுத்துப் பதினெட்டு.

கற்பகம்:—"அஃதெப்படி? நான், உயிரெழுத்து எழுபது ; மெய் யெழுத்து இருநூறு என்று அவ்வளவு அதிகமாகச் சொல்லியும் ஆசிரியர் ஒப்பவில்லையே? நீ குறைத்துச் சொல்லுவதை ஆசிரியர் ஒப்புக்கொள்ளுவாரா? வா—கேட்

போம்" என்று அவளை அழைத்துக்கொண்டு போய் உபாத்தியாயர் முன்பாக விட்டாள்.

சிந்தாமணி "அன்னபூரணி சொல்லுவதே சரி" என்றான். கற்பகத்திற்கு அடக்கமுடியாத கோபமும், பொறாமையும் உண்டாயின. பிறகு சில பாடங்களை நடத்தினான். பிடிலை (Fiddle) எடுத்து, "ஸுஜன ஜீவனு" என்ற கீர்த்தனையைக் கமாஸ் இராகத்தில் வாசித்துக் காட்டி, அவ்விருவரையும் வாசிக்கும்படி கூறினான். அன்னபூரணம் சரியாக வாசித்தாள். கற்பகம் வாசிக்கத் தெரியாமல், தொடர்பில்லாத தந்திகளில் கையை வைத்து அழுத்தினாள். சிந்தாமணி, சிறிது கோபத்துடன், உனக்குச் சிறியவளாகிய அன்னம் வாசித்துவிட்டாள்; உனக்கு ஏன் வாசிக்கத்தெரியவில்லை?" என்று அதட்டிக் கேட்டான். இதைக் கேட்டதும் கற்பகத்திற்கு வந்துவிட்டது கோபம். கையில் வைத்திருந்த பிடிலால், சிந்தாமணியின் தலையில் ஓங்கி அடித்தாள். சிந்தாமணி அவளுடைய தந்தையிடம் சொல்லுவதற்குச் சென்றான். அவனைக் கண்ட சிவராம பிள்ளை, "ஆசிரியரே! என்ன சங்கதி? பிள்ளைகட்குச் சங்கீதம் வருகிறதா?" ன்று எகேட்டார்.

சிந்தாமணி:—உங்கள் மகள் கற்பகத்தின் கையில் பிடிலைவிட அரிவாள்மனை நன்றாகப் பொருந்தும்.

சிவராம பிள்ளை:—ஏன், பிடில் வரவில்லையோ?

சிந்தாமணி:—"ஆம்—அவள் பிடில் என் தலையைத் தகர்த்துவிட்டது. அவள் விரல்களைச் சரியான தந்தியில் வைக்கவில்லையென்று கோபித்தேன்; அதற்குப் பதிலாக பிடிலைத் தலையிற் போட்டு

உடைத்தாள். பிள்ளைகள் தயவை எதிர் பார்த்துப் பாடஞ் சொல்ல வேண்டிய திருக்கிறது"
என்றான்.

சிவராம பிள்ளை, அவனுக்குச் சில சமாதான உரைகளைப் புகன்று அனுப்பினார். சிந்தாமணி, மறு நாள் வந்து பாடஞ் சொல்லிவிட்டுத் திரும்பிச் செல்லுங்கால், முன் வாசல் வழியாகப் போக வேண்டியவன் தவறாக இரண்டாங் கட்டிற்குச் சென்றான். அங்கே யுள்ள ஓர் அறையில், சாய்ந்த கட்டிலின் (Sofa) மீது உட்கார்ந்திருந்த காமாக்ஷி, இவனைக் கண்டதும், "வாருங்கள்! உபாத்தியாய ரவர்களே! என்ன, வழி தெரியாமல் தவறி வந்து விட்டீர்களோ?" என்று புன் முறுவல் பூத்த முகத்துடன் புகன்றாள்.

அப்பொழுதுதான் சிந்தாமணி, தவறான வழியில் வந்துவிட்டதை உணர்ந்தான். அவனுடைய தலை நாணத்தால் கவிழ்ந்தது. காமாக்ஷி மிக அழகு வாய்ந்தவள். வயது முப்பதாகியும் வனப்புக் குன்றாதிருந்தது. காமாக்ஷியின் குணம் முதலியன சரியானவை என்று நாம் உறுதிகூற முடியாது. பூங்கொடியோ என ஐயுறத் தக்க கண்கவரெழில் வாய்ந்த அவளின் குரலைக்கேட்டுத் திடுக்கிட்டு, நோக்கினான். அவனுடைய கண்கள் மாசடைந்தன. தலை சுழன்றது. மனதிற் பல எண்ணங்கள் தோன்றின. அவனுடைய உணர்வு தடைப்பட்டுத் தொடர்ச்சியற்று முன்னுக்குப் பின் மாறுபட்டன. 'ஓடிவிடுவோமா' என்று கருதினான். பிறகு, அஃது ஒழுங்கல்ல என்று கருதியவனாய், பூமிதேவியிடம் தன் குறையைக் கூறுபவன்போல நின்றுகொண்டிருந்தான். காமாக்ஷி, மறுபடியும் பேசத்தொடங்கி,

"ஏன் நிற்கிறாய்? இதோ இந்த நாற்காலியில் உட்கார்; நீ நிற்பது என் மனதிற்கு வருத்தத்தைக் கொடுக்கிறது" என்றாள்.

சிந்தாமணி :—"நான் போகவேண்டும்; ஒன்றை மனதில் எண்ணிக்கொண்டிருந்தேன்; அந்த நினைவால், தவறாக இங்கு வந்துவிட்டேன்; மன்னிக்க வேண்டும்" என்றான்.

காமாக்ஷி :—குற்றமில்லை. அஃது இயல்புதான். அதிஷ்டமிருந்தால் அதுவே நடப்பிக்கும்.

சிந்தாமணி :— (ஒன்றும் விளங்காமல்) "நான் போக வேண்டும். என்னுடைய நண்பரொருவர் எனக்காகக் காத்திருப்பார்" என்று நகர்ந்தான்.

காமாக்ஷி :—"சிந்தாமணி! என்னுடைய கணவர் இப்பொழுது வீட்டில் இல்லை. உன்னுடன் உரையாடி மகிழவேண்டுமென்ற எண்ணம் எனக்கு நெடுநாட்களாக உண்டு; அத்தகைய இன்பமான காலம் எப்பொழுது வரும் வருமென்று எதிர் பார்த்தேன்; இன்றுதான் கைகூடிற்று. அவசரமென்ன? என் பொருட்டுத் தயைசெய்து உட்கார்" என்றாள்.

சிந்தாமணி, அம்பு தைத்த மான் ஒன்று வேடனை நோக்கி, "நான் உனக்கு என்ன செய்தேன்?" என்று மௌனமாய்க் கூறுவதுபோல அவள் முகத்தைப் பரிதாபத்துடன் பார்த்துவிட்டு, 'எப்படி முடியுமோ' என்று கருதியவனாக உட்கார்ந்தான்.

காமாக்ஷி :—வாலிபனே! உன்னிடமிருந்து நான் ஒன்றை எதிர் பார்க்கிறேன்; அஃது உன்னால் அளிக்கக் கூடியதே.

சிந்தாமணி :—அம்மா! இயலுமாயின் கொடுக்கத் தடையில்லை.

காமாக்ஷி :—உன்னுடைய நிறைந்த அழகு—இனிமை சான்ற குணம் என்னை உனக்கு அடிமையாக்கி விட்டது; ஆதலால்,............நான் வெளிப் படையாகக் கூறவேண்டுமா ?

சிந்தாமணி :—அம்மா! எல்லாம் விளங்கிவிட்டன. ஐயோ! இதைக் கேட்கவோ வந்தேன்! தங் கட்கு இது முறையல்ல; இரண்டு குழந்தைகட் குத் தாயாக இருக்கின்ற தாங்களோ இங்ஙனங் கூறுவது ?

காமாக்ஷி :—பெற்றபிள்ளை யென்றுகூடப் பாராத இக்காலத்தில் முறை என்ன முறை? அது வெகு காலத்திற்கு முன்னேயே மலையேறிவிட்டது.

சிந்தாமணி :—கேவலம் சிற்றின்பத்தை விழைந்து ஒழுக்கங் கெட்டால், அது குலத்திற்கன்றோ பழிப்பை உண்டாக்கும்? இத்தகைய மொழி களைப் பேசுவதே பெரும் பாவம்.

காமாக்ஷி :—பாவந்தான் பாவம். உலகத்தில் நடை பெறுங் காரியங்களில் எதுதான் பாவமில்லா தது ? நீ, பிறந்தது முதல் ஒரு பாவங்கூடச் செய்யவில்லையென்று உறுதியாய்க் கூறமுடியுமா?

சிந்தாமணி :—அம்மா! உலகத்தில்பெண்கட்குக் 'கற்பு' தான் சிறந்த ஆபரணம். மற்ற ஆபரணங்களைக் கடையிற் பெறலாம். 'கற்பு' என்ற ஆபரணம் யாண்டும் வாங்க இயலாது. விலையில்லாத முழு மணியாகிய சாதிமாணிக்கம் 'கற்பு' என்று கூற லாம். பெண்கள் கற்பைப் பாதுகாத்துக் கொள்

ளுதல் முக்கியமானது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற் குணங்களானும் அமைய வேண்டும். மணமில்லாத கன்னியாய் இருக்கும் பருவத்தில், தாய் தந்தையர் காவலிலும், மணம் புரிந்தபிறகு கணவனுடைய காவலிலும், கணவனுக்குப் பிற்காலம் மக்களுடைய காவலிலும் பெண்கள் இருக்கவேண்டும. அன்றிப் பெண்கள் ஒருநாளும் சுயேச்சையாய் இருத்தல் கூடாது.

"சிறை காக்குங் காப்பெவன் செய்யும் ? மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை "

என்று திருவள்ளுவர் கூறியாங்கு, பெண்கள் தமது கற்பினுற் காக்குங் காவலேயன்றிக் கணவர் சிறையினுற் காக்கும் காவல் யாது பயனைத்தரும் ? கற்பைப் பாதுகாத்ததாலன்ருே சீதைக்குச் சிறப்புக்கிடைத்தது. கற்புக்குலைந்த அகலிகை கானிற் கல்லாய்க் கிடந்தாளன்ருே ? நான் தங்கட்கு ஒரு குற்றமுஞ் செய்யவில்லை ; என்னுடைய மானத்தைக் கெடுக்க வேண்டுமென்று தங்கட்கு விருப்பமானல் அப்படியே செய்யுங்கள்.

காமாக்ஷி :—"என்னமோ சொற்பொழிவு செய்கிருய். கரும்பு தின்னக் கூலியா ? உன்னுடைய கரங்களால் என்னைத் தழுவுதலை நான் ஒப்பற்ற பேரின்பமாகக் கருதுகிறேன். என்னுடைய கையிற் சிக்கிக்கொண்ட உன்னை நான் விடப் போவதில்லை. என் ஆர்வத்தை நிறைவேற்றியே தீர வேண்டும். ஏன் நடுங்குகிருய் ? என் பக்கத்தில் வந்து அமர்ந்துகொள்" என்று அவனுடைய கரங்களைப் பிடித்திழுத்தாள்.

சிந்தாமணி :—(நடுங்கிக்கொண்டு) "அம்மா! இஃதென்ன அநியாயம்? விடுங்கள்" என்று கூறினான்.

காமாக்ஷி :—"வாலிபனே! வலிய வந்த ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவதுபோல் என்னை இகழ்கிறாய்! வேண்டாம்; அந்தோ! உன் மேற்கொண்ட மோகத்தைத் தணிக்க முடியவில்லை" என்று அவன் அருகில் அமர்ந்தாள்.

சிந்தாமணி :—ஐயோ! மையல் (Lust) மிகக் கொடியது. பெண் ஆகிய உங்கட்குச் சிறிதாவது நாணம் வேண்டாமா? அன்றியும், வேலைக்காரனை என்னை விரும்புவது முறையா?

காமாக்ஷி :—"அன்பனே, நீ இவ்வாறு கூறுவதில் எனக்கு விருப்பமில்லை. நான் உன்னை மற்றவர்களைக் காட்டிலும்—ஏன்? என் கணவனைக் காட்டிலும் அதிகமாக நேசிக்கிறேன். உன்னுடைய வாயால் என்னை 'காதலி!' என்று அழை" என்றாள்.

சிந்தாமணி :—"ஐயோ! இஃதென்ன வெட்கக் கேடு? தூரப் போகிறாயா? இல்லையா?" என்று கோபமாகக் கேட்டான்.

காமாக்ஷி :—"உன்னுடைய கோபமான வார்த்தையிலும் ஒருவித இனிமை ததும்புகின்றது. நீ ஒழுங்கு தவறாதவனென்பதை அறிவேன்; என் ஆர்வத்தைத் தீர்ப்பதுந் தருமமே" என்று அவனைத் தழுவினாள்.

சிந்தாமணி அவளை உதறித் தள்ளிவிட்டுப் பேய் பிடித்தவனைப்போலத் தூர நின்றான்.

காமாக்ஷி :—ஆனால்—இணங்கமாட்டாய் ?

சிந்தாமணி :—ஒருக்காலும் இல்லை.

காமாக்ஷி :—“ அப்படியானால், இனி இவ்வீட்டில் காலெடுத்து வைக்கக்கூடாது; உன்னைச் சரியான படி தண்டிக்க எனக்கு வல்லமையுண்டு; அதிஷ்ட மற்ற நாயே ! வெளியே போ ” என்று சினந்து கூறினாள்.

சிந்தாமணி “ அம்மா ! எனக்கு இந்த விஷயத் தில் அதிஷ்டமில்லாவிட்டாற் பாதகமில்லை ” என்று சொல்லித் தன்னுடைய விதியை நினைந்துகொண்டு வெளியே சென்றான். ஆனால், இவ்வளவோடு தன்னை விட்டது பெரிய காரியமென்று மகிழ்ந்தான்.

படிக்கும் அறையிலிருந்த கற்பகம், அன்னபூரணி யைப் பார்த்து, “ தங்காய் ! நம்முடைய அம்மாளுக்கு ஆசிரியரிடத்தில் என்ன இரகசியமிருக்கும் ?” என்று கேட்டாள்.

அன்னபூரணி :—நீ விளங்காதவள் ; என்ன உளறு கிறாய் ?

கற்பகம் :—நான் பொய் கூறவில்லை ; இரண்டாங் கட் டிற்குப்போய்த் திரும்பும்போது, அம்மாளும், ஆசிரியரும் பேசிக் கொண்டிருக்கக் கண்டேன்.

அன்னபூரணி :—ஏதாவது பேசிக் கொண் டிருப்பார் கள். அதைப்பற்றி நமக்கென்ன ? இது வீண் வியவகாரம்.

கற்பகம்:—அம்மாளுக்கு அப்பா இடத்தில் இரகசிய மிருக்கலாம். ஆசிரியரிடத்தில் பேச வேண்டிய தென்ன? உனக்கு எல்லாம் ஒன்றுதான்; வெளுத்ததெல்லாம் பால் என்று கருதல் உன் இயற்கை. என்னமோ அம்மாளுடைய செய்கை எனக்குப் பிடிக்கவில்லை.

அன்னபூரணி:—போடி! உனக்கு இதுதான் வேலை. அம்மாளையும் சந்திக்கிழுக்கப் பார்க்கிறாய்.

கற்பகம்:—சரி! என்ன இரகசியம் பேசியிருப்பார்கள்?

அன்னபூரணி:—எனக்குச் சோக்ஷியம் தெரியாது.

இச்சமயத்தில் யாரோ ஆள்வரும் அரவங் கேட்டது. இருவரும் நல்ல பிள்ளையைப்போல இரைந்து படிக்கத் தொடங்கினார்கள்.

சிவராம பிள்ளையின் வீட்டிலிருந்து புறப்பட்ட சிந்தாமணி, மனங் கலங்கித் தன்னையே மறந்தவனாக நடந்து கொண்டிருந்தான். எதிரே, "வேல்ஸ் இளவரசர் உணவுச்சாலை" (Prince of Wales Hotel) என்று அழகாக வரைந்த பலகை தொங்கவிடப்பட்டிருந்த கட்டிடத்தில் நுழைந்து, மேன்மாடிக்குச் சென்று, பித்துப் பிடித்தவன்போல உட்கார்ந்திருந்தான். அப்போது கூட்டம் அதிகமாக இல்லை. இரண்டொருவரே உட்கார்ந்திருந்தனர். அவ்வமயம் துப்பறியும் இரங்கநாதன், மெதுவாக நடந்து அவனை நோக்கிச் சென்றார்; சென்றவர் உட்கார்ந்தபடியே, வருத்தத்துடன் அங்கிருந்த சிந்தாமணியை உற்று நோக்கினார்; பிறகு ஆடைகளைத் திருத்திக்கொண்டு,

அவனுக்குப் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து, ஒரு பத்திரிகையை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தார். சிந்தாமணி, இவை யொன்றையுங் கவனியாமல், ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். இரங்கநாதன், அவனைப் பார்த்து, "நீர் இங்குதான் வசிப்பதோ ?" என்று கேட்டார்.

சிந்தாமணி.—நான் இங்குதான் வசிக்கிறேன் ; நீங்கள் உணவு உட்கொள்ள வந்தீர்கள் போலும் !

இரங்கநாதன் :—இல்லை, இல்லை. நான் வேறிடத்திலேயே உணவு கொள்ளுவது ; வெயில் மிகுதியாக இருந்ததால் தங்கிப் போகலாமென்று வந்தேன் ; நீர் என்ன வேலையிலிருக்கிறீர் ?

சிந்தாமணி :—"எனக்கா வேலை ? ஒன்று இருந்தது ; அதுவும் இன்றோடு ஒழிந்தது" என்று கவலையாகக் கூறினான்.

இரங்கநாதன் :—தம்பி ! இவ்வுலகத்தில் நிறைந்த செல்வத்தைப் பெற்றவர் ஒருவருமிலர் ; ஏழை கூழுக் கழுதால், காவலன காசுக் கழுகிறான் ; தோட்டி முதல், தொண்டைமான் வரையில் யாரையும் துன்பம் விட்டபாடில்லை. உனக்கு ஒரு வேலையும் இல்லையெனத் தெரிந்தேன் ; உன் நிலையைக் கண்ட என் மனமும் வருந்துகிறது ; எனினும், இன்றே உனக்கு ஒரு வேலை தருகிறேன்.

சிந்தாமணி :—(களிப்படைந்து) தங்களது தயை ; அவ்வாறே கிடைப்பதானால் நான் பேறு பெற்றவனே. நீங்கள் இங்கு வந்தபோது எனது திக்கற்ற நிலையையே எண்ணி வருந்திக்கொண்டிருந்தேன்.

**இரங்கநாதன்** :—அஃதென்ன? திக்கற்ற நிலை என்கிறீரே? உமக்குச் சுற்றத்தார் யாருமில்லையோ?

**சிந்தாமணி** :—என் நிலைமை நான் சொல்லவும் நாணுகிறேன்; எனக்கு உற்றாருமில்லை; பெற்றாருமில்லை. தாங்கள் எனக்குக் கொடுக்கும் வேலை எத்தகைத்து? தனை செய்து கூற முடியுமா?

**இரங்கநாதன்** :—நான் சொன்ன வேலையை உனக்குக் கொடுக்க யாதும் தடையில்லை; ஆனால், அஃது உம்மால் செய்யக் கூடுமோ என்பதுதான் ஐயம் ஆக இருக்கிறது.

**சிந்தாமணி** :—அவ்வேலை இன்னதென்றே எனக்குத் தெரியாமலிருக்க, என்னால் செய்யக் கூடும் கூடாது என்பதை யாங்ஙனம் அறிதல் கூடும்?

**இரங்கநாதன்** :—இதுகாலைச் சொல்ல இயலாது; அதை நீ செய்ய முடியுமென்று உறுதி கூறினாலன்றி—அதை நீர் உண்மையாகச் செய்வீரென்று எனக்கு நம்பிக்கை ஏற்பட்டாலன்றி, இன்னதென்று கூறேன்.

**சிந்தாமணி**:—என்ன ஐயா! எத்தகைய வேலை? மனிதனால் இயற்றக்கூடிய எந்த வேலையையும் செய்யப் பின்னிடேன்; நான் தங்கட்குப் புதியவனாகையால் இப்படிப் பேசுகிறீர்கள் போலும்!

**இரங்கநாதன்** :—நீர் அவ்வேலையை மேற்கொள்வீரானால், புதிய புதிய துன்பமெல்லாம் உறும்படி நேரும்—ஒருகால் உயிரையும் இழக்கும்படியான அபாயமும் வரும். எவன் தன்னுடைய உயிரைக் கேவலம் துரும்பு என்று எண்ணுகிறானோ, அவனே அதற்குரியவன்.

**சிந்தாமணி:**—அப்படியானால் அது கொள்ளைபோலும்!

**இரங்கநாதன்:**—நண்பனே! கொள்ளையுமன்று! கொலையுமன்று!! உலகத்தின் நலங் குறித்ததே.

**சிந்தாமணி:**—உலகத்தின் நன்மைக்காக உயிரை ஏன் இழக்கவேண்டும்? நீங்கள் கூறுதல் வியப்பையே தருகின்றது.

**இரங்கநாதன்:**—உலகத்தை மயக்கும் தீயர்கள் எந்த உயிரையுங் கொல்லத் துணிவார்கள்; இஃதியற்கையே. நன்மையை விழைந்து செய்யப் புகுவோருக்குத் துன்பம் நிச்சயமாய் வரும். நீ சிறுவனாதலால், அஃதுனக்கு நன்றாய்ப் புலப்படவில்லை. 'முத்து' என்பது சிறந்த—உயர்ந்த பொருள். அதைப்பெற விருப்பமிருக்குமாயின், கடலுள் மூழ்கியே ஆதல்வேண்டும். தண்ணீருள் மூழ்கியவன், உயிருடன் வருவானென்பதை எப்படி நம்பலாம்? உலகத்திற்கு நன்மையைச் செய்ய முன்னின்றாலும், அதிலும் துன்பங்கள் குறுக்கிடுகின்றன.

**சிந்தாமணி:**—உலகத்தின் நன்மை குறித்ததாயின், நான் அதற்கிணங்குகிறேன். முதலில் எத்தகைத்தோ என எண்ணினேன்; மன்னித்தல் வேண்டும். பிறருக்குத் தன்னால் இயன்ற உதவி செய்ய முடியாதவன் இருப்பதால் யாது பயன்? இனி எதற்கும் பின் வாங்கேன்; அவ்வேலையை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**இரங்கநாதன்:**—நண்பனே! விரைகின்றாய்! நன்றாக எண்ணிப்பார்; நான் கட்டாயப்படுத்தவில்லை; உம்முடைய சொந்த விருப்பத்தைக்கொண்டே இதில் தலையிட வேண்டும்.

**சிந்தாமணி** :—"இல்லை, உயிரை இழந்தாலும், நான் தவறவிட்டேன். என்னை நீங்கள் உறுதியாக நம்பலாம் என்றான்.

இரங்கநாதன், அதையொப்புக்கொண்டு, தான துப்பறிபவன் என்பதையும், அவன் செய்யவேண்டியது **துப்பறியும் வேலை** என்பதையும் விபரமாகக் கூறினார்.

*　　*　　*　　*　　*

*　　*　　*　　*　　*

சிவராம பிள்ளை, சென்னையில் வெளியாகும் **'சுதேச மித்திரன்'** பத்திரிகையில்,

## தேவை!　　　　தேவை!!

"நன்றாகப் படித்தவனாகவும், ஒழுங்கானவனாகவும், வீட்டு வேலைகளைப் பொறுமையாகச் செய்யக் கூடியவனாகவும் உள்ள ஒரு ஆள் தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். விரும்புவோர் நேரில் வந்து பேசிக்கொள்ளலாம்"

**ந. சிவராம பிள்ளை,**

சிந்துபூந்துறை,

திருநெல்வேலி. (S. I. R.)

என்று பிரசுரஞ் செய்தார். இரண்டு நாட்கள் சென்ற பிறகு மாலை மூன்று மணிக்கு, 35 வயதுள்ள ஒரு மனிதன், சிவராம பிள்ளையின் வீட்டினுள் நுழைந்தான். அவன் கிழிந்த ஒரு மேற்சட்டையும், ஒரு தொப்பியும் அணிந்திருந்தான். சிவராம பிள்ளை அவனைக் கண்டதும் "நீ யார்?" என்று கேட்டார்.

**வந்தவன்** :—'ஒரு ஆள் தேவை' என்று நீங்கள் பத்திரிகையிற் பிரசுரித்திருந்ததைக் கண்டு வேலை கிடைக்குமா என்று வந்தேன்.

**சிவராம பிள்ளை** :—அப்படியா! உன்னுடைய பெயரென்ன?

**வந்தவன்** :—பெரியசாமி.

**சிவராம பிள்ளை**:—சரி! படித்திருக்கிறாயா?

**பெரியசாமி** :—ஆம்.

**சிவராம பிள்ளை** :—வீட்டுச்சம்பந்தமான கணக்குகளை ஒழுங்காக எழுதிக்கொள்ள இயலுமா?

**பெரியசாமி** :—கூடியவரையில் நன்றாக எழுதுவேன்.

**சிவராம பிள்ளை**:—எவ்வளவு சம்பளமானால் ஒப்புக் கொள்வாய்?

**பெரியசாமி** :—தங்களுடைய விருப்பம்; பணம் பெரிதல்ல; நல்ல பெயர் கிடைப்பதே பெருமை.

**சிவராம பிள்ளை** :—மாத மொன்றிற்குப் பதினைந்து ரூபாய்கள் கொடுக்க முடியும்.

**பெரியசாமி** :—"நான் மறுக்கப் போகிறேனா? அப்படியே செய்யுங்கள்" என்றான்.

பிறகு, அவன் இன்ன இன்ன வேலைகள் செய்ய வேண்டுமென்பதைச் சிவராம பிள்ளை விபரமாகக் கூறினார். சிவராம பிள்ளை, இவ்வளவு குறைந்த சம்பளத்தில் ஆள் கிடைத்ததே என்று உள்ளூற மகிழ்ந்தார். பெரியசாமி, இரண்டு மூன்று நாட்களிலேயே தனக்குரிய வேலைகளைச் செவ்வனே செய்து, அவருடைய நன்மதிப்பைப் பெற்றுவிட்டான். ஒரு நாள் காலையில், சிவராம பிள்ளை தாம் தென் காசிக்குச் செல்வ

தாயும், மாலையிலே திரும்பி வருவதாகவுங் கூறிச் சென்றார். அதைக் கேட்ட பெரியசாமியின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

சிவராம பிள்ளை சென்றதும், பெரியசாமி அவருடைய அறையினுட் சென்று தாழிட்டுக்கொண்டு அங்குள்ள ஒவ்வொரு பொருளையுங் கூர்ந்து நோக்கினான். அலமாரியைத் திறந்து சோதித்தான். அவன் தேடிய பொருள் அகப்படவில்லை. அங்கு ஒரு புறத்திலிருந்த பழைய மேஜையைத் திறந்தான். அவன் முகம் மாறுதலடைந்தது. அதில், பிள்ளை, குட்டி, பேரன், பேத்திகளோடு எவ்வித இடையூறுமின்றி அதுகாறும் சுகமாய் வாழ்ந்த எலிகள், தேட்கள், பூரான்கள் முதலியன மிகுந்த கோபத்துடன் வெளிப்பட்டு, அவனுடைய தோள் முதலியவற்றில் ஏறி மைத்துனன் முறை கொண்டாடின. பிறகு சுவர்களில் எங்கேனும் கள்ள அறைகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காகச் சுவரின் ஒவ்வொரு பாகத்தையுந் தட்டினான். கதவின் பின்புறம் தட்டுகிறபோது, மற்றொருவிதமான ஓசை கேட்டது; ஐயமுற்றவனாய் நோக்கினான். அவனுடைய முகம் மலர்ந்தது. மேற் பார்வையாகப் பார்த்தால் வெறுஞ் சுவராகவே தோன்றும். அதன் பக்கத்திலுள்ள ஊசி போன்ற ஒரு ஆணியை அழுத்தினான். மேல் வைத்துத் தைக்கப்பட்டிருந்த பலகை சிறிது விலகிற்று. உள்ளே கையை நுழைத்தான்; ஓர் கடிதக் கட்டு இருந்தது. அதை யெடுத்து ஒவ்வொன்றாகப் பார்வையிடத் தொடங்கினான். அக்கட்டில் சுமார் பதினைந்து கடிதங்கள் இருந்தன. அவற்றில் மூன்றை மாத்திரம் எடுத்துக் கொண்டான். பிறகு எல்லாவற்றையுங்

கட்டி, யாரும் ஐயமுருதபடி முன்போல் வைத்து விட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்று படிக்கத் தொடங்கினன். முதலாவது கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

பாலத்துறை,

**23—7—1912.**

ஸ்ரீ. ந. சிவராம பிள்ளையவர்கட்கு:

சிந்துபூந்துறை.

"நண்பரே! உங்கள் தமையனைக் கொல்லுவதற்குத் தாங்கள் கூறிய யோசனை சரி யென்று எனக்குத் தோன்றவில்லை; எனெனில், அஃது எப்படியும் வெளியாகிவிட ஏதுவாகும். விஷங் கொடுப்பதே ஒழுங்கானது. எந்தக்காரியமும் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல் இருக்கவேண்டும். அவன் காரியம் முடிந்துவிட்டால், ரொக்கமாக இருக்கின்ற மூன்று லக்ஷம் ரூபாய்களும் தங்கட்கே சொந்தமாகும். சிறுவனிருக்கிறுனே என்று நீங்கள் யோசிக்கக் கூடும். அக்காரியம் பின்பு நடக்க வேண்டியது. நமக்கு அது பெரிய மலை போன்றதல்ல. விஷத்தைப் பாலிலேயே கலந்துவிடுங்கள். அதைச் செய்யுங்கால், யாரும் ஐயமுறக் கூடாது. மிகைபட நான் எழுதவேண்டியதில்லை. காலம் வாய்க்குமாணுல் நேரில் வருவேன்"

இப்படிக்கு,

அன்புள்ள, **நடராஜன்.**

என்று படித்ததும், மற்றென்றைப் பிரித்தான்.

அதில்,

பாலத்துறை,
27—2—1898.

ஸ்ரீ. ந. சிவராம பிள்ளையவர்கட்கு:

சிந்துபூந்துறை.

"நண்பரே! எல்லா ஏற்பாடுகளும் தயார் செய்து விட்டேன். இன்றிரவு சரியாக ஒரு மணிக்குச் சொக்கலிங்கம் பிள்ளையின் வீட்டிற்கருகே வர வேண்டும். என்னுடைய ஆட்கள் முன்னமேயே வந்திருப்பார்கள். குழந்தையின் மீது அணியப்பட்டிருக்கும் நகைகள் இரண்டாயிரத்திற்குக் குறைந்ததல்ல. சொக்கலிங்கம் பிள்ளை என்னைத் தன்னுடைய மைத்துனன் மகன் என்றுகூட மதியாததற்கு இக்காரியம் அவசியம் செய்ய வேண்டியதே. குழந்தைக்காகப் பயப்படவேண்டாம். என்னுடைய ஆள் ஒருவன் மூலமாக கொன்றுவிட ஏற்பாடு செய்வோம். ஆட்களின் சந்தடி ஏற்பட்டாலும் ஏற்படும்; ஆகையால் மயக்க மருந்தை (Chloro-form) உடன் கொண்டு வருக."

இப்படிக்கு,
அன்புள்ள, நடராஜன்.

என்று எழுதப்பட்டிருந்தது. மற்றொன்று புதையல் சம்பந்தமானது. பிறகு மற்ற வேலையைத் தொடங்கவேண்டியதே என்று பின் பக்கத்திலுள்ள பூந்தோட்டத்தில் நுழைந்தான். ஒவ்வொரு செடிகளையுங் கூர்ந்து பார்த்தான். சமமான புல் முளைத்த இடங்கள் யாவற்றையும் ஆராய்ச்சி செய்தான். வெளியோரங்களிலெல்லாம் கண்ணைச் செலுத்தினான். வடக்கு மூலையில் புதிதாக ஒரு மாங்கன்று வைக்கப்பட்டிருந்தது. அதில் ஏதேனும் இரகசியம் இருக்கலாமென்று கருதி

அந்த இடத்தைத் தோண்டினான். அவன் எதிர்பார்த்த படியே அதில் ஒரு பொருள் இருந்தது. ஒரு மேற் சட்டை. அது முழுவதும் இரத்தத்தால் நனைந்திருந் தது. அது யாருடையது? ஆட் பெயர் குறிக்கும் அடையாளம் இருக்கிறதா என்று உன்னிப்பாய் நோக் கினான். ஒரு மூலையில், + என்ற குறி போடப்பட் டிருந்தது. இவற்றையெல்லாங் கண்ட பெரியசாமி, "வேஷ எல்லாம் நன்மைக்கே" என்று கூறிக்கொண் டான். பிறகு மாங்கன்றை வைத்து, முன் இருந்தது போல மண்ணால் மூடி, அருகில் இருந்த கிணற்றில் தண்ணீர் மொண்டு வந்து ஊற்றிவிட்டுக் கரைகடந்த மகிழ்ச்சியோடு திரும்பினான். அம்மேற் சட்டையைப் பத்திரமாகத் தன் மடியினுள் வைத்துக்கொண்டான்.

---

## ஆறுவது அதிகாரம்

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே யின்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே யொரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" (பாரதியார்.)

### சொற் பொழிவு—கருப்பு உருவங்கள் ஆபத்திற்சிக்குதல்

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் தாமிர பர்ணி நதிக்கரையில் நடைபெற இருந்தது. அதற் கென்று புதிதாக அமைக்கப்பட்ட அழகிய கொட்டகை யில், குறித்த நேரத்திற்கு முன்னேயே கணக்கற்ற ஜனங்கள் கூடிவிட்டார்கள். அயல் ஊர்க

பெரிய மனிதர்களும், பிரதிகளும், (Delegates) வந்திருந்தார்கள். அவைத்தலைவர் வாத்திய கோஷங்களுடன் வரவேற்கப்பட்டார். நல் வரவேற்புப் படித்துக் கொடுக்கப்பெற்றது. அவைத் தலைவர் எழுந்து முன்னுரையாக ஒருமணிநேரம் பேசினார். பிறகு சில சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அவைத் தலைவரின் கட்டளையின்படி, பெருந்தஆரவாரத்தினிடையே **மணிவாசகன்** எழுந்து,

நண்பர்களே! சகோதரர்களே!

மனிதராகத் தோன்றிய ஒவ்வொருவரும் தமது தேசத்தின் நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும். மக்கள் தம்மையுணர்ந்து, தமக்குத் தலைவனாகிய இறைவனையும் முதற்கண் கண்டது நமது இந்திய நாடேயாகும். இத்தகைய தெய்வத் தன்மை பொருந்திய நாடு, இது காலை எந்நிலையில் இருக்கின்றது? கவலைக்கிடமே தருகின்றது. மற்றநாடுகளிலுள்ளவர் யாவரும் காடுகளில் மிருகங்களைப்போல வாழ்ந்தபோது, நமதுநாடு, நாகரீகமும், சிறப்பும் பெற்று விளங்கிற்று. தமிழ்மொழியிலுள்ள பழய நூற்களைக் கற்கப் புகுவோர் எவரேயாயினும் அவர் பண்டைக்கால ஒழுக்கத்தின் உயர்வையும், குடிமுறைச் சிறப்பையும், அரசியல் ஏற்றத்தையும், கல்வியறிவின் நுட்பத்தையும் புகழ்ந்து பேசாதிரார். நமது நாட்டையும், நாட்டினரையும் பற்றி நல்லெண்ணமில்லாதவரும் பழய நமது நூல்களைச் சற்று உற்று நோக்கியபின் வேறு வகையாய் எண்ணுவரென்பதில் ஐயம் இல்லை. பத்துப்பாட்டு முதலான எண்ணிறந்த ஒப்புயர்வற்ற நூல்களை இயற்றியவர், நமது நாட்டுப் பெரியோரே. இத்தகைய நூல்களின் ஒப்புமைகளின்

நயத்தையும், இயற்கை யழகு நவிற்சியின் திறத்தையும் மேனாட்டு அறிஞர் இதுகாலைப் போற்றி மகிழ்கின்றார். எவ்வளவுதான் அருந்தினும் தெவிட்டாத தீங்கனி யனைய சுவை நிறைந்த இயற்கை அழகு கண்டு மகிழ விரும்புவோர் **பத்துப் பாட்டிற்** காணலாகும். அதை இயற்கை அழகுக் களஞ்சியம் எனக் கழறலாம். இங்ஙனஞ் சிறுற்ற மக்கள் நிலை, நாள் செல்லச் செல்லத் தாழ்ந்துவிட்டது. என் செய்யலாம்! காலச்சக்கரத்தின் வேகத்தை யாரால் தடுத்தல் கூடும்? நமது மக்கள் முன்னேற்றமடையாது பெரிதும் துன்புற்றுக்கொண்டிருப்பதன் காரணம், அவர்கள் கொண்ட மூட வழக்கங்களே. அறியாமையினின்று நீங்கி நல்லறிவு பெற்று இன்புறுதல் என்பது நம் மக்களுக்குப் பெரிதும் கசப்பாக இருக்கின்றது. அதற்கு அறிஞர்கள்மூடநம்பிக்கைகளையும் தீய வழக்கங்களையும் திருத்துதல்வேண்டும். தீய எண்ணங்களும், தீய கொள்கைகளும் பெரும்பாலும் பரவிவிட்டன. தூய சாதீய வாழ்வும், உண்மையான வழக்கங்களும் மறைந்து வருகின்றன. எல்லா வகையாலும் திருந்திய நாகரீக முடையவர்களென இறுமாந்து உரையாடும் அன்பர்கள் இவற்றை யுணர்வதில்லை. இயற்கை இன்பம் நுகர்ந்த தமிழரின் பண்டைக்கால நிலையும் அரசாட்சியும் எவ்வாறிருந்தன? மன்னர்கள் குடிகட்காக வாழ்ந்தனர். அடக்குமுறைச் சட்டங்கள் மருந்துக்கும் கிடையா. அக்காலத்து, தொழில்முறைகளும், வியாபாரங்களும் செவ்வையாய் நடைபெற்றன. இப்பொழுது எல்லாம் மாறிவிட்டன. மொழிப் பற்று யாண்டுளது? எங்கு பார்த்தாலும் சாதிச் சண்டை; சமயச் சண்டை; பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை. அன்பர்களே! சண்டைகளை

ஒழிக்கவேண்டும். பிற நூல்களை எல்லாம் தமிழில் மொழிபெயர்த்தல்வேண்டும். உலகத்திலுள்ள ஒவ்வொரு தேயத்தாரும் தங்கள் நாடு முன்னேற வேண்டுவன புரிகின்றனர். தங்கள் நாடு எத்துணை இழிவுற்ற தாயினும் அதனையே விரும்புவர். தங்கட்குள்ளே எவ்வளவு சமயச சண்டைகள இருப்பினும், தம் நாட்டிற்கு ஒரு கேடு வருமெனா உணர்ந்தால், யாவரும் ஒன்று கூடிப் பாதுகாக்க முயல்வர். அதன் பொருட்டுத் தம் முயிரையும் இழக்கத் துணிவர்; அங்ஙனம் இழந்தோர் பலருண்டு. நமது நாட்டில் ஒரு சிலர் நீங்க மற்றையோர் சுயநலப் புலிகளாகவே தோன்றுகின்றனர். மற்ற தேசங்களைவிட நமது நாடு, நீர்வளம், நிலவளம், மலைவளம், வேளாண்மை முதலிய யாவற்றிலும் சிறந்த தன்றோ? பொன்னைப் போட்டாலும் விளையக்கூடிய நன்னிலம் நமது நாட்டிலுண்டு. கண்ணுதற் கடவுள் முதலாக எண்ணிலாத தேவர்கள் திருவிளையாடல் புரிந்தது நமது நாடன்றோ? கற்பிற் சிறந்த பெண்டிரையும், கவியிற் சிறந்த புலவர்களையும் பெற்றது எந்நாடு? நமது பாரத நாடன்றோ? வீரத் தமிழ் நாடு தலை கவிழ்ந்து நிற்கிறது! கைத் தொழில் வளர்ச்சி அடைந்தாலன்றி நாடு முன்னேற முடியாது. அதன் பொருட்டே காந்தியடிகள், இராட்டினம் கொண்டு நூல் நூற்றல் வேண்டுமெனக் கட்டளை யிட்டார்கள். "உங்கள் துணிகளை நீங்களே கை ராட்டினத்தின் மூலம் நூற்றுக் கைத்தறியில் நெய்துகொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று அவர் கூறுகிறார். இந்திய மக்கள் அனைவரும் தினந்தோறும் ஒன்று அல்லது இரண்டுமணி நேரம் நூற்பதால் தங்கட்கு வேண்

டிய ஆடைகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ள லாம். இங்ஙனஞ் செய்தால், இந்தியாவின் பொரு ளாதாரம் வியப்படையும்படியான உன்னத நிலைமை உற்றுவிடும். இதனை யறிந்தே காந்தியடிகள் இம்முறை யைத் தயாரித்தார்.

மேனாட்டார் இந் நாட்டிற்கு வந்தது முதல் நமது நாட்டுக் கைத்தொழில்கள் நசித்துப் போயின. என் செய்வது! அவர்களைக் குறை கூறுவதில் யாது பயன்? நமது நாட்டார் அவர்கள் அனுப்பும் பொருள் களில் மயங்கினார்கள்; மயங்குகிறார்கள்! இந்தியா வின் வறுமைக்கு அதுவே முதற்காரணமாகும். இரண்டாவது காரணம் மக்கட்குக் கல்வி போதா மையே. கல்வி யில்லாமையால் மூட எண்ணங்கள் பரவி விட்டது. ஒவ்வொரு சாதியிலும் கெட்ட வழக் கங்கள் இருக்கின்றன. சடங்குகள் வளர்ந்தோங்கின. பொருளில்லாத பல சடங்குகள்! அறியாமைச் செயல் கள்! அம்மம்ம! எவ்வளவு துன்பம்! இவ்வளவு அறி யாமை வெள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனரே யென்று வருந்துவதன்றி வேறென் செய்வது! தீமை களே மக்களிடைப் பெரிதும் வளர்கின்றன. நன்மை கள் வளருதல் பெருத்த கஷ்டமாக இருக்கிறது. அறிஞர்கள் முன்வந்து ஊர்தொறும் தொண்டாற்றி வழக்க ஒழுக்கங்களைத் திருத்தவேண்டும். பிறகு தேச பக்தியை ஊட்டவேண்டும். சமய அறிவு அரும்புதல் இன்றி யமையாதது. சமய பக்தி உண்டாயின், தேச பக்தி தானே போதரும். காலஞ் செல்லச் செல்ல அறிவு மங்காமல் மேன்மேலோங்கி மிளிர வேண்டும். இனிக் **கதர்** ஆடையைப்பற்றிச் சிறிது

கூறுவேன். காந்தி யடிகள், கதராடை அணிய வேண்டுமெனக் கூறுகிறார். அன்பர்களே! நூல் நூற்பதும், அந்நூலினால் நெய்த ஆடைகளை அணிந்து கொள்வதும் நமக்குப் புதிதல்ல. நமது முன்னோர்கள் தங்கட்கு வேண்டிய ஆடைகட்கு, நூல் நூற்றே தயாரித்துக் கொண்டார்கள். உரோம தேசத்தார் நமது நாட்டுப் பட்டுத் துணிகளை எடைக்கெடை தங்கம்கொடுத்துப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தியர்கள் நூல் நூற்பதிலும், நெசவுத் தொழிலிலும், நிகர் சமர்த்தராக முற்காலத்தில் இருந்தார்கள். இவற்றை யெல்லாம் விட்டு இந்தியர்கள் ஆடையின் பொருட்டு இங்கிலாந்தை (England) எதிர் பார்க்கின்றனர். மேனாட்டார் நம்மைப் பயித்தியக்காரர்களென்று கருதி பள பளப்பான ஆடைகளை அனுப்பி பயனடைவதில் சிறிதும் பின் வாங்கவில்லை. மேனாடுகட்குப் பட்டுத் துணிகளை அனுப்பி மிக இலாபம் பெற்றுவந்த நமது நாடு, இது காலை அங்கிருந்து வருவதை வாங்கத் தலைப்பட்டு விட்டது. இனியும் உறங்குவோமாயின் நமக்குக் கதி மோக்ஷம் இல்லை. கதராடை கட்டுவதை ஒவ்வொருவரும் விரதமாகக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் நாட்டுச் செல்வர்களே! நீங்கள் மாத்திரம் ஒருகவலையு மின்றிச் சுகமாக வாழ்ந்தால் போதுமா? ஏழை மக்களின் வறுமைக் கண்ணீர் ஒழியுமா? கணக்கற்ற மக்கள் அடிமைக் குழியிலே, வறுமைக் கடலிலே, சிறுமைப் புதரிலே ஆழ்ந்து கிடக்கின்றனர். பழமையை உணர்ந்த—பெருமையை அறிந்த மக்களைக் கண்டால் அருமையாக இருக்கிறது. உண்மையைக் கருதி—நாட்டின் நன்மையை உணர்ந்து பாடு படுவோனைக்

காணவில்லை. பாலும் வயிறு ஒன்றனுக்கு மாத்திரம் இரைதேடிச் செத்தொழிவதே தொழிலாகி விட்டது. நமது நாட்டிலுள்ள நூல்களின் நயத்தையும், இங்குள்ள சிற்பங்களின் பெருமையையும் மேனாட்டார் கண்டு களிக்கின்றனர். இவற்றிற்குச் சொந்தக்காரனாகிய தமிழன் எங்கேயோ உறங்குகிறான். உறங்காவிட்டாலும் அவற்றைப் பார்ப்பதற்கு அவனுக்கு நேரங் கிடையாது. பிறந்து அறிவு வந்தது முதல், இறக்கும் வரை அடிமையிலேயே ஊறிக் கிடக்கும் அவன் மனம், யாங்ஙனம் இவற்றைக் கண்டு களித்தல் கூடும்? தற்பொழுது தமிழனுக்கு உலகம் துன்பமயமாக இருக்கிறது. அறிவு பிறங்கப் போதுமான கல்வியில்லை. கல்லூரிகளில், ஆங்கிலமே ஆதிக்கம் பெற்று விளங்குகிறபோது, தமிழ்க் கல்வி பயன் அடையவில்லை. பெரும்பாலோர் ஆங்கிலம் படிப்பதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். அதனாற் றமிழின் பெருமையும், சிறப்பும் புதை பொருளாகக் கிடக்கின்றன. நாடு முன்னேற வேண்டுமாயின், முதலில், மொழியன்றோ விருத்தியடைதல் வேண்டும்! தமிழ் நூல்களின் இன்பத்தைச் சிலர் ஆங்கில நூல்களிற் கண்டு களிக்கின்றனர். அதைக் காட்டிலும் தமிழிலேயே காண்டல் மிகுந்த இன்ப மளிக்குமன்றோ?

கல்வியினால் மனிதன் உயர்வடைகிறான். இது காலைத் தமிழருக்குத் தகுந்த கல்வி இன்றியமையாதது. தாய், தந்தையர்கள் மக்கட்குக் கல்வி புகட்டுவதில் மிக்க கவனஞ் செலுத்துதல் வேண்டும். மேனாட்டாருடைய கல்வியின் முற்போக்கை நோக்குங்கள்! மற்ற யாவற்றிலும் அவர்களைப் பின்பற்ற வேண்டு

மென்று விரும்புகிற நாம் இதிலும் பின்பற்றுதல் முறையல்லவா? மற்றவை பயன் அற்றதாயினும், இது பயன் அளிப்பதே. கருணை பொருந்திய அரசாங்கத்தார், ஆங்கிலத்திற்குக் கொடுக்கும் மதிப்புப் போல, தமிழுக்கும் கொடுப்பார்களாயின் இக்குறை நீங்க வழி ஏற்படும். அதற்குத் தமிழர்கள் முயற்சித்தல் வேண்டும். பழந் தமிழ் நூல்களின் மாண்மையும், முன்னோரின் தூய வாழ்க்கையையும் அறிய விழைதல் வேண்டும். ஒழுக்கம் மக்கட்கு விழுப்பந் தருவது. அதைப் போற்றுதல் இன்றியமையாதது. மேனாட்டு நாகரீகக் குடி வகையில் மயங்குவோர் எவ்வளவு பேர்? மேனாட்டிலிருந்து பதன் செய்து வரும் கன்றுக் குட்டி நாக்குகளைத் தின்று அக மகிழ்வோர் எவ்வளவு பேர்! இதில் என்ன சுவை இருக்கிறதோ! கடவுளே அறிவார்! இத்தகைய அநாகரீகப் பேய்கள் ஒழிந்தாலன்றி நமது நாடு முன்னேற வழியில்லை. நமது நாட்டு மக்கள் திருத்த நெறியில் ஈடுபடுதல் வேண்டும். இடையூறு புரிந்து நன்னெறி வளரவொட்டாது தடுத்தல் கூடாது. நன்னெறிகள் வளருதற்கேற்ப நமது நாடு திருந்திவிடுமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நாம் ஒவ்வொருவரும் திருந்திய நாகரீக மக்களாக வேண்டுமென்று கருதுதல் அவசியமாகும். கருதுவதோடு செய்கையிற் காட்டுதலே சிறப்பளிக்குந் தகைத்து. கல்விச் சாலைகளில் சமய அறிவும், சீர் திருத்த அறிவும், புகட்டப்படல் வேண்டும். வழக்கம் வழக்கம் என்று வருங்காலத்து மக்களையெல்லாம் படுகுழியில் வீழ்த்தக்கூடாது. அசட்டுக் கிழங்கள் 'தீய பழக்கங்களை விடோம்' என்று கூறினும் வாலிப வீரர்கள் அவைகளை நீக்க முயலவேண்டும். அறிவும்,

இன்பமும், தூய்மையும் செறிந்த வாழ்க்கையை விரும்ப வேண்டுமேயன்றி, அடிமையும, துன்பமும் நிறைந்த வாழ்க்கையை அறவே ஒழிக்க வேண்டும். அன்பர்களே! பெரியோர்களே! **நாட்டின் விடுதலையை உன்னுங்கள்! தெள்ளூற்ற தமிழ் அமுதின் சுவை காண்டற்கு விரும்புங்கள்! கதர் ஆடை கட்டுங்கள்! இயற்கையோடிசைந்த இன்ப வாழ்வு வாழ முயலுங்கள்!"**

என்று பேசி முடித்தான்: சபைக் கூட்டமுங் கலைந்தது. அவனுடைய பேச்சின் வன்மையைப் புகழ்ந்து பலரும் வியந்தார்கள்.

மணிவாசகன் பிரசங்கம் முடிந்ததும் வீட்டை நோக்கித் திரும்பினான். மணி பத்திருக்கலாம். காண் போர் நடுங்குங் காரிருள். பெரிய மரங்கள் யாவும் பேய்களைப் போலத் தோன்றின. 'அருண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல விளக்குத் தூண்களைக் கண்டாலும் பேய் என்று பயந்தான். மரங்கள் நாற்புறமும் அசைதல் பேய்கள் தலைவிரித் தாடுவது போன்றிருந்தது. வௌவால்கள் கத்தின. வீடு இன்னும் இரண்டு பர்லாங்க் தூரமே இருக்கும். சிறிது தூரம் நடந்தான். பிறகு திடுக்கிட்டு உற்றுக் கேட்டான். யாரோ ஆட்கள் வரும் காலடிச் சப்தம் கேட்டது. தனக்குத் தீங்கு வருமோ என்று கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். மறு நிமிடம் இரண்டு கருப்பு உருவங்கள் அவனைப் பிடித்துக் கொண்டன. இருப்புச் சங்கிலியாற் கட்டப்பட்டவன் போலானான். பிறகு இன்னும் இரண்டு கருப்பு உருவங்களும், ஒரு வெள்ளை

உருவமும் இவனருகில் வந்தன. வெள்ளை உருவம் சைகை செய்தது. இரண்டு கருப்பு உருவங்கள், ஒரு துணியால் மணிவாசகனுடைய கைகளையும், கால்களையும் கட்டின. உடனே அங்கு நின்ற மின்சார வண்டியில் அவனை யேற்றின. ஒருமணி நேரத்திற்குப் பிறகு வண்டி ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. இரண்டு உருவங்கள், மணிவாசகனை வண்டியினின்று இறக்கின. மணிவாசகன், அதுதான் வசந்த மாளிகை என்று உணர்ந்தான். சிறிது நேரங் கழித்து, "ஐயா! என்னை ஏன் கட்டிக் கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அந்த வெள்ளை உருவம் "அடே! வாய் திறந்து பேசாதே. உன்னை நாங்கள் அறிவோம்; ஆனால், எங்கள் கடமை உன்னைக் கொல்வதன்று" என்று சொல்லி விட்டு ஏதோ ஒரு சைகை செய்தது. அந்த நான்கு கருப்பு உருவங்களும் மணிவாசகனைத் தூக்கிக் கொண்டு போய் ஒரு அறையில் அடைத்து, அவ்வறையைப் பூட்டிச் சென்றன.

---

## ஏழாவது அதிகாரம்

---

"துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந் தரும்"—குறள்.

**சந்நியாசியின் சாமர்த்தியம்—எதிர்பாராத இரகசியம் வெளிப்படுதல்—வசந்தமாளிகை.**

**வ**சந்தமாளிகை என்பது சிந்தூர்த் துறையி லிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில், நடுக்காட்டின் இடையில் கட்டப்பெற்றிருக்கிறது. அதன் சுற்றளவு முக்கால் மைல் இருக்கலாம். பன்னீர்க்

செல்வம் பிள்ளை பெருந் பணஞ் செலவிட்டு இதை அமைத்தார். வேனிற் காலத்தில் அவர் இங்கு வந்து தங்கிப்போவதுண்டு. வசிப்பதற்கு மிக வசதியான இடம். சிவராம பிள்ளை, இக்கட்டிடத்தைக் காவல் புரியும்பொருட்டுச் சில வேலைக்காரர்களை நியமித்திருந் தார். ஒரு நாள் மாலை ஏழு மணியிருக்கலாம். பொன் னன் என்ற வேலைக்காரன், சின்னான் என்பவனை நோக்கி, "அண்ணே! நம்ப மாளிகையைச் சுத்தி வழி மறிச்சான் திரியுதுங் கராங்களே, அது நெசந்தானா?" என்று கேட்டான்.

**சின்னான்** :—ஐயோ! வழிமறிச்சான்! வழிமறிச்சான்! எங்கே? அது என்ன பண்ணும்?

**பொன்னன்** :—அது பொல்லாத பயவுட்டுத் தெய்வம்; ராவிலேதான் வெளியே வரும்; அப்போ, நம் பளைத் தனியாய் பாத்துட்டா, கழுத்தேரெண்டா முறிச்சுடும்.

**சின்னான்** :—அப்பிடின்னா எடுத்து விழுங்கிடுமோ?

**பொன்னன்** :—அதை யெங்கேக்குறே, ஒரே வாயிலே அபக்கின்னு விழுங்கிடும்.

**சின்னான்** :—ஐயோ! தம்பி! கிட்டவா! கிட்டவா! என்னமோ பயமா இருக்குதே.

**பொன்னன்** :—போ அண்ணன்! இதுக்கே நடுங்கிறியே.

**சின்னான்** :—டே! டே!! பயமா இருக்குது.

**பொன்னன்** :—அண்ணே! செங்கோட்டை முனி தெரியுமா?

**சின்னான்** :—ஆமடா! நல்லாத் தெரியும்; அவன் நம்ப ஆளாச்சே; எனக்கும் அவனுக்கும் ரொம்பச் செநேகம்.

**பொன்னன்** :—அதுவும் பெரிய தெய்வம்.

**சின்னான் :**—நம்மிட ஆக்களுக்கு வேலே யென்ன? ஒண்ணுமேயில்லே. பாத்ததெல்லாம் தெய்வந் தான். வேப்பமரத்தான்! தென்ன மரத்தான்! போடா! நான் இதையெல்லாம் நம்புறதே யில்லே!

**பொன்னன் :**—அண்ணே! நீ இன்னிக்கிப் பூட்டே; வழிமறிச்சான் உன்னைக் கொல்லப் போவுது; மன்னிக்கனு மிண்ணு கேட்டுக்கோ.

**சின்னான் :**—போடா! என்னடா கேக்குறது? அதே மாத்திரங் கண்டா, ஒரே அடியிலே மண்டையை ஒடச்சுடுவேன்.

**பொன்னன் :**—அண்ணே! வாண்டாம்; சொல்றதைக் கேளு; தெய்வங்களைத் திட்டாதே. ஒன் உசுரு வீணாப் பூடும்.

என்று பேசிக்கொண்டிருக்கும் அமயம், வீரன் என்பவன் தடுமாறி ஓடிவந்து, இவர்கள் முன்பு விழுந்து, "இன்னிக்கிப் பூட்டேன்! பூட்டேன்!!" என்றான்.

**சின்னான் :**—டே! வீரா! என்னடா பூட்டே? பொய் சொல்றே; இந்தாத்தான் இருக்குறியே?

**வீரன் :**—இன்னிக்கி நான் பொழச்சது, எங்க ஆத்தா செய்த புண்ணியந்தான்.

**சின்னான் :**—ஏண்டா ஒளறுரே?

**வீரன் :**—வழிமறிச்சானுக்குப் பூசை போடணும்; இப்ப எங் கண்ணுக்கு முன்னாலே வந்துருச்சு. அப்பா! இன்னியும் சொணக்கப்பிடாது. ஒடனே பொங்க வைக்கணும்.

**சின்னான் :**—டே! நீ பாத்தியா? வழிமறிச்சான் சொவப்பா? வெள்ளையா? கருப்பா?

**வீரன்** :—இப்ப நெனச்சாக்கூடப் பயமா இருக்குது. வெளுப்புத்துணி கட்டிக்கிணு, தலையிலே தீச் சட்டி வைச்சுக்கிணு, கையிலே சூலாயுதம் பிடிச்சுக்கிணு இருந்திச்சு. அம்மாடி! அது வந்ததே, நீ பாத்தயிண்ணு செத்தே போயிருப்பே.

**சின்னான்** :—நம்படவங்களைக் கண்டா, விழுங்கிடும் எங்குறாங்களே? உன்னை ஏண்டா உட்டுடுச்சு?

**வீரன்** :—நா ஓடியாந்துட்டேன்; அது என்னைப் பாக்கவே யில்லை.

**சின்னான்** :—அது கெடக்கட்டும். நாளைக்கிப் பொங்க போடுவமா?

**வீரன்** :—அப்பிடிப் போடாட்டா, நம்ப தலை காட்டவே முடியாது.

**சின்னான்** :—எனக்குப் பொங்கல்; வழிமறிச்சானுக்குப் பூசை தான்.

**வீரன்** :—என்ன பூசை?

**சின்னான்** :—பொரம்புப் பூசை—இல்லாட்டி வெறகுக் கட்டைப் பூசை.

**வீரன்** :—நீ இப்பிடி யெல்லாம் வளையாடாதே. உனக்குக் கேடுகாலம் புடிச்சுப்போச்சு.

**சின்னான்** :—"தெரியுண்டா! வா! பூசை போடறேன்" என்று நடந்தான்.

அச்சமயம் இவர்களை நோக்கி ஒரு சந்நியாசி வந்தார். வீரன், "அவரைக் கேப்போம்" என்றான். இருவரும் உட்கார்ந்தார்கள்.

**வீரன்** :—"சாமி எங்கே யிருக்கிறது?" என்று கேட்டான்.

**சந்நியாசி** :—நாம் இருப்பது திருநல்லூரே.

**வீரன்** :—நீங்க யாரு!

சந்நியாசி :—உலகம் போற்றும் ஒண்புகழ் வாய்ந்த
மலயமா முனிவர் மாண்புடன் அளித்த
தமிழெனுங் கடலைத் தாண்டிய பெருமைச்
சதா னந்தர் என்பெயர் என்பதை
அறியாய் கொல் ?

வீரன் :—ஆத்தாடி ! இதென்ன இயவு ? ஆரைக் கொல்றது ? எடுக்குறத்துக் கெல்லாங் கவி படிக் கிறீங்களே, நம்ப தமிழுப் பேச வராதோ ?

சந்நியாசி :—அறிவிலி ! 'கொல்' என்பது அசைச் சொல் ; இலக்கணம் தெரியுமா ?

வீரன் :—என்ன சாமி ! நம்பள்கு எலக்கணமுந் தெரி யாது ; கொலக்கணமும் தெரியாது. என்ன காரியமா இப்பிடிப் பொறப்பிட்டுச்சு ?

சந்நியாசி :—என்ன காரியம் ? உலகமெல்லாம் எங்க ளுடைய வீடே ; சொந்தமாக ஒரு பொருளுங் கிடையாது.

வீரன் :—" அது நெசந்தானுங்க ஒங்களுக்கு புள்ளயா ? குட்டியா ? ஒண்ணுமில்லே. நெனச்ச எடத் துக்கு ஒடனே பொறப்பிட்டுப் போகலாம், எங் களேப்போலே நாயிங்களுக்குச் சொல்லுங்க " என்றான்.

துறவி, தம்முடைய உட்பையிலிருந்து மூன்று சாராயப் புட்டிகளே எடுத்து வைத்து, மூவரையும் அருந்தும்படி வேண்டினர். அவ்வாறே மூவருங் குடித்துவிட்டுத் தலைகீழாக ஆடினர்கள். சிறிதுநேரத் திற்குப் பிறகு, பொன்னனும், சின்னனும் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கினர்கள். வீரன் மாத் திரம் குடி வெறியால் பாட்டுப் பாடத் தொடங்

கிறான். சந்நியாசி, அவன் வெறி பிடித்திருக்கிறா னென்பதை உணர்ந்துகொண்டார். வீரன் பல பாட்டுக்களையும் ஒன்றன் பின் ஒன்றாகப் பாடினான். அவனுடைய ஊக்கமும் உற்சாகமும் படிப்படியாகப் பெருகிக்கொண்டே வந்தன. அப்போது, நமது சந்நி யாசி மகிழ்வடைந்தவரைப் போல், அவனுக் கருகில் இருந்துகொண்டு, தலையை அசைத்துத் தாளம் போட்டு, அந்தச் சங்கீத அருவியைத் தமது செவி களால் அள்ளிப் பருகத் தொடங்கினார். வீரன், தன் னுடைய பாட்டுக் கச்சேரிக்கு ஒரு தலைவர் ஏற்பட்டு விட்டதைக் கண்டவுடன் அவனுடைய குதூகலமும், பாட்டும் கரைகடந்து போயின. தன்னை முற்றிலும் மறந்தவனாய்ப் பாட்டுக்களைக் கணக்கின்றி அள்ளி யள்ளி வீசினான். இன்பக்கடலில் முழுகி, அதிலிருந்து கரையேற மாட்டாதவரைப் போல நடித்த சந்நி யாசி மறுபடியும் அவன் அருகில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு, "ஆகா! பலே! பேஷ்" என்று பல தகுதிப் பத்திரம் (Certificate) நொடிக்கு நூறு வீதம் அள்ளி யிறைத்துப் பாட்டுக்களுக்குத் தகுந்தபடி உடம்பை நீட்டி நெளித்து நடித்தார். "அடடா! என்னப்பன்! என்ன சுகம்!" என்று புகழ்ந்தவராய் அவனைக் கூப்பிட்டு, "அப்பா! அதிரூப அமராவதி சரித்திரத்திலே ஒரு பாட்டுப் பாடு" என்றார். அவர் சொல்லி வாய் மூடுமுன்,

**"கருங்கல்லினாற் சுவரானாலும் கன்னம் வைத்திடுவேன்**
**[பலவா!**
**கன்னம் வைத்திடுவேன், ஷோக்கா! கன்னம் வைத்திடு**
**[வேன்."**

"கோட்டை கொத்தளம் எதுவானாலும் குறுக்கே ஏறிடு
[வேன் பலவா!
குறுக்கே ஏறிடுவேன். ஷோக்கா! குறுக்கே ஏறிடுவேன்"

என்று அரைமணி நேரம் உல்லாசமாகப் பாடி இடி யிடித்ததுபோல், பெருத்த முழக்கஞ் செய்து சங்கீதக் களஞ்சியமாக விளங்கினான். அந்தப் பாட்டை அவன் பாடி முடிப்பதற்குள் சந்நியாசியின் உடலும், கை கால்களும், வாயும், பட்ட பாட்டையும் தவித்த தவிப்பையும், என்னென்று கூறுவது! அப்போது அவ்விருவரையும் வேறு யாராகிலுங் கண்டிருந்தால், இருவரும் கள்ளைக் குடித்துவிட்டுக் கூத்தாடுகிறார்களென்றே நினைப்பார்கள். மற்ற எல்லாப் பாட்டுகளையும் விடத் திருடன் பாட்டே, வீரன் மனதிற்கு ஊக்கத்தையும், அவனுடைய உற்சாகத்தையும், குடி வெறியை வெளிப்படுத்துதற்கு ஏற்ற கருவியாயும் இருந்தது. அப்பாட்டு முடிந்தவுடன் சந்நியாசி, "அப்பா! இன்னும் ஒன்று மாத்திரம்; தேசியப் பாட்டு ஒன்று நடக்கட்டும்" என்றார். வீரன் களிப்பு மேலிட்டவனாக,

('செந்தாழம்பூ வுந்தேன்கமழும்' என்பதுபோல் இயைக்க)

"ஜப்பான் ஜிண்டான் தப்பா துண்டால்
தாழ்வுடன் வாழ்வு குன்றுமே. (ஜ)

1 உன்னூரில் மருந்தில்லையோ?
உங்களுக்குப் பிடிக்கவில்லையோ?
ஹிகோ சென்டும் க்ளாஸ்கோமுண்டும்
ஏற்குதோ? உடல் கேட்குதே? (ஜ)

2 கைக்களவர் துணியில்லையோ?
கண்ணைக் கவரலையோ?

கொண்ட மனைவியர் அண்டையில் நின்றிட
கண்டையிட் டன்னிய முண்டையைப் பார்க்கும்(ஜ)
3 அவமானம் இதைவிடவோ?
வெகுமானந் தனைப் பெறவோ?
உத்தமப் பெண்டுகள் மற்றோரைக் கண்டிட
ஷேக்ஹாண் டென்றுரை கோத்திடச் செய்யும்" ()

என்ற பாட்டை மிகுந்த ஆரவாரத்துடன் தொடங்கி, முதற்காலம், இரண்டாங்காலம், மூன்றாங்காலம் முதலியவற்றிற் பாடி, மிகவும் விசையாகவும், உரத்தும் நான்காங் காலத்திற் பாடவே, அதற்குத் தகுந்தபடி சந்நியாசி, தமது உடலை ஆட்டி யசைத்து நாட்டிய மாடித் தாளம் போட்டு நடித்தார். அப் பாட்டு முடிந்த வுடன், வீரன் சிரமபரிகாரஞ் செய்து கொள்ளும் பொருட்டு இரண்டு நிமிடம் பாட்டை நிறுத்தினான்.

**சந்நியாசி**:—"பாட்டுப் பலே ஷோக்கா யிருக்கிறது! நானும் பார்க்காத நாடகம் கிடையாது. எவ னும் இப்படிப் பாடிக் கேட்டதில்லை. உனக்கு அதிக வருத்தங் கொடுத்துவிட்டேன்: இந்தா! இதை வெகுமதியாகப் பெற்றுக்கொள்" என்று எட்டணாவைக் கொடுத்தார்.

வீரன், தன் பாட்டிற்கு அவ்வளவு அதிகமான புகழும், வெகுமதியும் அது வரையிற் பெற்றிராதவ னாகையால், கரை கடந்த மகிழ்ச்சியுடன் அவரைக் கும்பிட்ட வண்ணமாய், "மவராஜன்! நல்லா இருக் கணும். உம் பேரைச்சொல்லி ஒருக்காலுங் குடிச் சறியாத இங்கிலீசுக் கள்ளு குடிச்சேன்" என்று தனது நன்றியறிதலின் பெருக்கைக் காட்டினான். அவன் வாய் குழறிற்று. வெறியால் மயங்கி மயங்கி விழுந்தான்.

**சந்நியாசி:**—"அப்பா, நிற்காதே. நன்றாக உட்கார்ந்து கொள்" என்றார்.

**வீரன்:**—"எங்கப்பன்! எங்க எசமான்! நீ சொல்ற படி. கேட்காமே, வேறே என்ன செய்யப் போறேன்? ஒத்தரவுபடி. இதோ குந்திக் கிட்டேன்" என்று உட்கார்ந்து கொண்டான். பிறகு, "இன்னம் பாடணுமா? சொல்லு; ஒரே தட்டா தட்டிபுடுறேன்" என்றான்.

**சந்நியாசி:**—வேண்டாம்: நான் சொல்லும்போது பாடலாம். உனக்கு எவ்வளவு சம்பளம்?

**வீரன்:**—"ஒரு நாளாக்கி ரெண்டுபடி நெல்லு: மாசத் துக்கு நாலு ரூபா: அது நமக்கெங்கே பத்துது? சம்பளம் வாங்குற ரூவா கள்ளுத் தண்ணிக்கே சரி. ஒம் புண்ணியத்தாலே இன்னிக்கித்தான் திருத்தியாக் குடிச்சேன்" என்று சந்நியாசியை வாழ்த்தினான்.

**சந்நியாசி:**—உங்கள் பெரிய எஜமான் வீட்டுப் பைய னுக்குக் கலியாணம் நடை பெற்றால் உனக்கு நல்ல வெகுமதி கிடைக்கும். கடவுள்தான் விரை வில் நிகழும்படி கிருபை செய்ய வேண்டும். அவனும் பெரியவனாகி விட்டான்.

**வீரன்:**—"ஆமாங்க அப்பிடி நடந்தா, நம்பள்குப் புதுத் துணி கெடைக்கும்; கள்ளுத் தண்ணிக்குச் காசு அம்புடுறதுதான் பெரயாசை. அதுக்கு வேறே எப்பிடியாச்சும் பாத்துக்கணும். கண்ணாளம் மாத்திரம் வந்தா சோற்றுப் பருக்கை வாட்டமா உழும்" என்று வாயூறிக்கொண்டே பேசினான்.

**சந்நியாசி** :—என்னமோ அந்தப் பையனை நான் பார்த்து மிக நாளாகி விட்டது ; நாளைக் காலை யில், சிந்து பூந்துறைக்குப் போய்ப் பார்க்க வேண்டும்.

**வீரன்**:—" ஓ! அ ர முடியாது. பையன் அங்கே யில்லை " என்றான்.

இதைக் கேட்ட சந்நியாசியின் முகத்தில் துயர மும், வியப்பும் தோன்றின. அதை மறைத்துக் கொண்டு, பட படப்புடன், "ஏன் பார்க்க முடியாது? அவன் எங்கே ?" என்று கேட்டார்.

**வீரன்**:—அந்தப் பையன் இங்கே தான் இருக்கான் : அவன் முகம், ஆ! என்ன அயகா இருக்கு !

**சந்நியாசி**:—" அஃதென்ன, அவன் ஏன் இங்கிருக் கிறான் ? யாரேனும் பலவந்தமாய் இங்கு அடைத்து வைத்திருக்கிறார்கள் போலும்! அப் படித்தானா ?" என்று கேட்டார்.

அதைச் செவியுற்ற வீரன், அவர் கொடுத்த சாராயத்தின் நினைவினால், பொய் சொல்லக்கூடா தென்று நினைத்து, " அது ரொம்ப ரகசியமானது ; அதே வெளியே சொல்லக் கூடா திண்ணு எங்க எச மான் கட்டளை போட்டிருக்காரு. நான் உங்கிட்ட சொன்னேனிண்ணு தெரிஞ்சா, எந்தலை பூடும். நீ நமக்கு வேண்டியவன் ; ஓங்கிட்ட மாத்தரம் சொல் றேன் : மூணு நாளைக்கி மின்னே பெரிய எசமான் புள்ளயே இங்கே கொண்டாந்து அடச்சுட்டாங்க ; பாவம் ! அயகு போல பையன் " என்றான்.

**சந்நியாசி**:—சரி ! அப்புறம், உன் எஜமான் இங்கு வரவில்லையா ?

**வீரன்:**—ரெண்டு நாளாக் காணலீங்க; இன்னிக்கி நாளேக்கி வருவாரு; வந்தாலும், ராவிலே தான் வருவாரு

**சந்நியாசி:**—அவர் மாத்திரமா?

**வீரன்:**—நடராஜாண்ணு ஒருத்தர் வருவாங்க; அவுங்க தான் எசமானுக்குக் கூட்டாளி.

**சந்நியாசி:**—இராக்காலத்தில் இங்கு வரவேண்டியதென்ன?

**வீரன்:**—என்னப்பன்! அதை மாத்திரங் கேக்காதே.

**சந்நியாசி:**—போகட்டும். இந்தக் கட்டிடத்தில் இரவில் ஒரு சப்தங் கேட்கிறதே அஃதென்ன?

**வீரன்:**—என்னமோ கடுதாசி செய்ருங்களாம். நமக்கு அது தெரியாது: ஏணிண்ணு, எங்களேயெல்லாம் உள்ளே போக உடுகிறதில்லே.

**சந்நியாசி:**—கடுதாசியா? அதை என்ன செய்கிறார்கள்?

**வீரன்:**—"பத்து நாளேக கொருக்கா வண்டியிலே ஏத்திக்கொண்டு போருங்க; எனக்குத் தெரிஞ்சதெல்லாம், மவராசன்! உங்கிட்டச் சொல்லிப் பூட்டேன்"...........என்று மயங்கி விழுந்து விட்டான்.

சந்நியாசி பார்த்தார். "அடடா! குறையைச் சொல்லி முடிப்பதற்குள் மயங்கி விழுந்து விட்டானே" என்று தவித்தார். மறுபடியும் எழுந்து விடுவானென்று கருதி, "வீரா! வீரா!!" என்று தட்டினர். வீரன் தன்னுடைய வீரத்தை விடாமல் குப்புறப் படுத்துக்கொண்டான். பிணம் போல அசைவற்றுக் கிடந்தான். சந்நியாசி, இனி யவனை எழுப்புவதிற்

பயன் இல்லையென்று கருதி, அக்கட்டிடத்தைச் சுற்றி ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்.

மணிவாசகன், வசந்த மாளிகையிலுள்ள ஓரறையில் அடைபட்டுக் கிடந்தான். அவனுடைய சிறிய தந்தையின் கொடிய செயல்கள் யாவும் நினைவிற்கு வந்தன. இரங்கநாதன், "உன்னுடைய உயிரும் ஆபத்தில் இருக்கிறது: மிகக் கவனமாக இருந்து கொள்ள வேண்டும்" என்று கூறியதை அசட்டை செய்ததற்காகத் தன்னைத் தானே வெறுத்துக் கொண்டான். அன்று இரவு, சிவராம பிள்ளை கூறியபடி தன்னைக் கொன்று விடுவாரோ என்று பயந்து நடுங்கினான். அவன் அடைபட்டிருந்த அறை மிகச் சிறியது. உள்ளே, ஒரு மேஜையும், ஒரு நாற்காலியும் இருந்தன. வெளிப் புறத்தைப் பார்ப்பதற்கு ஒரு சாளரம் மாத்திரம் இருந்தது. அதிற் கம்பிகள் இல்லை. அதன் வழியாகத் தப்பித்துவிடலாமென்றால், பூமியின் மட்டத்திற்கும், அவனிருக்கும் இடத்திற்கும் நீண்ட தூரம் இருந்தது. குதித்தால் கால் ஒடிவது நிச்சயம். அவன் அருந்தும் பொருட்டுப் பலவகையான உணவுகள் வைக்கப்பட்டிருந்தன; எனினும், கடவுளைக் குறித்து யோகத்திலிருப்போர், தவம் அதிகப்பட அதிகப்பட ஆனந்த பெருக்கையே உயிர் ஆதாரமாகக் கொண்டு வேறு ஆகாரம், தண்ணீரின்றி யிருப்பது போல மணிவாசகன், அவற்றில் ஒன்றையும் தொடாமல் கடவுளையே நினைத்துக் கொண்டிருந்தான். தனது ஆருயிர்க் காதலியாகிய சாரதாம்பாளை நினைத்து நினைத்து உருகினான். அவளுடன் உரையாடி மகிழும் இன்பமான சொற்கள் மனத்தின் இடையே எழுந்தன. சாரதாம்பாளின்

பிரிவாற்றாமையும், இனி அவளைக் காண்டல் கூடுமோ என்ற ஏக்கமும், பொறுக்கலாற்றாத துயரமும் மூன்று கூடி அவனை வருத்தின. தண்ணீரில், தன்னினங்களோடு கலந்து இன்புற்றிருந்த ஒரு மீன், கரையேற்றப்பட்டு, எத்தகைய உதவியுமின்றிப் பகைவராது அருளல்லாது வே... கலிட மின்றிக் கிடந்தது போல அவனுடைய அறிவும், நுட்பமும் மயங்கிக் கிடந்தன. ஆனால், துப்பறிவதில் பெயர் பெற்ற சிங்கமாகிய இரங்கநாதன், எப்படியும் தான் அடைபட்டுக் கிடப்பதை அறிந்து விடுவிப்பான் என்ற நம்பிக்கை மாத்திரம் சிறிது இருந்தது.

அவன் அடைபட்டுக் கிடந்த அறையின் கதவைப் பிடித்து இழுத்தான். அது முன் பக்கத்தில் தாழிடப் பட்டிருந்தது. சரியான இரவு. மணியோ பத்திருக்கும். பொழுதமர்ந்தது முதல் ஏதோ தட்டுகிறதும் கொட்டுகிறதும் போன்ற சப்தம் கேட்டது. அது எப்படி உண்டாகிறது என்பதை அறிய முடியவில்லை. மணிவாசகன், அங்கு நிற்பதில் பயனில்லையென்று கருதியவனாக எதிர்ப் புறத்திலிருந்த கதவின் அருகே போய் நோக்கினான். சில முரட்டு மனிதர்கள் காணப்பட்டார்கள். வெளியில் வராமல் அத்தனை மனிதர்களும் எப்படி அடைபட்டுக் கிடக்கிறார்கள் என்ற வியப்பும் தோன்றின. தனக்குச் சொந்தமான கட்டிடத்தில், தான் கள்வனைப்போல அடைபட்டுக் கிடப்பதை எண்ண அவன் மனம துடித்தது. கதவைத் திறக்க முயன்றான். அது பூட்டப் பெற்றிருந்தது. கதவைத் தட்டித் திறக்கும்படி செய்து, அவர்களிடத்தில் ஏதேனுங் கேட்கலாமென்று கருதினான். அவர்கள், கள் குடித்த வெறியால் மயங்கிக் கிடக்கிறார்களென்று புலப்பட்டது. ஆதலால்

அப்படிச் செய்ய அஞ்சினன். இன்னது செய்வதென்று அறியாமல் கல்லைப்போல நின்றான். ஒரு விநாடி கழிவது ஒரு யுகமாகத் தோன்றிற்று. உலகமே பாழடைந்து போய்விட்டதாகக் கருதினன். சாரதாம்பாளை நினைத்து கண்ணீர் உகுத்தான். அடிக்கடி மயக்கத்தால் தலை சுழன்றது. பிறகு, "நெல்லையப்பரே! இக்கொடியவர்க்கு நீயுந் துணை செய்வாயோ? தாய், தந்தையற்ற என்னை இத்துன்பத்திற் காளாக்குதல் தகுமா? எனக்கு உனது துணையின்றி வேறில்லை; காப்பாற்ற வேண்டுவது நின் கடமையே" என்று வாய்விட்டுக் கனிந்துருகிக் கடவுளைப் பிரார்த்தித்தான்.

கட்டிடத்தைச் சுற்றி வந்த சந்நியாசி, மணிவாசகன் அடைபட்டிருந்த அறைக்கு நேரே வந்ததும், அவன் உருக்கத்தோடு கடவுளைப் பிரார்த்தித்தலைக்கேட்டார்; அவ்விநாடியே அவர் உண்மையை உணர்ந்து கொண்டார்; பிறகு சாளரத்தை உற்று நோக்கினர். அது எத்தனை அடிதூரம் உயரமிருக்குமென்பதை ஒரு வகையாகக் கணக்குப் பண்ணினர். சிறிது நேரம் ஏதோ மனத்திற்குள்ளேயே எண்ணித் தீர்மானஞ் செய்து கொண்டவராய், உடனே ஒரு சிறு கடிதத் துண்டில்,

நண்பனே!

"தைரியத்தை விடாதே. நாளை இரவு சரியாக ஒரு மணிக்கு வருவேன். புறப்படத் தயாராயிரு. உறங்குதல் கூடாது. நான் இங்கு வந்துவிட்டதைச் சில குறிகளாற் காட்டுவேன். இத்துண்டைப் பார்த்ததும் கிழித்து விடுக"

ஒரு நண்பன்.

என்று எழுதி, அதை ஒரு கல்லோடு சேர்த்துச் சாளரத்தின் வழியாக உள்ளே எறிந்துவிட்டுச் சிந்து பூந்துறையை நோக்கி நடந்தார்.

* * *

மறு நாட் புலர்ந்ததும், இரங்கநாதன் சிவராம பிள்ளையைக் காணும் பொருட்டு சென்றபோது, அவர் மேன்மாடியில் எதையோ சிந்தித்துக்கொண்டிருந்தார். அவர் முகத்திற் பல துயரக் குறிகள் காணப்பட்டன. இரங்கநாதனைக் கண்டதும் "வாருங்கள்" என்று சொல்லி, ஒரு நாற்காலியைக் காட்டி அமரும்படி கூறினார். இரங்கநாதன் அவ்வாறே அமர்ந்தார்.

**சிவராம பிள்ளை** ;—சரி கொலையைப் பற்றி ஏதேனும் புலப்பட்டதா?

**இரங்கநாதன்** :—ஒன்று மில்லை; போகப் போக மிகச் சிக்கலாகவே இருக்கிறது; கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்குச் சிறிதும் இல்லை.

**சிவராம பிள்ளை** :—தாங்கள் முயற்சித்தால் வெளி வராமலிருக்குமா? உண்மையான கொலையாளியைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டியது அவசியம். என்னுடைய அறிவும் சபலித்து விட்டது.

**இரங்கநாதன்** :—ஏன்! ஏன்!! அப்படிக் கூறுகிறீர்கள்?

**சிவராம பிள்ளை** :—கொலை நடந்த பிறகு, 'வேலைக் காரன் ஒருவன் தேவை' என்று பத்திரிகையிற் பிரசுரத்திருந்தேன்; அப்படியே ஒருவன் வந்து

வேலைக்கமர்ந்தான் ; அவனை நம்பி எல்லாவற்றை யும் ஒப்பித்தேன் ; பாவிப் பயல் ! என்னுடைய உயிர்போன்ற இரண்டு மூன்று கடிதங்களையுந் திருடிக் கொண்டு போய்விட்டான்.

**இரங்கநாதன் :**—(வியப்புடன்) அப்புறம்—தாங்கள் அவனைத் தேடவில்லையோ ?

**சிவராம பிள்ளை :**—என் செய்வது ! இவ்வளவு பெரிய ஊரில், அவனை எங்கே கண்டு தேடுவது ? அன்றி யும், இரண்டு மூன்று நாட்களாக மணிவாசகனை யுங் காணவில்லை ; எங்கும் தேடினேன் ; பயன் அற்றுவிட்டது.

**இரங்கநாதன் :**—பாவம் ! 'பட்டகாலிலே படும் ; கெட்ட குடியே கெடும்' என்பது பொய்யன்று ; எனினும் அவனைத் தேடுவதற்கு முயற்சிக் கிறேன். ஏது ? கையில் இரப்பர் உறை (Gloves) அணிந்திருக்கிறீர்கள் ! எப்பொழுதும் அணிந்து கொள்வது வழக்கமோ ?

**சிவராம பிள்ளை:**—இல்லை, இல்லை. சில நாட்களாகவே உபயோகப் படுத்துகிறேன் ; இவைகளை அணிந்து கொள்வதால், எவ்வளவோ நன்மைகள் இருக் கின்றன.

**இரங்கநாதன்;**—என்ன நன்மைகள் ?

**சிவராம பிள்ளை:**—முதலாவது உணவு உட்கொள்ளுங் கால் இவைகளை அணிந்து கொள்ளலாம். ஏனெ னின், நகக் கணுக்களிலுள்ள நஞ்சு (Poison)



இரங்கநாதன், "......போகப் போக மிகச் சிக்கலாகவே
ருக்கிறது; கண்டு பிடித்துவிடலாமென்ற நம்பிக்கை எனக்குக்
டையாது" என்றார்.
(பக்கம் 95)

உணவிற் கலவாது. இரண்டாவது நாகரீகமாக வும் தூய்மையாகவும் இருக்கிறது.

**இரங்கநாதன்** :—ஆம்—உண்மையே. மேனாட்டு வைத்தியர்களும் அப்படியே கூறுகிறார்கள். இவைகள் உயர்ந்தவைகளாக இருக்க வேண்டும்.

**சிவராம பிள்ளை** :—நான், வாங்கினால் உயர்ந்தவைகளாகவே வாங்குவது; தாழ்ந்த சாமான்கட்குக் காசு கொடுப்பதில்லை.

**இரங்கநாதன்** :—அது சரிதான்! இழிந்த சாமான்கள் பலவற்றை வாங்குவதைக் காட்டிலும், உயர்ந்ததாக ஒன்றிருந்தாற் போதுமானது. நானும் உபயோகிக்கலாமென்றே கருதுகிறேன். அதைப் பார்க்கலாமா?

**சிவராம பிள்ளை** :—"தடையென்ன?" என்று இடது கை விரல்களிலுள்ள ஒன்றைக் கழற்றிக் கொடுத்தார்.

இரங்கநாதன், அதை வாங்கிக் கூர்ந்து கவனித்தார். அதில் "ஸ்பென்ஸர் அண்ட் கம்பெனி, சென்னை, (Spencer and Co., Madras) என்று எழுதப்பட்டிருந்தது. அதை நினைவில வைத்துக்கொண்டு, உறையை மறுபடியும் அவரிடம் அளித்துவிட்டு, "தங்களைப்போலப் பெரிய மனிதர்கள் சென்றால், நல்ல பொருள்களைக் கொடுப்பார்கள்; என்னைப்போல ஆசாமி சென்றால் நல்லவை வாங்க முடியாது; அது கம்பெனிக்காரர்களின் இயற்கை" என்றார்.

**சிவராம பிள்ளை** :—சே! யார் வாங்கினாலுங் காசு தானே கொடுப்பது, நீங்கள் கேலி செய்கிறீர்கள்.

**இரங்கநாதன் :**—அது போகட்டும். களவு போன கடிதங்கள் மிக முக்கியமானவைகளோ? என்ன கடிதங்கள்?

**சிவராம பிள்ளை :**—அவை எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவை. விபரம் வெளியிட முடியாததற்கு வருந்துகிறேன்.

**இரங்கநாதன் :**—மணிவாசகன் காணாமற் போயிருப்பதற்கு என்ன காரணமாக இருக்கலாம்?

**சிவராம பிள்ளை :**—உண்மையாக எனக்குச் சிறிதாவது விளங்க வில்லை; ஒருகால், கோவிந்தனை அவனே கொன்றுவிட்டு, அந்தப் பயத்தினால் ஓடி ஒளிந்திருக்கலாமென்றே கருதுகிறேன்.

**இரங்கநாதன்:**—சே! அது தவறு. அவ்வளவு சிறுவன் கொலை செய்யத் துணியமாட்டான்.

**சிவராம பிள்ளை :**—அவனுடைய குணம் உங்கட்குத் தெரியாது. எந்தக் காரியத்தையும் செய்யக் கூடிய துணிவு அவனுக் குண்டு.

**இரங்கநாதன் :**—அவனுடைய நண்பராகிய வடிவேலு பிள்ளை என்ன சொல்லுகிறார்?

**சிவராம பிள்ளை :**—என்னமோ காங்கிரஸிற் சொற்பொழிவு செய்துகொண் டிருந்தானும்; அது முடிவதற்கு நேரம் ஆகுமென்று தெரிந்ததால், வடிவேலு பிள்ளை முதலிலேயே வந்துவிட்டாராம்; அன்று இரவு முதல் அவனைக் காணவில்லை. இந்தப் பாழுஞ் சொற்பொழிவு வேண்டாமென்று கண்டித்தும் இருக்கிறேன்; பெரியவர்கட்கு அடங்காத பிள்ளை; நாம் என்ன செய்யலாம்?

**இரங்கநாதன் :**—"நண்பரவர்களே! இனி அதைப் பேசி என்ன ஆவது? மேல் நடக்கவேண்டியதைப் பார்ப்போம். எனக்கு ஒரு அவசரமான வேலை யிருக்கிறது. உத்தரவா? போய் வருகிறேன்" என்று எழுந்தார்.

சிவராம பிள்ளை, ஆமென்று தலையை அசைத்தார். இரங்கநாதன் உள்ளூற மகிழ்ந்து, "திருட்டுப் பயலே! உன் செயல் யாவும் வெளியாகிவிட்டன" என்று கூறுவதுபோல அவரை ஒரு பார்வை பார்த்து விட்டுத் தன் வழியே சென்றார்.

மனிதனுடைய உருவைக் கெடுத்து, உயரிய குணங்களைக் கெடுத்துப் படுகுழியில் வீழ்த்துவது 'பொறாமை' என்னுங் கொடிய குணமே. பொறாமை என்ற பேய் தன்னையுடையானை இப் பிறப்பிலும் கெடுத்து, மறுபிறப்பிலுங் கெடுத்துவிடும். ஆதலான், திருவள்ளுவர்,

"அழுக்கா றென ஒருபாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்"

எனக் கூறியுள்ளார். பொறாமையே தீக் குணங்கட்குத் தலைமை வகித்தது என்னலாம். இதுவே மற்ற தீக் குணங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கின்றது. இப் பொறாமையைக் கொண்ட மனிதன் என்றும் பிறருக்குத் தீங்கு செய்யவே எண்ணுவான். பொறாமை கொண்டவனுக்கு மகிழ்ச்சி யென்பதே யிராது. அத் தகையோன் செல்வமுடையவனாயினும் நாளடைவில் குறைந்து வறுமைக்கே ஆளாவான். அன்றவிந் தடங்

கிய பெரியோர், நாம் வறுமை யுடையே மென்று கருதி, அதைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுப் பிறர் பொருளை விரும்புதல் செய்யார். 'பிறர்க் குரிய பொருளை விரும்புதல் அறனன்று' என்ற நடுவு நிலைமையி னன்றி ஒருவன் விரும்புவா னாயின், அஃது அவன் குடியைக் கெடச் செய்து, பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும். பிறருடைய செல்வத்தைக் கண்டு பொறாமையுடையானைத் திருமகள் (இலக்குமி) தானும் பொறாது, தன் தவ்வைக்குத் (மூதேவி) காட்டி நீங்கும். நாளடைவிற் சுருங்குந் தன்மையை யுடைய செல்வத்திற்குச் சுருங்காமைக் காரணம் யாதென்று ஒருவன் ஆராய்வானாயின், அது பிறருடைய பொருளைத் தான் விரும்பாமையே யென்று புலப்படும். மாணக்கர்கள் பொறாமை யுடையவரா யிருந்தா லன்றிக் கல்வி பெருகாது. அதற்கு விதி யுண்டு. இக்கொடிய பொறாமையைக் கண்டதும் அன்றே வேரோடு களைந் தெறிய வேண்டும். அதுவே கற்றதனால் ஆய பயனாகும். அவ்வாறு செய்பவன், இம்மையிலும், மறுமையிலும் என்றும் அழியாத இன்பத்தைப் பெற்று உலகம் போற்ற வாழ்வான். **இப்பொறாமை யன்றோ ஒருவன் ஒருவனைக் கொலை செய்யவுந் தூண்டுகின்றது?** அம்மம! இதன் பண்பை என்னென்று கூறுவது! பிறர் நம்மைத் துன்புறுத்தினாலும், நாம் அதைப் பொறுப்பதுடன் அவர்கட்கு உதவி செய்யவே எதிர் பார்க்க வேண்டும். இதற்கு **'மெய்ப் பொருள் நாயனார்'** தக்க சான்றாவர். கேவலம் பிறருடைய செல்வத்தை விரும்பித் தம்முடைய பெருமையை யிழப்பது, அறியாமையினும் அறியாமை யன்றோ? ஆதலின், இக்கொடிய பொறாமை

யென்ற குணம் நம்மிடம் அணுகாதவாறு காத்துக் கொள்வதே அறிவுடைமையாம்.

---

## எட்டாவது அதிகாரம்

---

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்" —குறள்.

### குள்ள நரி சிங்கத்தை ஏமாற்றுதல்—பக்காத் திருடன்

**சொக்கலிங்கம்** பிள்ளை, இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியாரை அழைத்து வரும்படி அவசரமாக ஒரு ஆள் அனுப்பினார். இன்ஸ்பெக்டர் உடனே அங்கு வந்தார். சொக்கலிங்கம் பிள்ளை, அவரை ஒரு நாற்காலியில் அமரும்படி செய்து, "நேற்றிரவு இங்குத் திருடர்கள் புகுந்துவிட்டார்கள்; உடனே விழித்துக் கொண்டு விரட்டினேம்; மாயமாகப் பறந்து சென்று விட்டார்கள். இன்று என்னுடைய வேலைக்காரன், பூக்கடை வீதிக்குச் சென்றபோது, இன்று இரவிலும் வருவதாகப் பேசிக்கொண்டார்களாம். அதை அவர்கள் அறியாமற் கேட்டு வந்து சொன்னான். இதற்கு என்ன யோசனை?" என்று கேட்டார்.

**இன்ஸ்பெக்டர்:**—இது நம்ப முடியாத கட்டுக்கதையே. எவனாவது வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டு வருவானா?

**சொக்கலிங்கம் பிள்ளை:**—"அவர்கள் சாமர்த்தியமுள்ள திருடர்களாக இருக்கவேண்டும்; அவசியம் வருவார்களென்றே எதிர் பார்க்கிறேன்.

எப்படி யானாலும் சரி! தாங்கள் இன்றிரவுக்கு மாத்திரம் இரண்டு சேவகர்களுடன் உதவியாக வந்திருக்க வேண்டுகிறேன்" என்றார்.

இன்ஸ்பெக்டர் அப்படியே ஒப்புக் கொண்டு சென்றார். அவர்கள் எதிர் பார்த்த இரவும் வந்தது. இன்ஸ்பெக்டர் ஏழு மணிக்கே வந்துவிட்டார். இரவு பத்துமணி வரையில் ஒன்றும் நடை பெறவில்லை. எங்கும் சப்தமின்றி யிருந்தது. மழை சிறிது தூரிக் கொண்டிருந்தது. நாய்கள் மாத்திரம் குரைத்தன. இன்ஸ்பெக்டரும், சொக்கலிங்கம் பிள்ளையும் விடியும் வரை விழித்திருக்க வேண்டுமென்றே தீர்மானஞ் செய்தார்கள்; எனினும் இறுதியில் உறங்கி விட்டார்கள். இன்ஸ்பெக்டர் முன் னறையிற் படுத்திருந்தார். சுமார் ஒருமணி யிருக்கலாம். இன்ஸ்பெக்டர் திடீரென்று விழித்துக் கொண்டார். உடனே எழுந்து சாளரத்தின் கதவைத் திறந்து நோக்கினர். வானத்தில் மேகம் சூழ்ந்து காரிருளாக இருந்தது. குளிர்ந்த காற்று வீசிக்கொண் டிருந்தது. இன்ஸ்பெக்டர், உடையைத் திருத்திக் கொண்டு, கைத் துப்பாக்கியை எடுத்துத் தோட்டாக்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு, மெதுவாகக் கதவைத் திறந்து, தாழ்வாரத்தில் நடந்தார். காற்று மிகுதியாக வீசிக்கொண்டிருக்கிறது. தாழ்வாரத்தில் எரிந்துகொண்டிருக்கும் விளக்கு காற்றினால் அசைந்து எந்த விநாடியிலோ அணைந்துவிடும்போ லிருந்தது. அங்கிருந்து திரும்பிக் குறுக்குத் தாழ்வாரத்தை நோக்கினர். அத்தாழ்வாரத்திலுள்ள சாளரம் திறக்கப்பட் டிருந்தது. "யார் அதை மூட மறந்தார்கள்? அல்லது யார் அதை இப்போது திறந்தார்கள்?" என்று ஐயமுற்றார்.

பிறகு அதன் அருகிற் சென்று எட்டிப் பார்த்தார். சிறிது தூரத்தில்—அதாவது வீட்டிற்கு வெளியில் ஒரு மின்சார வண்டி நின்றுக் கொண்டிருந்தது. இன்ஸ் பெக்டர் நின்ற இடத்தின் கீழ்க் கட்டில், அறையின் மேல் தளம் சாளரத்திற்கு நான்கடி இருந்தது. அச்சாள ரத்தை மூடிக் கொண்டு, அத் தாழ்வாரத்தின் வழியே வடக்கு நோக்கிச் சென்று, அத் தாழ்வாரம் கூடத் தோடு சந்திக்கும் இடத்தில் நின்றார். அங்கிருந்த விளக்கின் ஒளியால் எல்லாப் பொருள்களும் விளங்கு கின்றன. சில நாற்காலிகள் வைக்கப்பட்டிருந்தன.

இருப்புப்பெட்டி வைத்திருக்கும் அறையை நோக்கிச் சில காலடிகள் சென்றிருந்த அடையாளம் புலப்பட்டன. அதை நோக்கி மெதுவாக நடந்தார். அக்காலடிகள் நிச்சயமாய் இருப்புப்பெட்டி வைத்திருக் கும் அறைக்கே சென்றன. வீட்டிலோ யாவரும் உறங்கிக்கொண்டிருக்கிறார்கள். எங்கும் சிறிது சப்த மும் இல்லை. திருடன் வந்துவிட்டா னென்பதை உணர்ந்து கொண்டார். சிறிது நேரம் யோஜித்தார். உள்ளேசெல்லுங் காலடிகள் இருக்கின்றனவே யன்றி, உள்ளேயிருந்து வெளியேவரும் காலடிகள் காணப்பட வில்லை. திருடன் அவ்வறையில்தான் இருக்கிறானென்று நிச்சயித்தார். அவ்வறையின் முன்னே சென்று, பூட் டுத் துவாரத்தின் வழியாக உற்றுக் கேட்டார். அவர் மனம் தடுமாறிற்று. எந்த நிமிடம் என்ன நிகழுமோ? 'திருடன் உள்ளே யிருக்கிறானென்று தெரிந்தவுடன், கூச்சலிட்டுத் துணைவரும்படி செய்து, பிடித்துக் கொள் ளலா மென்றால், அவ்வறையின் சாளரத்திற் கம்பிகள் இல்லை. குதித்தால் காலோடிவது நிச்சய மாயிருக்கும்,

உயிருக்குப் பயந்து தப்பித்துச் சென்றுவிட்டால் என்ன செய்வது ?" என்ற யோஜனை அதைத் தடுத்தது. எந்தச் சாமானையுந் திருடாமற் போகமாட்டான்; சும்மா எதற்காக வரவேண்டும் என்று கருதியவராய்ப் பேசாமல் திரும்பிக் கீழ்க்கட்டில் வேலைக்காரனாகிய வெள்ளையன் படுத்திருக்கும் அறையை நோக்கிச் சென்றார். அப்பொழுது, அவன் அவசரமாக எழுந்து உடைகளை அணிந்துகொண்டிருந்தான். அவன் முகம் பயமுடையதாக இருந்தது. இன்ஸ்பெக்டர், "ஏன் உடையணிகிறாய் ?" என்று கேட்டார்.

**வெள்ளையன் ;**—"ஏதோ பயத்தால் விழித்துக் கொண்டேன்; அவர்கள் வந்திருப்பார்களோ, என்னவோ ?" என்று குழறிக்கொண்டே பேசினான்.

பிறகு இருவரும் இரும்புப்பெட்டி இருக்கும் அறைக்கு நேரே சென்றார்கள். அவ்வறையின் சாளரம் திறக்கப்பட்டிருந்தது. அச்சாளரத்தின் வழியாகத் தீபவொளி வீசிற்று. வெள்ளையனை அவ்விடத்திலேயே யிருக்கும்படி செய்து, இன்ஸ்பெக்டர், வெளியேவந்து கூர்ந்து பார்த்தார். சாளரத்திற்கு நேரே சென்று தலையை நீட்டி யுள்ளே கவனித்தார். அவர் நிற்கு மிடத்திற் கருகில் ஒரு ஏணியிருந்தது. அதைக் கண்டதும், சரி ! இதன் வழியாகத்தான் சென்றிருக்கிறான் என்று தீர்மானித்தார். முன்வாசலின் வழியாக இவன் தப்பித்துச் செல்லமுடியாது. ஏனெனில், அப்பாதையின் அருகில் சமையற்காரன் முதலியோர் படுத்திருக்கின்றனர். மழை நன்றாகப் பொழியத் தொடங்கிற்று. சப்தங் கேட்காமல் அந்த

ஏணியில் ஏறினார்; ஏறினதும் சாளரத்தின் வழியாக நோக்கினார். ஒரு மனிதன் இருப்புப் பெட்டியின் அருகில் எதையோ தேடிக்கொண்டிருக்கிறான். அம்மனிதனுடைய பின்புறமே தெரிந்தது. அவன் முகம் தெரியவில்லை. அம்மனிதன் என்ன தேடுகிறான்? ஒன்றும் விளங்கவில்லை. சற்று யோஜித்துவிட்டுக் கீழே இறங்கினார். ஏணியை எடுத்துத் தூர வைத்துவிட்டு, வெள்ளையனை அழைத்து, "சொக்கலிங்கம் பிள்ளையை மெதுவாய் எழுப்பு; நான் வரும்வரையில் ஒன்றுங் கூறாதே" என்று அனுப்பிவிட்டுத் தன்னுடைய சேவகனை எழுப்பினார். அவனைத் தாழ்வாரத்தின் கோடியிலிருக்கும் சாளரத்தருகில் நிற்கவைத்து, சொக்கலிங்கம் பிள்ளையிடஞ் சென்று, நடந்தவற்றை இரண்டொரு மொழிகளிற்கூறி அவரை முன்வாயிலில் நிற்கும்படி கட்டளையிட்டார். இனித் திருடன் தப்புவதற்கு வழியில்லை. முன்வாசல் வழியாகச் சென்றால், சொக்கலிங்கம் பிள்ளை நிற்கிறார்; தாழ்வாரத்திற்கு ஓடினால் சேவகன் நிற்கிறான்; வலது கோடியிலிருக்கிற சாளரத்தின் வழியாகத் தப்பலாமென்றால் அங்கு வெள்ளையன் நிற்கிறான். இன்ஸ்பெக்டர் எல்லாச் சாளரங்களும் தாழிடப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு வெளியே வந்தார். "இப்பொழுது அறையினுள் இருக்கும் திருடனை விரட்டினால், அவன் தப்புவதற்கு ஓடுவான்; நாற்புறமுங் காவலாக இருக்கின்ற யாவரும் ஒன்றாகச் சேர்ந்து பிடித்துக்கொள்ளலாம்" என்பது இன்ஸ்பெக்டர் கருத்து. சொக்கலிங்கம் பிள்ளை முன்வாசலில் நிற்கிறார். கொலை நடந்தாலும் நடக்கும் என்றும், தற் காப்பிற்காகச் சுடவேண்டுமென்றும் இன்ஸ்பெக்டர் கூறியிருப்பதால், நமக்கு ஆபத்து நேர்ந்தாலும்

நேரும் என்று கலக்கம் அடைந்தார். சில நிமிடம் ஆயின. உட்பக்கமிருந்த இருப்புப் பெட்டி அறையில் ஏதோ திறக்கும் சப்தமும், ஆள் நடக்கின்ற சப்தமுங் கேட்டன. சொக்கலிங்கம் பிள்ளை, முன்வாசலில் நிற்ப தால், அறையிலாவது, தாழ்வாரத்திலாவது என்ன நடக்கிறதென்று பார்க்க முடியவில்லை. சிறிது நேர மாகப் பெய்துகொண்டிருந்த மழை அப்பொழுதில்லை. நிலவு நன்றாக ஒளி வீசிற்று. இன்ஸ்பெக்டர் மறுபடி யும் ஏணியில்வந்து ஏறினார். திருடன் விளக்கை இருப் புப் பெட்டியின்மீது வைத்து விட்டு நிற்கிறான். இன்ஸ் பெக்டர் போட்ட சப்தத்தால், அவன் திடுக்கிட்டு ஓடி னான். காரியம் மிஞ்சி விடும்போ லிருக்கிறதே என்று இன்ஸ்பெக்டர் துரிதமாய் அவனைத் தொடர்ந்து ஓடி னார். அவர் வீட்டி னுட்சென்று திரும்பும்போது, திருடன் அவ்வறையிலிருந்து முன்வாயிலை நோக்கி ஓடு கிறான். இன்ஸ்பெக்டர் அவனைத் துப்பாக்கியாற் சுட் டார். காவலாக நின்ற யாவரும் ஒரேகாலத்தில் கூடத் தில் (Hall) நுழைந்து, திருடன் ஓடுவதைக்கண்டு துரிதமாய்ப் பாய்ந்து சென்றார்கள். அத்திருடன், சுமார் பத்து பதினைந்து அடி தூரத்தில் ஓடுகிறான். யாவரும் பின்னாலேயே சென்றால், அவன் ஓடிவிடுவா னென்று பயந்து, அவனை நோக்கிச் சுட்டார்கள். ஆனால், அவன் சமாளித்துக்கொண்டு முன்னினும் அதிகமாக ஓடினான். யாவரும் பின்தொடர்ந்து செல் கிறார்கள். முன்னால் ஓடிய திருடன், ஒரு விநாடியில் வெளியிற்சென்று, அங்குத் தயாராக நின்ற மின்சார வண்டியில் ஏறியதே அது பறந்துசென்றது. யாவருக் கும், பிடிக்க முடியவில்லையே என்ற வெட்கமும், துக்க மும் உண்டாயிற்று. இன்ஸ்பெக்டருக்கு எப்படியாகி

னும் பின்பற்றிப் பிடித்துவிட வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. உடனே தம்முடைய மின்சாரவண்டியில் இவர்ந்துகொண்டு பின்தொடர்ந்தார். திருடனுடைய வண்டி வீரராகவ புரத்தைநோக்கி ஓடுகிறது. இன்ஸ்பெக்டர் விடேன் விடேன் என்று துரத்துகிறார். முன்னேசெல்லும் வண்டி ஐம்பதுமைல் வேகத்திற் காற்றாகப்பறந்தது. இன்ஸ்பெக்டர் தம்முடைய வண்டியிலுள்ள எல்லா விசைகளையும் முடுக்கிவிட்டுத் தொடர்ந்து செல்லுகிறார். வீரராகவ புரத்தையுங் கடந்து, பாளையங் கோட்டைக்குச் சென்றும் பிடிக்க இயலவில்லை. ஒன்றை யொன்று பின்பற்றிச் செல்லுங் கால், திருடனுடைய வண்டி ஐம்பதடி தூரத்திற் சென்றது. இன்ஸ்பெக்டர் இனிப் பிடித்துவிடலா மென்று களிப் புடையவராய்த் தொடர்ந்தார். அந்தோ! கெட்டகாலம்! இன்ஸ்பெக்டருடைய வண்டியின் முன் உருளையிலுள்ள டயர் பட் என்று தெறித்துவிட்டது. இன்ஸ்பெக்டர் "அட! துரதிஷ்டமே!" என்று இறங்கிப் பின்பக்கம் வைத்திருந்த புதிய தொன்றை எடுத்துப் பொருத்திக்கொண்டு மறுபடியும் தொடர்ந்தார். இதற்குள் பதினைந்து நிமிடங்கள் ஆய்விட்டன. வேகமாகச் சென்றால் பிடித்து விடலாமென்று கருதினார். இப்படிச் செல்லும் பொழுது எதிரே **சுங்கச்சாவடி (Toll gate)** வந்தது. அதற்குரிய மகம்மது என்பவன், குறுக்கே மரத்தைப் போட்டுப் பூட்டிவிட்டுப் படுத்து உறங்குகிறான். இன்ஸ்பெக்டர் சிந்தை கலங்கியவராய் அவனை எழுப்பத் தொடங்கினார். அவன் சிறிதுகூட அசையவே யில்லை. "அட! இவ்வென்ன? அவுட்டு வாணம் போட்டாலும் என்ன புகை?" என்று கேட்பான்போ

விருக்கிறதேயென்று கருதியவராய் மறுபடியும் தட்டி எழுப்பினார். அதன் பிறகு, அவன் புரண்டு எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு, "யாரய்யா அது? இராக் காலத்திலே வந்து இழவு கூட்டுகிறது" என்று கேட்டான்.

**இன்ஸ்பெக்டர்** :—டே! இந்தக் கதவைத் திற; ஒரு திருடன் தப்பித்துக் கொண்டு செல்கிறான்; அவனைப் பிடிக்க வேண்டும்.

**மகம்மது** :—ஐயோ! திருடனா? பெட்டியில் பணம் வைத்திருந்தேனே!

**இன்ஸ்பெக்டர்** :—டே! அவன் இங்கு வரவில்லை; இந்த வழியாகத் தப்பித்துச் செல்லுகிறான்; அவசரம்! கதவைத் திற; என்னை யாரென்று கருதினாய்? திருநெல்வேலி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியார் என்பதை நினைப்பூட்டுகிறேன்.

**மகம்மது** :—யாராக இருந்தாலும் எனக் கென்ன? எங்கே ரூபாய்? வண்டியின் எண் எத்தனை?

**இன்ஸ்பெக்டர்** :—அடா! சநியனே! கதவைத் திறந்து விடு; வரும்பொழுது ரூபாய் தருகிறேன். அவசரம்! அவசரம்!!

**மகம்மது**:—அது முடியாது வரும்பொழுதா தருகிறாய்? நல்லது! யாருக்குக் கதை கட்டுகிறாய்?

**இன்ஸ்பெக்டர்** :—"செக்கிற்கும் தம்பூருக்கும் ஒத்து வராது; இந்தா! ரூபாய்" என்று ஒரு ரூபா கொடுத்தார்.

மகம்மது அதை வாங்கிப் பெட்டியில் வைத்து விட்டுத் தன் மடியில் வைத்திருந்த பொடிப் பட்

டையை எடுத்து, அதிலிருந்து, கொஞ்சம்—ஒரு எலும்பிச்சங்காயின் அளவு பொடியை அள்ளி மூக்கில் திணித்து, மேலே யிழுத்தான். பிறகு கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு சாவகாசமாகச் சீட்டு (Receipt) எழுதத் தொடங்கினன். இன்ஸ்பெக்டர் பார்த்தார்; விளங்காதவனோடு சண்டையிடுவதிற் பயனில்லை யென்று கருதி, அவன் எழுதி முடித்துக் கதவைத் திறந்துவிடும் வரை காத்திருந்தார். பிறகு புறப்படுவதற்குத் தயாரானவர், ஏதோ நினைத்துக் கொண்டவராய் "சற்று நேரத்திற்கு முன் இவ்வழியாக ஒரு வண்டி சென்றதா?" என்று கேட்டார்.

**மகம்மது** :—"வழி யென்றிருந்தால் வண்டி போகாமலிருக்குமா?" என்று சிரித்தான்.

**இன்ஸ்பெக்டர்** :—(நாண முற்றவராய்) இல்லை; நான் வருவதற்குச் சிறிது நேரம் முன்—

**மகம்மது** :—ஆமாம் ஒரு வண்டி சென்றது; அவ்வண்டிக்காரர் நிரம்ப நல்லவர்; கேட்டவுடன் ஒரு ரூபாயை எடுத்து வீசி விட்டார்.

**இன்ஸ்பெக்டர்** :—சரி! சரி!! அந்த வண்டியின் நம்பர் எத்தனை?

**மகம்மது** :—"T. 1314," என்றான்.

இன்ஸ்பெக்டர் அதைக் கேட்டுக்கொண்டு மறுபடியும் பின் தொடர்ந்தார். முன்னாலே சென்ற திருடனுடைய வண்டி, ஸ்ரீ வைகுண்டத்திற் கருகில் ஓடிக் கொண்டிருப்பதை அதனுடைய பின்பக்கம் உள்ள அபாயம் அறிவிக்கும் விளக்கால் அறிந்து கொண்டார், விரைவாகத் தொடர்ந்தார். திருடனுடைய வண்டி,

சிறிது தூரத்திலிருந்த மற்றொரு புகை வண்டி குறுக்கிடும் வாசலைக் (Railway-cross-gate) கடந்தது. இன்ஸ்பெக்டர் இனிப் பிடித்துவிடலாம்; அவன் தப்பமுடியாது என்று மகிழ்ந்தார். அந்தோ! மறு நிமிடம் அந்த வாசலும் அடைக்கப்பட்டது. ஏன்? எதிரே திருச் செந்தூரிலிருந்து புகை வண்டி வந்துகொண்டிருந்தது. ஒரு நிமிடம் முன்னுடி வந்திருந்தால், அதைக் கடந்து போயிருப்பார். என் செய்வது! அதற்காகப் பத்து நிமிடங்கள் தாமதிக்க வேண்டியதாயிற்று. பிறகு தன்னுடைய வண்டியை ஓட்டிக்கொண்டு சென்ருர். திருடனுடைய வண்டியின் அடையாளங்கள் அவ்வளவோடு நின்றுவிட்டன. இன்ஸ்பெக்டர் சலிப்புற்றவராய், ஸ்ரீவைகுண்டத்திலுள்ள ஒரு ஹோட்டலினுள் நுழைந்தார். உள்ளே சென்று, சிறிது பலகாரமும், காபியும் அருந்திவிட்டுக் களைப்புற்று அமர்ந்திருந்தார். அவ்வமயம், அதன் தலைவனுகிய மாதவன் அங்கு வந்து, "தாங்கள் இந்நேரத்தில்—எல்லாம் முடிந்த பிறகு வந்தபடியால், நல்ல உணவுகள் கொடுக்க முடியவில்லை; மன்னிக்கவேண்டும்" என்ருன்.

**இன்ஸ்பெக்டர்** :—குற்றமில்லை; கிடைத்த மட்டில் மகிழ்ச்சியே. ஒரு திருடனைத் தேடிக்கொண்டு வந்தேன். ஏமாற்றி விட்டான். சிறிது நேரத்திற்கு முன் அவன் இங்கு வந்தானு?

**மாதவன்** :—ஓ! கடவுளே! நான் ஒளித்து இருக்கிறேனென்று கருதினீர்கள் போலும்! அப்படியானல், அது கஷ்டகாலமே!

**இன்ஸ்பெக்டர்** :—இல்லை, இல்லை. இங்கு வந்தானு என்றே கேட்டேன்.

**மாதவன் :**—அவன் வரவேயில்லை; யாராக இருக்கலாம்?

**இன்ஸ்பெக்டர் :**—பெயரிழவைக் கண்டதுயார்? மிகச் சாமர்த்திய முள்ளவனாகவே இருக்கவேண்டும். அவன் மாத்திரம் என் கையிற் பிடிபட்டால் இலேசாக விடமாட்டேன்.

**மாதவன் :**—அகப்பட்டால்தானே? இந்தக் காலத்தில் திருடர்களைப் பிடிக்கவே முடியாது. எல்லாரும் படித்தவர்களாகி விட்டார்கள்.

**இன்ஸ்பெக்டர் :**—என்னை மிக அலைத்து விட்டான்; அவன் என்னைப் பயித்தியக்காரனென்று கருதியிருப்பான். அவனுடைய வண்டியின் எண்ணை (நம்பர்) விசாரித்து வைத்திருக்கிறேன். எப்படியாகிலும் பிடிக்காமல் விடப் போவதில்லை.

இச்சமயத்தில் வெளிப்புறத்துக் கதவை யாரோ ஆத்திரமாகத் தட்டினார்கள். "ஐயோ! கதவைத் திறவுங்கள்; செத்தேன்" என்று கூவுங் குரல் கேட்டது. இன்ஸ்பெக்டர், மாதவனை நோக்கி, "யார் இந்நேரத்திற் கதவைத் தட்டுகிறது? திறந்து விடு" என்றார். மாதவன் அவ்வாறே சென்று கதவைத் திறந்தான். முப்பது வயது மதிக்கத்தகுந்த ஒருவன் ஓடி வந்தான். அவன் முகத்திற் பயங் குடிகொண்டிருந்தது. அவன் உள்ளே நுழைந்ததும், "இந்த ஊரில் போலீஸ் இல்லையா?" என்று கேட்டான்.

**இன்ஸ்பெக்டர் :**—ஏன் அப்படிக் கேட்கிறாய்? உன்னை யார் தொந்திரவு செய்தது?

**அம்மனிதன் :**—ஐயா! என்ன சொல்லுகிறது? ஒரு நகை வாங்குவதற்காக நூறுரூபாய்கள் கொண்டு,

அதோ! அந்த வழியாகப் பாளையங்கோட்டைக்குச் சென்றேன்; வழியில் ஒரு திருடன் யாவற்றையும் பறித்துக்கொண்டான். ஐயோ! என் வயிறு பற்றி எரியுதே!

**இன்ஸ்பெக்டர்** :—(திகில் பிடித்தவராய்) சரி சரி! இப்பொழுதே சென்று பிடிக்காமல் விடுவதில்லை; எந்தப் பக்கமாகச் சென்றான்?

**அம்மனிதன்** :—பாளையங் கோட்டையை நோக்கி.

**இன்ஸ்பெக்டர்** :—எவ்வளவு நேரமிருக்கும்?

**அம்மனிதன்** :—அரைமணி ஆயிற்று.

**இன்ஸ்பெக்டர்** :—எந்த இடத்தில் அவனைக் கண்டீர்.

**அம்மனிதன்** :—சுமார் ஒரு மைலுக்குள்ளவே.

**இன்ஸ்பெக்டர்** :—"சரி! அவனை நான் தொடர்ந்து போய் உயிரோடாயினும், அன்றிச் சவமாக வாயினும் பிடித்தே தீருவேன்" என்று சொல்லி விட்டுத் துப்பாக்கியை எடுத்துத் தோட்டாக்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டார்.

பிறகு மாதவனைப் பார்த்து, "நண்பரே! இதோ! உமக்குச் சேரவேண்டிய ரூபாய்" என்று கொடுத்து விட்டு, "அந்தப் பேர் பெற்ற திருடன், ஸ்ரீவைகுண்டத்திற் கருகில், இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியாரால் பிடிக்கப்பட்டான் என்பதை, நீர் நாளை கேள்வியுறுவீர்" என்று சொல்லிவிட்டுத் தன் மின்சார வண்டியில் இவர்ந்து, திருடனைப் பிடிக்க எல்லையற்ற ஆவலோடு விரைவாகச் சென்றார்.

இன்ஸ்பெக்டர் அவ்விடத்தை விட்டுச் சென்றதும், மாதவன், அம்மனிதனைப் பார்த்து, "நடராஜா! நல்ல வேடிக்கை செய்தாய்; பலே! உன் திறமை வேறு யாருக்கு வரும்?" என்றான். இருவரும் விழுந்து விழுந்து வயிறு வெடிக்கச் சிரித்தார்கள்.

திருடனைத் தேடிச் சென்ற இன்ஸ்பெக்டர் வழி முழுவதும் தேடினார். ஆசாமி அகப்படவே யில்லை. பிறகு அம்மனிதன் தன்னை ஏமாற்றிவிட்டான் என்று கருதித் திருநெல்வேலியை நோக்கிச் சென்றார். மறு நாள், நகரபரிபாலன சபைக்குச் (Municipal office) சென்று T. 1314 ஆவது எண்ணுள்ள வண்டி யாருடையது என்று சோதித்தார். அந்த எண்ணுள்ள வண்டி திருநெல்வேலியிலேயே கிடையாது. சுடு காட்டிற்குச் சென்று மனைவியைக் கொளுத்திவிட்டுத் திரும்பும் ஒருவனைப் போல் இன்ஸ்பெக்டர் மிகத் துக்கத்தோடு சொக்கலிங்கம் பிள்ளையிடம் நடந்தவற்றைக் கூறினார். சுமார் இரண்டாயிரம் ரூபாய்கள் பெறத்தக்க நகைகள் மாத்திரம் களவு போயிருந்தன. சொக்கலிங்கம் பிள்ளை, முதல் நாளிரவு நடந்தவைகளைத் துப்பறியும் இரங்கநாதனிடமும் சொல்லவேண்டுமென்று கருதி, அவரை அழைத்து வந்து, எல்லாவற்றையும் விபரமாகக் கூறினார்.

இரங்கநாதன்:—என்ன ஐயா! 'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய விரும்புவது' போல எல்லாம் முடிந்தபின் கூறுகிறீர்கள்; நேற்றே எனக்குத் தெரிவித்திருப்பீர்களாயின் இவ்வளவு துன்பம் ஏற்பட்டிராது. நான் மேற்கொண்டிருக்கும் வேலைக்கும் சிறந்த துணையாக இருக்கும். என் செய்வது! இன்னுங் காரியம் கெட்டுவிட

வில்லை. இன்ஸ்பெக்டர் எவ்வளவு தூரம் தூரத்திச் சென்றார்?

சோக்கலிங்கம் பிள்ளை:—ஸ்ரீவைகுண்டம் வரையில்.

இரங்கநாதன்:—அவரும், எனக்குத் தெரிவிக்கவில்லை. திருடனைப் பிடிப்பதால் வரும் கௌரவத்தை அவரே அடைய விரும்பினார் போலும்! அது தான் மண்ணாகப் போயிற்று. சரி! தங்கள் வீட்டில் இதற்கு முன் எப்போதாவது களவு நடந்ததா?

சோக்கலிங்கம் பிள்ளை:—சமீபத்தில் இல்லை; ஆனால் சுமார் பதினெட்டு வருடங்களுக்கு முன், தொட்டியிற் கிடந்த—என்னுடைய இரண்டு வயதுள்ள ஆண் குழந்தை அணியப் பெற்றிருந்த நகைகளோடு காணமற் போய்விட்டது.

இரங்கநாதன்:—அதைப் பற்றிய விபரம் ஒன்றுமே தெரியவில்லையோ?

சோக்கலிங்கம் பிள்ளை:—கிடையாது; பாவிகள் கொன்று விட்டார்களோ, என்னவோ யாரறிய முடியும்?

இரங்கநாதன்;—அக்குழந்தைக்கு ஏதேனும் அடையாளம் உண்டா?

சோக்கலிங்கம் பிள்ளை:—நன்றாக நினைவில்லை; கழுத்தில் ஒருவித மச்சம் மாத்திரம் இருந்தது.

இரங்கநாதன்:—சரி! நேற்றுத் திருடன் வருவதாக அறிந்து சொன்னது யார்?

சோக்கலிங்கம் பிள்ளை:—என்னுடைய வேலைக்காரனாகிய வரதன்.

இரங்கநாதன்:—தயை செய்து அவனை அழையுங்கள்; சில விபரங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

உடனே சொக்கலிங்கம் பிள்ளை, வேலைக்காரனை அழைக்கும் மணியை (Calling Bell) அடித்தார். வரதன் அங்கு வந்து நின்றான்.

இரங்கநாதன்:—டே! நேற்று, இங்கு வருவதாகப் பேசிக்கொண்டது யார் ?

வரதன்:—யாரோ ? ஆட்களைத் தெரியும் ; பெயர் தெரியாது.

இரங்கநாதன்:—ஆளைப் பார்த்தால், உறுதியாகச் சொல்ல முடியுமா ?

வரதன்:—ஆம்—உறுதியாகச் சொல்லுவேன்.

இரங்கநாதன்:—"அப்படியானால், இதோ பார்!" என்று தன் கையில் வைத்திருந்த ஒரு படத்தை எடுத்துக் காட்டினார்.

வரதன் :—ஆம், ஆம். இதே ஆள் தான்; சந்தேகமே கிடையாது.

இரங்கநாதன்:—"டே! பத்திரம். ஒருவரிடமும் வெளியிடாதே" என்றார்.

பிறகு சொக்கலிங்கம்பிள்ளையை நோக்கி, "நண்பரவர்களே! நடராஜ பிள்ளை எப்பொழுதும் தங்களுடன் நட்பாக நடந்து கொள்ளுவதா?" அன்றிப் பகையாக நடந்து கொள்ளுவதா ?" என்று கேட்டார்.

சொக்கலிங்கம் பிள்ளை:—என்னோடு அவன் ஒருக்காலும் நட்பாக நடந்து கொண்டதில்லை. காரணம் நான் அவனை விரும்பாமையே.

இரங்கநாதன்:—சரி ! பதினெட்டு வருடங்கட்கு முன் —அதாவது குழந்தைத் திருட்டு நடந்தபோதும் தங்களோடு பகையாகத்தான் இருந்தாரோ?

சொக்கலிங்கம் பிள்ளை—அதற்கு முன்னே யிருந்தே நான் அவனோடு பேசுவதில்லை. பேசிக் கொள் வதும் அவன் தந்தையாருடைய காலத்தோடு முடிந்து விட்டது. துஷ்டனைக் கண்டால் தூர விலக வேண்டு மென்பது என் கருத்து. ஏன்? அவன்தான் திருடியிருப்பானென்று கருதுகிறீர் களோ?

இரங்கநாதன்:—இல்லை; இல்லை. வேறொன்றிற்காகக் கேட்டேன். நடராஜ பிள்ளைக்கு மொத்தம் எவ் வளவு பணம் இருக்கலாம்!

சொக்கலிங்கம் பிள்ளை:—சிறிதுங் கிடையாது. அவ னுடைய தகப்பனார் இறக்கும்பொழுது முப்பதி னாயிரம் ரூபாய்கட்குச் சொத்துக்கள் இருந்தன. பிறகு நடராஜனின் குடியிலும், சூதிலும் எல் லாம் கரையேறி விட்டன. இப்பொழுது அவன் வசிக்கும் வீடு ஒன்றே எஞ்சி யிருக்கிறது.

இரங்கநாதன்:—அங்ஙனமாயின் இப்பொழுது செல விற் கென்ன செய்கிறார்?

சொக்கலிங்கம் பிள்ளை:—அஃதெனக்கும் தெரிய வில்லை. அவன் செலவிற்குத் தினம் இருநூறு ரூபாய்கள் வேண்டும். நாடோடி பயலுக்கு. எப்படியாவது வரும். அவனை இவ்வூரார் நச்சுப் பாம்பென்று கருதுகிறார்கள்.

இரங்கநாதன்:—அவருக்குக் கலியாணமாகி விட்டதா?

சொக்கலிங்கம் பிள்ளை:—"முன் ஒரு கலியாணமாகி இருந்தது. அப்பெண் மிக நல்லவள். சில நாட்களுக்குப் பின் இறந்துவிட்டாள். இப் பொழுது தனிக்காட்டு அரசனாகத்தான் இருக்

கிறான். அவனுக்குப் பெண் கொடுப்பார் யார் ?" என்றார்.

இரங்கநாதன் விடை பெற்றுக்கொண்டு "எந்த விதமும் குழந்தையைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சிக்கிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

---

## ஒன்பதாவது அதிகாரம்

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"—குறள்

வைர வியாபாரியின் தந்திரம்-நடராஜபிள்ளை ஏமாறுதல் இருவருக்கும் பட்டை நாமம்.

இரங்கநாதன், எதையோ மனதில் எண்ணிக் கொண்டு வீதியில் நடந்தார். சிவராம பிள்ளையின் வீட்டினருகே சென்றபோது, அவ்வீட்டிலிருந்து ஒரு சிறுவன் கடிதத்தைக் கொண்டு ஓடி வந்தான். இரங்கநாதன், அச்சிறுவனைக் கண்டதும், "தம்பி! இங்கே வா" என்றார்.

சிறுவன்:—நான் அவசரமாகப் போகிறேன்.

இரங்கநாதன்:—போகலாம்; யாருக்குக் கடிதம் கொண்டு செல்கிறாய் ?

சிறுவன்:—வீதியிற் போகிற உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

இரங்கநாதன்:—தம்பி ! அக் கடிதத்தைக் கொடு, பார்த்துவிட்டுத் திருப்பித் தருகிறேன்.

சிறுவன்:—உனக்கு வேலை யில்லையோ ?

இரங்கநாதன்:—இக்கடிதம் கொடுத்துவிட்டு வருவதற்கு எவ்வளவு கூலி ?

சிறுவன்:—நான்கணு.

இரங்கநாதன்:—இவ்வளவு தானு ? இதோ ! ஒரு ரூபாய். கடிதத்தைக் கொடு.

சிறுவன்:—(மகிழ்ச்சியுடன்) "அப்பொழுதே இதைக் கூறி யிருக்க லாகாதா ? இவ்வளவு வீண் விவகாரம் தேவை யில்லையே ?" என்று அக் கடிதத்தைக் கொடுத்தான்.

மேலுறையில், "ம-ா-ா-ஸ்ரீ, நடராஜ பிள்ளையவர்கட்கு" என்று எழுதப்பட் டிருந்தது. கடிதத்தைப் பிரித்தார். அதில், "நண்பரே! எல்லா நோட்டுகளையும் இரண்டு தினங்கட்குள் அனுப்பவேண்டும். காலம் வாய்த்தால் இன்னும் இரண்டு நாழிகைகட்குள் அங்கு வருவேன்; இன்றேல் நாளைக் காலையில் அவசியம் வருவேன்." (சிவ.) என்று எழுதப்பட்டிருந்தது. இரங்கநாதன், அக்கடிதத்தைப் புகைப்படம் பிடிக்கும் கருவியாற் படம் பிடித்துக்கொண்டு, கடிதத்தை மறுபடியும் உறையுட் போட்டு, அச் சிறுவனிடம் அளித்து, "தம்பீ, இத்தகவலை ஒருவரிடமும் வெளியிடாதே" என்று கூறிவிட்டுத் தன்னுடைய வீட்டிற்குச் சென்றார். அப்பொழு தணிந்த உடைகளை யெல்லாம் களைந்துவிட்டு, ஒரு வர்த்தகனைப் போல மாறு வேடம் புனைந்து கொண்டு, நடராஜ பிள்ளையின் வீட்டை நோக்கிச் சென்றார். நடராஜ பிள்ளையின் வீடு, ஹிந்து கலாசாலைக்கு (Hindu College) அருகில் இருக்கிறது. விசாலமான அவ்வீட்டைச் சுற்றிலும் பெரிய பூந்தோட்டம் இருந்தது. வீட்டிலுள்ள எல்லாப் பாகங்களிலும் மின்சார விசிறிகள் விர் விர் என்று

சுழன்றுகொண் டிருந்தன. முன் வாசலில் ஒரு காவற் காரன் நின்றான். இரங்கநாதன், அக் காவற்கார னிடம், "இலக்ஷ்மிபதி, வைர வியாபாரி" என்று விலாச மெழுதப்பட்ட சீட்டை (Visiting-Card) அளித்து, "நடராஜ பிள்ளை யவர்களைக் காண முடி யுமா?" என்று கேட்டார். அவன், வீட்டினுட் சென்று சில நிமிடங்களில் திரும்பி வந்து, "வரலாம்' என்றான். இரங்கநாதன் அவன் பின்னே சென்றார். அவ்வீட்டின் முன் கூடத்தில், நடராஜ பிள்ளை சுருட் டுப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் இரங்கநாதனைக் கண்டதும், எழுந்து உட்காரும்படி உபசரித்தார்.

இரங்கநாதன்:—இன்று, வெயில் சிறிது அதிகமே.

நடராஜ பிள்ளை:—ஆமாம். தாங்கள் தான் இலக்ஷ்மி பதி என்பவர்களோ?

இலக்ஷ்மிபதி:—ஆம். நான் தற்காலம் பெங்களூரி லேயே வசித்துக்கொண் டிருக்கிறேன்.

நடராஜ பிள்ளை:—தாங்கள் சிவராம பிள்ளையை அறி வீர்களா?

இலக்ஷ்மிபதி:—நன்றாக அறிவேன்; இப்பொழுது அவர்கள் வீட்டிலேயே தங்கி யிருக்கிறேன். இந்த ஊரில் அவரொருவர்தான் எனது நண்பர்.

நடராஜ பிள்ளை:—அவர்கள் தான் தங்களை அனுப்பி னார்களோ?

இலக்ஷ்மிபதி:—"ஆம். நான் இங்குவந்து இரண்டு நாட்களே ஆயின. இந்த ஊரில் யார் வைரம் வாங்கக் கூடியவர்கள் என்று விசாரித்தேன்; சிவராம பிள்ளை யவர்கள், தங்களையே முதலிற்

கூறியதுடன் ஒரு கடிதமுங் கொடுத்தார்கள்'' என்று கடிதத்தை அவரிடம் அளித்தார்.

நடராஜ பிள்ளை, அதைப் பிரித்தார். அதில், "நண்பரவர்களே! இக்கடிதம் சேர்க்கும் எனது நண்பர் இலக்ஷ்மிபதி மிக நம்பிக்கையானவர். வேண்டியவைகட்குத் தாராளமாக ஆர்டர் கொடுக்கலாம். நான் அவரை நெடுநாட்களாக அறிவேன். சிவராம பிள்ளை'' என்று எழுதப்பட்டிருந்தது. நடராஜ பிள்ளை, மகிழ்ச்சியுடன் "அப்படியானால், எடுங்கள்; பார்ப்போம்'' என்றார். இரங்கநாதன், தன் பையில் வைத்திருந்த ஒரு பொட்டலத்தைக் கொடுத்தார். நடராஜ பிள்ளை அதைப் பிரித்ததும், அதில் இருந்த கற்கள் கண்களைப் பறித்தன. சில நிமிடம் பார்த்து விட்டு அதைப் பெட்டியில் வைப்பதற்குச் சென்றார்.

இலக்ஷ்மிபதி:—ஐயா! அவை மாதிரிக்காகக் கொண்டு வரப்பட்டன. தங்கட்குத் தேவையானால், எவ்வளவு வேண்டுமென்பதைக் கூறுங்கள்; இன்றே கடிதம் எழுதுகிறேன். ஏழாவது நாள் பெற்றுக் கொள்ளலாம்.

நடராஜ பிள்ளை:—அப்படியா! நான் தவறிவிட்டேன்.

இலக்ஷ்மிபதி:—அதுதான் எங்கள் வழக்கம். எல்லாவற்றையும் எப்படிக் கொண்டுவர முடியும்? திருடர்கட்கும் பயப்படவே வேண்டியதிருக்கிறது.

நடராஜ பிள்ளை:—"ஆம்—அஃது உண்மையே'' என்று அப்பொட்டலத்தை இரங்கநாதனிடம் அளித்து விட்டார்.

இலக்ஷ்மிபதி:—நண்பர் சிவராம பிள்ளையவர்கட்கு, எங்கள் கம்பெனியிலிருந்தே ஏராளமான கற்

கள் கொடுத்திருக்கிறேன். இப்பொழுதுகூட இரண்டு காரட்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள்.

நடராஜபிள்ளை :—நான் முன்னொரு முறை சிவராம பிள்ளையவர்களிடம் கற்கள் வேண்டுமென்று கூறியிருந்தேன்; அதை மறவாமல் இப்பொழுது தங்களை அனுப்பினார்கள் போலும்! எனக்கு மூன்று காரட்கள் தேவை?

இலக்ஷிமிபதி உடனே ஆர்டர் புத்தகத்தை யெடுத்து, அதில் விபரத்தை வரைந்து நடராஜபிள்ளையிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்.

நடராஜ பிள்ளை :—தாங்கள் இப்பொழுது நேராக எங்குப் போகிறீர்கள்?

இலக்ஷிமிபதி :—சிவராம பிள்ளை யவர்களின் வீட்டிற்கே.

நடராஜ பிள்ளை :—"ஒரு கடிதம் தருகிறேன்; அதை அவர்கள் பாற் சேர்த்து விடுங்கள்" என்று மேஜையருகிற் சென்று,

நண்பரே!

தங்கள் கடிதம் கிடைத்தது. இப்பொழுது வசந்த மாளிகையிலிருந்து வந்த ஆள், மூவாயிரம் ரூபாய்கட்கு நோட்டுகள் தயாராகி விட்டன என்று கூறினான். விரைவில் சென்னைக்கு அனுப்பவேண்டும். தக்கள் வரவை எதிர் பார்க்கிறேன்"

அன்புள்ள, நடராஜன்.

என்று எழுதி, ஒரு உறையிலிட்டு, இலக்ஷிமிபதியிடம் அளித்தார். பிறகு, இலக்ஷிமிபதி பேச்சை மறு வழியில் இழுக்கத் தொடங்கி, "இந்த ஊரில் கொலையும், களவும் அதிகமாகி விட்டன" என்றார்.

நடராஜ பிள்ளை :—அதை யேன் கேட்கிறீர்கள் ; சமீ பத்திற் சிவராம பிள்ளையவர்கள் வீட்டிலும் ஒரு கொலை நடந்துவிட்டது.

இலக்ஷிமிபதி :—அதை நானுங் கேள்வியுற்றேன் ; அதை யார் செய்திருப்பார்கள் ? தங்கள் அபிப் பிராய மென்ன ?

நடராஜ பிள்ளை :—பட்டப்பகலிற் குட்டிச்சுவரில் முட் டிக் கொள்ள வெள்ளெழுத்தா என்ன ? அந்தப் பயல் மணிவாசகனுடைய துப்பாக்கி அங்கே கிடந்ததாம் ; அவன்தான் கொலை செய்திருக் கிறான். அன்றியும் இரண்டு நாட்களாகக் காணப் படவில்லை ; எங்கேயோ ஒளிந்துகொண் டிருக் கிறான். குணங்களிற் சிறந்தவராகிய பன்னீர்ச் செல்வம் பிள்ளைக்கு இப்படிப்பட்ட பிள்ளை தோன்றியது வியப்பே.

இலக்ஷிமிபதி.—எப்படித் தீர்மானமாகச் சொல்ல முடியும்? எந்தப் புற்றில் எந்தப்பாம் பிருக் குமோ ? வெளிவந்தால் தெரிகிறது.

நடராஜ பிள்ளை :—யாரோ துப்பறிபவனும் : சென் னையிலிருந்து வந்திருக்கிறான் ; அவன் பெயர் இரங்கநாதன். அவன் கண்டுபிடிப்பதாக முயற்சி செய்கிறான். போலீஸ் நாய்கள், இல்லாததை உள்ளதென்று கூடக் கட்டிவிடுவார்கள், நம்ப முடியவில்லை.

இலக்ஷிமிபதி :—ஓகோ ! இரங்கநாதனா ? அவன் மிகுந்த கெட்டிக்காரன் ; குற்றவாளிகளைக் கண்டு பிடிக்காத வரையில் தூங்கவே மாட்டான் ; எனக்கு அவனைப்பற்றி நன்றாகத் தெரியும்.

நடராஜ பிள்ளை :—நண்பரே! அவன், பூமியைத் தலை கீழாகப் புறட்டுகிறவனாக இருந்தாலும், இதைக் கண்டுபிடிக்க முடியாது. மிகச்சிக்கலான சங்கதி. வெளிவருமென்று நான் நம்பவேயில்லை; இதில் அவன் திறமை பயன்பெற மாட்டாது.

இலக்ஷ்மிபதி :—அப்படிச் சொல்லாதீர்கள்; இரண்டு வருடங்கட்குமுன் சென்னையில் ஜோதி விலாசத்தில்நடந்த கொலையைப்பற்றிய விபரம் வெளிவருமென்று யாரேனுங் கருதினார்களா? இரங்கநாதனே அதைக் கண்டுபிடித்தான். எளிதாக விட்டுவிடக் கூடியவனன்று; போகப் போகத் தெரியும்.

நடராஜ பிள்ளை:—வெளிவருமென்று நம்ப இடமில்லை; ஏனெனின், கொலை நடந்த இரவு, யாவரும் கதவை யுடைத்து உள்ளே சென்றபோது, கொலையாளி காணப்படவில்லை. எவ்வளவோ முன் யோஜனையாகக் காரியஞ் செய்திருக்கிறான்.

இலக்ஷ்மிபதி:—நானும் அவ்வறையைப் பார்வையிட்டேன்; அவ்வறையில் இருப்பது ஒரே சாளரந்தான்; அதன் வழியாகத் தப்பித்துச் செல்ல முடியாது. அறையோ பூட்டப்பெற்றிருந்தது அப்படியிருக்கக்கொலையாளி தப்பித்துச்சென்று. விட்டானென்றால்—

நடராஜ பிள்ளை :—வியப்பாகவே யிருக்கிறது. அவன் மந்திரங் கற்றவனாக இருக்கவேண்டும். அங்ஙனமாயினும் கதவு பூட்டப்பட்டிருக்கும்போது எப்படிச் சென்றான்?

இலக்ஷ்மிபதி :—அதிலேதான் கொலையின் முழு இரகசியமும் அடங்கியுளது. அச்சங்கதி வெளிவரு

மானால், குற்றவாளி கண்டு பிடிக்கப்படுவான். பாவம்! இச்செயல்களால், சிவராம பிள்ளையின் மனம் உடைந்து விட்டது. ஒருகால்—அவரே—செய்திருப்பாரோ?—

நடராஜ பிள்ளை:—உமக்கென்ன பயித்தியமா? வேலைக்காரனைக் கொல்லவேண்டிய அவசிய மென்ன? அவர், அவனிடத்திற் பிரியமாகவே நடந்து கொண்டிருப்பதை நான் நன்கு அறிவேன். ஒருகாலும் அப்படியிராது.

இலக்ஷிமிபதி:—"சரி! சரி! நமக்கென்ன? வீண் விவகாரம் ஏன் பேசவேண்டும்? நான் போய் வருகிறேன்; என்னுடைய நட்பைத் தாங்கள் மறந்துவிடக் கூடாது" என்று எழுந்தார்.

அதே சமயத்தில் ஒரு வேலைக்காரன் வந்து, "சிவராமபிள்ளை வந்திருக்கிறார்கள்; வரும்படி செய்யவா?" என்று நடராஜ பிள்ளையைக் கேட்டான். அவர், 'அப்படியே செய்' என்பதைத் தலையை அசைத்துக் குறிப்பாற் காட்டினார். இதைக் கண்ட இலக்ஷிமிபதியின் பாடு வெலவெலத்துப் போய்விட்டது. உடல் முழுவதும் வியர்வை ஊற்றெடுத்து வழிந்தது. அவருடைய இப்போதைய நிலை நம்மால் அளவிட்டுக் கூறுந் தகைத் தன்று. இன்னும் இரண்டு மூன்று நிமிடங் கழிந்தால் சிவராம பிள்ளை வந்துவிடுவார். இலக்ஷிமிபதியின்மனம் அலைகடற் றுரும்புபோல் தத்தளித்தது; ஒரு விநாடியில் பல ஆயிரம் எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அந்த நிலையில் எழுந்து சென்றால், நடராஜ பிள்ளை ஐயமுறக் கூடும். இலக்ஷிமிபதி, இஞ்சிதின்ற குரங்குபோல விழித்தார். அவர்

முகம் பார்ப்பதற்கு விகாரமா யிருந்தது. முகம் துடைப்பவரைப்போலக் கைக்குட்டையால் முகத்தை மறைத்துக் கொண்டார். சிவராம பிள்ளை வந்துவிட்டால் எல்லாம் வெளிச்சமாய்ப்போகும். இதுவரையில் அரும்பாடுபட்டுத் தேடிய யாவும் ஒரு விநாடியில் அழிந்துவிடும். உரலிலே தலையை மாட்டிக்கொண்டு உலக்கைக்குப் பயந்தால் முடியுமா? ஒரு நிமிடங் கழிதல் ஒரு யுகமாக இருந்தது. சிவராமபிள்ளை வருவதற்குள் ஏதாவது தந்திரத்தால் வெளியிற் சென்று விட வேண்டுமென்று எண்ணினார். அவர் வெளியிற் போகும்வரையில், நடராஜபிள்ளை சிறிதும் ஐயமுறக் கூடாது. மனதில் தோன்றிய வருத்தத்தையும், முகமாறுதல்களையும் பாடுபட்டு மறைத்துக் கொண்டார். இறுதியில், இங்கு வந்ததே தவறு என்று கருதினார். பிறகு நடராஜபிள்ளையைப் பார்த்து, "நண்பரே! சிவராமபிள்ளை நாளைக் காலையிலேயே இங்கு வருவதாகச் சொன்னார்கள்; ஒருகால் இப்பொழுதே வந்து விட்டார்கள் போலும்!" என்று கூறிச் சாளரத்தின் வழியாக வெளியே நோக்கினார். சிவராமபிள்ளை மின் சாரவண்டி ஓட்டுபவனோடு என்னமோபேசிக்கொண்டு நிற்கிறார்; வேலைக்காரன் போய் நடராஜ பிள்ளையின் உத்தரவைக் கூறுகிறான். இதைக்கண்ணுற்ற இலக்ஷிமிபதி, இனி அங்கு இருத்தல் தவறு என்று கருதியவராய், நடராஜ பிள்ளையைப் பார்த்து, "ஏதோ சில சாமான்கள் சென்னைக் கனுப்பவேண்டு மென்று கூறினார்கள்; அதுபற்றியே வந்திருக்கலாம்" என்றார். நடராஜபிள்ளை, "ஆமாம்; அது முக்கியமாய் விரைவில் நடைபெற வேண்டியதே" என்றார். சிவராம பிள்ளை இன்னும் ஒரு நிமிடத்திற்குள் அவர்கள்

இருக்கு மிடத்திற்கு வந்துவிடக்கூடும். இலக்ஷ்மிபதியை, அச்சமும் துயரமும் ஒன்றுகூடி வதைத்தன, பிறகு சமாளித்துக் கொண்டவராய் "என்னுடைய வண்டியோட்டுகிறவன், எண்ணெய் (Petrol) வாங்க வேண்டுமென்று கூறினான்; பிள்ளையவர்கள் வந்தால், சிறிதுநேரம் உரையாட அவசியம் நேரும்; ஆகையால் வண்டிக்காரனை அனுப்பிவிட்டு வருகிறேன்" என்றார். நடராஜ பிள்ளைக்குச் சிவராம பிள்ளை வந்துவிட்டாரென்ற சங்கதியைக் கேட்டவுடன், பல சங்கதிகள் பேசவேண்டியதிருப்பதால், இலக்ஷ்மிபதி இருப்பது அவருக்கு இடையூறாகவே தோன்றியது. ஆகையால், இதைக் கேட்டவுடன் சிறிது நேரமாவது இவன் தொலைந்துவிடுதல் நல்லதென்று கருதியவராய், "சரி! அப்படியே செய்யுங்கள்: அவசர மொன்று மில்லை; சாவகாசமாய் வரலாம்" என்றார்.

இலக்ஷ்மிபதி, அவர் கண்ணிற்கு மறையும் வரை மெதுவாக நடந்து, பிறகு புலிபோற் பாய்ந்து, தடதடவென்று முன் வாசலுக்கு வந்தார். மூச்சு ஒரு பக்கம் திணரிக்கொண் டிருந்தது. அரும்பாடுபட்டு அடக்கிக்கொண்டார். எதிரே சிவராமபிள்ளை வந்து கொண்டிருந்தார்.

இலக்ஷ்மிபதி, அவரைக் கண்டதும், "ஐயா! நடராஜபிள்ளையவர்கள், அவர்களின் சொந்தக் காரியமாய் ஏதோ அவசரமாக இருக்கிறார்கள்; ஆகையால் தயைசெய்து, தங்களை நாளைக் காலையில் வரும்படி கூறினார்கள்" என்றார். சிவராம பிள்ளை எதிர்பாராத இம்மொழியைக் கேட்டதும் திகைத்தார்; எனினும், அவர் (இலக்ஷ்மிபதி) நடராஜ பிள்ளையிடமிருந்தே

வந்தாராகையால், அவருடைய நண்பராக இருக்கலா மென்று கருதினார். இலக்ஷ்மிபதியின் படபடப்பை யும், முகத் தோற்றத்தையுங் கண்டு ஐயமுற்றார். அக் குறிப்பை அறிந்துகொண்ட இலக்ஷ்மிபதி, "நான் பிள்ளையவர்களிட மிருந்தே வருகிறேன்; வேலைக் காரன், தாங்கள் வந்திருப்பதைக் கூறினான்; முதலில் வரும்படியே உத்தரவிட்டார். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவராய் என்னைச் சென்று இத் தகவலைத் தெரிவிக்கும் வண்ணம் அனுப்பினார்கள்; சென்னைக்கு அனுப்பவேண்டிய நோட்டுச் சம்பந்த மாகப் பேசவேண்டுமாம்; சாவகாசமாய் நாளைக்கே தீர்மானஞ் செய்யவேண்டு மென்றுங் கூறினார்" என்று அவருக்குத் தன்மீது நம்பிக்கையுண்டாகும் படி மேற்பூச்சுப் பூசினார். சிவராமபிள்ளை அதை உண்மையென்று கருதிச் சில நிமிடம் நின்றார். பிறகு, 'நடராஜ பிள்ளையிடந்தான் பேச இயலவில்லை; இவ ரிடங் கேட்டாயினும் தெரிந்து கொள்ளுவோம்' என்று எண்ணி, "தாங்கள் நடராஜ பிள்ளையின் நண் பரோ?" என்று கேட்டார்.

இலக்ஷ்மிபதி:—ஆம்—அவர் எனது நண்பரே. நெடு நாட்களாக அவரை அறிவேன். எனக்கு அவ ரைக் காட்டிலும் சிறந்த நண்பர் வேறொருவ ரில்லை. அவர், தன்னுடைய இரகசியங்களைக்கூட என்னிடங் கூறுவதுண்டு. இப்படி நண்பர்கள் கிடைப்பதரிது; இந்த வகையில், நான் பாக்கி யம் பெற்றவனே.

சிவராம பிள்ளை:—அப்படியா! தமக்கு ஒரு நண்பர் இருப்பதாக அவர் என்னிடங் கூறவில்லையே?


ஒருகால் மறந்திருக்கலாம். நேற்றுச் சொக்கலிங்கம் பிள்ளை வீட்டிற்கு போகும்படி சொல்லியிருந்தேன்; எவ்வளவு ரூபாய்கள் கிடைத்ததோ தெரியவில்லை; அதைப்பற்றி ஏதேனும் சொன்னார்களா ?

இலக்ஷ்மிபதி :—ஏதோ மிகக் கஷ்டமாகிவிட்டதென்றும், இரண்டாயிரம் ரூபாய்கள் மாத்திரமே கிடைத்ததென்றுங் கூறினார்கள்.

சிவராம பிள்ளை :—"அப்படியே நான் கருதினேன்; சரி! நேரமாகிறது; நான் போகவேண்டும்" என்று தம்முடைய வண்டியில் ஏறிக்கொண்டு சென்றார்.

இலக்ஷ்மிபதி, தம்முடையகாரியம் ஒருவகையாக முடிவுற்றதற்கு மகிழ்ந்துகொண்டு சென்றார். நடராஜ பிள்ளை, எழுந்து சாளரத்தின் வழியாக நோக்கினார். சிவராம பிள்ளையும், இலக்ஷ்மிபதியும் பேசிக்கொண்டு நின்றதையும், பிறகு இருவரும் தத்தம் வண்டிகளில் இவர்ந்து சென்றுவிட்டதையும் கண்டார். ஒன்றும் விளங்கவில்லை. 'சிவராம பிள்ளைக்கு ஏதேனும் அவசரமான காரியம் இருக்கலாம்; இன்றேல் இவ்வளவு தூரம் வந்தவர், தகவலுஞ் சொல்லாமல் திருப்பிப் போவாரா? சரி! வரும்பொழுது கேட்போம், என்று எண்ணிக்கொண்டார். மறுநாட் காலை ஏழுமணிக்குச் சிவராம பிள்ளை அங்கு சென்றார். வீட்டின் முகப்பிலுள்ள திண்ணையின்மீது அமர்ந்துகொண்டு கீழ்க்கண்டவாறு பேசினார்கள் :—

நடராஜ பிள்ளை :—நோட்டுக்களை யெல்லாம் சென்னைக்கனுப்பவேண்டு மென்றுதான் நேற்றே வருவீர்க



" திருக்குற்றாலம் அருவி "

(பக்கம் 134)

ளென்று எதிர்பார்த்தேன் ; தாங்கள், என் வீடு வரை வந்தவர்கள் பிறகு திரும்பிப் போய்விட்டீர்கள் ; இல்லையாகில் நேற்றே அனுப்பித் தீர்ந்திருக்கும்.

**சிவராம பிள்ளை** :—என் மீது சிறிதுங் குற்றமில்லை, நான் என்ன செய்வேன் ? நான் நேற்று இங்கே வந்த போது, முதலில் வரலாமென்று சொல்லி யனுப்பினீர்கள் ; பிறகு தாங்கள் நண்பர் வாயிலாக இன்று காலையிலேயே வரும்படி சொல்லி யனுப்பிவிட்டீர்கள். தங்கள் மீதே குற்றம் இருக்கிறது.

**நடராஜ பிள்ளை** :—யார் ? நானு அங்ஙனஞ் சொல்லி யனுப்பினேன் ? எவன் அப்படிச் சொன்னவன் ?

**சிவராம பிள்ளை** :—" நண்பரே ! முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறீர் ; நேற்று மாலையில் தங்களிடத்திற் பேசிக்கொண்டிருந்த தங்கள் நண்பரே அங்ஙனங் கூறினார்."

என்றதும் அவர் முகம் மாறுதலுற்றதைக் கண்ட சிவராம பிள்ளை வியப்புற்றவராய் " தாங்கள் ஏதோ சொந்த வேலையின் பொருட்டு அவசரமாக இருப்பதாயும், இன்றைக்கே என்னை வரும்படி கூறியதாயும் தெரிவித்தார்" என்றார்.

**நடராஜ பிள்ளை** :—அந்த வைர வியாபாரியா அப்படிக் கூறினார் ?

**சிவராம பிள்ளை** :—யார்—யார்? வைர வியாபாரியா ?

**நடராஜ பிள்ளை** :—ஆமாம். தங்கள் நண்பர் ; வைர வியாபாரஞ் செய்யும் இலக்ஷிமிபதி என்பவர்.

**சிவராம பிள்ளை** :—நண்பரே! வைர வியாபாரியை எனக்குத் தெரியவே தெரியாது; அவர் என்னுடைய நண்பருமன்று; அவரை நான் நேற்றே முதன் முதற் பார்த்தேன்; அவர், தங்களுடைய நண்பரென்றல்லவா கூறினார்!

**நடராஜ பிள்ளை** :—மோசம்! பெருத்த மோசம்!! நான் அவரைத் தங்களுடைய நண்பரென்று கருதினேன். அந்தோ! அவர் கூறிய யாவற்றையுங் கேட்டால் உமக்குக் குடல் நடுக்கம் உண்டாகிவிடும். நம்முடைய காரியம் ஒவ்வொன்றும் அவருக்குத் தெரிந்திருக்கிறது.

இதைக் கேட்ட சிவராம பிள்ளை, திகைப்பும் அச்சமும் அடைந்து ஒன்றும் பேச முடியாமல் கல்லாய்ச் சமைந்திருந்தார். நடராஜ பிள்ளை, புருடனைப் பறிகொடுத்த ஒரு பெண்ணைப் போலக் கலங்கி, "நண்பரே! என்னுடைய உயிரை வாங்கிக்கொண்டு போவதுபோல, ஒரு கடிதத்தையும் பெற்றுக்கொண்டு போய் விட்டார். அந்தக் கடிதத்தைக் கொண்டே நம்மிருவரையும் சிறை வீட்டிற்கு அனுப்பிவிடக் கூடும்" என்றார்.

**சிவராம பிள்ளை** :—அஃதென்ன கடிதம்?

**நடராஜ பிள்ளை** :—ஐயோ, என்ன சொல்வது! அக்கடிதத்தில், வசந்த மாளிகையிலிருந்து வந்த ஆள் கூறிய சங்கதியும், சென்னைக்கனுப்ப வேண்டிய அவசரத்தையுங் குறிப்பிட்டிருந்தேன்.

**சிவராம பிள்ளை** :—சரியன்! அவரிடம் ஏன் கடிதத்தைக் கொடுத்தனுப்பினீர்? வேறு கூலியாள் வாயிலாக அனுப்பலாமே?

**நடராஜ பிள்ளை:**—வீணை ஏன் நான்கணுக் கொடுக்க வேண்டுமென்று கருதினேன். அன்றியும் அவர் தங்கள் வீட்டிற்கே செல்லுகிறேன் எனக் கூறிய படியால் அங்ஙனஞ் செய்ய நேர்ந்தது.

சிவராம பிள்ளை மனமுடைந்தவராய், "நண்பரே! அற்பச் செலவைச்செட்டுப் பண்ணினீர்; அது நமக்கு ஆபத்தாக முடிந்தது. தயை செய்து எல்லாவற்றையுங் கூறும்" என்றார். நடராஜ பிள்ளை, வைர வியாபாரி வந்தது முதல் யாவற்றையும் ஒன்று விடாமற் கூறினார்.

**சிவராம பிள்ளை:**—அவர் மனோவசிய சாஸ்திரங் கற்றவராக இருக்கவேண்டும். சொக்கலிங்கம் பிள்ளை வீட்டில் நடந்ததையுங் கூறினார்; அதைப் பற்றி அவரிடம் என்ன சொன்னீர்கள்?

**நடராஜ பிள்ளை:**—ஒன்றுமே சொல்ல வில்லை.

**சிவராம பிள்ளை:**—சொக்கலிங்கம் பிள்ளை வீட்டில் இரண்டாயிரம் ரூபாய்கள் நீர் பெற்றுக்கொண்டு வந்ததாகக் கூறினாரே! ஓ! எல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கின்றன.

**நடராஜ பிள்ளை:**—அவர், தங்களுடைய வீட்டிலேயே தங்கி யிருப்பதாயும், தங்களை நெடு நாட்களாக அறிவே னென்றும், தாங்களே அவரை இங் கனுப்பினீர்க ளென்றுங் கூறினார். அன்றியும், தாங்கள் அவருக்குக் கொடுத்த ஒரு கடிதமும் காட்டினார்.

இதைக் கேட்ட சிவராம பிள்ளை, முன்னினும் அதிக வியப்புற்றவராய் அக் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். அஃது அவர் கையால் எழுதப்பட்ட

தன்று. சிறிது நேரம் யோஜித்தார். பிறகு "நண்பரே! தாங்கள் இப்படியே பல சங்கதிகளில் ஏமாந்து போயிருக்கிறீர்கள்; இதோ பாரும்! இஃதென்னுடைய கையெழுத்தா?" என்று கடிதத்தை அவரிடம் அளித்தார். நடராஜபிள்ளை, அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "அவசரத்தில் கவனிக்கவில்லை; அவர் கொண்டு வந்த வைரங்களாலும், பேச்சாலும் மயங்கி விட்டேன்" என்று கூறித் தலையிற் கையை வைத்துக் கொண்டு பொருமினார்.

**சிவராம பிள்ளை** :—நண்பரே, அநியாயமாகக் காரியத்தைக் கெடுத்து விட்டீர்; கடிதத்தைப் பார்த்த போதே சிறிது கவனித்திருந்தால், இவ்வளவு துன்பம் ஏற்பட்டிராது. நம்முடைய இருவர் கழுத்திற்கும் சரியான கயிற்றை, அவர் வைத்துக் கொண்டிருக்கிறார்.

**நடராஜ பிள்ளை** :—என் செய்வது! மோசக்காரப் பயல்! தடிப் பயல்! உம்முடைய நண்பரென்று கூறி என்னை ஏமாற்றிவிட்டான்; இனி மேல் நடைபெற வேண்டியதை யோசிக்க வேண்டும்.

**சிவராம பிள்ளை** :—அவர் யாராக இருக்கலாம்?

**நடராஜ பிள்ளை** :—என் அறிவிற்குச் சிறிதும் புலப்படவே இல்லை; ஒரு போலீஸ்காரனாகவே இருக்க வேண்டும்.

**சிவராம பிள்ளை** :—இல்லை—அவன், துப்பறியும் இரங்கநாதனென்றே கருதுகிறேன்.

**நடராஜ பிள்ளை** :—அப்படியானால், அவனைத் தங்கட்கு நன்றாகத் தெரியுமே? நீங்கள் ஏன்

அறிந்து கொள்ளவில்லை? நான் இரங்கநாதனென்று கருதவில்லை.

சிவராம பிள்ளை:—"எள்ளளவும் ஐயமில்லை, அவன் இரங்கநாதனே. வேறொருவன் இவ்வளவு துணிவாக வரமாட்டான். அவன் மாறு வேடம் புனைந்து வந்திருப்பான். அதனாலேதான், நான் அறிந்துகொள்ள இயலவில்லை. இனி நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும். எந்த வகையிலாவது அவனைப் பிடிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். சென்னைக்கனுப்ப வேண்டியதைப் பிறகு பார்த்துக் கொள்ளுவோம். நான் இப்பொழுது அந்தப் புகையிலைத் தேடிச் செல்லுகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

---

## பத்தாவது அதிகாரம்.

---

"துன்பம் உறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"—குறள்.

### திருக்குற்றால மலைத் தொடர்ச்சி—பின் தொடர்தல்—துப்பறிதல்—சிங்கமும் பிடிபட்டது

மாலை நான்கு மணி யிருக்கலாம். மணிவாசகனும், இரங்கநாதனும், வேல்ஸ் இளவரசர் உணவுச் சாலையின் மேன்மாடியில் உரையாடிக்கொண்டிருந்தார்கள். இரங்கநாதன், மணிவாசகனை நோக்கி, "சரி! குறித்த வமயம் நெருங்கிவிட்டது; புறப்படு" என்றார். இருவரும் புகைவண்டிச் சாலையை (Railway Station) நோக்கிச் சென்றார்கள். வண்டி புறப்

படத் தயாராக இருந்தது. இவர்கட்கு முன்னால் ஒரு மனிதன், தென் காசிக்குச் சீட்டுப் பெற்றுக் கொண்டு வண்டியில் ஏறினான். அதை அவனறியாத படி கவனித்துக் கொண்டிருந்த இருவரும், அவ் வூருக்கே சீட்டுக்கள் பெற்று வண்டியில் இவர்ந்தார் கள். வண்டி, புறப்பட்ட மூன்று மணி நேரத்தில் தென் காசிக்குச் சென்றது. யாவரும் கீழே இறங்கி னார்கள். முன்னாலே சென்ற மனிதன், தன்னை இருவர் தொடர்ந்து வருகிறார்கள் என்பதை யறியாமல், ஒரு மின்சார வண்டியில் ஏறித் திருக்குற்றாலத்தை நோக்கிச் சென்றான். நமது நண்பர்களிருவரும் அவனைப் பின் பற்றிச் சென்றார்கள். திருக்குற்றாலத்தின் மாண்பை நாம் எல்லையிட்டுக் கூற வியலாது. அப்போது தான் வேனிற் காலத்தின் (Summer) தொடக்கம். ஆங்கு, உயர்ந்த பெரிய மரங்கள் விண்ணை யளாவி, வானுலகை எட்டிப் பார்ப்பது போல் வளர்ந்து செறிந்திருப்ப தும், யாண்டு நோக்கினும் பசுமைத் தோற்றமும் இயற்கை அழகும் காண்போர் நெஞ்சை இன்புறுத்துந் தகையன.

"...........ஏலங்கமழ் சோலை யினவண்டி யாழ்செய்
குருந்த மணநாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற்
குரும்பலாவே"

"வம்பார் குன்றந் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செல் குற்றாலம்
அம்பால் நெய்யோ டாடல் அமர்ந்தான் அலர்கொன்
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்" [றை

"பக்கம் வாழைப் பைங்கனி யோடு பலவின்தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்குங் குற்றாலம்"

"மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்"

"போதும் பொன்னும் உந்தி யருவி புடைசூழ
கூதல் மாரி நுண்துளி தூங்குங் குற்றாலம்"

என்று இதன் இனிமைப் பண்பை ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்திகள் பாராட்டி யிருப்பதை இது காலை யும் நாம் நுகர்தல் கூடும். இன்றுங் கூடக் குன்ற வரிசையும், மன்றல் கமழும் சோலைகளும் நிறைந்து அருவியும், சாரலும் பெருமையின் விளங்குவதால், உலகத்தவர் வேனிலே இங்கே விளையாட்டாய்க் கழிப் பர். இத்தகைய திருக்குற்றாலத்தின் மேற்குத் திக்கை நோக்கி அம்மனிதன் சென்றுகொண் டிருக்கிறான். இரங்கநாதனும், மணிவாசகனும் அவனைத் தொடர்ந்து செல்லுகிறார்கள். போகப் போகப் பெருங் காடு தோன்றியது. அக் காட்டில் பெரிய மரங்கள் ஒன் றிரண்டே யிருந்தன. மற்றவை புதர்களே. அப் புதர்களில் நரி முதலியன கத்திக் கொண்டும் ஓடிக் கொண்டு மிருந்தன. அம்மலையின் வடதிசையிலுள்ள ஓரிடத்திற்குச் சேங்குன்று என்பது பெயர். அதனு டைய அடிப்பாகங்களில் மரங்கள் அடர்ந்திருந்தன. அதன் பக்கங்களில் பகலிற்கூட யாருஞ் செல்ல அஞ்சு வார்கள். இருளும் வரவர மிகுதியாயிற்று. நிலவை யுங் காணவில்லை. விண் மீன்கள் மாத்திரம் ஒளியிட் டன. இருளாகிய பேய் உலகத்தை விழுங்கிவிட்டது போலிருந்தது. இங்குச் சென்று கொண்டிருந்த இரு வரும் மேற் சேறற்குப் பயந்தார்கள்; நாற்புறமும் பார்த்தார்கள்; கண்கள் மிரண்டன. எவனைத் தொடர்ந்து வந்தார்களோ அம்மனிதன் இப்பொழுது

காணப்படவில்லை. அவர்கள், வந்தவழி எது என்று கூட அறிதல் கஷ்டமாயிற்று. எங்காவது ஓரிடத்தில் தங்கவேண்டுமென்ற நினைவினால் மேலும் நடந்தார்கள். கல்லும், முள்ளும் குத்துவதாற் கால்கள் தடுமாறின. வழி முழுவதும் பருக்கைக் கற்களே நிறைந்திருந்தன. அவர்கள் இருவரும் ஒரு மரத்தின் அடியில் தங்கினார்கள். ஒருவரோ டொருவர் பேசவில்லை. அஃதொரு பெரிய மரம். அதைச் சுற்றிலும் புதர்களே நிறைந்திருந்தன. இருவரும் வேறிடத்திற்குச் செல்ல இயலாதென்று அங்கேயே இருந்தார்கள். அப்பொழுது யாரோ வருவதுபோல ஒரு சப்தங் கேட்டது. உற்றுக் கேட்டார்கள். கை கால்கள் நடுங்கின. ஏன் வந்தோம் என்ற யோசனை குறுகிட்டது. அப்போது மணி பத்திற்குமே லிருக்கலாம். நிலவும் சிறிது தோன்றி யொளி வீசிற்று. இருவரும் அம்மரத்தி னடியிற் பதுங்கிக்கொண் டிருந்தார்கள். அப்போது யாரோ பேசுங் குரல்கேட்டது. ஆயினும், அப்போது நரி முதலியன கத்திக் கொண்டிருப்பதால் மனிதன் குரல்தா னென்று நிச்சயிக்க முடியவில்லை. அக்குரல் கேட்கும் வழியாகத் தம் காதுகளைக் கொடுத்துக் கேட்டார்கள். அக்குரல் இன்னதென்று புலப்படாமையால், காற்று வீசுவதால் உண்டாயது என்று தேறினார்கள். சற்று தூரத்தில் நோக்கினார்கள். அவர்களின் கண்கள் எதையோ உற்றுப் பார்க்கத் தொடங்கின. அங்குள்ள செங்குன்றின் ஓரத்தில் ஒரு விளக்குப் புலப்பட்டது. அது சிறிது அசைந்து கொண் டிருந்தது. சிறிது நேரத்தில் ஒளி அதிகமாய்த் தோன்றிற்று. பிறகு இரண்டு மூன்று விளக்குகள் தோன்றின. சில நிமிடங்களில் சுடர்விட்டுத்

தோன்றி மறைந்தன. இதைக் கண்ட இருவரும் உண்மையிலேயே பயந்தார்கள். எவ்வளவு வலிமை யுடையவர்க ளானாலும் நடுக் காட்டில்—நள்ளிரவில் யாது செய்ய முடியும்? அவ்விளக்குகள் மறுபடியும் இவர்கள் இருந்த இடத்திற்கு வருவதாகப் புலப்பட்டன. அவ்விளக்குகள் எதற்காக என்று அவர்களால் அறிய முடியவில்லை. இனி அங்கிருப்பது தவறென் றுணர்ந்தவர்களாய் அம் மரத்தின்மீது ஏறிக்கொண்டார்கள். சில நிமிடங்களில் அவ் விளக்குகள் அவர்களிருந்த இடத்திற்கு வந்தன. அதன் பிறகு தான், அவை தீவர்த்திகள் என்று அறிந்து கொண்டார்கள். அவைகட்குப் பின்னே சில மனிதர்கள் வந்தனர். அவர்கள் யாவரும் அம்மரத்தின் கீழ்க் கூட்டமாகக் கூடினார்கள். மரத்தின்மீது இருந்த இருவரும் கிளைகளை இறுகப் பிடித்துக் கொண்டு கீழே நடை பெறுவனவற்றைக் கவனித்தார்கள்.

அங்குக் கூடிய மனிதர்கள் யாவரும் கீழே அமர்ந்தார்கள். அவர்களில் ஒருவன், "நன்றாகத் தேடினீர்களா?" என்று கேட்டான். மற்றொருவன், "ஆமாண்டா முண்டம்! அதுதான் கிடைக்கப் போகிறது; வீண் தொந்திரவு; சரி! பிள்ளையவாள் எங்கே காணவில்லை?" என்றான். அவன், "அதோ! அதோ!!" என்று கையைக் காட்டினான். அங்கு, ஒரு விளக்கு இவர்களை அழைப்பதுபோல அசைந்தது. உடனே அவர்களி லொருவன், தன் கையிலுள்ள தீவர்த்தியைப் பதிலுக்காக அசைத்தான். யாவரும் எழுந்து சென்றார்கள். விளக்குகளும் மறைந்தன.

மரத்தின் மீதிருந்த இருவருங் கீழே யிறங்கினார்கள். இரங்கநாதன், மணிவாசகனுடைய தோளைத்

தட்டி, "இதே இடந்தான்; அவர்கள் கண்டுபிடிக்கப் போவதில்லை. இனி நாம் போகலாம்" என்றார். அப்போது வானில் மேகங்கள் அதிகமாக இல்லாதபடியால் நிலவின் ஒளி நன்றாய் வீசிற்று. இருவரும் வந்த வழியே திரும்பிச் சென்றார்கள்.

*    *    *    *    *

மறுநாள் இரங்கநாதன், சிந்து பூந்துறையிலுள்ள மருந்துக் கடைக்குச் சென்று, சமீபத்தில்—அதாவது ஐந்தாறு நாட்களுக்கு முன், யாரேனும், வெடிக்குண்டுக் காயம் முதலியவற்றிற்கு உபயோகிக்கின்ற '**ஜாம்பக்**' (**Zam-Buk**) என்ற மருந்தை வாங்கினார்களா என்று விசாரித்தார். அக்கடையின் சொந்தக்காரர் 'ஆம்' என்று, வாங்கிய தேதியையும், ஆளின் பெயரையுங் குறித்துக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு, அவருக்கு நன்றி செலுத்திவிட்டு நேராகச் சென்னைக்குச் சென்றார். ஸ்பென்ஸர் கம்பெனிக்குச் சென்று, சிவராமபிள்ளை, எத்தனைந்தேதி, கையிலணியும் இரப்பர் உறைவாங்கினாரென்பதைத் தெரிந்துகொண்டு, பிரபலமான சுருட்டு வியாபாரம் செய்யும் எல்லப்ப முதலியார் கடைக்குப் புறப்பட்டார். அக்கடையின் முகப்பிலுள்ள பலகையில்,

**P. R.** எல்லப்ப முதலியார்,
பலதேசச் சுருட்டு வியாபாரி,
**சைதாப்பேட்டை (சென்னை.)**

என்று எழுதப்பட்டிருந்தது. இரங்கநாதன் உள்ளே சென்றதும், எல்லப்ப முதலியார், அவருடைய தோற்றத்தைக் கண்டு, வியாபார மூலமாகப் பெருத்த பொருள் அடித்துவிடலாமென்று உள்ளூற மகிழ்ந்

தவராய் மரியாதையோடும், அன்போடும் வரவேற்ருர். அக்குறிப்பை யுணர்ந்துகொண்ட இரங்கநாதன், புன்சிரிப்போடு, "ஐயா! தங்களுடைய வியாபாரத்தையும், சாமான்களின் மேன்மையும் நான் மிகுதியாகக் கேள்வியுற் றிருக்கிறேன் ; இன்றுதான் நேரிற் காணும் பாக்கியம் கிடைத்தது" என்ருர்.

**எல்லப்ப முதலியார் :—** "ஆகா! அப்படியா மிக மகிழ்ச்சியே. நிற்காதீர்கள் ; உட்காருங்கள் ; உட்காருங்கள்" என்று பல்லைக் காட்டிக்கொண்டு நாட்டிய மாடினுர்.

இரங்கநாதன் அவ்வாறே அமர்ந்து கொண்டார்.

**எல்லப்ப முதலியார் :—** தாங்கள் வசிப்பது எந்த ஊர்? பெயரை நான் அறியலாமா?

**இரங்கநாதன் :—** தடை யென்ன? நான் வசிப்பது திருநெல்வேலி ; **என்பெயர் கருணுகரம் பிள்ளை ;** ஐம்பதுவேலி நிலமுண்டு. கடவுள் அதில் ஒரு குறைவும் வைக்கவில்லை.

**எல்லப்ப முதலியார் :—** அடடா! இவ்வளவு சிரமம் தங்கட்குத் தேவையில்லையே! தாங்கள் இறங்கி யிருக்கும் இடத்தைத் தெரிவித் திருந்தால் ஓடோடியும் வந்திருப்பேனே?

**இரங்கநாதன் :—** "குற்றமில்லை ; தங்கட்கு வீண் தொந்திரவு என் கொடுக்கவேண்டும்? நான் வந்ததால் குடிமுழுகிப் போய்விட்ட தென்ன? போகட்டும் ; இதோ பாருங்கள்! இஃது எந்தக் கம்பெனியார் செய்தது?"

என்று ஒரு ப்ரதிச் சுருட்டை யெடுத்துக் காட்டினுர்.

எல்லப்பமுதலியார் அதை வாங்கிப் பார்வையிட்டார். அதில்,..."வியம் அண்ட் கோ, லண்டன்."

(...Liam and Co, London) என்று பாதியே தெரிந்தது. பிறகு, ஐயா! இச்சுருட்டு மிக உயர்ந்தது; சீமையிலுள்ள வில்லியம் அண்ட் கம்பெனியாரால் (William and Co., Loudon) செய்யப்படுவது. இதற்குச் சென்னையில் நான்மாத்திரமே ஏஜெண்டாக இருக்கிறேன்; வேறொருவருக்கும் வருவதில்லை. இது உடம்பிற்கும் கெடுதி செய்யாது" என்றார்.

**இரங்கநாதன்** :—"கம்பெனியின் பெயர் தெரியவில்லை; அதற்காகவே கேட்டேன்; இப்போது விளங்கிவிட்டது. என்னுடைய தமையனொருவர், கோவில் பட்டியில் பெருத்த சுருட்டு வியாபாரஞ் செய்கிறார்; நீங்கள் கூட "மணிவண்ணம் பிள்ளை" என்று கேள்விப்பட்டிருக்கலாம். அவர்கள் பொருட்டே நான் வர நேர்ந்தது; முப்பதினாயிரம் சுருட்டுக்கள் தேவை" என்றார்.

எல்லப்ப முதலியார், மணிவண்ணம் பிள்ளையைச் சிறிதும் அறியாராயினும், தெரியாதென்று சொல்லுவது மரியாதைக் குறைவென்றெண்ணி "ஓகோ" மணிவண்ணம் பிள்ளையா? எனக்கு நன்றாய்த் தெரியும்; அவர் என்னுடைய நண்பராச்சே" என்றார்.

**இரங்கநாதன்** :—நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்களென்று கருதினேன்; அது தவறுதான்; வியாபாரிகள் வியாபாரியை அறியாமலிருப்பார்களா? ஆனால், இந்தச் சுருட்டுத் தங்கட்குத்தான் பதிவு போலும்!

**எல்லப்ப முதலியார்** :—தடையென்ன? எனக்கே பதிவாகி யிருப்பதால், நானே எல்லா ஊரிலுமுள்ள வியாபாரிகட்கும் அனுப்பி வருகிறேன். ஆனால்,

போக்கிரித்தனமும், பித்தலாட்டமும் நிறைந்த இச் சென்னையில் கள்ளத்தனமாகவும் போலிச் சுருட்டுக்களைச் செய்து விற்பார்கள். பலர் அவற்றில் ஏமாந்தே போகிறார்கள்; தங்களைப் போன்ற ஒரு சிலரே உண்மை தெரிந்து வாங்குகிறார்கள்.

**இரங்கநாதன்** :—"ஆமாம்—அம்மாதிரி உள்ளதே. சரி! நேரமாகிறது; நான்போய், மாலையில் திரும்பவும் வருவேன்; திருநெல்வேலியில் எத்தனை பேர்கட்கு அனுப்புகிறீர்கள்?" என்றார்.

எல்லப்ப முதலியார், புத்தகங்களை யெடுத்துப் புரட்டிப்பார்த்து நான்கைந்து பெயர்களைக் குறித்துக் கொடுத்தார். இரங்கநாதன், அதைப் பெற்றுக் கொண்டு, "வந்தனம்-இன்று மாலையில் வருவேன்; தயார்செய்து வையுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சிந்து பூந்துறைக்குத் திரும்பினார். எல்லப்ப முதலியார், கருணைகரம்பிள்ளை தம்முடைய வியாபாரத்தில் மயங்கிவிட்டதைக் குறித்து மகிழ்ச்சியுற்றதோடு, முப்பதினாயிரம் சுருட்டுகளில் குறைந்தது இருநூறு ரூபாய்களாவது இலாபம் அடையலாமென்று இன்பக் கனவு கண்டவராய்க் குறித்த மாலைக்காலத்தை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்.

இரங்கநாதன், சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் மாலை ஏழுமணிக்கே சிந்து பூந்துறைக்கு வந்தார். வடக்கு இரதவீதியில் வரும்பொழுது, அவரெதிரே ஒரு மனிதன் தள்ளாடிக் கீழேவிழுந்தான். இரங்கநாதன் குனிந்து அவனை உற்று நோக்கினார். அவன் நெடுநாட்பட்ட பிணியால் இளைப்புற் றிருக்கிற

னென்று உணர்ந்தார். "வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதே சரி' என்று எண்ணியவராய் ஒரு வண்டியை வாடகைக் கமர்த்தி, அதில் அம்மனிதனைத் தூக்கிவைத்துச் சென்றார். அம்மனிதனாற் பேசுதற்கியலவில்லை. அம்மனிதன் இரங்கநாதனைத் தன்னருகில் வரும்படி கையை நீட்டினான். இரங்கநாதன் அவ்வாறே அருகில் அமர்ந்தார். அம்மனிதன், மிகக் கஷ்டப்பட்டுச் சில இரகசியங்களைக் கூறினான். அப்பொழுது, டாக்டர் நஞ்சுண்டராவ், அம்மனிதனைப் பார்வையிட்டு மிகக் கவலையோடு இரங்கநாதனை நோக்கி, "நண்பரே! இம் மனிதனுடைய நெஞ்சு வலிமைக் குறைவாகிவிட்டது; இரண்டு நாட்களுக்கு அதிகமாகப் பிழைத் திருப்பானாகில், அது கடவுள் அருளே" என்றார். இரங்கநாதனுக்கு உண்மையிலேயே இரக்கமும் அன்பும் உண்டாயிற்று. அம்மனிதனுக்கு வேண்டுவன கூறித் தேறுதலளித்தார். பிறகு 'எப்படியானாலும் சரி! கடவுள் சம்மதம்' என்று கருதியவனாய், அம் மனிதனுக்குத் துணையாக ஒரு தாதியை (Nurse) அமர்த்தி மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்துவிட்டு, வேல்ஸ் இளவரசர் உணவுச்சாலைக்குச் செல்லும் பொருட்டு வைத்திய சாலையின் வாயிற்படியினின்று கீழே இறங்கினார். அப்பொழுது ஒரு சிறுவன் ஒரு கடிதத்துண்டை அவர் கையில் அளித்தான். அதில், **"பெரிய ஆயத்திற் சிக்கியிருக்கிறேன்; உடனே வரவும், மணிவாசகன்"** என்று எழுதப்பட்டிருந்தது. இரங்கநாதன், அச்சிறுவனை நோக்கி "எவ்விடத்தில்?" என்று கேட்டார். சிறுவன், "வாருங்கள் அழைத்துச் செல்லுகிறேன்" என்றான். இரங்கநாதன் அவனைப்

பின் தொடர்ந்து நடந்தார். அச் சிறுவன் பல முடுக்குகளையும், சந்துகளையுங் கடந்து ஊரின் இறுதியி லுள்ள ஒரு கூறை வீட்டைக் காட்டி 'இதுவே' என்றான். இரங்கநாதன், அவ்விடம் பேர்பெற்ற திருடர்கள் தங்கி யிருப்பது என்று உடனே உணர்ந்துகொண்டார். என்னவானாலுஞ் சரியென்று கருதி அவ்வீட்டினுள் நுழைந்தார். அங்கிருந்த நடராஜ பிள்ளை இவரைக் கண்டதும், "வாருங்கள்! வைர வியாபாரிகளே! 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தி லுண்டு' என்பது தங்கட்குத் தெரிந்ததே. யானைக்கும் அடி சறுக்கு மல்லவா? விதி யாரை விட்டது? என்று சொல்லிச் சிரித்தார்.

**இரங்கநாதன் :**—"திருட்டுப் பயலே! கள்ளக் கடிதம் எழுதி யிருக்கிறாய்; என்னை ஏமாற்றக் கருதினாய் போலும்! என்னுடைய ஆட்கள் வெளியில் இருக்கிறார்கள்; இந்த நிமிடமே வரக்கூடும்" என்றார்.

அவருடைய கண்கள் தீப்பொறிகளைச் சிந்தின. கோபத்தால் மீசை துடித்தது; எனினும் யாது பயன்?

**நடராஜ பிள்ளை :**—சுத்த வீரனென்று கருதிக்கொண்டிருப்பவரே! கோபம் வேண்டாம். தங்களுடைய ஆட்கள் இருந்தால் தயை செய்து அழையுங்கள்; அவர்களையும் நான் பார்க்கவேண்டியது அவசியமே.

**இரங்கநாதன் :**—"டே! உன்னுடைய கள்ளச் செயல் யாவும் வெளியாகி விட்டன; இனி, உன் கதி நாசந்தான்" என்று துப்பாக்கியை எடுத்தார்.

நடராஜ பிள்ளை, அதை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு, "வீண் முயற்சி எதற்கு? யானை வாயில் அகப்பட்ட கரும்பு திரும்புவதுண்டா? என்னுடைய செயல் யாவற்றையும் நீர் அறிந்துகொண்டிருக்கிறீர்; அஃதுண்மையே. நீர் என்னைச் சிறை வீட்டிற்கு அனுப்பிவிடக் கூடும்; அதில் எனக்கு விருப்ப மில்லை; நான் சுகத்தோடு இருக்கும் பொருட்டு நீர் இறக்க வேண்டியதே. ஏன்? நீர், உலகத்தின் நன்மைக்காகப் பாடு படுகிறவர்; அதன் பொருட்டு வருந்த மாட்டீ ரென்று நான் நம்புகிறேன்" என்றார். இரங்கநாதன், அடக்க முடியாத கோபத்தோடு, "பயலே! என்னைக் கொல்லவா கருதுகிறாய்?" என்று நடராஜ பிள்ளை மீது புலிபோற் பாய்ந்து, அவர் கழுத்தை நெருக்கிப் பிடித்தார். இருவரும் கீழே விழுந்து புரண்டார்கள். நடராஜ பிள்ளை "உதவி! உதவி!!" என்று கூவினார். உள்ளே யிருந்து தோன்றிய இரண்டு முரடர்கள், இரங்கநாதனுடைய கால்களையுங் கைகளையுங் கட்டி விட்டார்கள்.

**நடராஜபிள்ளை** :—வீணாக மரியாதையைக் கெடுத்துக் கொள்ளுகிறீர்; உம்மை நான் என்ன செய்யப் போகிறேன்? எமன் உலகத்தில் ஒரு திருட்டுக் கேஸ் கண்டு பிடிப்பதற்காகத் திறமையான ஆள் தேவையென்று எழுதியிருக்கிறார்கள்; நீர் அதை யொப்புக் கொள்ளலாம்; தகுந்த வெகுமதி கிடைக்கும். ஏன் வருந்துகிறீர்? சிறிதுங் கஷ்ட மில்லாமல் பார்சல் வழியாக அனுப்பிவிடுகிறேன்.

**இரங்கநாதன்** :—டேய்! நெருப்பை மடியில் கட்டிக் கொள்ளுகிறாய்; உன்னை எளிதில் விடமாட்

டேன். நான் காணமற்போய்விட்ட சங்கதியைப் போலீஸார் அறிந்தவுடன் உன்னைத் தண்டிப்பது நிச்சயம்.

நடராஜ பிள்ளை :—நரி நனைகிற தென்று, ஓநாய் குந்திக்கொண்டு அழுததாம். பயித்தியம்! நீர் எனக்காக வருந்தவேண்டாம். என் கதி எப்படியானு லென்ன? உம்முடைய நிலையை எண்ணிப் பாரும்; ஆனால், ஒன்று கூறுகிறேன்; இனிமேல் எங்கள் காரியத்தில் தலையிடுவதில்லையென்று உறுதிசெய்துகொடும்; அதுவே எனக்குப் போதுமானது. நீர், அவ்வுறுதியினின்று தவறமாட்டீரென்பதை நான் அறிவேன்; இப்பொழுதே நீர் உம்முடைய விருப்பம்போல் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், என்ன பதில் தருகிறீர்?

இரங்கநாதன் :—உறுதி மொழியா? நான் கோழையல்ல; ஒருக்காலும்—உயிரை யிழந்தாலும்-ஒருப்படப் போவதில்லை.

நடராஜ பிள்ளை :—நண்பரே! மறுபடியுங்கேட்கிறேன்; இணங்கிவிடும்; இன்றேல்......அந்தோ! உயிரை யிழப்பதில் யாது பயன்?

இரங்கநாதன் :—முடியாது.

நடராஜ பிள்ளை :—அது போகட்டும். சிவராம பிள்ளை வீட்டிற் சில கடிதங்கள் காணமற் போய்விட்டன; அவை உங்களிடமே யிருக்குமென்று நம்புகிறேன்; அவற்றையாயினுங் கொடுத்து விடும்.

இரங்கநாதன் :-"அக்கடிதங்கள் என்னிடத்தில் இல்லை" என்றார்.

நடராஜ பிள்ளை, "இவர் பிடிவாதக்காரர்; சொன்னதையே சொல்லுவார். செய்யவேண்டியதைச் செய்தால் வழிக்கு வரும்" என்று, அங்கு நின்ற முரடர்களை நோக்கி ஏதோ சைகைசெய்து விட்டு வெளியே சென்றார். முரடர்கள் இருவரும் இரங்கநாதனைப் பிடித்து ஒரு தூணிற் கட்டி வெளிக் கதவை மூடித் தாழிட்டு, அவ்வீட்டின் ஒரு மூலையில் நெருப்பை வைத்துவிட்டு ஓடினார்கள். தீக்கடவுள் (அக்நி) தம்முடைய முழு வலிமையையுங் காட்டத் தொடங்கினர். இரங்கநாதன் தப்பித்துவிடலாமென்று கருதினர். அவரைக் கட்டியிருந்த கயிறு பலமான தாகையால், அப்படி இப்படி அசைய முடியவில்லை. அவர் கட்டுப்பட்டிருக்கும் இடத்தின் முன் பாகம் நெருப்பால் அவிந்துவிட்டது. உள் இட முழுவதும் புகை சூழ்ந்தது. இரங்கநாதனுடைய மூச்சும் திணறிற்று. இன்னும் சில நிமிடங்களில் இறந்துபோதல் நிச்சயம். அவர், இறந்துபோவதற்காக வருந்தவில்லை. வெண்ணெய் திரண்டு வரும் போது பானை உடைந்ததுபோல, எல்லாக் காரியங்களும் முடிவடையப்போகும் அமயம், முட்டாள்தனமாக ஆபத்திற் சிக்கிக் கொண்டோமே யென்றே வருந்தினர். புகையும் வர வர மிகுதியாயிற்று. உணர்வு கலங்கியது. ஒரு பற்றும் இலாதவராய்க் கடவுளை நினைந்தவண்ணம் இருந்தார். அதே நிலையில் இன்னும் சில நிமிடம் இருந்திருப்பாராயின் இறப்பதற்கு யாதும் தடையில்லை. அதே அமயத்தில் கதவு உடைக்கப்படும் சப்தங் கேட்டது. கண்களைத் திறந்து நோக்கினர். மறுவினாடியில் இரண்டு சேவகர்கள் தோன்றி, அவருடைய கட்டுகளை

அறுத்து, அவரை அப்படியே தூக்கிக்கொண்டு வெளியே சென்றனர்.

---

## பதினோராவது அதிகாரம்

---

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கையர் அல்லா தவர்க்கு"—குறள்.

### வக்கீல் தருமலிங்கம் பிள்ளை—பெருங்கொள்ளை—மாய மாய் மறைந்த கள்வன்

வக்கீல் தருமலிங்கம் பிள்ளை யென்றால் யாவரு மறிவார்கள். அவர் திருநெல்வேலி உயர்தர நீதிமன்றத்தில் (High Court) வக்கீலாக இருந்து ஏழு இலக்ஷ ரூபாய்கட்கு மேல் சம்பாதித்திருந்தார். தற் பொழுது அவருக்கு வயது அறுபதிருக்கலாம். இவ் வளவு செல்வமுடையவராக இருந்தும், இதுகாறும் ஒரு தருமமும் ஆற்றியறியார். இப்பொழுது அவ ருடைய நண்பர்களின் கட்டாயத்தின் பேரில், காந்தி மதி அம்மனுக்குத் தங்கத்தினால் ஒரு அங்கிசெய்து வைப்பதற்கு விருப்பம் மாத்திரங்கொண் டிருப்ப தாகக் கேள்வி; அதுவும் நமக்கு நிச்சயமாய்த் தெரி யாது. ஆயிரக்கணக்கான பணங்களைச் செலவிட்டு, திவான் பகதூர், இராவ் பகதூர் முதலிய பட்டங் களை வாங்கும் பெரிய மனிதர்களைக் கேலிசெய்வது போல், நமது வக்கீல் நெடுநாட்களுக்கு முன்னேயே, ஒரு பைசாவேனுஞ் செலவிடாது, 'உலோபி' என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார். பணம் வருமென்று தெரிந்தால் எந்தக்காரியத்தையுஞ் செய்யப் பின் னிடார். அவருக்கு மூன்று பெண் குழந்தைகள்

உண்டு. அம்மூன்றுகலியாணங்கட்கும் சுமார் முப்பதி ஞயிரம் ரூபாய்கள் வரை செலவு வந்துவிட்டன. அப்போது அவர் மனம் பட்டபாட்டைக் கடவுளே அறிவார்! தாம் இறப்பதேயில்லை யென்றும், ஒரு கால் தவறி இறந்துவிடுவோ மென்று தெரிந்தால், அதற்கு முன்னேயே கைலாயத்திற்குத் தம் பெய ருக்கு எல்லாப் பணத்தையும் மணியார்டர் வழியாக அனுப்பிவிட வேண்டுமென்றுங் கருதியிருந்தார். ஒரு நாள், ஒரு பிச்சைக்காரன் வந்து காலணு கொடுக்கும் படி கேட்டான்; வக்கீல், "உனக்கு ஏன் தரவேண் டும்? உன்னுடலில் வலிமையில்லையா? ஏன் வேலை செய்து பிழைக்கப்படாது?" என்று நீதி மன்றத் தில் வாதி பிரதிவாதிகளைக் குறுக்குக்கேள்வி கேட் பதுபோலக் கேட்கத் தொடங்கினர். அப்பிச்சைக் காரனுக்குக் கோபம் வந்துவிட்டது. "மொட்டைத் தலைச்சிக்கு கூந்தலழகி யென்று பெயர் வந்ததுபோல, ஒரு பைசாகூட ஈந்துவக்கத் தெரியாத உனக்குத் பெயர் தருமலிங்கம் பிள்ளையா?" என்று அவ ருடைய முகத்தில் உமிழ்ந்துவிட்டு ஓடியொளிந்தான். அப்போது பக்கத்திலுள்ளவர்கள், அவனைப் பிடித் துத் தண்டிக்கவேண்டும், என்றூர்கள். வக்கீல், "சே! அவன் உமிழ்ந்ததும் நாம் தண்டிப்போ மென்று கருதியே புறமுதுகிட்டு ஓடிவிட்டான்; அப்படிப் பட்டவனைத் தண்டிப்பது சட்டத்திற்கும், தருமத் திற்கும் முரணாகும்" என்று சொல்லி முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தார். இவ்வளவு பொறுமையுள்ள நமது வக்கீலை, அவ்வூரார் பலவிதமாகப் பேசுகிறூர் கள். கெட்டவுலகம்! தம் மனம்போனவாறு பேசு தல் இயற்கைதானே? மற்றொரு நாள், ஒரு அந்த

ணர் வந்து, தம்முடைய பெண்ணின் கலியாணத்திற்காக ஐந்து ரூபாய்கள் மாத்திரம் தரும்படி கேட்டார். வக்கீல் அதற்கு ஒருப்படவில்லை. அந்தணரும் விடாக்கண்டர். இருவரும் வாதாடிக்கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில், வக்கீலுக்குத் தெரிந்த சில பெரிய மனிதர்கள், ஏதோ முக்கியமான காரியத்தைக் குறித்துப் பேசுவதற்காக வந்தார்கள். அவர்களிலொருவர் அந்தணரைப் பார்த்து, "சுவாமிகள்! எங்கே யிப்படி வந்தது?" என்று கேட்டார். அந்தணர், இதுதான் சமயமென்று, "நான் நீண்ட தூரத்திலிருந்து வந்திருக்கிறேன்; ஒரு திருப்பணி வேலை முற்றுப் பெறவேண்டும்; அதன் பொருட்டு, வக்கீல் ஐயா அவர்கள் இருநூறு ரூபாய்கள் மாத்திரம் தருவதாகச் சொல்லுகிறார்கள்; நான், அதிகமாகத் தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். வேறொன்றுமில்லை" என்றார். அந்தணர் இவ்விதம் திடீரென்று அபாண்டமாய்க் கூறவே வக்கீல் திகைத்து நடுங்கினார், எனினும். 'நான் அப்படிச் சொல்லவேயில்லை' என்று மன்றாடினால், வந்திருக்கும் பெரிய மனிதர்கள் தம்மைக் கௌரவக் குறைவாகவும், உலோபி என்றுங் கருதுவார்கள்; ஆகையால், இவ்வளவோடு கொடுத்துத் தொலைத்து விடுவதே சரியென்று எண்ணி, இருநூறு ரூபாய்களைக் கொண்டு வந்து அந்தணரிடம் கொடுத்தார். அந்தணர், அதைப் பெற்றுக்கொண்டு, 'அடடா! அதிஷ்டம் வந்தால் இப்படி யல்லவா வரவேண்டும்' என்று மகிழ்ச்சியுடன் சென்றார்.

வக்கீல், சட்டப்படி நடப்பதிலும், ஆங்கில நாகரீகத்திலும் மிக விருப்ப முடையவர். ஒருநாள் வக்

கில் இல்லாத பொழுது, அவருடைய மனைவி, காலணுவை யெடுத்து வெற்றிலை வாங்கிவிட்டாள். எங்கோ சென்றிருந்த அவர், வந்தவுடன், தடபுடலாக விசாரணைசெய்து, இரண்டு ரூபாய்கள் அபராதம் விதித்துவிட்டார். மனைவியாக இருந்தாலும், அவருடைய உத்தர வில்லாமல் காலணுவை யெடுத்தது சட்டப்படி குற்ற மல்லவா? அவர், மேனாட்டுக் குடி வகைகளை அவ்வளவு அதிகமாக உபயோகிப்பதில்லை. மருந்தைப் போலச் சிறிது உபயோகிப்பார். வக்கீல் சாப்பாட்டிற்குப் பிறகு படுக்கைக்குச் சென்றார். அன்று அவருடைய மூத்த மகளுக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதாகத் தகவல் வந்தது. அவருடைய மனைவி, அக் குழந்தைக்குச் செய்யவேண்டிய நகைகட்காக ஒரு பட்டியல் தயார்செய்து அவரிடம் வாசித்துக் காட்டினாள். வக்கீல் அவைகளைச் செய்து முடிப்பதாயின் மிகுந்த பணம் செலவு செய்ய வேண்டுமே என்று, அதே கவலையாய்த் தூங்கிவிட்டார். இரவு பன்னிரண்டு மணி யிருக்கலாம். எந்தப் பக்கத்திலிருந்தோ வந்த ஒரு மூட்டைப்பூச்சி, அவருடைய முதுகில், "பாவி! இவ்வளவு செல்வங்களையும் என்ன செய்யப் போகிறாய்?" என்று கூறுவதுபோல நறுக்கென்று கடித்தது. வக்கீல் விழித்துக்கொண்டு பாலும், பழமும் உண்டு வளர்ந்த மென்மையான உடம்பிலிருந்து வரும் இரத்தத்தைத் துடைத்தார். அதே வினாடியில், அவ்வறையின் கதவு திறக்கப்பட்டதும் ஒரு மனிதன் உள்ளே நுழைந்தான். அவனுடைய முகம் நன்றாகப் புலப்படவில்லை. முகத்தை மறைத்துக் கொண்டிருந்தான். வக்கீல்,

அவன் திருடன் என்பதை யுணர்ந்து திகைப்புற்றவ ராய் "நீ யார் ?" என்று கேட்டார்.

திருடன் :—நானொரு மனிதனே ; அதிலுந் தங்கள் நண்பனே.

வக்கீல் :—அதிகப் பிரசங்கித்தனம்.....டே! திருட் டும் பயலே !.........

திருடன் :—வீண் விவகாரம் தேவையில்லை ; தயை செய்து இருப்புப் பெட்டியின் திறவுகோலைக் கொடும் ; எனக்குச் சொந்தமான சில சாமான் களை யெடுத்துக் கொள்ளவேண்டும்.

வக்கீல் :—பயலே! உனக்குச் சொந்தமா ? யாரிடம் பேசுகிறோம் என்பதை யுணர்ந்து பேசு.

திருடன் :—மகா-ா-ா-ஸ்ரீ வக்கில் தருமலிங்கம் பிள்ளை யவர்களிடத்தில்தான் பேசுகிறேன். அது போகட்டும் ; உலோபியினுடைய பொருள் திருடனுக்குத் தானே சொந்தம் ? நன்றாகப் படித்த தங்கட்கு இது தெரியாத தன்று ; எங்கே ? விரைவில் ஆகட்டும்.

வக்கீல் :—நான் பாடுபட்டுத் தேடிய செல்வம் ; அதன் அருமை எனக்குத் தெரியும்.

திருடன் :—இவ்வளவு செல்வமுள்ள நீர், இது வரை யில் எத்தனை தருமங்கள் செய்திருக்கிறீர் ? விரல் விட்டுச் சொல்லும்.

வக்கீல் :—என்னுடைய செல்வத்தைச் செலவழிக்க வும், வைத்துக் கொள்ளவும் எனக்கே அதிகாரம் உண்டு ; நீ அதில் தலையிட வேண்டிய அவசிய மில்லை. பேசாமற் போய்விடு.

திருடன் :—நீர் பாடுபட்டுத் தேடிய செல்வந்தான் ; அதை நான் மறுக்கவில்லை. என்னிலையை யோசித்துப் பாருங்கள் ; எவ்வளவு தூரம் துணிந்து ?—என் உயிரையே துரும்பென மதித்துத் தங்கள் தரிசனத்தை விரும்பி வந்திருக்கிறேன். அதன்பொருட்டாவது அந்தத் திறவு கோலைக் கொடும்.

வக்கீல் :—ஒருக்காலு மில்லை. இப்போதே கூச்ச லிட்டு வீட்டிலுள்ள யாவரையு மெழுப்பி உன்னைப் போலீஸார் வசம் ஒப்புவித்து விடுவேன். என்ன சொல்லுகிறாய் ? மரியாதையாகச் சென்று விடுகிறாயா ?

திருடன் :—ஐயா ! நான் அந்த மிரட்டல்களுக் கெல்லாம் பயந்தவனாக இருந்தால் இவ்வேலைக்கு வந்தே யிருக்கமாட்டேன். அப்படிச் செய்யத் தொடங்குவீ ரானால், இதோ ! இத் துப்பாக்கி தன்னுடைய வேலையை நிறைவேற்றி விடும். அநியாயமாக உயிரை யிழப்பதில் உமக்கு விருப்பமா ?

வக்கீல் :—டே ! நீ இவ்வளவு தூரம் சொல்லுகிறபடியால் நூறு ரூபாய்கள் கொடுக்கிறேன் ; பேசாமற் பெற்றுக் கொண்டு சென்றுவிடு.

திருடன் :—"ஐயா! அற்பத் தொகையை நான் விரும்புகிறவ னல்ல ; மணி யாகிக்கொண்டே யிருக்கிறது ; இன்னும் தங்களைப் போன்ற எத்தனையோ பெரிய மனிதர்களைப் போய்க் காண வேண்டும், தயைசெய்து திறவுகோலை யெடும் ; ஏதேனுங் கூச்சலிடுவீரானால் கொஞ்சங்கூட

இரக்க மில்லாமல் சுட்டுத் தள்ளிவிடுவேன்" என்று துப்பாக்கியை அவருடைய முகத்திற்கு நேரே நீட்டினான்.

வக்கீல் என்ன செய்ய முடியும்! அவரொருவர் மாத்திரம் தனியாக இருக்கிறார். வீட்டிலோ யாவரும் உறங்குகிறார்கள். ஒரு துணையுமில்லை. உலோபிக்கு உயிரைக் காட்டிலும் பணம் சிறந்ததன்றோ? நடுங்குகிறார்; கண்ணீர்விட் டழுதார். திருடனும் விட்டுப்போகிற வழியா யில்லை. பேசாமல் திறவு கோலை எடுத்துத் திருடன் கையிற் கொடுத்தார். திருடன் இருப்புப் பெட்டியைத்திறந்து, அதிலிருந்த மூவாயிரம் ரூபாய் நோட்டுக்களையும் ஒரு கட்டாகக் கட்டிக்கொண்டு, மறுபடியும் பெட்டியைப் பூட்டித் திறவுகோலை வக்கீலிடம் அளித்து, "ஐயா! உம்முடைய உதவிக்குப் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன்; வந்தனம்; மூவாயிரம் ரூபாய்கள் மாத்திரமே எடுத்துக்கொண்டேன். அது, தங்களுடைய செல்வப் பெருக்கை நோக்க ஒரு சிறிய எறும்பு போன்றதே. அதன் பொருட்டுத் தாங்கள் வருந்த மாட்டீர்க ளென்று நம்புகிறேன்; அப்படி வருந்தினும் ஆவதென்ன? இப்பொழுதே இதைவிட்டுப் போகிறேன்; நான் போகும் வரை நீர் சிறிதுங்கூச்சலிடக் கூடாது. அங்ஙனஞ் செய்வீரானால், அப்புறம் நான் உமக்கு விபரமாகச் சொல்லவேண்டியதில்லை" என்று சொல்லி அவரிருக்கும் அறையை மெதுவாகச் சார்த்தித் தாழிட்டுக்கொண்டு நடந்தான். அங்ஙனம் போகிற பொழுது, படிக்கும் அறையில் இருந்து ஒரு அலமாரி அவன் கண்ணிற்குப் புலப்பட்டது. வக்கீல்,

அதில் ஏதேனும் ஒளித்து வைத்திருப்பாரென்று கருதி ஆவலோடு அதனுட் புகுந்தான்.

படுக்கை அறையில் அடைபட்டுக் கிடந்தவக்கீல் சிந்தை கலங்கியவராய் நின்றார். கூச்சலிடுவதற்கும் பயந்தார். ஒரு நொடிப்பொழுதில் மூவாயிரம் ரூபாய்களை இழந்துவிட்டோமே என்று துன்புற்றார். பிறகு கதவை இழுத்துப்பார்த்தார். அது முன் பக்கத்தில் தாழிடப்பட்டிருந்தது. மெதுவாய் நகர்ந்துபோய்ச் சாளரத்தின் வழியாக அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருக்கும் வேலைக்காரனை எழுப்பினார். அவன் எழுந்து வந்து கதவைத்திறந்தான். வக்கீல் நடந்தவற்றைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டுத் திருடன் போய்விட்டானா இல்லையா என்று பார்ப்பதற்காக வெளிப்பக்கத்தை நோக்கி வந்தார். படிக்கும் அறை திறந்திருந்தது. ஐயமுற்றவராய் மெதுவாக ஊர்ந்து போய் தலையை மாத்திரம் நீட்டிப்பார்த்தார். உள்ளே நுழைந்த திருடன் எதையோ தேடிக்கொண்டிருந்தான், வக்கீலுடைய மனதில் ஒரு கருத்துத் தோன்றியது. உடனே சட்டென்று கதவை யிழுத்து தாழிட்டார். பிறகு, "ஓ! திருடன்! திருடன்!!" என்று கூச்சலிட்டார். அதைக்கேட்ட வேலைக்காரர்களும், மற்றவர்களும், திடுக்கிட்டு ஓடிவந்தார்கள். வக்கீல் தம்முடைய கெட்டிக்காரத்தனத்தை மிகுதியாகப் புகழ்ந்து கூறினார். மூன்று ஆட்களை அவ்வறையின் முன்னாற் காவல் வைத்தார். இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியாரை நான்கைந்துசேவகர்களுடன் அழைத்து வரும்படி ஒரு ஆளை அவசரமாக அனுப்பினார். இப்போது அவருடைய மனதில், பணம் போய் விட்டதே என்ற கவலை அடியோடு மறைந்துவிட்டது.

"முதலாவது பணத்திற்கு மோசமில்லை; இரண்டாவது வக்கீல் தருமலிங்கம் பிள்ளை, தம் வீட்டில் நுழைந்த ஒரு திருடனை மிகத் தந்திரமாகப் பிடித்து விட்டார் என்று பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகும்" என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தார். சுமார் அரை மணி ஆயிற்று. இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார். வக்கீல், அவரிடம் எல்லாவற்றையுங் கூறி "திருடன் துப்பாக்கி வைத்திருக்கிறான்; கவனமாய்ப் பிடிக்கவேண்டும்" என்றார். இன்ஸ்பெக்டர், உடனே தம்முடைய துப்பாக்கியை எடுத்துச் சரி பார்த்துக்கொண்டார். பிறகு, சேவகர்களை அவ்வறையின் முன்னே நிற்க வைத்தார். அவர்களுடைய துப்பாக்கிகளையெல்லாம் தாமே வாங்கிச் சரி பார்த்தார். அவ்வறையினுள் ஒரே ஒரு திருடனேயிருக்கிறான். அவனைப் பிடிப்பதற்கு இவ்வளவு தடபுடல். போர் முகத்தில் படை வீரர்களை அணிபெற வகுப்பது போலச் சேவகர்களை வரிசையாக நிற்கும்படி கட்டளையிட்டார். வக்கீலுடைய மனதில் மாத்திரம் திகிலும், பயமுங் குடிகொண்டிருந்தன. பிறகு இன்ஸ்பெக்டர் சேவகர்களை நோக்கி, "இப்பொழுது அறையைத் திறக்கப் போகிறேன்; திருடன் உயிரை வெறுத்தவனுகையால் நம்மைச் சுட்டு வீழ்த்தவே முயற்சிப்பான்; ஆகையால் நான் கதவைத் திறந்தவுடன் யாவரும் புலிபோற் பாய்ந்து திருடனைப் பிடித்துக் கொள்ளவேண்டும்" என்று கூறியதும் சட்டென்று கதவைத் திறந்தார். அதே வினாடியில் வெளியில் நின்ற யாவரும் உள்ளே பாய்ந்தார்கள். முன்னாலேசென்ற ஒரு சேவகன், அறையினுள் சலவைக் கற்கள் பரப்பி யிருந்தபடியாற் கால் வழுக்கிவிழுந்தான். பின்னாலேசென்றயாவரும் ஒருவர்

மீது ஒருவராய் விழுந்தார்கள். மிகக்கலவரம் உண்டாகி விட்டது. ஒருவரை யொருவர் திருடனென்று கருதிக் கட்டிக்கொண்டு புரண்டார்கள். எல்லாருக்கும் பின்னே சென்ற இன்ஸ்பெக்டரை, அவர்தான் திருடனென்று ஒரு சேவகன் பிடித்தான். இன்ஸ்பெக்டர் தன்னைப் பிடித்தவனே திருடனென்று கருதி, அவன் ஓடிவிடாதபடி இறுக்கிப் பிடித்தார். அந்தச் சேவகனுக்குக் கோபம் வந்துவிட்டது. “திருட்டுப் பயலே! எவ்வளவு துணிகரம்! என்னையா பிடிக்கிறாய்?” என்று இன்ஸ்பெக்டருடைய கன்னத்தில் ‘பளீர் பளீர்’ என்று இரண்டு மூன்று அறை கொடுத்தான். அவன் அடித்தது தான் தாமதம்: உடனே கீழே புரண்டு கொண்டிருந்தவர்கள் யாவரும் எழுந்து, இன்ஸ்பெக்டரையே திருடனென்று கருதித் தம்மாற் கூடிய வரை பலங்கொண்ட மட்டும் உதை வெளுத்து வாங்கி விட்டார்கள். பாவம்! இன்ஸ்பெக்டர் வலி பொறுக்க முடியாமல், “ஐயா! நான் திருடனல்ல, கொல்லாதீர்கள்” என்று அலறினார். அவருடைய குரலைக் கேட்ட பிறகே சேவகர்கள் விலகி நின்றார்கள். இன்ஸ்பெக்டர், அழுவதா? சிரிப்பதா? அதற்குள் வக்கீல் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு ஓடிவந்தார். யாவரும் திருடன் எங்கே என்று தேடினார்கள். அறையிருக்கிறது; உள்ளே பாய்ந்த சேவகர்களும், இன்ஸ்பெக்டரும் நிற்கிறார்கள்; திருடன் மாயமாகப் போய் விட்டான்; யாவரும் விழித்தார்கள். இன்ஸ்பெக்டருக்கு, வக்கீல் நம்மை ஏமாற்றிவிட்டாரோ என்று ஒரு பக்கம் கோபம் உண்டாயிற்று; மற்றொரு பக்கம் முட்டாள் சேவகர்கள் ஆள் தெரியாமலே அடித்து விட்டார்களே யென்று வெட்கம் உண்டாயிற்று.

பொறுக்காலாற்றாத வருத்தத்துடன் வக்கீலைப்பார்த்து, "ஓய்! இஃதென்ன வேலை? வெறுமையான அறையில் திருடனிருக்கிறானென்று பொய் கூறி விட்டீர்" என்றார்.

வக்கீல் :—ஓ! கடவுளே! உண்மையாகத் திருடனைக் கண்ட பிறகு தான் அறையைப் பூட்டினேன்; எப்படியோ மாயமாய்ப் போய்விட்டான். உங்களுடைய கவனக் குறைவாலேயே அவன் தப்பி யிருக்கக் கூடும்.

இன்ஸ்பெக்டர் :—ஓய்! முட்டாள் தனமாக உளறுகிறீர்; திருடன் அப்படி உள்ளே யிருந்தானாகில் எங்கே சென்று விட்டான்? நாங்கள் உள்ளே புகுந்த பிறகு, முன் வாசல் வழியாகச் சென்றானென்றாலும், மரங்களைப் போல நின்றுகொண்டிருந்த உங்களை யறியாமல் எப்படி போவான்?

வக்கீல் :—ஐயோ! சத்தியமாகத் திருடனைக் கண்ட பிறகே கதவைச் சாத்தினேன். அதில் எள்ளளவும் பிசகில்லை; இது வியப்பாகவே யிருக்கிறது.

இன்ஸ்பெக்டர்! போங்காணும்! ஒருக்காலுமில்லை. கனாக் கண்டிருக்கிறீர்; போலீசாரை அவமானப் படுத்த வேண்டுமென்று நெடு நாட்களாகக் கருதி யிருந்தீர் போலும்! படித்த நாய்களின் வேலை இப்படித்தான் இருக்கும்.

வக்கீல் :—தெய்வமே! ஒருபோதும் நான் அப்படி எண்ணவேயில்லை; கோபம் வேண்டாம்; உங்களை அவமானப்படுத்துவதால் எனக்கு யாது பயன்?

இன்ஸ்பெக்டர் :—"அஃதெனக்குத் தெரியுமா? நீர் எவ்வளவு தூரம் கூறினாலும் நான் நம்பவே-

மாட்டேன்; உம்மை எளிதில் விடப்போவதில்லை; போலீசாரை அவமானப் படுத்தியதற்குத் தகுந்த தண்டனை அடையாமற் போகமாட்டீர். இதை நன்றாக அறிந்து கொள்ளும்" என்று கோபத்தோடு கூறினர்.

வக்கீல் என்ன செய்வார்! பாவம்! திருடனிடம் மூவாயிரம் ரூபாய்கள் பறிகொடுத்தது மல்லாமல், இன்ஸ்பெக்டருக்கு இருநூறு ரூபாய்கள் கொடுத்துச் சமாதானம் பண்ணவேண்டியதாயிற்று. "குதிரை செத்ததுமல்லாமல் குழிதோண்டவும் பத்துப்பணம்" என்பதுபோல முடிந்துவிட்டதே யென்று வக்கீல் தலையிற் கையை வைத்துக்கொண்டு அழுதார்.

"நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
வம்புக்காம், பேய்க்காம்............

என்று நமது நாட்டுச் சான்றோர் கூறியது பொய் யாகுமா? திருடன் எப்படித் தப்பித்துச் சென்றான் எனின், அவன் நின்றுகொண்டிருந்த அறையின் கதவு படீர் என்று அடைக்கப்பட்டதும் அவனுக்குத் திகில் உண்டாகிவிட்டது. வக்கீல் மோசஞ்செய்து விட்டா ரென்று எண்ணினன். தப்பித்துச்செல்ல வழியில்லை. அலமாரியின் மேலிருந்த சாளரத்தை நோக்கினன். அதிற் கம்பிகள் இணைக்கப் பெற்றிருக்கவில்லை. உடனே அலமாரியின்மீது ஏறி வெளிப்பக்கத்தை நோக்கினன். பூமி பாதாளம்போலத் தெரிந்தது. என்செய்வான்? அவர்களிடம் அகப்பட்டு இறப் பதைக் காட்டிலும், இதன் வழியாகக் குதித்தால் ஆகிறபடி யாகட்டுமென்று எண்ணியவனாய்க் குதித் தான். அவனுக்கு நற்காலமானதால், அங்கு இரண்டு

மூன்று வைக்கோற் கட்டுகள் கிடந்தன. அவைகளின் மீது விழுந்ததால் சிறிதும் காய மேற்படவில்லை. உடனே ஓடிவிட்டான்.

இங்கு நடந்த ஒவ்வொன்றையும், தொடக்கத்தி லிருந்து இறுதிவரை மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த ஓருருவம் தன்வழியே சென்றது.

இறைவன், மக்களுக்கு எதன்பொருட்டுச் செல் வத்தைக் கொடுத்திருக்கிறான்? நாம் உண்டு உடுப்ப தற்காக அன்று; அந்த உண்மையை உணர்ந்த வனே செல்வத்தைப் பெற்றதால் ஆயபயனை அடைந்த வனாவான். சிலர், பிறர் மெச்சும்பொருட்டும், ஆடம் பரத்திற்கும் அறஞ்செய்ய விழைவர். அதனால் வரும் பயன் என்னை? மனிதனைத் தொடர்வன புண்ணிய பாவமிரண்டே. அறஞ்செய்வதால் வரும் இன்பத்திற் கும், அதை மறத்தலினால்வருந் துன்பத்திற்கும் எல்லை யின்று. 'இதுகாலை நாம் இளைஞனாகவே யிருக்கிறோம்; முதுமையிலன்றோ அறஞ்செய்தல் வேண்டும்' என்று எண்ணுதல் அறியாமையின் பாலதே. இளமை முதல் உயிர் உடலைவிட்டு நீங்கும்வரை அறஞ்செய்துவருதல் நன்மையே பயப்பதாம். மனிதன் அடையவேண்டிய பேறு நான்கினுள் அறம் தலை சிறந்ததன்றோ? இத் தகைய பேரறத்தை ஆற்றுதற்கு யாவரும் விரைதல் வேண்டும். அதற்காக, இருக்கும் பொருள் யாவற்றை யுங் கொடுத்துவிட வேண்டுமென்பது பொருளல்ல. அதற்கும் ஓரளவுண்டு.

"வந்த பொருளிற் காற்கூறு வருமேல்
இடர்நீங் குதற்கமைத்து
மைந்த! இருகால் நினக்காக்கி
மற்றைக் காலே வழங்கிடுக"

எனப் பெரியார் கூறுவர். ஆதலின், ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்றவரை ஒல்லும் வாயெல்லாம் அறஞ் செய்வானாயின், அது நல்லுலகஞ் சேறற்குப் புல்லிய பெருந்துணையாகும்.

---

## பன்னிரண்டாவது அதிகாரம்

---

"இன்னா தினனில்லூர் வாழ்தல்; அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு"—குறள்.

பிரிவெனுந் துயர்க்கடல் பிழைக்க லாகுமோ? சாரதாம்பாளின் நிலை.

சாரதாம்பாள், பூந்தோட்டத்திலுள்ள ஒரு சலவைக் கல்லின்மீது உட்கார்ந்திருந்தாள். அவளுடைய கூந்தல் அவிழ்ந்து இருபுறமுந் தொங்கிக்கொண்டிருந்தது. அடிக்கடி கண்களினின்று வரும் அருவிபோன்ற நீரைத் துடைத்துக் கொண்டாள். இப்பொழுது அவளுடைய முகத்தின் தோற்றம், கரியமேகக் கூட்டங்களால் மறைக்கப்பட்ட சந்திரனைப்போன் றிருந்தது. சிறிது நேரம் அசைவற்றிருந்தாள். பிறகு, "என் காதல! காதல!! நான் என் செய்வேன்! உம்முடைய சிற்றப்பன் உம்மை எங்குக் கொண்டுபோய் அடைத்துவைத் திருக்கிறானோ? நீர் இருக்கின்ற இடத்தை என்னால் அறிய முடியவில்லை. என்னுடைய தந்தையும் உம்மைத் தேடித் திரிகிறார். காதா! உம்மை உயிருடன் வைத்திருக்கின்றார்களா? அன்றிப் பாவிகள் கொன்றுவிட்டார்களா? ஐயோ! பெண்ணாகிய நான் உம்மைப்பிரிந்து எங்ஙனம் உயிர்

வாழ்வேன்! என்னைப்போலப் பாக்கிய மற்றவர்கள் உலகிலுண்டா? உமது இனிய முகத்தையும், அன்பு உரைகளையும் நான் இனிக்காண்டல் கூடுமா? தங்களை மணந்தன்றோ இன்பம் நுகர எண்ணினேன்! இவ்வுலகில் உம்மையன்றி எனக்கு இன்பமான பொருள் வேறு யாதிருக்கின்றது? உம்முடைய வலிமை எங்கே? வீரம் எங்கே? உம்முடைய சிற்றப்பன் செய்யுங் கொடுமைகளுள் இதுவும் ஒன்றுபோலும்! ஓ! கடவுளே! இப்படி நிலையும் வருமா! காதல! **மணிவாசகரே!** உம்முடைய மணிவாசகம் யாண்டுச் சென்றொளித்தது. உம்முடைய மணிவாசகத்தை என்செவிகள் இனியும் கேட்கின்ற பாக்கியம் பெறுமா? உம்மை என்னென்ன துன்பங்கட் குட்படுத்தினார்களோ! ஐயோ! இது தலைவிதியா?" என்று வாய்விட்டு அரற்றினாள்: தன்னுடைய துன்பங்களை நினைந்து வாடினாள்: காம்பொடிந்த மலர்போலக் கலங்கித் தன்னை மறந்தாள். கண்களினின்று பெருகிய நீர், அவளுடைய கண்ணாடிபோன்ற கதுப்புக்களில் பாய்ந்தோடிற்று. கணவனையே, தன்னுயிர் என்றும், தெய்வமென்றும் கருதும் மகளிர், கணவனைப் பிரிய நேர்ந்தால் உள்ளம் புழுங்குதல் இயற்கையன்றோ? மணிவாசகனைக் காணமுடியுமா என்ற ஏக்கத்தால், செய்வ தின்னதென்று உணராமல் அசைவற்றிருந்தாள். அப்போது அவளுடைய தோழியாகிய தனபாக்கியம் அங்குவந்து, சாரதாம்பாளின் நிலையைக் கண்டு ஆற்றாதவளாய், "அம்மா! ஏன் வீணாக வருந்தி உடம்பைக் கெடுத்துக் கொள்ளுகிறாய்? வருகிற விதியிருந்தால் வழியிற் றங்கவா போகிறது? பேசாமல் தைரியமாயிரு" என்றாள்.

**சாரதாம்பாள் :**—இந்த உடல் எப்படியானு லென்ன? அவருக்காகவன்றே சுமந்திருக்கின்றேன். அவர் துன்ப முறுகின்றபோது இவ்வுடலும் துன்ப முற வேண்டியதுதானே முறை?

**தனபாக்கியம் :**—வீணுக வருந்துகிருய்; துப்பறியும் இரங்கநாதன் அவசியம் கண்டுபிடித்து மீட்காமல் திரும்பமாட்டார். விரைவில் நற்செய்தி கேள்வியுறுவாய். உன்னுடைய தந்தையும் பல இடங்கட்கு ஆள் அனுப்பித் தேடிக்கொண்டேயிருக்கிருர்.

**சாரதாம்பாள் :**—அந்தோ! அவர் பிரிவை என்னுல் ஆற்ற இயலவில்லை; நான் என்செய்வேன்! ஐயோ! அவரைக் கொன்றுவிடுவார்களாயின் என் கதி ஏப்படியாகும்?

**தனபாக்கியம் :**—அம்மா! கஷ்டமுருதவர் உலகில் யார்? விதி யிருந்தால் நுகர்ந்தே தீரவேண்டும். அதை வராமல் தடுக்க நம்மால் இயலுமா? ஜனகன் மகளாகிய சீதைகூட முற்காலத்தில் நாதனைப் பிரிந்து, அசோகவனத்தில் அரக்கர்களிடையில் துன்பமுற வில்லையா? அவளைத் துன்புறுத்திய இலங்கையர்கோன் கதி என்ன ஆயிற்று? தீமை புரிந்தவர்கள் அதை நுகர்தல் மறுக்க முடியாத உண்மையாகும். உன் காதலனை மறைத்து வைத்திருப்பவர்கள் எவ்விதமும் அரசாங்கத்தாரின் தண்டனைக் குள்ளாவார்கள்.

**சாரதாம்பாள :**—நீ எவ்வளவு தூரம் கூறினுலும் எனக்குச் சிறிதும் தைரியம் உண்டாகவில்லை; அவரை யிருடன் மறுபடியுங் காணப் பெறுவேனு என்றே என் மனம் தத்தளிக்கின்றது.

**தனபாக்கியம்** :—இஃதென்ன அறியாமை? ஒரு காலும் கொல்ல மாட்டார்கள். மனத் துன்பத்தை ஒழித்துவிடு; எல்லாவற்றிற்கும் மனந்தான் காரணம். பாரத்தைக் கடவுள்மீது சேர்த்து விட்டுத் தைரியமா யிரு.

**சாரதாம்பாள்** :—எந்த வகையை நினைந்து தைரியமாக இருப்பது? மூன்றுநாட்களாகத் தேடியும் பயன் பெற வில்லை; நான் ஒரு ஆண் பிள்ளையாக இருந்தால் வெளியிற்சென்றாயினுந் தேடுவேன்; பெண்ணாகிய நான் என் செய்வேன்!

**தனபாக்கியம்** :—ஆணாகப் பிறக்கவேண்டு மென்று விருப்ப மிருக்கிறது போலும்! அஃதிப் பிறப்பில் முடியாதே? நன்மையாக முடியவேண்டிய பருவம் வந்தால் தானே முடிந்துவிடுகிறது.

**சாரதாம்பாள்** :—நன்மையான பருவம் எப்பொழுது வரும்? நான் அவரை யெங்ஙனங் காண்பேன்?

**தனபாக்கியம்** :—அப் பருவம் வருகிறவரையிற் பொறுமையாகவே இருக்கவேண்டும். ஒரு காரியத்தைத் தொடங்குவோமாலுல், அது நன்மையாக முடிவதையும், தீமையாக முடிவதையும், அது நிறைவேறுங் காலத்தையும் நாம் அறிந்துகொள்ள இயலுமா?

**சாரதாம்பாள்** :—ஆனால்—என்னசெய்யவேண்டும்?

**தனபாக்கியம்** :—காலம் வரும்வரையிற் காத்திருப்பதே நலம்.

**சாரதாம்பாள்** :—எத்தனை நாட்களுக்கு இப்படியே யிருப்பேன்?

**தனபாக்கியம் :**—உன்னுடைய உயிர் உடலில் இருக்கும் வரையில்—நம்பிக்கையுடன் இருக்கத்தான் வேண்டும்.

**சாரதாம்பாள் :**—இருப்பதா ? ஏதாயினும் வழி தேடிக் கொள்ள வேண்டியதே.

**தனபாக்கியம்:**—என்ன வழி ? எந்த ஊருக்குச்செல்ல ?

**சாரதாம்பாள் :**—என்னுடைய வாழ்க்கையை ஒழித்து, மறு பிறப்பிலாயினும் மணிவாசகரை மணந்து வாழும் பொருட்டு—

**தனபாக்கியம் :**—சே ! பைத்தியம் ? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய் ? அத்தகைய கஷ்டம் என்ன வந்துவிட்டது ?

**சாரதாம்பாள்:**—இவ்வுலகிலிருந்தால் கணவனுக்கு வழிபாடு செய்யவேண்டும் ; அதையும் நான் இழந்து விட்டேன் ; அவரை யிழந்த எனக்கு இவ்வுலகில் வேறென்ன இருக்கிறது? கேவலம் என் உடலைப் பேணும் பொருட்டா நான் வாழவேண்டும் ?

**தனபாக்கியம் :**—"அம்மா! வீணே தற்கொலை செய்து கொள்ளப் போகிறாய் ; அது பெரும் பாவம் ; தைரியத்தோடிரு; விரைவில் உன்னுடைய நாதனைக் காணப் பெறுவாய் ; அதோ ! என்னை அழைக்கிறார்கள் ; நான் போகிறேன்"

என்று எழுந்து சென்றாள். சாரதாம்பாளுக்கு, யார் சமாதானம் கூறியபோதிலும் ஏற்குமா ? கட்டழகு வாய்ந்த மெல்லிளம் பூவை வடிவான சாரதாம்பாளின் மன நிலையும், உடல் நிலையும் கூற இயலாதனவா யிருந்தன. எண்ணற்ற இன்பங்கள் செறிந்த பொன்னுலகத்தில் நுழையப்போகும் தகுதியிலிருப்ப

வன், திடீரென்று பயங்கரம் நிறைந்த நிரயத்தில் கொண்டுபோய்த் தள்ளப்படுவதைப் போலத் தனது ஆருயிர்க் காதலனை மணிவாசகனது பேரின்பத்தில் வாழ்ந்து, கற்கண்டினும், தேனினும் இனிய-ஒப்பற்ற அவனுடைய சொல்லமுதை அள்ளி யள்ளிப் பருகிய அவள், இப்பொழுது அவனை யிழந்து, வன் சிறை யொடிந்த புட்போல வாடி யிருந்தாள். அழகெலாந் திரண்டு ஓருருவமான அவள் உடல், இப்பொழுது துயரமே வடிவாயிருந்தது. மணிவாசகனுடைய மனத்தோடு மனமும், உயிரோடு உயிரும் ஒன்று சேரப் போகும் அமயம் அவன் பிரிக்கப்படவே, உண்மையில் மனமுடைந்து விட்டாள். அப் பெண்ணணங்கை, உயிர்த் தலைவனைவிட்டுப் பிரிந்த கலக்கமும், துயரமும், துன்பமும் ஒன்றுகூடிக் கரையற்ற இன்னற் கடலில் வீழ்த்தி வதைக்கத் தொடங்கின. மணிவாசகனுக்கும், தனக்கு முள்ள தொடர்பு அற்றுவிடுமோ என்று சோர்ந்தாள்; கசக்கி எறியப்பட்ட மலரைப்போன்று புலர்ந்தாள்; மனதைக் கொள்ளைகொண்ட மணிவாசகனுடைய இனிய உருவம் அவள் முன் தோன்றியது. சில நாட்களாக அவன் தன்னோடு கூடி உறவாடியதும், அமுத மன்ன சொற்களும் ஒன்றின் பின் னொன்றாய் நினைவிற்கு வந்தன; ஆகையால், ஒரு புறம் இன்ப ஊற்றுப் பெருக்கெடுத்த வண்ணம் இருந்தது. எனினும், அவனைக் காணப் பெறுவோமா என்ற கவலையும், தனக்கு ஏற்பட்ட பிரிவின் காலம் மிகுதிப்பட்டுக் கொண்டே போனதால் பெருகிய வண்ணம் இருந்த வேதனையும் சேர்ந்து அவள் உடலைக் கருக்கின. இரங்கநாதன், தன் காதலனை எப்படியும் கண்டுபிடித்து மீட்பாரென்று தேறினள்.

பலவகையான நினைவுகளாலும், இரண்டு மூன்று நாட்களாக இரவில் உறங்காதபடியாலும் உடல் சோர்ந்தது. துயிலென்னும் செவிலித்தாய், அம் மாதைத் தாலாட்டத் தொடங்கினாள். கண் இமைகள் அவளை யறியாமல் தாமாகவே மூடிக்கொண்டன. படிப்படியாக உணர்ச்சியும் தளர்ந்தது. சில நிமிடங்களில் ஆழ்ந்த துயிலில் மயங்கிவிட்டாள். இரண்டு நாட்களாகச் சரியான உணவில்லையாதலின், அதனலெழுந்த பித்தம் முதலாயின தம்முடைய வேலையைச் செய்யத் தொடங்கின. பயங்கரமான சொற்பனங்கள் தோன்றி அவளை வருத்தின. அரைமணிக்குப் பிறகு விழித்துக் கொண்டாள். உடல் முற்றிலும் வியர்வை பொங்கி வழிந்து முன்னமேயே கண்ணீரால் நனைந்திருந்த புடவை இரவிக்கை முதலியன யாவும் சேருகிவிட்டன. சலவைக்கல்லில் இருந்த அவளுடல் கீழே சாய்ந்தது ; ஆவி துடித்தது ; ஒரு நிமிடம் கழிவது ஒரு யுகமாக விருந்தது; பொழுதும் கழிந்தது; மாலைக் காலமும் வந்தது. அப்பொழுது வீசிய தென்றற் காற்று அவளுடற்கு இன்பம் அளிக்கவில்லை. இப்படிக் கருகிக்காய்ந்த மேனியோடு அப் பெண்ணரசி வீற்றிருந்தாள்.

**"செல்லாமை யுண்டேல் எனக்குரை ; மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை"**

என்னுந் தகுதியுடையவ ளாதலின், கலங்கி ஓவியம் போன்று அசைவின்றி யிருந்தாள். காதலிக்குக் காதலனைப் பிரிதலைக்காட்டிலும் சாதுயர் வேறில்லை யன்றோ? பிறகு கடவுளை நினைந்து, "காந்திமதியே! ஒரு குற்றமும் செய்யாத என் காதலனைக் கொடியோர் துன்புறுத்துவது முறையா? எங்கும் உள்ள நீ அறி

யாத தொன்றுண்டா? நான் உன்னையே துணையென நம்பிக் கொண்டிருக்கிறேன்; என் காதலனுக்கு ஒரு துன்பமும் ஏற்படாமற் காப்பாற்றவேண்டுவது உன் கடமையே" என்று பிரார்த்தித்தாள். 'கடவுளை நம்பினோர் கை விடப் படார்' என்று தேறினாள். யாழிசையோ என்று ஐயுறத்தக்க தனது தீங்குரலில் பின்வருஞ் செய்யுளை நெஞ்சுருகப் பாடினாள்:—

"தொடக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறை பழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்தில்அழ
கொழுக எதிர்ப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக!! வருகவே!!!"

பிறகு வீட்டிற்குச் செல்லுவோமென்று எழுந்தாள். கால்கள் தள்ளாடின. அப்படியே சலவைக் கல்லின்மீது மூர்ச்சையாய்ச் சாய்ந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு வந்து பார்த்த தனபாக்கியம், அவளை யெடுத்து மார்போடணைத்து, இல்லிற்கு ஏகினாள். அவள் நிலையைக் கண்ட சொக்கலிங்கம் பிள்ளையும்,

தாயாரம்மாளும் அளவிலாத் துக்க மடைந்தனர். சாரதாம்பாளுக்கு, மனத் தளர்ச்சியாலும், பித்தச் சூட்டாலும் சிறிது ஜுரம் உண்டாகி விட்டது. சாரதாம்பாள் கண்களைத் திறக்கவேயில்லை. அவள் நிலை கவலைக் கிடமாக இருந்தது. சொக்கலிங்கம்பிள்ளை, உடனே ஓடிப்போய் டாக்டர் நஞ்சுண்டராவை அழைத்து வந்தார். டாக்டர், சாரதாம்பாளின் கைநாடியைச் சோதித்துவிட்டு மிகக் கவலையாக, "ஐயா! நாடி அப்படியே நின்றுவிடுமோ என்று நினைக்கும்படி அவ்வளவு கேவலமான நிலையில் இருக்கிறது; இன்னும் ஜுரம் மிகுதிப்படுமென்றே கருதுகிறேன்; இதோ! வீட்டிற்குச் சென்று ஒரு மருந்தை யனுப்புகிறேன், இரண்டு மணிக்கு ஒரு முறை கொடுங்கள்; நாளைக் காலை ஒன்பது மணிக்கு மறுபடியும் வருகிறேன்" என்று கூறிச்சென்முர். சிறிது நேரத்தில் மருந்தும் வந்தது. அதில் ஒரு பாகத்தைச் சாரதாம்பாளுக்குக் கொடுத்தார்கள். அவள் அதை அருந்தியதும் அயர்ந்து தூங்கினாள். சொக்கலிங்கம் பிள்ளைக்கும், தாயாரம்மாளுக்கும் 'நாடி மிகக் கேவலமான நிலையில் இருக்கிறது' என்பதைக் கேட்டவுடன் மிகக் கவலையும் கலக்கமும் உண்டாகிவிட்டன. இருவரும் அன்றிரவு முழுவதும் அவள் அருகிலேயே விழித்துக்கொண்டு, சாரதாம்பாளின் முகத்தைப் பார்ப்பதும் வருந்துவது மாக இருந்தார்கள். இரவு கழிந்துகொண்டே யிருந் தது. டாக்டர் கூறியபடி இரண்டுமணிக் கொருமுறை தவருமல் மருந்தைக் கொடுத்தார்கள். அவளுடைய உடம்பில் ஒருவிதமான மாறுபாடு காணப்பட்டது. உடம்பில் சூடும் மிகுதிப்படத் தொடங்கியது. வாய் பிதற்றினாள். அடிக்கொருக்கால் "காதல! மணிவாச

கரோ! திரும்பி வருவீரா?" என்று கூறினாள். கைகால்கள் நடுங்கின. ஓரிடத்திற் கிடவாமல் நான்கு பக்கங்களிலும் புரண்டுகொண்டிருந்தாள். கண்கள் சுழன்றன. பொழுதும் விடிந்தது. காய்ச்சல் தணிந்தபாடில்லை. உயிர்ப்பில் தீப்பொறிகள் பறந்தன. முகம் விகாரத்தோற்ற மடைந்தது. டாக்டர், கூறியபடி ஒன்பதுமணிக்கு மறுபடியும் வந்தார். சாரதாம்பாளைச் சோதித்துவிட்டு "சரி! மற்றொரு மருந்து அனுப்புகிறேன்; அதையும் முன் கொடுத்தது போலவே கொடுங்கள்; மனத்தளர்ச்சியால் உடல் நலிந்திருக்கிறது. மிகக் கவனமாகப் பார்க்கவேண்டும்; சிறிது தவறினால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும்; இன்று முழுவதும் இப்படியே யிருக்குமானால் பிழைத்துக் கொள்ளுவாள்; இதற்குமேல் அதிகப்படுமானால் நான் ஒன்றுங் கூறமுடியாது" என்று சொல்லிவிட்டு வேறொரு மருந்தை யனுப்பினார். அதைக் கேட்டவுடன் சொக்கலிங்கம்பிள்ளை உயிரற்ற பிணம்போலானார். தாயாரம்மாளுக்குப் பெருந்திகில் உண்டாகி விட்டது. மகள்மாத்திரம் பிழைத் தெழுந்தால், காந்திமதி யம்மனுக்குத் தங்கத்தில் ஒரு திருமாங்கல்யம் செய்துவைப்பதாகப் பிரார்த்தித்துக் கொண்டாள். இருவரும் பெருங் கவலையுடையவர்களாய் ஒருவர் மாற்றி யொருவர் சாரதாம்பாளின் அருகிலேயே யிருந்தமேதாடு, மருந்தை வேளைக்குவேளை தவறுமற் கொடுத்து வந்தார்கள். அன்று முழுவதும் அவ்விருவர்பட்ட துன்பங்கள் கணக்கிலடங்கா. தமது செல்வம் முழுவதும் அதன்பொருட்டு அழிந்துபோனாலுங் கவலையில்லை யென்றும், அருமைக்குழந்தை சாரதாம்பாள் மாத்திரம் உயிர்பெற்று எழுந்துவிட வேண்டு

மென்றும் பிதற்றிக்கொண்டே பொழுது போக்கினர். அன்றிரவு எப்பொழுது போகும் போகும் என்று கவலைப்பட்டார்கள். மறுநாள் புலர்ந்ததும் ஜுரம் தணிந்துவிட்டது. அதுவரையில் பயங்கரமான நிலையிலிருந்த சாரதாம்பாளுடைய உடம்பில் தெளிவு ஏற்பட்டது. விகாரமும், சூடும் தணிந்தன. சிறிது ஆகாரமும் உட்கொண்டாள். அப்பொழுதுதான் சொக்கலிங்கம் பிள்ளையின் மனமும், தாயாரம்மாளின் மனமும் குளிர்ந்தன. அன்று மாலையில் ஜுரம் முழுவதும் நீங்கிவிட்டது. அவள் நிமிர்ந்து உட்காரவும், பேசவும் தொடங்கினள். டாக்டர் வந்து பார்த்துவிட்டு "இனிக் கவலைப்பட வேண்டியதில்லை; உடல் தெளிவதற்கு இன்னும் பத்துநாட்கள் செல்லும்; கொஞ்சம் புஷ்டியான உணவுகளைக் கொடுங்கள்" என்று சொல்லிச் சென்றார். இரண்டு நாட்களுக்குப் பிறகு சாரதாம்பாள் முழுவதும் தெளிவடைந்தவளாகிய பழைய அழகோடு கடைந்தெடுத்த தங்கப்பதுமை போன்று விளங்கினள்; எனினும் மணிவாசகனைப் பிரிந்த கவலை மாத்திரம் ஒழியவில்லை. தனபாக்கியம் அருகிலேயேயிருந்து தைரியங் கூறிக்கொண்டிருந்தாள். இப்படியாகச் சிலநாட்கள் கழிந்தன. சாரதாம்பாள், மணிவாசகனையே நினைந்து 'எப்பொழுது வருவான் வருவான்' என்று, கடவுளைக் கருதி யோகம்புரியும் முனிவர்களைப்போல உருப் போட்டுக்கொண் டிருந்தாள். சில அமயங்களில், அவன் தனக்குக் கொடுத்த அவனுடைய புகைப்படத்தை யெடுத்துப் பார்ப்பதும், பிறகு சிவந்த அதரங்களால் முத்தமிடுவதும், அதை மார்போடு அணைத்துக் கொள்வதுமாய்ப் பொழுதைப் போக்குவாள். ஆனல், எப்படியும் காணப்பெறுவோம்

என்று எண்ணுகிறபோது, அவனுடைய நெஞ்சத் தாமரையில் இன்பத்தேன் அரும்பியது.

சொக்கலிக்கம் பிள்ளையும், தாயாரம்மாளும், எந்த விதத்திலும் மணிவாசகனை விரைவில் தேடிப் பிடித்து, அவ்விருவருக்கும் மணஞ்செய்து மகிழ வேண்டுமென்று தீர்மானஞ் செய்துகொண்டார்கள்.

---

## பதின்மூன்ருவது அதிகாரம்

---

"கல்வி சிறந்த தமிழ்நாடு உயர்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பலவித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு"—(பாரதியார்)

### சிந்தாமணியும்—மணிவாசகனும்

வேல்ஸ் இளவரசர் உணவுச் சாலையின் மேன் மாடியில் ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்குச் சிந்தாமணியும், மணிவாசகனும் பொது விஷயமாக உரையாடிக் கொண் டிருந்தார்கள். சிந்தாமணி, பத்திரிகையைப் பார்த்த வண்ணமாய், மணிவாசகனை நோக்கி, நண்பரே! நம்முடைய தேசம் எப்பொழுது முன்னேற்ற மடையுமென்று எனக்கு விளங்க வில்லை" என்முன்.

**மணிவாசகன்** :—அப்படிக் கூறுதல் தவறு; மக்களை முன்னிலைக்குக் கொண்டுவர முயல வேண்டும். அங்ஙனஞ் செய்யாத வரையில் முடியாதுதான்.

**சிந்தாமணி** :—நண்பரே! நான் கூறியதில் ஒன்றுந் தவறில்லை; முதலாவது பாருங்கள்; தற்பொழுது

நாத்திகமும், மூடபக்தியுமே நாட்டிற் காணப் படுகின்றன. மக்கள் கல்வி யறிவின்றி, ஆராய்ச்சி யின்றி, மூடக் கொள்கையே உண்மை யென்று நம்பி அளவிட முடியாத துன்பத்தில் ஆழ்ந் திருக்கின்றனர். மேனாட்டை நோக்க, நமது நாடு எவ்வளவு தூரந் தாழ்ந்து கிடக்கின்றது?

**மணிவாசகன் :**—மேனாட்டாரும் ஒரு காலத்தில் நமது நாட்டாரைப் போல—ஏன்? மிக அதிகமாய் மூட பக்தி யுடையவர்களாய் வாழ்ந்தார்கள்; கிறிஸ்து சமயம் தலையெடுத்த பிறகே ஒரு வகை யாய் நாகரீக மடைந்தனர். உலகம் நாளடைவில் மாறிக்கொண்டு வருதல் இயற்கையே. முதன் முதலாகப் புகைவண்டி அந்நாட்டில் ஓடத் தொடங்கியபோது அவர்கள் வெறுப்புற்றார் களே யன்றிக் களிப்படைய வில்லை. அதைப் பேய் என்றுகூடச் சிலர் புறக்கணித்தனர். கத் தியும், முள்ளுங் கொண்டு உண்ணும் மேனாட் டார் கையினாலுண்பதை விட்டுச் சுமார் முன் னூறு ஆண்டுகளே யாகின்றன. உலகத்தின் நாக ரீகமும், வழக்கங்களும் காலத்தைப் பொறுத்தே நிகழ்கின்றன. அதுபோல வர வரத் திருந்தி விடுதல் உண்மையே யாகும்.

**சிந்தாமணி :**—இந்நாளில், மக்கள் முன்னிருந்ததை விட மிகக் கொடிய நிலையில் இருக்கிறார்களென் பதை யாரும் மறுக்க முடியாது. மூடபக்தி என்ற பொல்லாப் பெரும் பேய் தொலைந்தா லன்றி நாடு முன்னேற வழியில்லை. கேவலம் தன்னலம் பேணும் சுயநலப் புலிகள், மிகுதி

யாகிவிட்ட படியால், அவர்கட்காகப் பாடுபடுவோர் அருகி யிருக்கின்றனர்.

**மணிவாசகன்** :—நண்பரே! அஃதுண்மை தான்; மேனாட்டார் இது போழ்து முன்னேற்ற மடைந்திருப்பதற்குக் காரணம், அவர்களுடைய கல்விப் பெருக்கே. புதிய புதிய நூல்களை வரைவதிலும், அவற்றை ஆராய்ச்சி செய்வதிலும் அவர்கள் பின்வாங்க வில்லை. அவர்கள் கல்வியின் மீது கொண்டிருக்கும் ஆர்வத்திற்கு ஓர் அளவுண்டா? மேனாட்டிலுள்ள ஒவ்வொருவனும், ஒன்றைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டே யிருக்கிறான்; அறிவுடையவன் மேலானவ னன்றோ? அவர்கள் அறிவைப் பெருக்கி வாழ்கின்றனர்; நாம் அறியாமையைப் பெருக்கி வாழ்கின்றோம். இதுதான், அவர்கட்கும் நமக்கும், இடையிலுள்ள பேதம். நமது முன்னோரை எண்ணுகின்ற போது, எனக்கு ஒருவித வீரமும், இன்பமும் எழுகின்றன. முற்காலத்தில், பெரியார் கண்ட அறிவு வெள்ளம் நாட்டை வளமுறச் செய்தது. மனிதனுக்கு அறிவே சிறந்த கருவியன்றோ?

**சிந்தாமணி** :—மேனாட்டிற் கல்வியலை கணக்கின்றி வீசுகின்றன. அவர்கள் ஆராயும் நூல்கள் அந்நாட்டிற்கு வனப்பையும் வளத்தையும் கொடுக்கின்றன. நமது முன்னோர் அரும்பெரு நூல்களை இயற்றி யிருக்கின்றன ராயினும், நம்முடைய ஆராய்ச்சிக் குறைவால் அவை யாவும் மாசுற்ற மணிகளாய்க் கிடக்கின்றன. 'அறிவு' என்னும் அருவி மேனாட்டிற் பொங்கித் ததும்புகின்றது;

நமது நாட்டில் 'அறியாமை' என்னுங் காட்டாறு கொந்தளித்து அலை வீசுகின்றது. நமது கவனக் குறைவும், சோம்பேறித்தனமுமே இவற்றிற்குக் காரணமாக இருக்கின்றன. பண்டை நாளில், மக்கள் ஞானமும், கல்வியும் நிறையப் பெற்று வாழ்ந்தனர். இப்பொழுது பிறந்தது முதல் இறக்கும் வரை உலக வாழ்க்கையிலேயே மயங்கு வோர் பலர்; அந்தோ! நாடு எவ்வளவு தாழ்ந்து விட்டது! முத்தையும், பொன்னையும் பிறருக்கு அள்ளி யள்ளிக் கொடுத்த செல்வர்கள் யாண்டுச் சென்றனர்? வளம் அறாத நிலங்கள் எங்கே? அம்மம்மா! முற்காலத்திற்கும் தற்காலத் திற்கும் எவ்வளவு வேற்றுமை!

**மணிவாசகன் :—** முற் காலத்தோடு தற்காலத்தைச் சேர்ப்பது தவறு. முற்காலத்திற்கு எதை யுவமை யாகக் கூற முடியும்? உயிரை யிழந்தாலும் மானத்தை யிழக்கத் துணியாத ஒப்பற்ற வீரர்க ளன்றோ முற்காலத்தில் வாழ்ந்தனர்? அங்ஙனம் தலை சிறந்து, வீரத்தில் முடி மணியாக இருந்த தற்குக் காரணம உண்டு. மக்கள், கல்வியோடு வீரமும் செறிந்தவர்களாய் வாழ்ந்தார்கள். உண் மையாகக் கூறுமிடத்துத் தாய்மார்கள் அறி வுடையோராய்த் தம் மக்களை நன்னெறிக் கண் பழக்கி வருவார்களாயின், மக்கட் கூட்டம் உல கத்தே பெருமையும், புகழும் எய்தக் கூடும். முலைப் பாலோடு வீரமுங் கலந்து ஊட்டப் படுமாயின் மனவுறுதி யுளதாகும் என்பது திண் ணம். இப்படித் தாய்மார்கள் முற்காலத்தில் மிகுந்திருந்தனர். அதை நூல்கள் வாயிலாக

நாம் உணரக் கூடும். இவற்றை யறிந்து நடத்தக் கூடியவர்கள் தாய்மார்களே. அவர்களே தமிழ் நாட்டின் வீரத்தைப் பாதுகாத்தனர். அவர்கள், எப்படிக் காதலை வளர்த்தார்களோ, அப்படியே வீரத்தையும் வளர்த்தனர். நமது நாட்டின் வீரத்தைக் குறிக்கும் ஒரு செய்யுள் நினைவிற்கு வருகின்றது ;

"தருமமும் ஈதேயாம் தானமும் ஈதாம்
கருமமுங் காணுங்கால் ஈதாம்—செருமுனையில்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப என்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்"

வீரத்தாய் ஒருத்தி "தன் மகன் போர்க்களத்திலே சாகப் பெற்றால், அதுவே தானமும் தருமமுங் கருமமும், ஆகும்" என்று கூறுகிறாள். தன் மகன்போர்க்களத்தே மடிதல் தந்நாட்டின் நலங் கருதியே யன்றித் தன்னலங் கருதியதன் றாத லால், அதைக் காட்டிலும் சிறந்த கருமமும், தருமமும் இல்லையெனக் கருதினாள். ஒரு ஆடவன், போர்க்களத்திலே புறமுதுகிட்டு மீண்டான். அவனைக்கண்ட அவனுடைய தாய், "அப்பா! மகனே! பிழைத்து வந்ததே போதும்" என்று கூறி மகிழ்ந்தாளா? அன்று; அன்று. தன் மானங் குறைந்து போயிற்றே யென்று வருந்திய வளாய், "போர்முனையில் உயிர் கொடாது புறங் கொடுத்தனை யன்றோ? நமது நாட்டிற்குப் பழி தேடி விட்டாயே! மூடா! உன்னைப் பெற்ற என் வயிற்றை இப்பொழுதே அறுத் தெறிவேன்! அறுத் தெறிவேன்!!" என்று கதறுகின்றாள். இவளன்றோ தாய்! இஃதன்றோ வீரம்! "தன்

மகன் மூடனாகவே நிறைந்த ஆயுளுடன் இருந்தாற் போதும்" என்று கருதுகின்ற இக்காலத்துப் பெண்டிற்கும், மேற் கூறிய தாய்க்கும் எவ்வளவு பேதம் இருக்கின்றது. முற்காலத்துப் பெண்டிர்க்கு, எவ்வளவு உயர்வும் பெருமையுங் கொண்ட மனநிலை இருந்ததென்பது புலப்படும். அக்காலத்துத் தாய்மார், குழந்தைகளைப் பெறுவது. அவரிடம் ஓர் அற்புதச் செயலையேனுங் கண்டு மகிழ்தற்கே. மகன், போர்முகத்திற் புறங் கொடாது வீரச்சாவை அடைந்தால், அது தாய் மார்கட்கு மகிழ்ச்சியை உண்டாக்கு மன்றித் துக்கத்தை உண்டாக்குவதில்லை. இதுகாலை நமது நாட்டுப் பெண்டிர் யாவரும் அந்நிலையை அடைந் தாலன்றோ நாட்டிற்கு விடுதலையுண்டு ?

**சிந்தாமணி** :—உண்மையே ; அது நிற்க, இளைஞர்கள் ஆண் சிங்கங்களாக எழுவதற்கு அறிவு வளர வேண்டும். கேவலம் மிருகபலம் பயன்படாது.. இளைஞர்கட்குக் குணஅழகும், உண்மை வீரமும் மிகுதல் இன்றியமையாதன. இளைஞருடைய அறிவும், நம்பிக்கையும், ஊக்கமுமே நமது நாட்டைப் புதுப்பிப்பதாகும். மூலைபார்த்து ஒதுங்கும் பூனைகளாக இருத்தல் கூடாது. உலகப் போக்கை நோக்கி முன்னேற வழி தேடவேண்டும். தமிழ்நாட்டின் வீரநிலை பரந்த அறிவு இளைஞரிடத்தேயே பொதிந் திருக்கின்றன.. அவற்றை விளக்கிப் பயன்பெறச் செய்தல் அவசியமாகும். இளைஞர்கள் வீரர்களாக வருதற்குத் தாய்மார்கள் அறிவுடையோராக இருத்தல் வேண்டும்.

மணிவாசகன் :—பண்டைக் காலத்தில், ஆடவர்களைப் போலவே பெண்களும் கல்வியுடையவர்களாய் விளங்கினார்கள். இருபாலரும் கல்வி கற்க வேண்டுமென்ற கொள்கை பரவியிருந்தது. பெண்களில் கவிகளாய் இலங்கியவர்களும் உண்டு. கல்வியே யாவற்றிற்கும் அடிப்படையான செல்வமென்று கருதினார்கள். பெண்களைத் தாழ்த்தி, அவர்கட்குக் கல்வியே கூடாது என்ற மூடக்கொள்கை இருக்கவில்லை. முற்காலத்தில் வீரத்தின் இயல்பை உள்ளவாறு உணர்தற்குக் கல்வியன்றோ முதற் காரணமாக விருந்தது ? இப்பொழுது பெண்கள் மிருகங்களைப்போல வாழ்கின்றனர். கல்வி சிறிதும் இல்லை. மிகுதியாகச் சொல்லுவானேன் ? ஆடவர்க்கே போதுமான கல்வி யில்லாதபோது, பெண்கள் எங்கே கல்வி கற்கப் போகின்றனர் ? பெண்கள் அடுப்பூதும் இயந்திரங்களாக இருக்கிறவரையில் நாடு வளர்ச்சியுறாது. இதற்கு இன்றியமையாச் சிறந்த கருவி பெண்கல்வியே யாகும்.

சிந்தாமணி :—பெண்கள் படித்தால் கள்ளப் புருடனுக்குக் கடிதம் வரைவார்கள் என்று சில மூடமணிகள் கருதுகின்றனர். முற்காலத்திற் படித்த பெண்கள் யாவரும் கள்ளப்புருடனுக்கா கடிதம் எழுதினர் ? அக்காலத்துப் பெரியார் அங்ஙனங் கருதவில்லை. அவர்களைவிட இப்பொழுது பெண் கல்வி கூடாதென்னும் பெரியவர்கள் எந்த வகையில் உயர்ந்துவிட்டனர் ? இவையெல்லாம் மூடக்கொள்கைகளே. இப்படிப்பட்ட மூடக்கொள்கைகள் சேர்ந்தே நமது நாட்டைக் கேழ

தாழ்த்திவிட்டன? ஆடவர்களைப்போலப் பெண் களும் படித்திருந்தால், வாழ்க்கை எவ்வளவு பெருமையாயும், இன்பமாயும் நடைபெறும்? மேனாட்டில் இருபாலரும் கல்வி கற்றதனாலேயே, அந்நாடு நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து, பல அறிவுக்கிளைகள் தோன்றிச் செழித்திருக்கின்றது. அதனால் பல துறையும் வளமுடைய வாயின. அறிவைப் பெருக்காதவரையில் ஆற்றலைப் பெருக்க இய லாது. அறிவைப் பெருக்கி, மூடபக்தியை யொழித்து, பகுத்தறிவை வளர்க்காதவர் முன் னேற முடியாது.

மணிவாசகன்:—நண்பரே! நமது நாட்டு மக்கள் எப் பொழுது சுதந்திரமிழந்து அடிமை யானார் களோ, அப்பொழுதே கலையாராய்ச்சி யொழிந் தது. பாதிக்குமேற் கடல்கொண்டு போய்விட் டது. எஞ்சியவற்றைக் காலவெள்ளம் கரந்து கொண்டது. நாடு முன்னேறுதற்குமுன், மொழி முன்னேறுதல் வேண்டும். வயிற்றுப் பிழைப் பைக் கருதி அந்நிய மொழியைப் பயிலுவதால் நாட்டிற் கேதேனும் பயனுண்டா? அந்நிய மொழியைப் பயின்றவர்கள், தாய்மொழியை இகழ்ந்து தள்ளுகின்றனர். போற்றுவோர் ஒரு சிலரே. மறைந்தொழிந்த கலையாராய்ச்சிகளும், மக்களும் மீண்டும் தோன்றுதல் அவசியமாகும். திரும்பிகு, பாரதியார் கூறுகிறபடி தெருவெல்லாம் தமிழ் முழங்கச்செய்தல் வேண்டும். இனியும் உறங்குவோமானால் மிக விரைவில் குருட்டர்களாகி விடுவோம். பிறநாட்டார் நம்மைக் கீழ்நாட்டோர்

என்று கூறுவதை நாம் காரணக்குறி யாக்கிக் கொள்ளக் கூடாது.

சிந்தாமணி :—நண்பரே! இனி மேனாட்டாரிடமிருந்து நாம் பழகிக்கொள்ள வேண்டியனவும் இருக்கின்றன. அவை, நடை, யுடை பாவனைகளன்று; வேறு சில உண்டு. அவர்கள் கல்வியிற் காட்டும் ஊக்கத்தையும், நவீன நூலாராய்ச்சியின் போக்கையும், தொழில்செய்து முடிக்கும் ஆற்றலையும், சாதி யபிமானத்தையும் பின்பற்றவே வேண்டும்.

மணிவாசகன் :—ஆம்- அவர்களுடைய கொடியகுணங்களைப் பற்றுவோர் பலர்; அஃதறிவுடைமை யாகாது. சிறந்தவைகளையே மேற்கொள்ளுதல் வேண்டும். ஆனால், அவர்களுடைய நாகரீகங்களில் வெறுக்கத்தக்கன பல விருக்கின்றன. இன்பம், செல்வம், அதிகாரம், ஆட்சி இவைகளே அவர்களின் நாகரீகங்கள். கோவிலுக்குச் செல்லுவதை, அவர்கள் ஆடம்பரமான உடையணிந்து ஓர் விளையாட்டாகக் கருதுவர். நம்மவர் அப்படிக் கருதுவதில்லை, அந்த வகையில் நாம் சிறந்தவர்களே. 'கோவில்' என்றால், நம்மவர் அதற்கொரு பக்தியும், அன்புங் காட்டுவர். மேனாட்டார் இன்பத்தையும், அதிகாரத்தையுமே விரும்புகின்றனர். அது நிற்க, இங்குள்ள கலாசாலைகளில், கல்வி பிறமொழி வாயிலாகப் பயிற்றப்படுவதால், மாணவர்கள் தத்தம் மொழிகளில் பேசவும், எழுதவும் முடியாதிருப்பதே நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாக இருக்கின்றது. அப்படிச் செய்தல் ஒழிய வேண்டும். கீழ்த்தரப் படிப்பு முதல் யாவும்

இயன்றவரை தாய் மொழியிலேயே பயிற்றப் படல் வேண்டும். அங்ஙனஞ் செய்து உயர்த்தினு லொழிய நாடு முன்னுக்குவர முடியாது. மக்கள் அனைவரும் ஒத்த திறமையினராய் உழைக்கப் படாத நாட்டார் உலக வாழ்க்கைப்போரில் தோல்வியுறுதல் நிச்சயம். கலாசாலைகளில் இலக் கியம் பயிற்றுவதுடன் கைத்தொழிலும் பயிற்ற வேண்டும். விவசாயம், வர்த்தகம் முதலாயின சிறிது சிறிதாகப் பயிற்றப்படல் இன்றியமையா தன. ஐரோப்பியருடைய சரித்திரங்களைப் படிப் பது எவ்வளவு அறியாமை! நமது பழைய நூல் களைப் பேணிப்பயிலாது புறக்கணித்தல் பெருங் குறையாம். இக்குறையை நீக்குவது நமது முக் கிய கடமையும் ஆகும்.

சிந்தாமணி :—நாம் எப்போதும் பிறருக்கு உதவி செய்யவே முயன்றுகொண் டிருக்கவேண்டும். அதுவே நமக்குச் சிறந்த தூண்டு கருவியாக இருத்தல் வேண்டும். ஆனல், நாம் நன்ருக எண் ணிப் பார்த்தால் பிறருக்கு உதவிசெய்யவே பிறந்திருக்கிரு மென்பது புலப்படும். மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியமும் கடமையிலேயே அடங்கும். ஆனல் கடமையை நன்னெறியில் உபயோகிக்கவேண்டும். நெருப்பு, நமக்குக் குளிர் காய்வதற்கு உபயோகப்படுங்கால் அதை மிக உயர்ந்தபொருள் என்று கூறுகிருேம்; நம் முடைய விரல்களை அது சுட்டுவிட்டால் அதைக் குறை கூறுகிறும், ஊன்றி நோக்குங்கால் அது இயற்கையில் நல்லது மன்று, கெட்டதுமன்று. நாம் உபயோகிக்கும் முறையே காரணமாகின்

றது. ஆகையால் நாம் நல்லதையே செய்து கொண்டிருக்கவேண்டும். பிறருக்கு உதவி செய்வதே ஒரு உரிமையென்று அறியவேண்டும். 'நல்லது செய்யவேண்டும்' என்ற விருப்பமே நம்மிடம் இருக்கும் சிறந்த தூண்டுகருவியாகும்.

மணிவாசகன் :—நண்பரே! மக்கட்கு உதவி செய்தோமென்றும், செய்துவிட்டேனென்றும் நினைப்பது முழுப் பிசகு. இவ்வித எண்ணமெல்லாம் மூட எண்ணமாகும். மூட எண்ணம் துக்கத்தையே கொடுக்கும். எவனோ ஒருவனுக்குஉதவி செய்தோமென்றும், அதற்காக அவன் நன்றி பாராட்டாத காரணத்தால் நம் மனதிற்குக் குறைவு ஏற்படுகிறது. நாம் ஏன் அதை எதிர் பார்க்கவேண்டும்? நாமே அம் மனிதனுக்கு நன்றி செலுத்தவேண்டும்; அவனைக் கடவுளாகக் கருதவேண்டும். நம் போன்ற மனிதனுக்கு உதவி செய்வதன் மூலமாகக் கடவுளை வணங்குவது பெரிய நன்மையல்லவா? இந்த வீணான எண்ணத்தை நீக்குவோமானால் மகிழ்ச்சியாகவே உலகில் வேலை செய்யலாம். பற்றின்றிச் செய்யும் வேலையால் துக்கம் உண்டாகாது. நம்முடைய உதவியை பெற்றுக் கொண்ட ஒரு பிச்சைக்காரன் நம்மிடங் கடன்படவில்லை; நாமே அவனுக்குக் கடன்பட்டவர்களாவோம். ஏனெனில், நம்முடைய தரும சிந்தையை நிறைவேற்றிக்கொள்ள அவன் இடங் கொடுத்தானல்லவா? உலகமானது நமக்காகத் தோற்றுவிக்கப்பட்டதானால் நாமும் உலகத்திற்காகத் தோற்றுவிக்கப் பட்டோம். நாம் மாத்திரம் நலம் நுகர்தற்கு

இவ்வுலகம் தோற்றுவிக்கப்பட்டது என்று நினைக்கும் கொடிய எண்ணமே நம்மைக் கீழே அழுத்திக்கொண்டு நிற்கிறது. நமக்காக உலகம் ஏற்பட்டதல்ல. ஒவ்வொரு ஆண்டிலும் இலக்ஷக் கணக்கான மக்கள் இறந்துகொண் டிருக் கிறார்கள். உலகம் அதனால் வருந்துகிறதில்லை. அவர்களுடைய இடத்தில் மற்றும் இலக்ஷக் கணக்கான மக்கள் தோன்றி விடுகிறார்கள். நமக் காக உலகம் எவ்வளவு தூரம் உதவியோ அவ்வ ளவே நாமும் உலகத்திற்காக ஆவோம். ஒழுங் காக வேலை செய்வதற்கு முதலில் பற்றுதலை யொழிக்க வேண்டும்.

சிந்தாமணி:—நண்பரே! நீங்கள் கூறுவது முற்றிலுஞ் சரியே. ஒரு பிச்சைக்காரனும் நமது உதவியை நம்பி யிருக்கவில்லை; உயிருடைப் பொருள் எது வுமே நம்மை நம்பி யிருக்கவில்லை. எல்லாம் உலகில் உதவி பெறுகிறார்கள் நம்மைப் போன்ற ஆயிரக் கணக்கான ஜனங்கள் இல்லாமற் போனு லும் உதவி பெறுவார்கள். இறைவ னருளால் உதவி செய்வதன் வழியாக அறிவைப் பெருக் கிக் கொள்ளுமாறு விடப்பட் டிருக்கிறோம். மனித வாழ்க்கையில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய சிறந்த பாடம் இதுவாகும். இப் பாடத்தை நன்றாக அறிந்துகொண்டோ மானால் ஒருபோதும் துக்கம் ஏற்படாது. இப்பொழுது நமது நண்பர்களில் ஒருவர் இறந்துவிட்டா ரென்று வைத்துக் கொள்ளுவோம்: அவர் வர வேண்டுமென்று உலகம் காத்துக் கொண்டு நின்றுவிடுமா? இல்லை. உலகத்தின் ஓட்டம்

போய்க்கொண்டே யிருக்கிறது. முடிவாகக் கூறு மிடத்துப் பிச்சைக்காரன் நமக்குப் புண்ணி யத்தை உதவுகின்றான். நாம் அதைச் சுமந்து செல்லும் சுமையாட்கள் (Porter) ஆகின்றோம். ஆகவே கடமையின் குறிக்கோளை (லக்ஷியம்) யுணர்ந்து வேலையைச்செய்துகொண்டு போவதே மேன்மையை யளிப்பதாகும்.

மணிவாசகன்:—"இன்னும் ஒரே சிறு சங்கதி கூற விரும்புகிறேன்; நேரமும் அதிகமாய் விட்டது எல்லாச் சமயங்கட்கும் தாயகமாயுள்ள சைவ சமயத்தைக் கடைப்பிடித் தொழுகுவோர் சிவா லயங்களையும், உயிர்களையும் வழிபட்டு, கொல் லாமை முதலிய அறங்களைக் கொள்வதோடு நிற் காமல் மற்றவரையும் தம் வழியில் நிறுத்த முயல வேண்டும். விபூதி, உருத்திராக்க மணிந்து, ஆடு, கோழிகளைத் வதைத் துண்பவர் சைவராவரோ? இத்தகையோரைச் சைவரென்று எவ்வித மழைப்பது? அருளுடைமை தோன்றுமாயின், மற்ற செய்யவேண்டிய கடமைகள் தாமே மன தில் தோன்றும்" என்றான்.

பிறகு இருவரும் தத்தம் அறைகட்குச் சென்ற னர்.

---

# பதினான்காவது அதிகாரம்

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் ; தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்"—குறள்.

வினையிட்டவன் வினை யறுப்பான்—குற்றவாளிகள் கைது செய்யப்படுதல்—இரங்கநாதனின் ஆராய்ச்சி முடிவு—மணவிழா.

புட்டக்காரத்தி யம்மன் தெருவில் ஒரு மனிதன் சென்றுகொண் டிருக்கிறான். அவனுடைய உடைகள் மாசு படிந்திருந்தன. அவனுடைய உடம்பு முழுவதும் தூசி படியப் பெற்று விகாரமாய் விளங்கினான். அவன், அவ் வீதியிலுள்ள ஒவ்வொரு வீட்டையும் உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டே சென்றான். அவனைக் காண்போர், 'இவன் இவ்வூருக்குப் புதியவன் போலும்!' என்று கருதுவார்கள். அவன், வீதியின் கோடியிலுள்ள ஒரு வீட்டைக் கண்டதும்சிறிது யோசித்தான் ; பிறகு மெதுவாகக் கதவை இரண்டு மூன்று முறை தட்டினான். சில நிமிடங்கட்குப் பிறகு ஒரு கிழவன் சாளரத்தின் வழியாக நோக்கி "யாரது?" என்று கேட்டான். அதற்கு அம்மனிதன் "நான் தான். கதவைத் திற" என்றான். கதவு திறக்கப்பட்டதும் அம்மனிதன் உள்ளே நுழைந்தான். கிழவன் அவனைக் கண்டதே 'திரு திரு' என்று விழித்தான்.

அம்மனிதன் :—"அப்பா! ஏன் விழிக்கிறாய்? உன் மகன் கந்தனென்று தெரியவில்லையா? பெற்ற பிள்ளையைக் கூட மறப்பவர்கள் உலகில் இருக்கிறார்களா?" என்றான்.

கிழவன் :—ஆ! நீயா? எங்கிருந்து வருகிறாய்? எனக்கு அடையாளமே தெரியவில்லை; நிரம்ப மாறிவிட்டாய்; உடம்பும் இளைத்திருக்கிறது.

கந்தன் :—“அப்பா! அஃதெல்லாம் இருக்கட்டும்; பிறகு பேசிக் கொள்ளுவோம்; அம்மாள் எங்கே? எனக்குப் பசிக்கின்றது; முதலிற் சாப்பிடவேண்டும்” என்றான்.

கிழவன், ‘பெரிய நாயகி’ என்று அழைத்தான்.

ஒரு கிழவி ஆங்கு வந்துநின்றாள். கிழவன், அவளை நோக்கி, “இதோ! நம்மள் பையன் கந்தன் வந்திருக்கிறான்; பசிக்கிறதாம்; சாதம் வட்டித்துவை” என்றான். கிழவி, “ஆ! மகனே!” என்று கந்தனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, அவனுடைய கன்னங்களில் மாறிமாறி முத்தமிட்டாள். கந்தன், “அம்மா! விடு; விடு. வலிக்கிறது!” என்றான். பிறகு கிழவனும், கந்தனும் சாப்பிட்டு முடிந்ததும் கூடத்தில் வந்து அமர்ந்தார்கள்.

கிழவன் :—“ஏன் அப்பா! எங்கே யெல்லாம் போயிருந்தாய்; விபரமாகச் சொல்” என்றான்.

கந்தன் :—“நம்முடைய கதை மிகப் பெரிது. சுருக்கமாகச் சொல்லுகிறேன்; உங்களுடைய பேச்சைக் கேட்டு அம்பா சமுத்திரம் கொள்ளைக்காரரோடு சேர்ந்து திருடுவதற்குச் சென்றேன்; அன்று சென்ற யாவருக்கும் கெட்ட காலமானதால், போலீசார் பிடித்துக் கொண்டார்கள். என் செய்வது! விசாரணை நடந்து, ஒவ்வொருவனுக்கும் நான்கு வருடம் கடுங்காவல் தண்டனை விதித்து விட்டார்கள். நான் முதன் முதலில்

இவ்வூரிலுள்ள ஸப்ஜெயிலில் இருந்தேன். அங்கு பட்ட துன்பம் கொஞ்சமல்ல! என்னை மாவரைக்கும் வேலையில் அமர்த்தி விட்டார்கள். கை வலிக்கிறதென்று கொஞ்சம் அயர்ந்தால், பக்கத்திலே நிற்கும் தடியன் சேவகன் பொட்டென்று தலையி லடிப்பான். விதியை நினைந்து பொறுத்துக் கொண்டு இரண்டு வருடங்கள் கழித்து விட்டேன். பிறகு கூடலூருக்கு மாற்றி விட்டார்கள். அங்குச் சென்று சுகமாக இருக்கலாமென்று எண்ணினேன்; அங்கு தான் வாழ்ந்ததென்ன? இதைவிடத் துன்பம். பயிர்கட்குத் தண்ணீரிரைக்கும் வேலை எனக்குக் கிடைத்தது. மற்றவர்களெல்லாம் என்னுடைய துன்பத்தைக் கண்டு வருந்தாமல் கேலிசெய்யத் தொடங்கினார்கள். உடல் வலிக்கிறதென்று சேவகனைப் பார்த்தால், பாவிப்பயல் வெளுத்து வாங்கி விடுவான். உனக்கு என் துன்பங்களையெல்லாம் எழுதலா மென்று கருதினேன். அதிகாரியைக் கேட்ட போது "திருட்டு நாய்க்குக் கடிதமா?" என்று கோபித்துக் கண்டிப்பாக முடியாதென்று கூறிவிட்டார். இப்படியாக ஒரு வருடங் கழிந்தது. நான் இருந்த அறைக்குப் பக்கத் தறையில் ஒரு சாணான் இருந்தான். அவனை நான் நண்பனாக்கிக் கொண்டேன். நாங்கள் இருவருஞ் சேர்ந்து, யாரு மறியாமல் அங்குள்ள தென்னை மரங்களில் கள்ளுக் கட்டி இருவரும் தாராளாமாய்க் குடித்து வந்தோம். ஒருநாள், எங்களை நிறுத்துப் பார்ப்பதற்காக விலங்குகளைக் கழற்றி வரிசையாக நிற்கவைத்தார்கள். நான் ஒருவரு

மறியாமல் மறைந்து வேலியைக் கடந்து ஓடி வந்துவிட்டேன்" என்று கூறி முடித்தான்.

கிழவனும், பெரியநாயகியும் அதைக் கேட்டு அவனுடைய சாமர்த்தியங்களைப் புகழ்ந்து பேசினார்கள். கந்தன், "ஒரு சாராயப்புட்டி வேண்டும்" என்றான். கிழவன் அவ்வாறே சென்று வாங்கிவந்து கொடுத்தான். கந்தன், அதை வாங்கிக் குடிப்பவனைப் போல நடித்து முழுவதையும் குப்பை மேட்டில் ஊற்றிவிட்டுப் பிறகு மயக்கம் அடைந்தவனைப்போல நாற்காலியிற் படுத்துப் புரண்டான். அவ்விருவரும் அவன் உறங்குகிறானென்று கருதிக்கொண்டார்கள்.

கிழவன் :—"பார்த்தாயா ? பயல் மிகத் தந்திரமுள்ளவன் ! எப்படித் தப்பித்து வந்திருக்கிறான் ?" என்றான்.

பெரியநாயகி :—அஃது அவனுக்குச் சிறுபிள்ளை முதல் உள்ள குணந்தானே ; ஆனால், அவனுக்கு வாய் மாத்திரம் ஓட்டை. என்ன கேள்விப்பட்டாலும் வெளியிலே சொல்லிவிடுவான். நம்முடைய பிள்ளையானாலுங்கொஞ்சங் கவனமாகவேயிருந்து கொள்ளவேண்டும்.

கிழவன் :—சீச! இப்பொழுது பெரியவனாகிவிட்டான்; இனி யப்படியிருக்கமாட்டான் ; அது போகட்டும்—சிவராம பிள்ளை வீட்டிற்குப் போய் வந்தாயா ? என்ன சொன்னார் ?

பெரியநாயகி :—ஆம், போய் வந்ததுதான் மிச்சம் ; அவருக்கே செலவிற்குத் திண்டாட்டமாக இருக்கிறதாம். இப்பொழுது இயலாதென்றும், இன்னும் இரண்டு நாட்களுக்குப் பிறகு நூறு ரூபாய்கள் தருகிறேனென்றும் கூறுகிறார்.

கிழவன் :—பிள்ளை பொய் சொல்லி யிருக்கிறார்; இரண்டு நாட்களுக்கு முன் கூட ஒரு வேட்டை கிடைத்ததாம்.

பெரியநாயகி :—"சே! சே! இல்லை; அப்படியாயின் நமக்குக் கொடுக்கமறுக்கமாட்டார். அவருடைய நன்றியை, நாம் மறக்கலாமா? அவர், பன்னீர்ச் செல்வம் பிள்ளையை விடம்வைத்துக் கொன்ற சங்கதி நமக்குத் தெரிந்ததினா லல்லவா, நாம் வேண்டும்பொழுதெல்லாம் சென்று பயமுறுத்திக் காசுபறித்து வருகிறோம். வேறொருவரா யிருந்தால், நாம் பணம்பறிக்க முடியுமா? இவர் ரொம்ப நல்லவர்" என்றாள்.

இந்த அமயத்தில், கந்தன், "ஆ! அப்பொழுதே என்னுடைய பங்கை அரைத்து வைத்துவிட்டேன்" என்று கூவினான். கிழவன், பெரியநாயகியை நோக்கி, "பயல், பழைய நினைவினால் வாய் பிதற்றுகிறான்; போகட்டும். சிவராமபிள்ளை, பன்னீர்ச் செல்வம் பிள்ளையைக் கொன்ற சங்கதி கோவிந்தனுக்குத் தெரியுமோ?" என்று கேட்டான்.

பெரியநாயகி :—நன்றாய்த் தெரியும்; அதற்குள்ளாகவா மறந்துபோனீர்கள்? அவனுந்தானே கூட இருந்தான்? முதலாவது, கோவிந்தன் வழக்கம்போலப் பால் காய்ச்சிக்கொண்டு வந்தான்; சிவராம பிள்ளை, கடுதாசியி லிருந்து எதையோ எடுத்துக் கலக்கிவிட்டார். நாம் மூவருந்தானே பார்த்துக் கொண் டிருந்தோம்? நான்கூடப் பயந்து அலற வில்லையா?

கிழவன் :—சரி! கோவிந்தனை யார் கொன்றிருப்பார்கள்?

பெரியநாயகி :—அது நமக்கெப்படித் தெரியும்? சிவ ராம பிள்ளைதான் கொன்றிருப்பார். அவனையே கொன்றவர், நம்மையும் அப்படிச் செய்தாலுஞ் செய்வார்; நாம் விழிப்பாகவே யிருந்துகொள்ள வேண்டும்.

கிழவன் :—"சே! ஏன் பயப்படுகிறாய்? நம்மள் பையன் வந்துவிட்டான்; சிவராம பிள்ளை வந் தால் ஒரே அடியிற் கொன்று தூக்கி யெறிந்து விடுவான். சரி! இன்னொரு முறை சென்று கேட்கவேண்டும்" என்றான்.

இந்த அமயத்துல கநதன எழுநதுவ்டடான். அவ்வளவோடு அவர்களுடைய பேச்சு முடிவுபெற் றது. கந்தன், கண்களைத் துடைத்துக்கொண்டு, "அப்பா! நான் கடைவீதிக்குப் போய்வருகிறேன்" என்றான்.

கிழவன் :—அட பாவி! தப்பித்து வந்து, இரண்டு மணி நேரங்கூட ஆகவில்லை; வீதிக்குப்போனால் மறுபடியும் போலீசார் பிடித்துக்கொள்ளுவார் கள். போகாதே; பேசாமல் இரு.

கந்தன் :—எவன் என்னைப் பிடிக்கிறவன்? வரச்சொல்; பார்ப்போம்.

பெரியநாயகி :—"நீங்களேன் வீணாகப் பேசுகிறீர்கள்? அவன் எப்பொழுதும் முரட்டுத்தனமான பிடி வாதமுடையவன்; கழுதை! மறுபடியும் போய்க் கெட்டு அலையட்டும்" என்றாள்.

கந்தன், வெளியிற் சென்று, பொய் மீசையைக் களைந்துவிட்டு நேராக வண்ணார்கள் வசிக்கும் இடத் திற்குச்சென்றான்; அங்குச் சென்று, + இந்தக்

குறி யாருடைய உடைகட்குப் போடப் பெறுவ தென்று விசாரித்தான். எல்லாரும் எனக்குத் தெரி யாது உனக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார் கள். ஒருவன் மாத்திரம் இது சிவராம பிள்ளையின் ஆடைகட்குப் போடப்பெறுவதென்று கூறினன். அதைக் கேட்டுக்கொண்டு திரும்பினன்.

* * * * *

துப்பறியும் இரங்கநாதன், நடராஜ பிள்ளை வீட் டின் அருகில், முப்பதடி தூரத்தில் வந்துகொண் டிருந்தார். அப்பொழுது, நடராஜ பிள்ளை, ஒரு வேலைக்காரனிடம் எதையோ ஒன்றைக் கொடுத்து, "விரைவில் வரவேண்டும்; தயாரானல் அழைத்துக் கொண்டேவா" என்று கூறிவிட்டு வீட்டினுள்ளே சென்றார். அதைக் கேட்ட இரங்கநாதன், "சரி! ஏதோ சங்கதி நடைபெறப்போகிறது; நாம் இவ் வமயம் இவ்வீட்டிற்குள்ளேயே யிருப்பது நலம்" என்று எண்ணியவராய் நாற்புறமும் திரும்பிப் பார்த் தார்; தன்னை யொருவரும் கவனிக்கவில்லை யென்று உணர்ந்து, நொண்டி நொண்டி நடக்கத் தொடங்கி னார். நடராஜ பிள்ளை வீட்டின் வாயிலருகே வந்ததும் அங்கு நின்ற காவற்காரனை நோக்கி, "அப்பா! கால் சுழுக்கிக்கொண்டது; நடக்கமுடியவில்லை; அதோ அந்தக் கடையில் ஒரு சோடா வாங்கிக்கொண்டுவா; அதற்குக் கூலியாக இந்த எட்டணாக்களை வைத்துக் கொள்; தாகம் மிகுதி, விரைவில் வரவேண்டும்" என்றார். அவன் காசிற்கு ஆசைப்பட்டு அப்படியே சென்றான். அவன் சென்றதும், இரங்கநாதன் மெது வாகத் தோட்டத்திற்குள் நுழைந்தார். சிறிது சென்

திற்குப் பிறகு, சோடா வாங்கிவந்த காவற்காரன் அவரைக் காணுமல் "அட! சோடா வாங்கி வரச் சொன்ன இந்த மனிதன் எங்கே போய்விட்டான்? கேலிபண்ணினுன் போலிருக்கிறது; சே! இருக்காது; எந்தப் பயித்தியக்காரனுவது காசைக் கொடுத்துக் கேலிசெய்வானு? என்னமோ தெரியவில்லை. பணம் கொழுத்தவன்போலும்! நமக்கென்ன? இப்படியே தினமும் ஒவ்வொருவன் வந்து, நம்மைக் கேலிசெய்து விட்டு எட்டணுக் கொடுப்பானுகில் நம் பாடு கவலையே யிருக்காது" என்று மனக்கோட்டை கட்டினுன்.

தோட்டத்திற்குள் நுழைந்த இரங்கநாதன், அத் தோட்டத்தின் கோடியிற்போய், அந்த வீதியிற் பாராக் கொடுத்துக்கொண்டிருந்த ஒரு சேவகனிடம், ஒரு கடிதத்துண்டில் என்னவோ எழுதிக் கொடுத்து விட்டு மறுபடியும் வீட்டினுட் பார்த்தார். நடராஜ பிள்ளை,முன்கூடத்தில் அமர்ந்திருந்தார். இரங்கநாதன் படிக்கும் அறையிலுள்ள சாளரத்தின் வழியாக உள்ளே எறிக்குதித்தார். பிறகு, மெதுவாகத் தனக்கு ஏதேனும் ஆதாரமான பொருள்கள் கிடைக்குமா வென்று தேடினுர். ஒன்றும் அகப்படவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு, சிவராமபிள்ளையும், நடராஜ பிள்ளையும் உரையாடிக்கொண்டே அவ்வறையை நோக்கி வந்தார்கள். இரங்கநாதன் பார்த்தார்; ஒளிந்து கொள்வதற்கு வசதியான இடம் ஒன்று மில்லை. மூலையில் ஒரு அலமாரியிருந்தது. அதற்கும், சுவருக்கும் இடையில் இரண்டடி அகலம் இடை வெளி யிருந்தது. சட்டென்று அதனுட் சென்று மறைந்து கொண்டார். கீழ்வருமாறு பேச்சு நடந் தது:—

சிவராம பிள்ளை :—என்னமோ எனக்கு ஒன்றும்பிடிக்க வில்லை ; தொடங்குகிற காரியமெல்லாம் இடை யில் முறிந்தே போகின்றன.

நடராஜ பிள்ளை :—வீணாக மனத்தளர்ச்சி படைவதில் பயன் இல்லை. இனிமேல்தான் நாம் சாமர்த்திய மாக வேலை செய்யவேண்டும். இதுவரையிற் செய்திருப்பவை யெல்லாம் வெளிவராதபடி தகுந்தவழி செய்யவேண்டும். அவற்றை நானே முடித்து விடுகிறேன்.

சிவராமபிள்ளை :—மணிவாசகன் எப்படித் தப்பித்துச் சென்றானென்பது வியப்பாகவே யிருக்கிறது ; வசந்தமாளிகையிலுள்ள அவ்வளவு ஆட்களையும் ஏமாற்றிவிட்டு எங்ஙனஞ் சென்றான் ?

நடராஜ பிள்ளை :—" கோவிந்தனைக் கொன்றவன் எவ் விதம் சென்றான் ? அப்படித்தான் மணிவாசக னும் சென்றிருப்பான் ; அவன் உங்களைவிட அறிவில் இளைத்தவனல்ல " என்று நகைத்தார்.

சிவராம பிள்ளை :—இந்தத் துப்பறியும் தடியனைக் கொன்றுவிட்டே னென்று வீரம் பேசுகிறீர்கள் ; நானே அங்குச் சென்று பார்த்தேன் ; அவன் எரிந்துபோயிருந்தாலும் ஒரு எலும்பு கூடவா அகப்படாது ? ஒன்றுமே காணப்படவில்லை.

நடராஜ பிள்ளை :—உங்கள் மனம் குழம்பியிருக்கிறது போலும்! நானே வெளியில் நின்று, அவனைத் தூணிற் கட்டி நெருப்பிட்ட பிறகே வந்தேன். அவன் தொலைந்துவிட்டானென்பதில் சிறிதும் ஐயமில்லை. இனி நமக்குப் பயமில்லையாகலு. நான் கூறிய யோசனைதான் சரி, சிறிது நேரத்

தில் அந்தக் காசுக் கடைக்காரன் வந்துவிடு வான். இரண்டு வீடுகளையும் அடமானமாக வைத்து ஐம்பதினுயிரம் ரூபாய்கள் பெற்றுக் கொண்டு கொஞ்சக் காலம் புதுச்சேரியில் தங்கி யிருப்பதே நலம்.

சிவராம பிள்ளை:—பயமில்லை யென்கிறீர்கள்; பிறகேன் புதுச்சேரிக்குப் போகவேண்டும்?

நடராஜ பிள்ளை :—நண்பரே! எல்லாவற்றிற்கும் முன் யோஜனையாக இருப்பது நல மல்லவா? நாம் செய்திருக்கும் வேலைகள் வெளிக்கு வந்தால் மீளவே வழியில்லை. அதற்காகவே இப்படித் தீர்மானித்தேன். அந்தப் பயல் மணிவாசகனைத் தேட வேண்டாமா?

சிவராம பிள்ளை:—கழுதை கிடக்கிறது; இனி யவனைத் தேடப் போவதில்லை.

நடராஜ பிள்ளை : —ஓ! சீ! சீ! இந்தப் பழம் புளிக்கு மென்றுய் விட்டதோ? அவன் நம்மைத்தண் டிப்பதற்கு ஏதாவது வழி தேடுவான். சும்மா விருப்பானென்று நான் நம்பவில்லை. புதையலைத் தேடினீர்களா? அது கிடைத்துவிட்டால் வேறு ஏற்பாடு தேவை யில்லை.

சிவராம பிள்ளை :—அந்தச் சனியனைத் தேடித் தேடிக் கால்களும் ஓய்ந்துவிட்டன. என்னுடைய தமை யன் பொய்க்கதை கட்டிவிட் டிருக்கிறுன். கிடைத்தால், அந்தப் பிள்ளையாண்டான் ஆளட் டும். சரி! இரங்கநாதனை நேற்றுக் கண்டதாக எனது நண்பர் ஒருவர் கூறினர்; அஃது உண்மை யாகவே யிருக்கலாம். அவன் இறக்கவேயில்லை.

நடராஜ பிள்ளை :—போங்கள் ; உங்கட்கு யார் சொல்லக்கூடும்? நான் கூறுவதில் உங்கட்கு நம்பிக்கை ஏற்படவில்லை. உண்மையாக அவன் இறந்தே போய்விட்டான். இன்றேல், இதுகாறும் நம்மிருவர் தலைகட்கும் உலைவைக்காமல் இருக்க மாட்டான் ; இதுவே அவன் இறந்ததை உறுதிப் படுத்துகின்றது. ஒருகால் தங்களுடைய நண்பர் அவனுடைய ஆவேசத்தைக் கண்டிருக்கக் கூடும்.

சிவராம பிள்ளை :—சே ! நீங்கள் கூறுவது தவறு.

நடராஜ பிள்ளை :—நீங்கள் கூறுவதே தவறு.

சிவராம பிள்ளை :--இல்லை.

நடராஜ பிள்ளை :—இல்லை.

என்று பேசிக்கொண்டிருக்கும் அமயம், தடித்த தேகத்தையுடைய யொருவர், தமது பருத்த தொந்தியைத் தூக்க முடியாமல் இரதம் வருவதுபோல மெதுவாக அசைந்து வந்தார். அவரைக் கண்ட நடராஜ பிள்ளை, “வாருங்கள் ! அருணாசலச் செட்டியாரவர்கள் ! தங்களுடைய வருகையையே யெதிர்பார்த்துக் கொண் டிருக்கிறோம்” என்றார். அருணாசலச் செட்டியார் ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அவர் திருநெல்வேலியில் நீண்ட காலமாக வியாபாரம் செய்பவர் ; மிகுந்த யோக்கியர் ; நூறு ரூபாய்கள் மதிப்புள்ள வொன்றை இருபது ரூபாய்கள் மதித்துவிடுவார். அவர் இருப்பது நடராஜபிள்ளை போன்றவர்கட்குப் பெருந் துணை. அருணாசலச் செட்டியார் நடராஜபிள்ளையை நோக்கி, “என்ன காரியமாக அவசரமாய் வரும்படி ஆள் அனுப்பினீர்கள் ?” என்று கேட்டார்.

நடராஜ பிள்ளை:—வேறொன்று மில்லை; நானும், எனது நண்பரும் அந்நிய நாட்டிற்குப்போய் வரவேண்டிய திருக்கிறது; எங்கள் இருவருடைய வீடுகளையும் அடமானமாக வைத்துக்கொண்டு, ஐம்பதினுயிரம் ரூபாய்கள் கொடுக்கவேண்டும். விரைவில் திரும்பித் தந்துவிடுவோம்.

அருணாசலச் செட்டியார்:—ஐம்பதினுயிரமா? அடேயப்பா!

நடராஜ பிள்ளை:—என்ன அடே யப்பா? வீடுகள் பெறுதனவா? இலக்ஷம் ரூபாய்கள் பெறக்கூடியன; அவசரமாகையால் பாதியே கேட்கிறோம்.

அருணாசலச் செட்டியார்:—எப்படியாகுலும் இருபது ஆயிரங்கட்குமேல் பெறுது.

நடராஜ பிள்ளை:—நீர் சுத்த முழுமூடம்; நன்றாக மதிப்புப் போட்டீர்; நன்றியற்றத் தனமாகப் பேசவேண்டாம்.

அருணாசலச் செட்டியார்:—ஐயா! கோபிக்க வேண்டாம். நான் நன்றி மறந்தவனல்ல; தங்களைப் போன்ற பெரிய மனிதர்கள் இல்லாவிட்டால், என் கடை கோவிந்தா தான்.

நடராஜ பிள்ளை:—பின் எதற்காக யோஜிக்கிறீர்?

அருணாசலச் செட்டியார்:—முதலாவது சொத்தை விலை மதிக்க வேண்டும்; இரண்டாவது அவ்வளவு பெருந்தொகை என்னிடத்தில் இல்லை.

நடராஜ பிள்ளை:—ஏன் வீணுகப் பொய் சொல்லுகிறீர்? உம்மிடம் பணம் இல்லையென்றால் வேறு யாரிடம் இருக்கப் போகிறது? இஃதெல்லாம் உம்முடைய தமுக்கு வகையிற்சேர்ந்த சாக்குகள் போலும்!

அருணாசலச் செட்டியார் :—இவ்வளவு நாட்களாகப் பழகியும் என்குணத்தை நீங்கள் அறிந்துகொள்ள வில்லை. தங்களைப்போல எத்தனையோ மனிதர் கட்கு நான் வேண்டியவனே ; இப்படியே பல வகையில் என்சொத்து முழுகிக் கிடக்கின்றது. நேற்றுக்கூட ஒரு பயல் இன்சால்வென் டாகி விட்டான். என் செய்வது ! என்னுடைய கடை யின் பாகக்காரர், 'இனிமேல் யாருக்கும் பெருந் தொகை கொடுக்கவேண்டாம்' என்று எழுதி யிருக்கிறார். ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் ; இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம். என்மீது எள்ளளவுங் குற்றமில்லை. நீங் களே யோசித்துப் பாருங்கள்.

நடராஜ பிள்ளை :—என்னங் காணும் யோஜிப்பது ? அந்த இன்சால்வென்டோடு என்னையுஞ் சேர்த்து விட்டீர் போலும் !

அருணாசலச் செட்டியார் :—ஐயோ ! தெய்வமே ! அப் படியில்லை ; தவறாகப் பொருள்கொண்டு விட்டீர் கள். இருக்கட்டும் ; ஏன் இருந்தாற்போலப் புறப்படப் போகிறீர்கள் ? என்னமும்.........

நடராஜ பிள்ளை :—ஓய் ! அஃதெல்லாம் உமக்குத் தேவையில்லை. வார்த்தையை வளர்க்கவேண் டாம் ; வந்த காரியத்தைப் பேசும். ஐம்பதி னாயிரம் ரூபாய்கள் அவசியம் தேவை ; கூடிய விரைவில் மறுபடியுந் தந்துவிடுகிறோம்.

அருணாசலச் செட்டியார் :—நீங்கள் என்னை நம்பவில்லை ; வேண்டுமானால் என்னுடைய கணக்கை யெல் லாங் காட்டுகிறேன் ; தயைசெய்து பாருங்கள் ;

பிறகு நான் கூறியது உண்மையென்று புலப் படும்.

நடராஜ பிள்ளை :—எவ்வளவுதான் உமது உத்தேசம்?

அருணசலச் செட்டியார் :—சொத்து.........நெருக்கிப் பார்த்தால், முப்பதினுயிரமாவது பெறும்; ஆனால்.........

நடராஜ பிள்ளை :—ஆனலென்ன? முழுவதையுஞ் சொல்லித் தொலையும்.

அருணசலச் செட்டியார் :—ஐயா! முடிவாகச் சொல்லுகிறேன்; பதினையாயிரத்துக்குமேல் ஒரு தம்படி கூடத் தரமுடியாது. சொத்துப் பெறுதென்பது என் கருத்தன்று; அதற்குமேல் என்னிடம் பணமில்லை.

இதைக்கேட்ட நடராஜபிள்ளை, சிவராமபிள்ளையின் முகத்தைப் பார்த்து விழித்தார். அவர் ஏதோ சைகைசெய்தார். பிறகு, "சரி! சரி! பணத்தை யெடும்" என்றார்.

அருணசலச் செட்டியார் :—நான் கொண்டு வரவில்லை; முதலிற் பத்திரம் எழுதவேண்டும்.

நடராஜ பிள்ளை :—அட மட்டிச் சாம்பிராணி! தயாராக வரும்படி அக்கடிதத்திலேயே எழுதியிருந்தேனே?

அருணசலச் செட்டியார் :—அது சரிதான்; மோசமென்ன! உடனே போய்க் கொண்டுவருகிறேன். பத்திரத்தை யெழுதுங்கள்.

அப்படியே நடராஜபிள்ளை, பத்திரம் எழுதிக் கையெழுத்து வைத்தார். சிவராமபிள்ளையும் ஸாக்

யெழுத்து வைத்தார். அருணாசலச் செட்டியார், அதைவாங்கிப் பார்த்துவிட்டு யோஜித்தார்.

நடராஜ பிள்ளை :—என்னய்யா யோஜனை?

அருணாசலச் செட்டியார் :—சாக்ஷி வேண்டும்.

நடராஜ பிள்ளை :—என்ன சாக்ஷியும், சம்பந்தமும்? எடுத்துக்கொள்ளப் போகிறோமா என்ன? ஒன்றுமே தேவையில்லை.

அருணாசலச் செட்டியார் :—அது முடியுமா? இது விளையாட்டுக் காரியமன்று.

நடராஜ பிள்ளை :—"சனியனே! இனிச் சாக்ஷிக்காக யார் காலிற்போய் விழுவது?" என்றார்.

அதே விநாடியில் அலமாரியின் புறத்தில் மறைந்திருந்த இரங்கநாதன், "நண்பரே! ஒருவர் காலிலும் விழவேண்டாம்; எத்தனை யிடங்களிற் சாக்ஷிபோடச் சொன்னாலும் நான் தயாராக விருக்கிறேன்; வேறு கவலையென்ன?" என்று சொல்லிக்கொண்டே அவர்கள் முன்னிலையிற் றோன்றினார். அருணாசலச் செட்டியார் "ஐயோ! துப்பறியும் இரங்கநாதன்!" என்று கூவினார். நடராஜபிள்ளை, "ஓ! அவனல்ல; ஆவேசம்! ஆவேசம்!!" என்று சொல்லிச் சிவராம பிள்ளையைப் பிடித்துத் தம்முடைய கண்களை யிறுக மூடிக்கொண்டார். இரங்கநாதன், "ஓ! மனிதனைப் பேய் என்று நினைத்து நடுங்கும் கோழையே! உன்னைத் தைரியமுடையவனென்றே கருதியிருந்தேன்" என்றார். அப்பொழுது, சூப்ரின்டென்டெண்ட் மிஸ்டர் பாக்ஸ் துரையும்(Mr. Box) இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியாரும், ஐந்து சேவகர்களும் மடமடவென்று வந்து புகுந்தார்கள். அவர்களைக் கண்ட நடராஜபிள்ளையும்,

சிவராம பிள்ளையும் நடுங்கினார்கள். நடராஜபிள்ளை, பிறகு சமாளித்துக்கொண்டு யாவருக்கும் வந்தனஞ் செய்துவிட்டு, "என்ன காரியமாக இவ்வளவு தூரம் வந்ததோ?" என்று போலீஸ் சூப்ரின்டென்டென்ட் துரையை நோக்கிக் கேட்டார்.

பாக்ஸ்துரை :—*நண்பரே!* தங்களையும், சிவராம பிள்ளையையும், மாட்சிமை தங்கிய அரசர் பெருமான் பெயரால் கைது செய்வதற்குக் கட்டளைகள் (Warrants) இருக்கின்றன.

நடராஜ பிள்ளை :—*கட்டளைகளா? யாரையோ கைது செய்ய வந்தவர்கள், தவறாக இங்கு வந்துவிட்டீர்கள் போலும்! அப்படியானால் அதை மன்னிக்கிறேன்.*

பாக்ஸ்துரை :—*"பிள்ளையவாள்! கொஞ்சம் நிதானித்துப் பேசுங்கள்; தவறாக வருவதற்கு நாங்கள் மூடர்களல்ல" என்று சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் இராமசாமி முதலியாரை நோக்கி, "மிஸ்டர்! ஏன் மயங்குகிறீர்கள்? நம் காரியம் ஆகட்டும்" என்றார்.*

இன்ஸ்பெக்டர் :—*துரையவர்களே! கொஞ்சம் அவசரப்படாதீர்கள்; இஃதெல்லாம் பெரிய இடத்துச் சங்கதி; தலை போனாலும் போகும்; தலைப்பாகை போனாலும் போகும். சிறிது கவனமாகவே யிருக்கவேண்டும்.*

நடராஜ பிள்ளை :—*வீண் மிரட்டல்கள்; பேசாமல் சென்று விடுங்கள்; ஏதாவது மூட்டுத்தனஞ் செய்தால் தண்டிக்கும்படி நேரிடும். இது நட*

ராஜ பிள்ளையின் வீடு என்பதை நினைப் பூட்டு கிறேன்.

பாக்ஸ்துரை :—“ நண்பரே! கோபம் பயன்படாது. எய்தவ னிருக்க அம்பை நோவதா? இதோ! பாரும்; கட்டளைக ளிருக்கின்றன ” என்று அவற்றைக் காட்டினார்.

நடராஜ் பிள்ளை :—என்மீது என்ன குற்றம்?

பாக்ஸ்துரை :—அப்படி முறையாகக் கேளும்; அது தான் அறிவிற் கழகு. பதினெட்டு ஆண்டுகட்கு முன், சொக்கலிங்கம் பிள்ளை வீட்டில் குழந்தை யைத் திருடிய குற்றம் ஒன்று; மறுபடியும் அவர் வீட்டிலேயே இரண்டாயிரம் ரூபாய்களைத் திருடிய குற்றம் ஒன்று; வக்கீல் தருமலிங்கம் பிள்ளையை மிரட்டி மூவாயிரம் ரூபாய்களைத் திருடிய குற்றம் ஒன்று; பன்னீர்ச் செல்வம் பிள்ளையை நஞ்சிட்டுக் கொல்வதற்கு உடன்பட் டிருந்தது ஒன்று; கள்ள நோட்டுகள் செய்த குற்றம் ஒன்று. நான் கூறியவை சரிதானே?

நடராஜ பிள்ளை :—பலே! நல்ல கட்டுக் கதைகள்! எல்லாம் பொய்! பொய்!! போகட்டும்; சிவராம பிள்ளைக்கு என்ன விதமாகக் கட்டி யிருக்கிறீர் கள்?

பாக்ஸ்துரை :—கதையல்ல; சிவராம பிள்ளை யவர்கள், பன்னீர்ச் செல்வம் பிள்ளையை நஞ்சிட்டுக்கொன் றது ஒன்று; வேலைக்காரனாகிய கோவிந்தனைக் கொன்றது ஒன்று; கள்ள நோட்டுகள் செய்தது ஒன்று. அவர்கள்மீது மூன்று குற்றங்களே.

குற்றவாளிகளாகிய இருவருள் தங்கட்கே முதலாவது பரிசு கிடைக்கும்.

நடராஜ பிள்ளை :—“இவை யாவும் இரங்கநாதனுடைய கற்பனைகள் போலும்!” என்றார்.

இரங்கநாதன், சூப்ரின்டென்டென்ட் துரையவர்களை நோக்கி, “ஐயா! அவர்கள் எதை வேண்டுமானாலுங் கூறிக்கொண் டிருக்கட்டும்; தங்களுடைய கடமையை நிறைவேற்றுங்கள்” என்றார். உடனே பக்கத்தில் நின்ற சேவகர்கள் இருவர் கைகளிலும் விலங்குகளைப் பூட்டிச் சிறைச்சாலை (Jail) க்கு அழைத்துச் சென்றார்கள்.

மறுநாட் காலை ஒன்பது மணிக்குக் கோர்ட்டில் கணக்கற்ற ஜனங்கள் கூடிவிட்டார்கள். அன்று விசாரணை நடக்கப்போகிற சங்கதி அவ்வூரிலும், பக்கத்து ஊர்களிலும் பரவிவிட்டது. அன்று பக்கத்து ஊர்களிலிருந்து வேடிக்கை பார்க்க வருகின்ற ஜனங்கட்காக நான்கு புகை வண்டிகள் புதிதாக விடப்பெற்றன. கூட்டம் கணக்கற்றுப் போய்விட்டபடியாலும், குற்றவாளிகள் மிகப் பேர் பெற்றவர்களானதாலும் பாதுகாப்பதற்காகக் கோர்ட்டின் முன் பக்கத்தில் நூறு சேவகர்கள் உருவிய கத்தியுடன் அணியணியாக நிறுத்தப்பட்டனர். சரியாக மணி பத்தானதும், நியாயாதிபதிகளும், வக்கீல்களும், பஞ்சாயத்தார்களும் (Jury) தத்தம் ஆசனங்களில் அமர்ந்தார்கள். குற்றவாளிகள் இருவரும் கூண்டில் நிறுத்தப்பட்டனர். விசாரணை தொடக்கமாயிற்று. சிவராம பிள்ளையின் மனைவியாகிய காமாட்சி அழுத வண்ணம் ஒருபுறத்தில் நின்றாள். முதலில் பன்னீர்ச் செல்வம்

பிள்ளையின் கொலை விசாரணையாயிற்று. அதற்குச் சாக்ஷியாகக் கிழவன் பொன்னுசாமியும், பெரிய நாயகியும் விசாரிக்கப் பட்டார்கள். கோவிந்தன் கொலைக்கு மணிவாசகனும், துப்பறியும் இரங்கநாதனும் விசாரிக்கப்பட்டார்கள். துப்பறியும் இரங்கநாதன், அதற்கு ஆதாரமான சங்கதிகளை வெளியிட்டதுடன், பன்னீர்ச் செல்வம் பிள்ளையைக் கொன்றதற்கு ஆதாரமான கடிதத்தையும், சொக்கலிங்கம் பிள்ளை வீட்டில் குழந்தையைத் திருடியதற்கு ஆதாரமான கடிதத்தையும், கள்ள நோட்டுகள் செய்ததற்கு ஆதாரமாகத் தான் வைர வியாபாரியாகச் சென்ற போது வாங்கிய கடிதத்தையும், ஆஜர்ப்படுத்தினர். பிறகு திருட்டுக் கேஸ்கள் விசாரிக்கப்பட்டன. அதற்குச் சாக்ஷியாக இரங்கநாதனும், வேலைக்காரனாகிய வரதனும் விசாரிக்கப்பட்டனர். பிறகு, வக்கீல் தருமலிங்கம் பிள்ளை யிடத்திலும், சொக்கலிங்கம் பிள்ளையினிடத்திலும் வாக்கு மூலங்கள் வாங்கினார்கள். குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டபோது, இருவரும் குற்றங்களை யொப்புக் கொண்டதுடன் தாங்கள் கூறவேண்டிய தொன்றுமில்லை யென்று சொல்லிவிட்டார்கள். பிறகு வக்கீல்களின் விவாதங்கள் நடந்தன. பஞ்சாயத்தார்கள், இருவருங் குற்றவாளிக ளென்றே, தீர்மானித்தனர். நியாயாதிபதி, சிவராம பிள்ளைக்குத் தீவாந்தர தண்டனையும், நடராஜ பிள்ளைக்குப் பதினேழு வருடங்கள் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்.

அன்று மாலையில், சொக்கலிங்கம் பிள்ளையும், அவரது மனைவியும், சாரதாம்பாளும், மணிவாசகனும், சிந்தாமணியும், வடிவேலு பிள்ளையும், இரங்கநாதனும் உரையாடிக்கொண் டிருந்தார்கள். சிந்தாமணியைச்

சொக்கலிங்கம் பிள்ளை கண்டபோது அவரை யறியா மல் ஒரு 'அன்பு' உண்டாயிற்று. அவரால் அதை இன்னதென்று அறிந்துகொள்ள முடியவில்லை. மணி வாசகன் தன்னுடைய இல்லறத்தை மிக அலங்கரித்து வைத்திருந்தான். சாரதாம்பாளுக்கும் மணிவாசக னுக்கும் கண்கள் வழியாகப் பேச்சுகள் நடந்தன. அவள் மணிவாசகனைக் கண்டதும் உற்ற மகிழ்ச்சியை நம்மாற் கூற வியலாது. சொக்கலிங்கம் பிள்ளையின் மனம், கலியாணத்தை இப்படி யிப்படி நடத்த வேண்டுமென்று அளவிட்டுக்கொண் டிருந்தது. காமாக்ஷி, தன்னுடைய கணவனுக்குண்டான தண் டனையைக் கேட்டு மனமுடைந்து, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தாள். மணிவாசகன் வேண்டு வன கூறித் தேற்றினான். எனினும் கணவனை யிழந் தோர்க்குக் காட்டுவதெது? வடிவேலு பிள்ளை, இரங்க நாதனை நோக்கி, "ஐயா! தாங்கள் இவைகளை எவ் விதங் கண்டு பிடித்தீர்கள்? நாங்கள் அதைக் கேட்க விழைவுடையவர்களாய் இருக்கிறோம்; தயைசெய்து விபரமாகச் சொல்ல வேண்டும்" என்றார்.

இரங்கநாதன் :—"நண்பரே! நான் முதன் முதலா கக் கோவிந்தன் கொல்லப்பட்ட அறையைப் பார்த்த போது, கொலையாளி தப்பித்துச் செல்வ தற்கு வழி யிருக்கிறதா வென்று பார்த்தேன். ஒரே சாளரந்தான்; அதிற் கம்பிகள் இருக்கின் றன. அதன் வழியாகத் தப்பித்துச் செல்ல முடியாது. கொலையாளி முன் வாசல் வழியா கவே போயிருக்க வேண்டும். கதவு பூட்டப்பட் டிருந்தது. அதைக் கண்டு பிடித்தால் இது வெளிவருமென்று எண்ணினேன். பிறகு அறை

யைச் சோதித்தபோது, இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் சுவரிற் பாய்ந்திருந்தன. ஒன்று இரத்தங் கலந்திருந்தது; மற்றொன்று வெறுமை யாக விருந்தது. அக் குண்டுகள் யாரால் சுடப் பட்டன? 'கோவிந்தன் இறப்பதற்கு ஈட்டிக் குத்தே போதுமானது' என்று டாக்டர் கூறு கிறார். அன்றியும், குண்டு அவன்மீது பாய்ந் திருக்க வில்லை. ஆகையால், கோவிந்தன் தன் னுயிரைக் காக்கும்பொருட்டுக் கொலையாளியைச் சுட்டிருக்கிறானென்று தீர்மானித்தேன். இதைக் கண்டுபிடிப்பதற்கு எனக்குக் கிடைத்த ஆதார மான பொருள்கள்: துப்பாக்கிக் குண்டுகள் இரண்டு; பாதி குடித்துவிட்டு எறியப்பட்ட சுருட்டு ஒன்று. நான், சிவராம பிள்ளையை அறைக்கு எத்தனை திறவுகோல்கள் உண்டு என்று கேட்டபோது, ஒவ்வொரு அறைக்கும் இரண்டு திறவுகோல்கள் உள்ளன வென்றும், ஒன்றே உபயோகத்தி லிருக்கிற தென்றும், மற்றொன் றிருப்பது தனக்கன்றி வேறு யாருக்கும் தெரியா தென்றுங் கூறினார். எனக்குக் கண்டுபிடித்து விடலாம் என்ற தைரியம் உண்டாயிற்று. ஏன்? கொலையாளி, வண்டு வடிவம் பெற்றுச் சாளரத் தின் வழியாகப் பறந்து போய்விடவில்லை; முன் வாசலின் வழியாகவே வந்து, பிறகு பூட்டிக் கொண்டு சென்றிருக்கிறான். எதற்காகப் பூட்டிக் கொண்டு செல்லவேண்டுமெனின், 'இக்கொலை மாயமாய் நடந்ததென்று வெளிவராமற் போகட் டும்' என்பது கொலையாளியின் கருத்து. இரண்டு திறவுகோல்கள் இருக்கின்றன வென்று சிவராம

பிள்ளை உறுதியாகக் கூறியவுடன் எனக்கு அவர் மீது ஐயம் உண்டாயிற்று. 'ஒரே திறவுகோல் தான்' என்று கூறியிருந்தால் ஒரு வம்புமில்லை. என் செய்வது! பயித்தியக்காரத்தனமாக மாட்டிக்கொண்டார். பிறகு திறவுகோல்களை எடுத்து வரச்செய்து பார்த்தபோது கோவிந்தனுடைய அறைத் திறவுகோல்—அதாவது எட்டாவது எண்ணுள்ள திறவுகோலும், மணிவாசகனுடைய அறையின் ஆறாவது எண்ணுள்ள திறவுகோலும், மற்றவை தூசி படிந்திருக்க—இவை மாத்திரம் தூசியின்றி, எடுத்து உபயோகிக்கப் பட்டவை போன்றிருந்தன. அப்பொழுதே சிவராம பிள்ளை தான் கொலையாளி யென்று தீர்மானித்துக் கொண்டேன். ஏன்? அவருடைய அறையி லேயே திறவுகோல்கள் இருந்தன; அது பிற ருக்குத் தெரியாது; ஆகவே அவர் அதை எடுத்து உபயோகிக்காமல் வேறு யார் உப யோகித்திருக்கக் கூடும்? இவர், கோவிந்தனைக் கொல்லவேண்டிய காரணம் என்ன வென்பது முதலில் எனக்குப் புலப்படவில்லை. மணிவாசக னைக் கேட்டபோது, அவன் அன்று இரவில் சிவராம பிள்ளையும், அவர் மனைவியும் பேசிக் கொண்டதை விபரமாகச் சொன்னான். அதனால், 'மூன்று வருடங்கட்கு முன் பன்னீர்ச் செல்வம் பிள்ளையைக் கொன்றதைக் கோவிந்தன் அறி வான்; இப்போது மணிவாசகனைக் கொலைசெய்ய வேண்டுமென்று கோவிந்தனுடைய உதவியை விரும்பியிருப்பார்; அவன் இதற் கிணங்காமல் மறுத்ததுடன், மணிவாசகனைக் கொல்ல முயற்

சித்தால் எல்லாவற்றையும் வெளியிட்டுவிடுவேன், என்று கூறியிருக்கக் கூடும்; அதனால் சிவராம பிள்ளை, இவனை முதலில் தொலைத்து விடுவதே சரி யென்று கோவிந்தனைக் கொல்லத் துணிந்தார்' என்று என் மனதிற் புலப்பட்டது. சிவராம பிள்ளை மிகத் தந்திரமுள்ளவர். ஆறுவது எண்ணுள்ள திறவுகோலைக்கொண்டு மணிவாசகனுடைய அறையைத் திறந்து, அவனுடைய துப்பாக்கியை யெடுத்துச் சென்றிருக்கிறார். ஏனெனில் 'அதை எடுத்துக் கோவிந்தனுடைய அறையில் போட்டுவிட்டால், மணிவாசகனே கொலை செய்தானென்று ஏற்பட்டுவிடும்; அதனால் அவன் தண்டனை யடைவான்; நாம் எல்லாப் பொருள்களையும் கைப்பற்றிக் கொள்ளலாம்' என்பது அவர் கருத்து. கொலை நடப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன், கோவிந்தன், அறைக்குச் சென்று படுத்திருக்கிறான்; அவன், இப்படி நடைபெறு மென்று கருதியே யிருந்திருக்கிறான்; மறு நிமிடம் சிவராம பிள்ளை உள்ளே நுழைந்து கொல்வதற்குத் தொடங்கியிருக்கிறார்; கோவிந்தன், பலமுள்ளவனாகையால் அவருடைய கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு சுட்டிருக்கிறான்; முதலாவது குண்டு தவறிச் சுவரிற் பாய்ந்துவிட்டது. இரண்டாவது குண்டு சிவராம பிள்ளையின் உடம்பில் எங்கேயோ பாய்ந்து ஊடுருவிச் சுவரிற்பட்டிருக்கிறது. உடனே சிவராம பிள்ளை சுட்டியாற் குத்தவே, "ஆ! கொலை! கொலை!!" என்று அலறிக்கொண்டே கீழே சாய்ந்து விட்டான்.

சிவராம பிள்ளை, இனி அங்கு நிற்பது தவறு என்று கருதியவராய்ச் சட்டென்று கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு நேராகத் தன் அறைக்குச் சென்று விட்டார். கோவிந்தனுற் சுடப்பட்ட குண்டு, இவருடைய உடம்பில் எங்கேயோ பட்டிருந்தது. ஆனால் அவரதைக் காட்டிக்கொள்ளவில்லை; சொல்லவுமில்லை. நான் அவரைக் கூர்ந்து பார்த்தபோதெல்லாம் ஒன்றும் புலப்படவில்லை. ஆகையால் அதைப் பிறகு பார்த்துக் கொள்ளுவோ மென்று கருதினேன். 'கொலை' என்ற சப்தங் கேட்டவுடன் முதலாக யார் வந்தது என்று கேட்டேன். "வடிவேலு பிள்ளையும், மணிவாசகனுமே முதலிற் சென்றார்களென்றும், பத்து நிமிடங்கட்குப் பிறகே நான் வந்தேனென்றும்" சிவராம பிள்ளை கூறினார். ஏன் அவ்வளவு தாமதமென்று கேட்டதற்கு, உடைகளைத் திருத்திக்கொண்டு வரவே தாழ்த்தது என்று அவர் சொன்னார். அவர் கூறியது முற்றிலும் சரியே. ஏனெனின், கோவிந்தனை யவர் குத்தியவுடன் அவனுடம்பிலிருந்து வந்த இரத்தம் இவர்மீது தெறித்துவிட்டது. உடனே அறைக்குச் சென்று, உடைகளை மாற்றிக் கொண்டு, ஒன்று மறியாதவரைப்போல வருவதற்கே அவ்வளவு தாழ்த்துவிட்டது. இதைப் பற்றி யவரைக் கேட்டபோது, பயமென்றும், உடைகளைத் திருத்த நேரம் பிடித்தது என்றுங் கூறிவிட்டார். அப்பொழுதே, நான் இதுதான் நடந்ததென்று ஊகித்துக்கொண்டேன். அது முதல் இவரையும், இவருடைய செய்கைகளையும்

கவனிக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். நல்ல வேளையாய் 'ஒரு வேலைக்காரன் தேவை' என்று பத்திரிகையிற் பிரசுரித்திருந்தார். அதைப் பார்த்தவுடன், நானே மாறுவேடம் புனைந்து அவ்வேலையை ஒப்புக்கொண்டேன். ஒருநாள், சிவராம பிள்ளை தென்காசிக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றார். அவர் போனவுடன், அவருடைய அறையைத் திறந்து சோதித்தேன். பன்னீர்ச் செல்வம் பிள்ளையைக் கொன்றதற்கு ஆதாரமான கடிதமும், புதையற் கடிதமும், மற்றொரு கடிதமுங் கிடைத்தன. அக் கடிதத்தால், இவர் பன்னீர்ச் செல்வம் பிள்ளையை நஞ்சிட்டுக் கொன்றாரென்பது விளங்கிற்று. பிறகு தோட்டத்திற்குச் சென்று சோதித்தேன். அங்குப் புதிதாக ஒரு மாங்கன்று வைக்கப்பட்டிருந்தது. அதைக் கிளறிப் பார்த்தேன். அதிலிருந்து இரத்தப்பட்ட ஒரு மேற்சட்டை (Coat) கிடைத்தது. இரண்டு நாட்கட்குப் பிறகு வேலைக்கார வடிவத்தை நீக்கிவிட்டு அவரிடம் சென்றேன். 'அவர், வேலைக்காரன் வந்து கடிதங்களைத் திருடிக்கொண்டு சென்றுவிட்டதைக் கூறினார். அப்பொழுதும் நான், அவரைக் கூர்ந்து பார்த்தேன். ஒருநாளுமில்லாமல், கையிற் புதிதாக இரப்பர் உறைகள் (Gloves) அணிந்திருந்தார். அதைப் பார்த்தவுடன் எனக்கிருந்த ஐயம் முற்றிலும் நீங்கிவிட்டது. தந்திரமாக அதை வாங்கி அதில் வரைந்திருந்த விலாசத்தை அறிந்து கொண்டேன். அதை, நான் பார்க்கத் தரும்படி கேட்டபோது

இடது கையிலுள்ள ஒன்றைக் கழற்றிக் கொடுத்தார். உண்மை விளங்கிற்று. கோவிந்தனுற் சுடப்பட்ட ஒரு குண்டு அவருடைய வலது உள்ளங் கையிற் பாய்ந்திருக்கிற தென்று ஊகித்தேன். அதனுலேதான், புதிதாக—அக்காயத்தை யாரும் அறிந்து கொள்ளாதபடி இரப்பர் உறைகளை அணிய நேரிட்டது. இனி, அவர் அதற்குத் தகுந்த மருந்து உபயோகிக்க விரும்பியிருப்பார்; வைத்தியசாலைக்குச் சென்றால் உண்மை வெளியாகிவிடும்; ஆகையால், வேறு தனியாகவுள்ள மருந்துக் கடையிலேயே மருந்து வாங்கியிருப்பாரென்று கருதிச் சிந்துபூந்துறையிலுள்ள ஒரு மருந்துச்சாலைக்குச் (Medical Store) சென்று விசாரித்தேன். கொலை நடந்த மறுநாள் —அதாவது ஆனிமீ 13௳ 'ஜாம்பக்' என்ற மருந்தை வாங்கி யிருக்கிறார். மருந்தை வாங்கிய சிவாரம பிள்ளை, அப்பொழுதே மருந்தின் கிரயத்தைக் கொடுத்திருந்தால், அக் கடைக்கு உரியவர், எத்தனையோ மனிதர்கள் மருந்து வாங்க வருவதில் சிவராம பிள்ளை 13௳ 'ஜாம்பக்' வாங்கினுரென்று உறுதியாகக் கூறமுடியாது. பாவம்! விதியிருந்தால் விடுகிறதா? அப்பொழுது பணங் கொடுக்காமற் கணக்கிற் பற்றெழுதிக்கொள்ளும்படி சொல்லிவிட்டு வந்திருக்கிறார். அது நமக்கு உதவியாக முடிந்தது. அறையினுள்ளே பாதிச் சுருட்டொன்று கிடைத்ததல்லவா? அது மிகவுயர்ந்தது. அத்தகைய சுருட்டை, கோவிந்தன் சுருட்டு உபயோகிப்பவனுக இருந்தாலும், பெருத்த விலை கொடுத்து அதை வாங்கி யுபயோ

க்கமாட்டான். ஆகவே, அது கொலையாளியால் உபயோகிக்கப்பட் டிருக்க வேண்டு மென்று ஊகித்தேன். அச்சுருட் டில் கம்பெனியின் பாதிப் பெயர்—(—liam Co, London) "லியம் கம் பெனி, லண்டன்" என்றே இருந்தது. அதை விசாரிக்கும் பொருட்டுச் சென்னைக்குச் சென்று, பல தேசச் சுருட்டுச் வியாபாரம் செய்யும் எல் லப்ப முதலியாரைத் தந்திரமாக விசாரித்தேன். அவர் திருநெல்வேலிக்குச் சிவராம பிள்ளைக்கும் இன்னும் சிலருக்கும் அனுப்பி வருவதாகக் கூறி னார். ஆகவே, கொலையாளி, கோவிந்தனைக் கொலை செய்ய வருங்கால் சுருட்டுக் குடித்திருக் கிறா னென்று புலப்பட்டது பிறகு ஸ்பென்சர் கம்பெனிக்குச் சென்று, 'சமீபத்தில் நையிலணி யும் இரப்பர் உறை யார் வாங்கினார்கள்' என்று கேட்டேன்; அக்கம்பெனியின் தலைவர், 'ஆனிமீ 18வ ஒருவர் வந்து வாங்கினா ரென்றும், அவ ருடைய பெயர் முதலியன தெரியா தென்றும், வேண்டுமானால் ஆளின் அங்க அடையாளங்கள் சொல்லக்கூடும்' என்றுங் கூறினார். அப்படியே கேட்டதில் சிவராம பிள்ளைதா னென்று விளங்கி யது. அன்றியும், நான் வேலைக்காரனாகச் சென் றிருந்தபோது, அவர் தென் காசிக்குப் போகிறே னெனக் கூறியது பொய். அவர் நேராகச் சென் னைக்கே போய் இரப்பர் உறை வாங்கியிருக்கி றார். ஏனெனில், என்னிடம் தென்காசிக்குப் போகிறே னென்றது 18வ; அதே நாளிலேயே ஸ்பென்சர் கம்பெனியில் இரப்பர் உறை வாங்கி யிருந்தார்.

இனி வசந்தமாளிகை எங்கிருக்கிறதென்று தேட வேண்டும். ஒரு நாள், நடராஜபிள்ளை வீட்டிற்கு அங்கிருந்து வந்த ஒரு வேலைக்காரனைப் பின்தொடர்ந்து சென்றேன். அவன் நல்ல வேளையாய் வசந்தமாளிகைக்கே சென்றான். நான், அங்குப்போனதும் வேலைக்காரனாகிய வீரனுக்குச் சாராயத்தைக் கொடுத்து, என் வசப்படுத்திக்கொண்டு விசாரித்தேன். கள்ளங் கபடு அறியாத அவன், சிவராமபிள்ளையும், நடராஜபிள்ளையும் அவ்விடத்தில் கள்ளநோட்டுச் செய்வதைக் கூறியதுடன், மணிவாசகனைப் பிடித்துவந்து அடைத்து வைத்திருப்பதையுங் கூறினான். மணிவாசகன் அங்கு அடைக்கப்பட்டிருக்கும் சங்கதி எனக்குத் தெரியாதாகையால், அதைக் கேட்டவுடன் திடுக்கிட்டேன். எனக்குப் பல எண்ணங்கள் உண்டாகிவிட்டன. அவனைக் கொன்று விடுவார்களாயின் காரியங்கெட்டுப் போகும். ஆகையால், சிறிது நேரத்திற்குப் பிறகு மாளிகையை ஆராயத்தொடங்கினேன். வடதிசையில் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது, மணிவாசகன், மனவருத்தத்துடன் கடவுளைப் பிரார்த்திக்கின்ற குரல் கேட்டது. சரி! இங்கேதான் இருக்கிறானென்று அதை யுற்றுநோக்கினேன்; ஒரு அறையில் அடைபட்டுக் கிடக்கிறான். வெளிப்பக்கத்தில் ஒரே சாளரம் இருந்தது. அதிற் கம்பிகள் இணைக்கப் பெற்றிருக்க வில்லை. அவ்வழியாகவே மணிவாசகனை வெளியேற்றவேண்டும். முன்பக்கமாக முடியாது. அங்குப் பல காவற்காரர்கள் இருக்கிறார்கள். சாளரத்தின் உயரத்தை ஒரு வகையாகக் கணக்குப் பண்ணினேன். பதினான்கடி உயரம் இருந்தது. மணிவாசகன் தைரியமாக விருக்கும்பொருட்டு அதைத் துண்டுக் கடித

மெழுதித் தெரிவித்துவிட்டுப் பேசாமல் ஊருக்கு வந்து, நாலேணி தயார் செய்துகொண்டு, மறுநாட் போய் இரவு ஒரு மணிக்கு மணிவாசகனை வெளியேற்றி மறைவாக இருக்கும்படி செய்தேன். இப்பொழுது மணிவாசகனை, அவர்கள் அடைத்து வைத்தது கொல்வதற்காகவன்று; மணிவாசகனே கொலை செய்து விட்டு ஓடியொளிந்துகொண்டானென்று குற்றத்தை அவன்மீது சுமத்துவதற்கே. மணிவாசகனையுங்கொலை செய்தல் கூடும். ஆனால் அவ்வளவு விரைவில் முடித்து விட அவர்கட்கு விருப்பமில்லை. நடராஜபிள்ளை நீண்ட நாட்களாகச் சிவராம பிள்ளையுடன் கூட்டாளியாக இருக்கிறார். இவ்வூரில் நடைபெற்ற கொள்ளைகள் யாவும் நடராஜ பிள்ளையாற் செய்யப் பட்டனவே. மற்றொரு நாள் வீதியில் வரும்பொழுது ஒரு மனிதன் தள்ளாடிக்கொண்டு கீழே விழுந்தான். நான் இரக்க முற்று, அவனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றேன். அம்மனிதன், இறக்குந் தறுவாயில், தான் சிவராமபிள்ளையின் வீட்டில் தோட்டக்காரனாக இருந்த பொன்னுச்சாமியின் மகனென்றும், தன்பெயர் கந்தனென்றும், பன்னீர்ச் செல்வம் பிள்ளையைக் கொன்றது தன்னுடைய தகப்பனுக்கும், தாய்க்கும் தெரியுமென்றும், அவர்கள் தற்பொழுது இருக்கும் இடத்தையும், தான் கொள்ளையில் சம்பந்தப்பட்டுச் சிறைக்குச் சென்று தப்பித்து வருகிறதாகவும், கூறினதுடன் தன்னுடைய தாய் தந்தையைத் தண்டிக்கக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டான். இதைக் கேட்டதும் எனக்கு உண்மையிலேயே இரக்கம் உண்டாயிற்று. பாவம்! நோய் அதிகப்பட்டு இறந்துவிட்டான். பிறகு, நான் ஏறக்குறைய அங்க அடையாளங்களில்

அவனைப்போல உள்ளவன். ஆகையால் அவனுடைய உடைகளை நான் அணிந்துகொண்டு பொன்னுச்சாமி வீட்டிற்குச் சென்றேன். அவர்களுடைய மகனைப் போல நடித்து, பன்னீர்ச் செல்வம்பிள்ளை கொல்லப் பட்டதை அவர்கள் அறிவார்களென்றும், சாக்ஷி கூறுவ தற்குத் தகுதி யுடையவர்களென்றும் அறிந்துகொண் டேன். கள்ள நோட்டுச் செய்வதற்கு ஆதாரமாக நடராஜபிள்ளையின் கையால் ஒரு கடிதம் வாங்கிவிட வேண்டுமென்று கருதி வைர வியாபாரிபோலச் சென்று, நயமாகப் பேசியதுடன், நான் சிவராம பிள்ளையின் நண்பரென்றுங் கூறிக் கடிதம் வாங்கிவிட் டேன். அதே அமயத்தில் சனியனைப்போலச் சிவராம பிள்ளை வந்துவிட்டார். என் செய்வது! கொஞ்சம் பிசகினுற் காரியம் கெட்டுப்போகும். ஆகையால் தந் திரமாக இருவருக்கும் பட்டை நாமம் சாத்திவிட் டேன். இதற்கிடையில் சொக்கலிங்கப்பிள்ளை வீட்டிற் கொள்ளை நடந்தது. அது முடிந்த பிறகே சொக்க லிங்கம்பிள்ளை எனக்கு அறிவித்தார். அங்கு நான் சென்றவுடன் நடராஜபிள்ளைதான் இதையுஞ் செய் திருப்பாரென்று ஐயம் உண்டாயிற்று. நடராஜபிள்ளை சுலபமாக ஏமாந்துவிடக் கூடியவரல்ல. மிகத் தந்திர மும், அறிவு முள்ளவர். அவர், அவற்றைக் கெட்ட வழியி லுபயோகித்ததே தவறுகும். சொக்கலிங்கம் பிள்ளை, தன்னுடைய வேலைக்காரனுகிய வரதனே திருடர் வருகையை அறிந்து கூறினுன் என்ருர். வர தனை அழைத்துக் கேட்டேன். அவன், ஆளைப்பார்த் தால் உறுதியாகச் சொல்லக்கூடும் என்ருன். உடனே பையில் வைத்திருந்த நடராஜபிள்ளையின் புகைப் படத்தை (Photo) எடுத்துக் காட்டினேன். அவன்,

அதே ஆள்தான் திருடவருவதாகப் பேசிக்கொண்டிருந்தவன் என்று கூறிவிட்டான். ஆகவே, நடராஜ பிள்ளைதான் அன்று இரவில் வந்து திருடி இன்ஸ்பெக்டரை ஏமாற்றியவர் என்பது வெளியாயிற்று. அன்றியும், நான் வைரவியாபாரியாக நடராஜபிள்ளை வீட்டிற்குச் சென்றிருந்தபோது, சிவராமபிள்ளை, என்னை ஏமாற்றக் கருதித் தந்திரமாக, 'சொக்கலிங்கம்பிள்ளையின் வீட்டிற்குப் போகும்படி சொல்லியிருந்தேன், எவ்வளவு ரூபாய்கள் கிடைத்ததோ, அதைப்பற்றி ஏதேனும் சொன்னார்களா?' என்று கேட்டார். ஆகையால் நடராஜபிள்ளைதான் திருடச்சென்றார் என்பது பின்னும் உறுதியாயிற்று. தோட்டத்தில் அகப்பட்ட மேற்சட்டையில், ஆட்பெயர் கிடையாது. ஆனால், + இது போன்ற ஒரு குறியிருந்தது. அக்குறி யாருடைய ஆடைகட்குப் போடுவது என்று வண்ணார்களை விசாரித்ததில், அது சிவராமபிள்ளையின் மேற்சட்டையென்று ஏற்பட்டது. இவ்வளவுதூரம் யாவும் விளங்கிவிட்டபடியால் இனி அம்பைத் தொடுத்துவிட வேண்டியதே யென்று கருதிக்கொண்டே நடராஜ பிள்ளையினுடைய வீட்டின் ஓரமாகச் சென்றேன். அப்பொழுது நடராஜபிள்ளையும், சிவராமபிள்ளையும் அன்னிய நாட்டிற்குப் புறப்படத் தயார் செய்துகொண்டிருந்தார்கள். அதையறிந்த நான், உடனே போலீசாரை வரவழைத்து, இருவரையும் கைது செய்தேன்" என்று கூறி முடித்தார்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட யாவரும் "அட! இவரென்ன கூடவேயிருந்து பார்த்தாரா?" என்று வியப்புற்றார்கள். வடிவேலுபிள்ளை, இரங்கநாதனை நோக்கி "நண்பரவர்களே! எனக்குச் சில ஐயங்கள்

தோன்றுகின்றன ; அவற்றைக் கேட்டால் விடைகூற வியலுமா ?" என்றார்.

இரங்கநாதன் :—எத்தனை கேள்விகட்கும் பதில் கூறத் தயாராக விருக்கிறேன்.

வடிவேலுபிள்ளை :—மணிவாசகனுடைய துப்பாக்கி, கொலை செய்யப்பட்ட இடத்திற் கிடந்திருக்க, ஏன் அவனைக் குற்றவாளியென்று கருதவில்லை ?

இரங்கநாதன் :—முதலாவது, அவ்வளவு சிறுவன் கொலை செய்யத் துணியமாட்டான் ; இரண்டாவது, கோவிந்தன் இறப்பதற்குத் துப்பாக்கி உபயோகப் படவில்லை. ஆகவே, அத்துப்பாக்கி கோவிந்தனாலேயோ, அன்றிக் கொலையாளியாலேயோ, எடுத்துக்கொண்டு செல்லப்பட்டது என்றுதானே ஏற்படுகிறது ?

வடிவேலுபிள்ளை :—சரி ! பன்னீர்ச்செல்வம் பிள்ளைக்கு நஞ்சு ஊட்டப்பட்டிருந்தால், அவர் நோயால் மிகவும் வருந்தியபோது பார்த்த டாக்டருக்கு அஃதேன் புலப்படவில்லை ?

இரங்கநாதன் :—நண்பரே ! இது சரியான கேள்வி. பன்னீர்ச்செல்வம் பிள்ளைக்கு ஊட்டப்பட்ட நஞ்சு, சாதாரணமாக டாக்டர்கள் அறிந்து கொள்ளுந் தகையதல்ல; சைன தேசத்திலிருந்து அது வரவழைக்கப் படுகின்றது. அதனுடைய குணம் உடனே கொல்வதன்று. உடம்போடு சேர்ந்து, மிகப் பொறுமையாக நெடு நாட்களுக்குப் பிறகே தன்னுடைய வேலையைச் செய்யும். பொதுவாக நஞ்சுண்டவர்கட்குத் தோற்றும் குறிகள், அதனை யுண்டவர்கட்

குத் தோற்றுதாகையால் டாக்டர்கள் அறிந்து கொள்ளவே முடியாது.

வடிவேலுபிள்ளை :—அது போகட்டும். தருமலிங்கம் பிள்ளையின் வீட்டில் திருடியதாக நடராஜபிள்ளையின்மீது ஒரு குற்றம் இருக்கிறதல்லவா? அதை நீங்கள் எவ்விதம் அறிந்தீர்கள்?

இரங்கநாதன்:—"நடராஜ பிள்ளை, எனக்கொரு கள்ளக் கடிதம் எழுதி, என்னை யொரு வீட்டிலே யடைத்து நெருப்பை வைத்துவிட்டார். என்னைக் கொன்றுவிட்டால், அவர்கள் தம்முடைய வேலைகளைத் தொந்தரவின்றிச் செய்யலாமென்று கருதினார்கள். ஆனால், நான் அவ்வளவு விரைவில் இறந்து போவதற்குக் கடவுள் விரும்பவில்லை. என்னை யொருவர் அவ்வாபத்தினின்று காப்பாற்றினார். நடராஜ பிள்ளை, நான் இறந்துவிட்டேனென்றே கருதி யிருந்தார். நான், நிழலைப்போல் அவரைத் தொடர்ந்து கொண்டே திரிந்தேன். ஆகையால், அவர் தருமலிங்கம்பிள்ளை வீட்டிற்கு நடு இரவில் செல்லுவதைக்கண்டு, ஐயமுற்றுப் பின்னாலேயே சென்று அங்கு நடந்த யாவற்றையும் பார்த்த பிறகே திரும்பினேன். அதனால் அவர் மீது இதுவும் ஒரு குற்றமாயிற்று" என்றார்.

பிறகு சொக்கலிங்கம் பிள்ளை, இரங்கநாதனைப் பார்த்து "ஐயா! எல்லாவற்றையுங் கண்டு பிடித்தீர்கள்; என்னுடைய காணாமற் போன குழந்தையைத் தேடினீர்களா? ஏதேனும் பயன்பட்டதா? என்று கேட்டார்.

இரங்கநாதன் :—அந்தக் குழந்தையைக் கண்டால் தாங்கள் என்ன செய்வீர்கள் ?

சொக்கலிங்கம் பிள்ளை :—என்ன செய்வேன் ? வாரித் தூக்கிக்கொண்டு முத்தமிடுவேன் ; குழந்தையை யாவது, காணவாவது, நீங்கள் கேலி செய்கிறீர் கள்.

இரங்கநாதன் :—" இல்லை ; இல்லை. தங்கள் குழந்தை, அதோ ! இருக்கிறது " என்று சிந்தாமணியைக் காட்டினார்.

சொக்கலிங்கம் பிள்ளை :—"உண்மைதானா ? அவன் தானா என்னுடைய குழந்தை!" என்று வியப் புடன் கேட்டார்.

இரங்கநாதன் :—" ஆம். ஐயமே கிடையாது. வேண்டு மானால் தாங்கள் கூறியபடி கழுத்தில் மச்சம் இருப்பதைப் பாருங்கள் " என்றார்.

உடனே சொக்கலிங்கம் பிள்ளை, ஓடிப்போய்ச் சிந்தாமணியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். சிந்தாமணி வியப் படைந்தவனாய் ஒன்றும் பேச முடியாமல் அழுத வண்ணம் நின்றான். தாயாரம்மாள், கரை கடந்த மகிழ்ச்சியோடு, " குழந்தாய் ! இறுதியில் வந்து சேர்ந்து எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாய் " என்று சிந்தாமணியைத் தழுவி அவனுடைய கன்னங்களில் அன்பு செறிந்த முத்தங்களை யடுக்கினாள். சாரதாம் பாள், தன்னுடைய தமையனைக் கண்டு பூரிப் படைந்த வளாய் ஒரு புறத்தில் மயில் போல ஒதுங்கி, மகிழ்ச்சி யால் விம்மி விம்மி யுயிர்த்தாள். பெற்றோர், குழந் தையைக் காணப்பெற்ற களிப்பின் மிகுதியை நாம்

அளவிட்டு இயம்புதல் இயலுமா? பிறகு சொக்கலிங்கம் பிள்ளை, இரங்கநாதனை நோக்கி "ஐயா! தாங்கள் செய்த இப் பேருதவிக்குக் கைம்மாருக எங்கள் செல்வம் முழுவதையுங் கொடுத்தாலுங் காணுது; நாங்கள் தங்கட்கு அடிமை வேலை செய்யக்கூடக் கடமைப்பட வேண்டியதே. அவ்வளவு பெரிய உதவி!" என்று அன்பு ஒழுகக் கூறினர்.

இரங்கநாதன் :—"நான் ஒன்றும் மிகுதியாகச் செய்துவிட வில்லை. இது, கேவலம் மனிதன் செய்யக்கூடியதே. பின்னை நடராஜ பிள்ளை, ஒரு வீட்டில் அடைத்து நெருப்பிட்டபோது சிந்தாமணியை காப்பாற்றினர். என்னுயிரைக் காப்பாற்றிய அவர்க்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அஃதுண்மையா, அல்லவா வென்பதை அவரையே கேளுங்கள்" என்ருர்.

சொக்கலிங்கம் பிள்ளை, சிந்தாமணியை நோக்கி, "இரங்கநாதனுக்கு என்ன உதவி செய்தாய்?" என்று கேட்டார்.

சிந்தாமணி :—"ஒரு நாள், அவர்கள் சென்னைக்குச் சென்று திரும்பி வருங்கால் வேல்ஸ் இளவரசர் உணவுச் சாலையின் மேன்மாடியில் நான் இருந்தேன். சாளரத்தின் அருகில் வந்து பார்த்தேன். இவர்கள் ஒரு சிறுவனுடன் சென்றுகொண்டிருந்தார்கள். உடனே அவர்களைக் காணவேண்டுமென்ற அவாவினுல் பின் தொடர்ந்தேன். அவர்கள் கோரக ஊரின் இறுதியில் ஒரு வீட்டில் நுழைந்ததைக் கண்டு, ஏதேனும் இரகசியம் இருக்கலாம்; இப்பொழுது போய்த் தொக்

தரவு கொடுக்கக் கூடாதென்று தூரத்திலேயே நின்றேன். நெடு நேரம் வரையில் அவர்கள் திரும்பவில்லை. சில நிமிடங்களில், அவர்கள் நுழைந்த வீட்டில் தீப்பிடித் தெரிந்தது. சரி! யாரோ மோசஞ் செய்துவிட்டார்களென்று கருதி, உடனே ஓடிப்போய் அத்தெருவில் நின்ற போலீஸ் சேவகர்களை அழைத்து வந்து, அவர்களைக் காப்பாற்றினேன்; எனினும், அவர்களுடைய உதவியை நோக்க இது மிகச் சிறியதே" என்றான்.

பிறகு சொக்கலிங்கம் பிள்ளை, இரங்கநாதனை நோக்கி "சிந்தாமணியை எவ்விதங் கண்டு பிடித்தீர்கள்? தயை செய்து சொல்லவேண்டும்; நாங்கள் அதைக் கேட்பதற்கு விருப்ப முடையவர்களாக விருக்கிறோம்" என்றார்.

இரங்கநாதன் :—"நான் வேலைக்காரனாகச் சிவராம பிள்ளையின் வீட்டில் சோதித்தபோது, அங்குக் கிடைத்த கடிதங்களுள், தங்கள் குழந்தையை நகைகட்காக ஆசைப்பட்டு, நடராஜ பிள்ளை திருடியதற்கு ஆதாரமான ஒன்றும் இருந்தது. இதற் கிடையில் சிந்தாமணி என்னிடம் வேலைக் கமர்ந்தார். திருட்டு நடந்த மறுநாள், தாங்கள் குழந்தைக்குக் கழுத்தில் மச்சம் இருப்பதாகக் கூறினீர்கள். சிந்தாமணிக்கு அவ்விதமே மச்சம் இருப்பதை நான் கண்டிருக்கிறே னாதலால் அவரே தங்களுடைய குழந்தை யென்று தீர்மானித்தேன். இனி இவரை வளர்த்தது யார் என்று அறியவேண்டும். சிந்தாமணியை இதைப்

பற்றிக் கேட்டபோது, தான் செங்கோட்டையிலுள்ள சுப்பையா நாயுடுவால் வளர்க்கப்பட்டதாகக் கூறினர். உடனே அங்குச் சென்று, சுப்பையா நாயுடுவைப் பயமாகவும், நயமாகவுங் கேட்டேன். அவர் மிகவும் பயந்தவராதலால், 'பதினெட்டு வருடங்கட்கு முன், நடராஜபிள்ளை ஒரு குழந்தையைத் தம்மிடங் கொடுத்துக் கொன்று விடும்படி சொல்லியதாகவும் தாம் அப்படிச் செய்யாமல் இரக்கமுற்று, அவரறியாதபடி வளர்த்துக் கல்வி கற்பித்துத் திருநெல்வேலியிலுள்ள ஒரு பெரிய மனிதருடைய உதவியால் சிவராம பிள்ளை வீட்டில் ஆசிரியனாக அமர்த்தியதாகவும் கூறினர். இக்காரணங்களாலேயே சிந்தாமணியைத் தங்கள் குழந்தை தானென்று நிச்சயித்தேன்" என்றார்.

பிறகு மணிவாசகனை நோக்கி, "நண்பரே! புதிதாகத் தங்கட்கு மைத்துனர் ஒருவர் வந்து சேர்ந்திருக்கிறார்; உங்களுக்குள்ளே பல இரகசிய சங்கதிகள் பேச வேண்டியதிருக்கும்; நான் இப்பொழுது இங்கிருப்பது இடையூறாகும்" என்றார்.

மணிவாசகன் :—ஏன் இங்ஙனம் கூறுகிறீர்கள்? நீங்களில்லாமல் என்ன இரகசியம் வாழ்கின்றது? உயிரற்ற பொம்மைகளாகக் கிடந்த எங்களை நீங்களன்றோ உயிர்ப்பித்தவர்கள்? நான் தங்களை என்னுடைய குலதெய்வமாகக் கருதுகின்றேன். தாங்கள் செய்த பேருதவிக்கு என்ன கைம்மாறு செய்வதென்றும், என்ன உபசாரஞ் சொல்லுகிறதென்றும் எனக்குப் புலப்படவில்லை.

இரங்கநாதன் :—"நான் என்ன பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டேன்? அளவு கடந்து புகழுகின்றீர்கள். அவற்றையெல்லாம், தாங்கள் என் மீது கொண்டுள்ள அன்பின் பெருக்கினால் கூறினீர்களென்று கருதுகிறேன். ஏனெனில், அத்தகைய பெருங் குணங்கள் என்பால் ஒன்றும் இல்லை. எல்லாம் கடவுள் செயல். அவருடைய அருளின்றி ஒரு துரும்பையேனும் நாம் அசைக்க முடியுமா? ஆகையால் அவருக்கே தங்களுடைய வணக்கத்தைச் செலுத்துங்கள்" என்று வேதாந்தம் பேசினார்.

மணிவாசகன் :—தாங்கள் கூறுவது சரிதான்; அரும் பெருங் காரியத்தை முடித்த பெரியோர்கள், எப்பொழுதும் தங்களைத் தாழ்த்தியே பேசுவார்கள். செயற் கருஞ் செயல் புரிந்த அப்பர் சுவாமிகள், அப்பூதிபடிகளின் இல்லிற்குச் சென்ற போது தம்மை,

"..................பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந் துய்ந்த
தெருளுமுணர் வில்லாதசிறுமையேன்..........."

என்று கூறியிருப்பதால் தாங்கள் இங்ஙனங் கூறுதல் வியப்பன்று. எனினும் தங்கட்கு நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறேன்.

இரங்கநாதன் :—"அடேயப்பா! எங்கேயோ போய் விட்டீர்கள். அவ்வளவு பெரிய சங்கதி நமக்கு விளங்காது. நான் தமிழ் இலக்கியம் பயின்றறியேன். சரி! உரையாடிக்கொண்டிருங்கள்; நான் இப்பொழுதே சென்று ஒரு அவசரமான காரியம்

முடிவு செய்ய வேண்டும். மறுபடியும் வருவேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

*     *     *     *     *

*     *     *     *     *

மணிவாசகனுடைய வீட்டிலிருந்து புறப்பட்ட இரங்கநாதன் வேல்ஸ் இளவரசர் உணவுச் சாலைக்குச் சென்று ஒரு கடிதத்தையெடுத்துப் பிரித்தார். அது தான் புதையற் கடிதம். நீண்டநேரம் அதைக் கையில் வைத்துக் கொண்டு யோசித்தார். அதில்,

" லருர்குதிக்ரு லைமத் சில்யிச்டர்தொ
செறிங்ன்குன் ழ்கீப் கபார்க் "

என்று எழுதப்பட் டிருந்தது. பொருள் விளங்க வில்லை. வியப்போடும், திகைப்போடும் உற்று நோக்கினார். எழுத்துக்களை மாற்றப்பட் டிருக்கின்றன; ஊன்றிப் பார்த்தால் கண்டு பிடிக்கலாமென்று மறுபடியும் கவலையாக நோக்கினார். சில நிமிடங்கட்குப் பிறகு அவருடைய முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. பின்வருமாறு அதைக் கூட்டினார்.

" திருக்குற்றால மலைத் தொடர்ச்சியில்
செங்குன்றின் கீழ்ப் பார்க்க "

இதுதான் அதனுடைய முடிவு என்று அறிந்து கொண்டு நேராகத் திருக்குற்றாலத்திற்கு வந்தார். முன்னொரு நாள் மணிவாசகனுடன் ஒரு மனிதனைப் பின்பற்றி வந்து செங்குன்று இருக்குமிடத்தை அறிந்தவராதலின் தடதடவென்று அவ்விடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். எனினும் புதையல் இருக்கின்ற நிச்சயமான இடம் நன்றாகப் புலப்படவில்லை. சிறிது நேரம் பயித்தியம் பிடித்தவரைப் போல இங்கும்

அங்கும் சுற்றிக்கொண் டிருந்தார். உயர்ந்த திருக் குற்றால மலைத் தொடர்ச்சியில் அது செங்குத்தான இடமே. மேலே செல்ல வழி தெரியாமல் சிறிது நேரம் நின்றார். பிறகு ஒரு வழியைக் கண்டு மலையின் மேல் ஏறி உச்சியை யடைந்தார். அவருடைய ஊக் கத்தாலேயே யிருந்த தூரம் ஏறினார். வேறொருவ ராயின் நிச்சயமாக ஏற முடியாது. அவ்வளவு கஷ் டப்பட்டுக் கல்லின்மீது ஊர்ந்தும், தாண்டியும் சென் றார். மேல் இடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கும் இங்கும் பருக்கைக் கற்களே நிறைந்து கிடந் தன. வேறு ஒன்றும் அங்கு இருப்பதாகப் புலப்பட வில்லை. பிறகு மெதுவாகக் கீழே யிறங்கி அடிப் பாகத் திற்கு வந்தார். அங்குப் பெரும் பெருங் கற்கள் இரண்டு மூன்று கிடந்தன. மரமும், செடி கொடிக ளும், புதர்களும் கணக்கின்றிச் செறிந்திருந்தன. பாம்பு கடித்தாலுந் தெரியாது. அவ்வளவு நெருக்க மான இடம். அவருடைய கண்கள் அக் குண்டுக் கற்களை உற்று நோக்கின. சிறிது நெருங்கி நின்று கவனித்தார். பிறகு அக்கற்களைப் புரட்டிப் பார்த் தார். ஒன்றின் கீழ் ஒரு மரப்பெட்டி வைக்கப்பட் டிருந்தது. மகிழ்ச்சியோடு அதை யெடுத்துக் கொண்டு சிந்துபூந்துறைக்கு வந்தார். அப்பொழுது இரவு நெடுநேரமாகி விட்டபடியால் உணவு உட்கொண்டு படுக்கைக்குச் சென்றார்.

மறுநாட் புலர்ந்ததும், அப்பெட்டியை யெடுத் துக் கொண்டு மணிவாசகனுடைய இல்லிற்குச் சென் றார். அவன் மகிழ்ச்சியோடு வரவேற்றான். அதே சமயத்தில், சொக்கலிங்கம் பிள்ளையும், வடிவேலு பிள்ளையும் வந்தார்கள். யாவரும் கூடத்தில் அமர்ந்த

தும் இரங்கநாதன் அப்பெட்டியைத் திறக்கத் தொடங்கினர். யாவருடைய கண்களும் அதைக் கூர்ந்து நோக்கின. பெட்டியின்மேற் பலகை எடுக்கப்பட்டதும் யாவருடைய கண்களும் கூசின. உள்ளே யிருந்த அணிகள் பளீர் பளீர் என்று மின்னின. உடனே இரங்கநாதன், மணிவாசகனை நோக்கி, "நண்பரே! மூன்று இலக்ஷம் ரூபாய்கள் பெறக்கூடிய இவைகள் தாம் உம்முடைய தந்தை உமக்காக மறைத்து வைத்திருந்தவை" என்று அப்பெட்டியிலிருந்து பல ஆரங்களையும், பவுன் மாலைகளையும், கத்தை கத்தையான நோட்டுகளையும் எடுத்து வைத்தார். அவற்றைக் கண்ட எல்லாரும் மகிழ்ச்சி யுற்றார்கள். மணிவாசகன் மாத்திரம் தன் தந்தையின் அன்பையும், அவர் இறந்ததையும் நினைந்து கண்ணீர் உகுத்தான். இரங்கநாதன் வேண்டுவன கூறித் தேற்றினர். வடிவேலு பிள்ளை, இரங்கநாதனை நோக்கி, "நண்பரவர்களே! எனக்கு இன்னும் ஒரு ஐயம் இருக்கின்றது. கோவிந்தன், இறக்குந் தறுவாயில் கூறிய மொழிகட்குப் பொருளென்ன?" என்று கேட்டார்.

இரங்கநாதன் :—"அதன் பொருளை, நான் அன்றே அறிந்து கொண்டேன். அதாவது 'தம்பீ' உன் தந்தையைச் சிவராம பிள்ளை கொன்றதை அறிவேன்; இப்பொழுது என்னையும் கொன்றார்; அதை உன்னிடம் சொல்லாததற்காக என்னை மன்னிக்கவும்' என்பதே. இதை முழுவதும் அவனாற் கூற முடியவில்லை" என்றார்.

பிறகு சொக்கலிங்கம் பிள்ளை, மணிவாசகனுக்கும், சாரதாம்பாளுக்கும், ஆனித் திங்கள் 29-ஆம்

காளில் மணஞ்செய்ய நிச்சயித்துவிட்டதாகக் கூறிச் சென்றார். அன்று முதல் கலியாண ஏற்பாடுகள் விரைவாக நடந்தன. மணிவாசகன் மறுத்தும் கேட் காமல் சொக்கலிங்கம் பிள்ளை, கலியாணத்தின் பொருட்டு இருபதினாயிரம் ரூபாய்கள் செலவு செய்வ தாகப் பட்டியல்கள் தயார்செய்து விட்டார். திரு மணப் பத்திரம் கணக்கின்றி அச்சிட்டு வெளியிடப் பட்டன. சொக்கலிங்கம் பிள்ளை, தன் மகளுடைய கலியாணத்தை ஓர் அரச குடும்பத்துக் கலியாணத் தைப்போல நடத்தவேண்டுமென்று கருதிப் பெருத்த ஏற்பாடுகளும், முயற்சியுஞ் செய்திருந்தார். வீட்டின் ஓரத்திலுள்ள தெரு முழுவதும் பூப்பந்தர்க ளாலும், தோச் சீலைகளாலும், ஓட்டு வேலைகளாலும் அலங்கரிக்கப்பட்டது. அவ்வூரிலுள்ள யாவரும் கலி யாண விருந்தின் பொருட்டு அழைக்கப்பட்டனர். குறித்த நாளும் வந்தது. முதல் நாளிலேயே கூட் டங் கூட்டமாக ஜனங்கள் வந்து குழுமிவிட்டார்கள். கலியாண மண்டபம் கண்ணைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. தெரு முழுவதும், வீடு கள் முழுதும் மின்சார விளக்குகள் பத்தி பத்தியாய் இணைக்கப் பெற்றன. கலியாண மண்டபத்தினுள் இலக்குமியே குடிகொண்டிருந்தாள். எத்தனை வண்டி கள்! எத்தனை மின்சார வண்டிகள்! அளவிட முடி யாதனவாக வந்துகொண்டே யிருந்தன. வடிவேலு பிள்ளை; முகப்பில் நின்று யாவரையும் வரவேற்றார். குறித்த முகூர்த்தம் வந்தது. மணமக்கள் இருவரும் கதர்ப் புடவைகள் புனைந்து, அளவற்ற அணிகளைத் தாங்கமுடியாமல் கலியாண மண்டபத்திற்கு வந்தார் கள். புரோகிதர் மந்திரஞ் சொல்லி ஹோமம் வளர்த்

தார். பெண்கள் மங்களம் பாட மணிவாசகன் சாரதாம்பாளுக்கு மாலை யிட்டான். பெரியோர்கள் வாழ்த்தினார்கள். திருநெல்வேலி காங்கிரஸ் சபையார், அழகாக வரைந்து அச்சிடப்பெற்ற வாழ்த்துக் கடிதம் ஒன்றை மணிவாசகனுக்கு அளித்தார்கள். பிறகு, விருந்து நடைபெறத் தொடங்கிற்று. யாவருக்கும் மிக வுயர்ந்த சாப்பாடு. சிந்தாமணியே நின்று கொண்டு விசாரித்தான். சாப்பிட உட்கார்ந்தவர்கள், ஒன்றைத் தின்றால் கடைசி வரையில் அதையே தின்றுக்கொண் டிருந்தார்கள். பிறகு அடுத்ததைத் தொட்டால் முதலில் தொட்டதை மறந்துவிடுகிறார்கள். ஒருவருக்காவது நாம் உட்கார்ந்து இவ்வளவு நேரமாயிற்றே, எழுந்திருக்க வேண்டுமே என்ற எண்ணம் உண்டாகவில்லை. எப்படி முடியும்? ஒவ்வொன்றும் அவ்வளவு சுவை யுடையதாக விருந்தது. சிலர், மனதில் விட்டுவிட எண்ணமில்லை யாயினும், பார்க்கிறவர்கள் எதையும் நினைத்துக் கொள்ளுவார்களே யென்று பயந்து விரைவில் எழுந்து சென்றார்கள். அன்று மாலையில் சங்கீதக் கச்சேரிகள் தொடக்கமாயின. பல ஊர்களிலிருந்தும் வித்துவான்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். சங்கீதத்தின் பெருமையை யாரால் அளவிட முடியும்? மிகத் தேர்ச்சி பெற்ற சங்கீதப் புலவர்கள் யாவரும் ஒவ்வோ ரிடங்களி லிருந்துகொண்டு தங்கள் தங்கள் திறமைகளை வாரி யிறைத்தார்கள். ஒவ்வொருவரின் கச்சேரியையுந் தனித்தனி கேட்க வேண்டுமானால் எத்தனையோ நாட்கள் செல்லும். கேட்க வந்தவர்கள் ஒன்றும் புரியாமல் அந்த அந்த இடங்களில் அமர்ந்தார்கள். வீணைக் கச்சேரி கேட்டுக்கொண் டிருப்போருக்குத்

தூரத்தில் புல்லாங்குழல் கச்சேரி கேட்கும். புல்லாங்குழலில் விருப்பமுள்ளவர்களாக இருந்தாலும், வீணைக் கச்சேரியை விட்டு எழுவதற்கு மனமில்லாமல் உட்கார்ந்திருப்பார்; சிலர், ஒன்றிலேயே ஈடுபட்டுத் தங்களையே மறந்தவர்களாய் இருந்தனர். சிலர், ஒன்றிலுஞ் சேராமல் **திரிசங்கு சுவர்க்கம்**போல இருந்தனர்; சிலர், சங்கீதத்தில் சிறிதும் அறிவில்லாதவராயினும், சும்மா விருந்தால் பக்கத்திலுள்ளோர் மடயனெனக் கருதுவார்களே யென்று இயந்திரத்தைப் போலத் தலையை விடாமல் அசைத்துக்கொண்டேயிருந்தனர். மணிவாசகனுடைய அழகையும், சாரதாம்பாளினுடைய அழகையுங் கண்களால் அள்ளி யள்ளிப் பருகிய பெண்கள், "மணமக்கள் என்றால் இவர்களன்றோ மணமக்கள்!" என்று பேசிக்கொண்டனர். சிலர்

**"நம்பியைக் காணநங்கைக் காயிரம் நயனம்வேண்டும்**
**கொம்பினைக் காணுந்தோறுங் குறிசிற்கும் அன்னதேயால்"**

என்று கூறினர். இரவு ஒன்பது மணிக்கு ஊர்வலம் தொடக்கமாயிற்று. ஏராளமான அலங்காரங்களும், வாணங்களும் வந்து குவிந்து விட்டன. ஜனங்களும் ஆயிரம் ஆயிரமாக நிறைந்து, எல்லையற்ற வனப்பு வாய்ந்த மண மக்கள் எப்படியிருக்கிறார்களென்று பார்க்க ஆவல்கொண்டு நெருங்கிய தன்மை, கும்பாபிஷேகமோ எனக் கூறும்படியிருந்தது. பெருத்த மல்லிகை மலர்களால் அணி செய்யப்பட்ட நான்கு குதிரைகள் பூட்டிய வண்டி வந்து நின்றது. அதினின்று புறப்பட்ட மலர்களின் நறு மணம் தெருக்கோடி வரையில் வீசிற்று. மண மக்கள் இருவரும் அதில் இவர்ந்தார்கள். அவ் வண்டியினுடைய மேற்பாகம், இரதத்தின் கூடம்போல அலங்கரிக்கப்பட்

டிருந்தது. அதில் கணக்கற்ற—பல நிறங்களையுடைய—சிறிய சிறிய மின்சார விளக்குகள் கண்கூசும்படி ஒளி யிட்டன. அதைக் கண்ணுற்ற சில பட்டிக் காட்டு ஆசாமிகள், "அட! தாயளி மவன்! கணக்கில்லாமே சூரியங் குஞ்சுகளை அடுக்கி யுட்டான்டா! ஒயாமே மினுக்கட்டி மினுக்கட்டி யிண்ணு 'மின்னிக்கினே யிருக்கு; வெள்ளக்காரன் வேலையே வேலை!" என்ற னர். வாணவேடிக்கை பார்த்த சிலர், பெட்டி வாணத்தைக் கண்டு, "அட! தேவிடியா மவன்! இவ்வளவு சின்ன பொட்டிக்குள்ளே இத்தனை பொம்மை—பத்துப் பன்னண்டு பொம்மைகளை யெப் பிடிறு வச்சான்? ஒண்ணுப் பின்னாலே யொண்ணு வருது; குதிக்குது; கும்மாளம் போடுது; மனிசஞ் செய்யாதவேலே யெதுடா?" என்று மனம் போன வாறு பேசினர். அதன் பிறகு ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய ஊர்வலம் ஜனங்களின் மனதை விட்டு அகலவே யில்லை. அன்று இரவிலும் பெருத்த விருந்து நடைபெற்றது. ஏழைகட்கு ஆடை யும் பொன்னும் அள்ளி யள்ளி யிறைத்தார்கள். சார தாம்பாளும், மணிவாசகனும் அளவிட முடியாத மகிழ்ச்சியால் பூரித்து விட்டார்கள். துப்பறியும இரங்கநாதன் கலியாண விழாவிற் கலந்துகொண் டமை குறிப்பிடத்தக்கது. கலியாணம் மிகச் சிறப் பாக நடைபெற்றது. ஏழுநாட்கள் வரையில் அவ் வூரார் யாவரும் அந்தக் கலியாணத்தில் விருந்துண் டதையும், சங்கீதக்கச்சேரிகளின் மேன்மையையும் மற வாமல் பேசிக்கொண்டார்கள். மணிவாசகன், இரங்க நாதனுக்கு ஒரு வெள்ளித்தட்டில் ஐம்பதினாயிரம் ரூபாய்களை நிறைத்துக் தூக்கிவந்து கொடுத்தான்.

அவருக்கு அதில் விருப்பமில்லை யாயினும், மணிவாசக னுடைய கட்டாயத்தினாற் பெற்றுக்கொண்டார். அதுபோலவே சொக்கலிங்கம் பிள்ளையும் இருபதி னாயிரம் ரூபாய்கள் அளித்தார். மணிவாசகனும், சார தாம்பாளும் எப்படி யின்புற்றார்க ளென்பதை நாம் அளவிட்டுக் கூற முடியாது. இரதியும் மன்மதனுங் கூடினால் இன்பத்திற்குப் பஞ்சமா? இணையற்ற இளங் காதலர்களாகிய இருவரும் நுகர்ந்த இன்பம் தேவ போக மென்றே கூறுதல் வேண்டும். காதலர் இருவர் கருத் தொருமித் தாதரவு பட்டதே இன்பம் அன்றோ?

காமாக்ஷி தன் கணவனது பிரிவால் வாடினா ளாயினும், மணிவாசகன், சிவராமபிள்ளை தனக்குச் செய்த தீமைகளை யெல்லாம் மறந்து, அன்போடும் பணிவோடும் ஆற்றும் உதவியால் களிப்புற்று, மணி வாசகனையே செல்வக் குழந்தையென மதித்து வரு கின்றாள். சாரதாம்பாள், தனக்கு உயிரோடிருக்கும் மாமியார் காமாக்ஷியே யாதலின் அவருடைய கட்ட ளைக்குக் கீழ்ப்படிந்து விருப்பத்திற்கு மாறுபடாமல் நடந்து வந்தாள்.

சில நாள்கட்குப் பின் கற்பகத்தைச் சிந்தா மணிக்கே, மணிவாசகன் பெரும்பணம் செலவிட்டு மணஞ்செய்து கொடுத்தான். அன்னபூரணியை வேறு தகுந்த இடத்தில் மணஞ்செய்து கொடுத்தார்கள். சொக்கலிங்கம் பிள்ளை, சிந்தாமணியை வளர்த்த செங் கோட்டைச் சுப்பய்யா நாயுடுவுக்கு ஐயாயிரம் ரூபாய் கள் கொடுத்தார். துப்பறியும் இரங்கநாதனை மாத் திரம் மறவாமல் மணிவாசகனுடைய குடும்பத்தார்

இன்னும் புகழ்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். மணிவாசகன், தன்னலத்திற்காக மனைவியை மருவி வாழ்ந்தானாயினும், உலக நலத்திற்காகப் பாடுபடுவதை மறவாமல் தன்னால் இயன்ற பணியை ஆற்றிக் கொண்டே வருகிறான். **இவர்கள் குடும்பத்தை இறைவன் திருவருள் புரிந்து காப்பானாக.**

நண்பர்களே! உலகத்தில் உண்மையோடும் ஒழுக்கத்தோடும் நடந்துகொள்ளும் மனிதன் ஒருக்காலும் துன்புறுதல் இல்லை. உண்மை யென்பது அழியாத பொருளன்றோ? உண்மையே, உயிர்கட்கு இன்பத்தை உதவுகின்றது. உண்மை, தமக்குத் தாமே உண்மையாக இருப்பவருடைய நெஞ்சத்தைக் கோயிலாகக் கொண்டு ஆட்சி புரிகின்றது. உண்மையே எக்காலத்தினும் வெற்றி பெறுகின்றது. ஒருவன், உண்மையைப் பொய்யால் மூடி வைப்பானாயினும் அது பொய்யை உதறித் தள்ளி எப்பொழுதாயினும் வெளிப்பட்டு விடுகின்றது. எவன் தன்னுள்ளத்திற் கேற்பப் பொய் கூறுதொழுகுவானாயின், அவன் உயர்ந்தோருள்ளத்தின்கணெல்லாம் உளனாவான். இதனைத் தெய்வப் புலவர்,

> "உள்ளத்தாற் பொய்யா தொழுகின் ; உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன் ;

எனக் கூறுவர். உண்மை தன்னுடைய இயற்கையுருவை மாற்றுவதில்லை. அது தன்னிற்றானே நிறைந்திருக்கின்றது. அதனால் உண்மைக்கு ஒரு பொழுதுங் குறைவில்லை. பொய்யின் வாழ்வை உண்மை விரும்ப மாட்டாது. உண்மையே ஒருவனுக்கு மேன்மையளிக்கின்றது ; பொய்மை ஒருவனது வாழ்வைக்

குலைக்கின்றது; உண்மை ஆழ்ந்து சென்று அடி காண்கின்றது; பொய்மை மிதந்து சென்று அழிந்து போகின்றது; உண்மை காலக் காற்றால் அழிக்கப் படுவதில்லை; பொய்மை காலச் சுழலில் உருக்கரந் தொழிகின்றது. உண்மையின் மாண்பை நாம் அளவிடுதல் கூடுமா? முடிவாகக் கூறுமிடத்து, உண்மை உண்மையாகவே இலங்குகின்றது; பொய்மை பொய்மையே யாகிக் கழிகின்றது. உண்மையில தாயின், உலகம் இலதாமன்றோ? ஆதலின் உண்மையையே விரும்புதல் வேண்டும். பொய்மையை விரும்பிப் பிறரை வஞ்சித்து வாழ்வோன் நீங்காத துன்பத்திற்கே ஆளாவான். 'கடவுள் நமக்குள் இருந்து யாவற்றையுங் காண்கிறார்' என்பதை யுணர்ந்தவர், பிறரை வஞ்சிக்கவும், தீங்கு புரியவும் துணியார். தனிப் பெருங் கடலான இறைவனின் திருக்கோயில் மக்கள் உடம்பே. கோயில்களைத் திருமூலர் படமாடுங் கோயில்களென்றும், நடமாடுங் கோயில்களென்றும் இரண்டாகக் கூறுவர். ஓரிடத்திலிருந்து உயிர்கட்கு நீங்காத நிழல் தருங்கோயில், (தேவாலயம்) படமாடுங் கோயில். உலகின் கண் உறைதரும் மக்கட் கூட்டமே நடமாடுங் கோயிலாம். இறைவன் திருமேனிகளைத் தாவர, சங்கமம் என்ற இரண்டில் வைத்துணர்த்தப்படும். இவற்றுள் தாவரமாகிய திருக்கோயில் வழிபாட்டைக் காட்டினும், சங்கமமாகிய நடமாடுங் கோயில் (மக்கள்) வழிபாடே சாலச் சிறந்ததாம்.

> 'படமாடக் கோயிற் பரமர்க்கொன் றீயில்
> நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
> நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
> படமாடக் கோயில் பரமர்க்கங் காமே

உயிர்களை வழிபடுவதும் இறைவனை வழிபடுவதும் ஒன்றே. உயிர்கட்குப் பணிசெய்யாது விக்கிரகத்திற்குப் பணி செய்தல் பயன் தராதென்பது அறிஞர் துணிபு. ஏழை யொருவன் பசியால் வருந்துவதைக் கண்டு அதை ஒழிக்க முயலாமல், பாலையும், தேனையும், கொண்டு போய் விக்கிரகத்தின் தலையில் ஊற்றுவதால் யாது பயன்? அதை இறைவன் உவப்பாகக் கொள் வரோ? இறைவன் மக்களிடத்தில் கலந்து நிற்பதால் மக்கட்குச் செய்யும் உதவி இறைவனுக்கே செய்த தாகும். மக்கட்குத் தீங்கிழைத்தால் அது இறை யுயிர்க்கே ஆற்றியதாகும். மண்ணிலுள்ள மனிதர் கட்குச் செய்யும் உதவி அவர்கள் உள்ளத்துள்ள இறைவனைச் சாரும். பல நாட்டாருக்கும் சோறுதவிய நமது மணித் திருநாடு, இது காலை சோற்றுக்கு வருந்து கின்றது. இந்திய மக்கள் கட்டத் துணியின்றி, உண்ண உணவின்றி வருந்துங் காலம் ஏற்பட்டு விட் டதை ஊன்றி நோக்கும் எவருக்குத்தான் பணி செய்ய மனம் வராது? நமது நாட்டு ஒழுக்க முறைகள் பாழ் பட்டன! அரிய கல்வித் துறைகள் மறைந்தன!! தொழில்கள் ஒழிந்தன!!! இவற்றை மறுபடியும் நிறைக்க யாவரும் பாடு படுவார்களாயின், விரைவில் நாம் முழு விடுதலை பெறக் கூடும். விடுதலை பெறாத நாடு வறுமைக்கும், தீயொழுக்கத்திற்கும் இரையாகிக் கொண்டே போகும். நமது நாடு இது காலை இவற் றிற் கிரையாகிக் கொண்டு வருவதைக் காண எவன் மனந்தான் இரக்க முறாமலிருக்கும்? கேவலம் தன் னலத்தைக் கருதி வாழ்வது எவ்வளவு அறியாமை! நமக்குள் உண்மையான தெய்வ பக்தியும், கடவு ளொருவர் இருக்கிறார், அவர் அறிந்து தண்டிப்பார்

என்ற பயமும் அதிகமாக இல்லையென்றே சொல்லுதல் வேண்டும். நாளுக்கு நாள் நியாய சபைகள் பெருகிக் கொண்டு வருவதே இதற்குச் சான்றாகும். குறுகிய நோக்கமும், வைராக்கியமும், பொறாமையும் நம்மை வாட்டி வதைக்கின்றன. மற்ற நாட்டாரைக் காட்டிலும் நாமே அதிகம் தெய்வ பக்தி யுடையவர்களென்று கூறி மகிழ்கிறோம். ஒரு குற்றவாளி தன் கையில் அணிந்திருக்கிற விலங்கைப் பொன் காப்பு என்று மகிழ்வதற்கே இதை யொப்பிடலாம். மடாதிபதிகள் தங்கள் கடமைகளைச் சரியாக நிறை வேற்றுகிறார்களா? அவர்கள் கடமை காமத்திலும, வழக்கிலுங் கழிகின்றது. உலகத்தில் நாம் செய்கிற ஒவ்வொரு வேலையும் அதன் பயனை யடையாமற் போவதில்லை. நாம் கருதிய காலத்திலோ, வேறு காலத்திலோ, நமது முயற்சிக்குத் தக்க பயன் உண்டாகும். நாம் முயற்சி செய்வதையே பெருமையாகக் கொள்ளுதல் வேண்டும். கடமை யுணர்ச்சியுடன் முயற்சி செய்த நாட்டாரே மேன்மை யடைவார்கள். ஆங்கிலேயர் கடமையையே மந்திரமெனக் கொள்ளுகின்றனர். ஆதலால் அவர்கள் பெரும் பெருந் தேசங்களை ஆட்சி புரிந்து வருகின்றனர். அவர்கள் வேலை செய்வதை யிகழ்வதில்லை. ஒவ்வொருவனும் தான் செய்யவேண்டிய காரியங்களைக் கடமையாகக் கருதிச் செய்து முடிப்பானாகில் கெடாத இன்பத்தை அடைவான். பயன் அடைவிக்கும் உரிமை நமக்கு இல்லாமையால், ஒரு தொழிலைச் செய்து, நாம் கருதியபடி அது நிறைவேறப் பெறாவிட்டால் மனவுறுதி தளர்ச்சி யடையும். ஆகையால் பலனை யெதிர் பார்க்காமல் கடமையைச் செய்தல் வேண்டும். "உனக்கு **வேலை செய்யப் பாத்தியமே**

யன்றிப் பலனுக்கு நீ உரியவ னல்ல" என விவேகா நந்தப் பெருந்தகையார் கூறி யுள்ளார். மனிதப் பிறவியின் பயனாகிய கடமையைச் செய்ய விரையுங்கள்; நாட்டின் விடுதலையை நாடுங்கள்; இந்திய மக்களின் வறுமையை நீக்க முயலுங்கள்; ஆட்சி முறை அந்நியர் பால் இருக்கும் வரை நமது நாட்டின் அறிவு மணம் பெறு தென்பது உண்மை. பலபடக்கிடக்கும் நமது நாடு ஒன்றிலேனும் வளம் பெற்றிருக்கிறதா? ஒவ்வொரு துறையும் சிதைந்து கிடக்கின்றது. இதற்குக் காரணம் நாமே யன்றோ? நாட்டுக் கல்வி முன்னேற வேண்டும். மக்கள் யாவரும் சுதந்திர உணர்வுடைய வர்களாக வேண்டும். நாட்டில் வாழும் பல சமயத் தாரும் தேசத் தொண்டைத் தமது சமயத் தொண் டாகக் கருதுதல் வேண்டும். இந்தியர் அனைவரும் தேசத் தொண்டைத் தம் சமயமாகக் கொண்டா லன்றி விடுதலை பெற முடியாது. ஒவ்வொருவர் நெஞ் சிலும் 'தேசத் தொண்டு' என்ற முளை வேரூன்றிப் பதிய வேண்டும். தேசத் தொண்டை வளர்ப்பது ஒற்றுமையே யாகும். அதற்கு அன்பு நீர் (சகோ தரத்வம்) பாய்ச்சுதல் வேண்டும். நண்பர்களே! பெரியோர்களே! செல்வர்களே! இன்றே நமது நாட் டின் நலத்தைப்பேணக் கருதுங்கள்; நாம் உயரிய நிலையை உற்று அந்தமில் இன்பம் அநுபவிக்கக் கூடும்.

இக்கதையால் நன்மை செய்தவர் நன்மையே அடைவார் என்பதூஉம், தீமை செய்தவர் தீமையே அடைவார் என்பதூஉம் ஒருவாற்ருல் விளக்கப்பட்டன.

முற்றிற்று.

---

## வெண்பா.

---

வாழ்க அறநெறியோர்; வாழ்க தமிழுலகோர்
வாழ்கமணி வாசகனும் மாண்புடையோன்—சூழ்கதிர்சேர்
சாரதாம் பாளென்னுந் தைய லுடனென்றுஞ்
சீரதாம் பொற்பமரச் சேர்ந்து.

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

## சிலப்பதிகாரச் செவ்விய உரைகள்

---

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் ;
தெய்வந் தெளிமின் : தெளிந்தோர்ப் பேணுமின் ;
பொய்யுரை அஞ்சுமின் ; புறஞ்சொல் போற்றுமின் ;
ஊனூண் துறமின் ; உயிர்க்கொலை நீங்குமின் ;
தானஞ் செய்மின் ; தவம்பல தாங்குமின் ;
செய்ந்நன்றி கொல்லன்மின் ; தீநட்பு இகழ்மின் ;
பொய்க்கரி போகன்மின் ; பொருள்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின் ;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின் ;
பிறர்மனை அஞ்சுமின் ; பிழையுயிர் ஓம்புமின் ;
அறமனை காமின் ; அல்லவை கடிமின் ;
கள்ளுங், களவுங், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின் ;
இளமையுஞ், செல்வமும், யாக்கையும், நிலையா ;
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது.
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின் ;
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் !"

---

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS.